உ

கடவுள் துணை.

# பாலவாகடத்திரட்டு



இட்டா,

பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,

E. P. N. பிரிண்டிங் ஒர்க்ஸ்,

நெ. 29, வாலாஜா ரோட், சென்னை-2.

இதன் விலை] 1963 [ரூபா 2-00

5.142
No: 28

உ

கடவுள் துணை.

இஃது மகா மருத்துவம் பொருந்திய
பதினெண் சித்தர்கள் திருவாய் மலர்ந்தருளிய

# பால வாகடத் திரட்டு

## வைத்தியம் — 1200.

சிமிட்டு ரத்தினச்சுருக்க பால வாகடம்
தன்வந்திரி பால வாகடமும், இதிலடங்கியிருக்கின்றன.

ஆயுர்வேத பாஸ்கரன்

**கந்தசாமி முதலியாரால்**

பற்பல ஏட்டுப் பிரதிகளைக்கொண்டு ஆராய்ச்சி செய்த
பிரதிக்கிணங்க

சென்னை

**இட்டா - பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்**

சக்கரவர்த்தி பிரஸ்

நெ. 189, தங்கசாலை தெரு, மதராஸ்.

இதன் வி[illegible] **1956.** [ரூ. 2-0-0

கடவுள் துணை.

# இந்நூலச்சிட்டவர் கருத்து

மாட்சிமை பொருந்திய சிநேகிதர்களே இவ்வுலகத்தின் கண் அநேக சித்துபுருஷர்கள் ஆயுறுவேதமாகிய வைத்திய கிரந்தங்களை அனேகமனேகமாய்ப் பாடியும் நாம் கேள்வியுற்றவரையில் வைத்திய கிரந்தம் 2 லட்சமென்றும் வாத கிரந்தம் 1 லட்சமென்றும் பெரியோர்கள் கூறியிருக்கிறார்களல்லவா? ஆனல் அவர்கள் சீவியசரித்திரங்களோ மறைவாயிருக்கின்றன. மேலும் தற்காலம் பண்டிதர்களுக்குபயோகமாக பதினெண் சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய பால வாகடத்தில் தன்வந்திரி - பிரமமுனி - அகத்தியர் - தேரையர் - வரரிஷி - யூகிமுனி - சட்டமுனி - கோரக்கர் - மச்சமுனி - கமலமுதி - சோதிரிஷி - நந்தீசர் - கலைத்தீசர் இவர்களால் திருவாய்மலர்ந்தருளிய பால வாகடச் செய்யுட்களை கோர்வையாகத் திரட்டிப் பால வாகடச் செய்யுட்களை கோர்வையாகத் திரட்டிப் பாலவாகடமென்னும் இயற்பெயர் கொடுத்து சகலமான பண்டிதற்கும் பிரமுகாளுக்கும் ஏழையோர்க்கும் பெரும்பாலும் எளிதிலுணரும் பொருட்டு குழந்தைகள் பரிதாபம் பற்றி இந்த பாலவாகடத்தை கற்றோருக்கும் குழந்தைகளைப் பெற்றோருக்கும் மயங்காமல் எளிதிலுணரும்பொருட்டு முதல் பண்டிதாளிலக்கணமும் கற்பக்கோளிலக்கணமும் பாலவாகடத் திரட்டிலக்கணமும் அந்தந்த வியாதிகளின் குணமும் அதற்கு அவிழ்தங்களும் இன்னம் பலபல அருமருந்துகளும் பத்தியபாகங்களும் பாலகிரகமுஞ் சேர்த்து அச்சியற்றினேன். இந்நூலில் இயந்திரம் மந்திரம் பஞ்சாட்சரம் புனல்சொரிதல் சேவற்பலி, ஒந்தி, உடும்பு, முதலை, காக்கை, வௌவால், சர்ப்பம் இவை முதலிய கிரியையும் கொலையும் வடக்கயிறும் சொல்லியிருப்பதால் இதில் சகலரும் எழுத்துக்குத் தம் சொற்குற்றம் பொருட்குற்றம் ஏதிருப்பினும் பெரும்பாலும் அங்கீகரிப்பர் இந்நூலில் சிமிட்டிரத்தினச் சுருக்கமும் தன்வந்திரி பாலவாகடமும் இதற்குட்பட்ட நூலாதலால் வேறே சில்லரைக் கோர்வையாயச்சிட்டதும் இதற்குள்ளடங்கி யிருக்கின்றன.

இப்படிக்கு இந்நூலில் சீர்திருத்தி அச்சிட்டவர் வேதகிரி முதலியார் குமாரன் ஆயுர்வேபாஸ்கரன், கந்தசாமி முதலியார்.

---

உ

கடவுள் துணை.

# கடவுள் வணக்கம்

---

எண்சீராசிரிய விருத்தம்.

சீர்கொண்ட நிலவுபுயவ பரிகிதாரை
திகழுண்டகோளமலை தியுமடங்கள்
பார்கொண்டகடலுலவை சராசரங்கட்
படைத்துக்காத்த நவரத பரோக்ஷமேலும்
பேர்கொண்டவொருங்கழிப்ப வருட்பிரவாகம்
பேயூஷமுறவ்ஷ் தரும்பேரானந்தத்
தார்கொண்டவியாபகவா ணிர்விகார
சாக்ஷாத்காரப்பொருளை ஸ்தௌத்தியஞ்செய்வாம்.

## அகத்தீயர் வணக்கம்.

எண்சீராசிரிய விருத்தம்.

சகத்திரபாணுமுடி பரந்தடாலுவினர்
சாற்றுதற்கரிய மெய்ஞ்ஞான
பகத்வப்பிரபாதிதத்திருசுதர்ம
வரோதயடிமும்பொளிர் தழைத்தக்
குகத்திரண்முனிவர் புடைகொளகவினக்
குரங்கியந்தவழ் பொதிகையின்வா
முகத்தியர்பத்மபூஞ் சலனமஞ்சிரத்தி
னணிந்தவரதமுந் துதிப்பாம்.
பாலதனைப்பாச்சியென சோறதனைச்சோச்சியென
பாலர்காவாற்

## அவையடக்கம்.

அறுசீராசிரிய விருத்தம்.

சிலமொடுமழலைமொழி மிழற்றிடினும்பெரியோர்கட்
சினங்கொள்வாரோ
கோலவிருவம்பகமுளார்க்குக் குருடன்கோல்கை
கொடுத்துமார்க்க
மாலுடனேகாட்டுதல்போல் பிடகருக்குசிற்றறிவேன்
வழுதலன்றே.

உ

கடவுள் துணை.

இஃது.

# பண்டிதாளிலக்கணம்.

அறுசீராசிரிய விருத்தம்.

பண்டிதன்முறைமைகேட்கில் பழிப்பிலான்சலிப்பிலானுய்க்
கொண்டதோர்உறுப்பில்சற்றுங் குறையிலான் பொறையி
[லானுய்
வண்டனிகுழலாய்நம்பி மாரைத்தாய்தந்தைபோல
மண்டலமொக்களண்ணில் வைத்தியனுருந்தானே

இதுவுமது.

உத்தமகுணத்தையுள்ளோன் உயர்பெறுங்கீர்த்தியுள்
[ளோன்
புத்தியாலாய்ந்துசொல்வேன் பொருள்களையாயவல்லோன்
சத்தியவார்த்தையுள்ளோன் தரும சிந்தனையேயுள்ளோன்
* குத்தியவார்த்தைபேசா குணன்பரிகாரியாமே. 2

* குத்திரம்-பொய்.

இதுவுமது.

மண்ணின்மேற்பெண்ணுணுக்கும் மற்றுளபல்லுயிர்க்கும்
கண்ணினில் நிமைபோற்காக்கும் * கடவுளான்கருணையுள்
[ளோன்
நண்ணியபெண்ணுனெல்லாம் நாடியதந்தைதாயென்
றெண்ணியேமருந்துசெய்யில் இடர்பிணிதீருமென்றே. 3

* கடவுள் குரு.

வேறு.

* குணங்கள் * குறிகள் * நாடியினல்குறித்து மனத்தின்
[திடமதனல்
பிணங்கியேறும் புணிபலவும் பின்முன்கண்டு தானறிந்து
வணங்குமருந்தால் மந்திரத்தால் மஹாதேவகடாக்ஷத்தால்
இணங்குமாகில் மருந்துசெய்வீ றென்றே முனிவரியம்பினரே

* குணங்கள் - அவ்வவ்வியாதியின் குணங்கள்
* குறிகள் - விழி-நாசி-நா-மலயக்குறிகள்
* நாடி - வாதபித்த-சேஷம-பகுப்பால்-பிணிகளைக்குறித்தறிதல்.

இதுவுமது.

வாகடசாஸ்திரநாடி முதைமற்றுங்கருவிகாணுதி
பாகமிதஞ்சோ பரிசனையும் பருவமருந்தின் பதமுறையும்
வேகமருந்தின் சீர்முறையும் விடஞ்சேர்மருந்து மிகதள்ளி
மேகம்போல பொழியவலோன் பித்தாரபிடறனெனலாமே 5

பரிசனை - பழக்கம் - வேகமுடையவும் விஷமருந்து - தள்ளிசெய் யென்பது கருத்து.

குருவினை நினைந்துகொண்டு குணங்கண்டுப் பிணியைத்தீர்க்க
மருவிய வியாதிகொண்டோன் வாகுடனாடிக்கண்டால்
திருவினை வென்தசோதி தீருமோ நாலிலொன்று
வெருவிடாமருந்து தன்னால் மீளு முக்கூறுந்தானே 6

வேறு.

பாயிரமுழுது நூலின் பாட்டியலறிந்துகொண்டு
மாய்கிற மனிதர்க்கன்பாய் மருந்துடனாடிப்பார்க்க
ஆயுறுவேதந்தன்னை யருள்கணால்வடநூல் பார்த்து
போயுறுபொதிகைவாழும் புகழ்முனியருள் செய்தாரே

ஆயுறுவேதம் - வைத்தியசாஸ்திரம்.

வைத்தியருக்கின்ன வஸ்திரமாகா இன்னவஸ்திரம் உடுக்கவெனக் கூறுகின்றார்.

வேறு.

காங்குசிவப்பு பலபுள்ளிக் கமழும் பட்டுமாவுரிகள்
நீங்குமிவைகள் துகிலுடுக்க நேரேயாகா வைத்தியருக்
கோங்கு வெள்ளைத்துகிலுடுத்தி யுண்மைநினைந்து மருந்து செயில்
பாங்குபெறவே பிணிதீரும் பாரிற்பாரும் பண்டிதரே. 8

பரிமளவர்க்கம் அணிதலும் கிரியைரிங் கூறுகின்றார்.

வேறு.

சந்தனம் புனுகுபிச்சு சடத்தினிற்பூசி பின்னர்
அந்தணர்கிரியைபோல ஆசிரியனடிவணங்கி
சிந்தையிற் குருவைவாழ்த்தி சிவபதம் நெஞ்சிலுன்னில்
வந்ததோர்பிணிகள் தீரும் வைத்தியன் முறையென்றாரே 9

அந்தணர் முனிவர் ஆசிரியன் - குரு.

5142



குறள்.

அந்தணரென்போ ரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுகலான்

ஆசையின் அந்தணர் - பார்ப்பாரெனக் கொள்ளாமல் எவ்வுயிருந் தன்னுயிர்போல் நினைக்கும் புண்ணிய புருஷோத்மரெனக் கொள்க.

நான்குவித பண்டிதற்கும் எச்சரிக்கை கூறுகின்றார்.

நிலமண்டில ஆசிரியப்பா.

சாத்திரமறிகிலார் சதுர்விதபண்டிதர்
வார்த்தையின் பலத்தினால் மருந்தையீந்திடில்
கோத்திரங்கிளையொடு குலங்கள்வேரற
வீழ்த்தடநரகினில் வீழ்வதுதிண்ணமே. 10

எண்சீர்க்கழிநெடில் விருத்தம்.

அச்சமறவைத்தியரே நோயிலுள்ள அசாத்திய சாத்தியமுமிரண்டறிந்து, பக்ஷமுறகுறுகுண மெய்ப்பரிசுபார்த்து பரிகாரமாய் மருந்து பகிரீராகில், சச்சமறுங்கிளை குலங்கள் வேரோடற்றுத் தரணிதனில் வெகுபாவந்தலைமேற்கொண்டு, இச்சையற எரிநரகில் வீழ்வதல்லால் இகபரமொன்றில்லாமலேங்குவீரே. 11

பிணிதீர்த்தவைத்தியர்க்கு பணங்கொடாத லோபிகட்கின்னவகையென்று கூறுகின்றார்.

வஞ்சமறவுழன்று பிணியாளர்தங்கள் மகவதினும் பதின்மடங்கு மருந்துபார்த்து, நெஞ்சுதனில் நோயாளிப்படி நிதானம் நிறுத்துமந்த வைத்தியர்க்கு நிதிகொடாமல் பஞ்சை மொழிப்பகருமரும் பாவியோரைப் பாழ்நரகல்வீழ் நமன்பாசத்தாலே, அஞ்சவிழுத் தடிக்டித்துவைத்து ஆழத்துவாரென்றகத்தியருமிந் நூலையருள்செய்தாரே. 12

இன்னின்னவனுக்கு மருந்து பலிக்காதெனக் கூறுகின்றார்.

அறுசீர்க்கழிநெடில் விருத்தம்.

கன்னெஞ்சன் வழிபறிப்போன் கண்டபிறகே செல்வோன்
வன்னெடுங்கோபமுள்ளோன் மாதர்மேலாசையுள்ளோன்
பொன்னையே புதைத்துவைத்து பிடகர்க்குப் பொய்யைச் சொல்வோன்
இன்னெடுங் கொடியபாவிக் கிடுமருந்தேறுதன்றே. 13

பிடகர் - வைத்தியர்.

இன்னின்னவர்க்கு பிணிதீராதெனக் கூறுகின்றார்.

பஞ்சமாபாதகர்க்கும் பழிதனை நினைப்பவர்க்கும்
கெஞ்சியேமருந்துசெய்து கேடுகள் நினைப்பவர்க்கும்
அஞ்சிடாவஞ்சகர்க்கும் அநியாயக்காரருக்கும்
நஞ்சினுங்கொடியவர்க்கும் நாடியே பிணிதீருதே, 14

இன்னின்னவர்க்கு வைத்தியஞ்செய்யெனக் கூறுகின்றார்.

தரித்திரப்பட்டபேர்க்குந் தருமத்தை யடைந்தபேர்க்கும்
கருத்துடன் பிணிதீரென்றுக் கபடன்றி மெய்சொல்வோர்க்
[கும்
பெருத்திடுந் தனங்கொடுத்துப் பிணிதீருமென்றபேர்க்கும்
உருக்கமாயுண்ணும்பேர்க்கும் உடல்வைத்தியஞ் செய்வீரே.

இதுவுமது.

வேதியவேடத்தோர்க்கும் விளங்கிய குருக்கள்மார்க்கும்
நீதியாயுள்ளபேர்க்கும் நெறிமுறையுள்ளபேர்க்கும்
சாதியாயுள்ளபேர்க்குந் தவநெறியுள்ளபேர்க்கும்
பேதியாமல் மருந்து செய்திடப் பிணிபோமென்றார், 16

ஔஷதஞ்செய்யவும் உண்ணவும் இன்னின்னக்கிழமை
யாகும் இன்னின்னக்கிழமை யாகாதெனக்
கூறுகின்றார்.

காரியும்புதனுந்திங்கட் கருதிடில் மருந்துதீதாம்
சீரியவெள்ளிநோயாம் செவ்வாய் வியாழம் பிணிதீரும்
பாரினிலுள்ளபேர்க்குப் பரிகாரஞ் செய்யவேண்டில்
ஆரியனருளினாலே அருக்கனில் மருந்துசெய்யே.

நாளுங்கிழமையும் நலிந்தோர்க்கில்லை.

இதுவுமது.

ஆதித்தனுதித்த மூன்றேமுக்கால் அறிந்து பிணிக்கு மருந்து செய்வீர், ஆதித்தனுதித்த மூன்றேமுக்கால் அறிந்து பிணிக்கு மருந்துகொள்வீர், ஆதித்தகிரணமிருபோதும் அறிந்தவுடனே மருந்து செய்வீர், ஆதித்தன் சாட்சியாய் பிணிதீரும் * அயனம் * விருத்தமுங் வராதே.

* அயனம் - பிறப்பு.

* விருத்தம் - மூப்பு.

உ

கடவுள் துணை.

மகா மருத்துவம் பொருந்திய

பதினெண் சித்தர்கள் சொல்லிய

# பால வாகடத் திரட்டு—1200

## கற்பக்கோளிலக்கணம்.

பெண்கள் தோயாப்பூபுக்கு

ஔ ஷ த ம்

எண்சீ ராசிரிய விருத்தம்.

மீரூமல்தா ரமிலாப்பெண்களுக்கு
வேலியிலேபரித்திச்சா றருந்ததீரும்
கூரூகதா துளேயுங்குப்பைமேனிக்
கொட்டைகொட்டையாய்க்கிடக்குங் குளத்துப்பாசி
ஏரூமற்புன்னைக்காயளவுகூட்டி
யிதனுடனே சர்க்கரையுங்கலந்துகொண்டு
பேரூகமூன் றுநாளருந் தும்போது
பிறப்படுமேசெங்குருதிசிவப்பதாமே. 1

தாமென்ற ஆண்கட்டுத்தடையாய்ப் போனல் சங்கம் வேர்நீர்முள்ளிவிரையுங் கூட்டிப், போமென்ற சோதிதனைச் சுட்டச்சாம்பல் புகலால் விழுதுடனே மூத்தக்காசு, ஆமென்ற ஆவின்பால் தன்னலாட்டியதனுடனே சர்க்கரை யுங்கலந்துகொள்ள, ஏமென்ற இந்திரியங்கலிதமாகும் இஷ்ட முடனநுபோக மிசைந்பண்ணே. 2

மலட்டுச்சின்னவிகற்பங் கூறுகின்றூர்.

இசைந்ததொருபெண்மலடு எங்குமில்லே எதனலேமல டானசேதிகேளு, அசைந்திருக்கும் பேயாலும்பித்தத்தாலும் அடிவயிறுநொந்துவரும் வாயுவாலும், பிசைந்தகர்ப்பப்புழு வாலும் கிரகத்தாலும் பிணியாலுமேக வைசூரியாலும், துசங் கெட்டக் கலவியினற் பூவொதுங்கித் துலங்காமற் பிள்ளே யில்லே சொல்லக்கேளே. 3

### கற்பத்துக்கு ஔஷதம்.

கேளுநீகர்ப்பந்தான் வாழ்வதற்குக் கொடியானதோர் நானுங்கள்ளியின்வேர், ஆளவேயதையரைத்து புன்னைக் காய்போய் ஆவெண்ணெய்ப்பாக்களவு கலந்துக்கொண்டு, நீளவேகுளித்த முதல்மூன்று நாளும் நினைவாகவேயருந்த கர்ப்பமுண்டாம், கோளவேபத்தியந்தான் புளியுகையும் உப்புங்கொள்ளாமல் ஆவின்பாற்சோறு முண்ணே. 4

### வேறு மருந்து.

உண்ணவேவேப்பலகு சீந்தில்தண்டு உயர்முத்தக் காசு டனேயொக்கக்கூட்டி, கண்ணவேசாறுரியும் நெய்யுழக்குங் கலந்ததனைக் கொதிப்பித்துக்காலைமாலை திண்ணவே களித் தமுதல் மூன்றுநாளுந்திடமாக அருந்திவாகர்ப்பமுண்டாம், எண்ணவே சீந்தில்வேர் நானுங்கள்ளி இகமாகவே ரரைத்துப் பாலில் தாக்கே. 5

தாக்குவாய்ப் பெருங்காயம் இந்துப்போடு தவறுமலே புளியம் புறணிகூட்டி, ஆக்கமுடன் கற்றாழைவேரின்சாற் ருல் அரைத்துநீ யுருட்டிடுவாய் புன்னைக்காய்போல், ஏற்கவே குளித்தமுதல் மூன்று நாளும் இதமாகவேயருந்த கர்ப்ப முண்டாம், கேட்கவேவாயு அறும் பூச்சுவீழுங் கெடியான தோஷ விஷக்கிரகம்போமே. 6

### கற்பத்திற்கு வேறு மருந்து.

விஷப்பாலை வெட்பாலை வானுமூவைகடுக்காய் வேண்டு நெல்லித்தான்றிக்காய்க் கொன்றைப்பட்டை, நிசப்பான கொடிவேலி இந்துசுக்கு நிரையாகவசை மூன்றுகழஞ்சு கூட்டி, அசப்பான பிரமிச்சாறுவின்பாலும் அப்பனே வகைக்கு இருநாழிகூட்டி, பிசகாமல்முன் மருந்துசாறரைத்து பின்னையுமே ஆவினெய்நாழிகூட்டே. 7

நாழிநெய்யுடன் மருந்தெல்லாங்கூட்டி நன்ருகக்கொ திப்பித்து மெழுகுபோல, தாழியாங்கலசத்துள் வடித்துக் கொண்டு தவறுமல் முழுக்குவந்த மூன்றுநாளும் ஊழியாம் இருபோது கரண்டியுண்ண உத்தமம் கற்பமுண்டாம் உறுதி யாகும், காளியெனுஞ் சாமுண்டிப் பிசாசுநோய்கட் கடந் தோடும் பத்தியம்நீ கண்டுகொள்ளே. 8

## கற்பக் கோள்.

பாரப்பாபெண்மடலாங் கர்ப்பக்கோளின் பக்குவத்தைச் சொல்லுகின்றேன் பண்பாய்க்கேளு, ஆரப்பா ஆண்மலடேயாதுமல்லால் அப்பனே பெண்மலடியாருமில்லை, நேரப்பாதவமிருந்தும் பொருளையீந்தும் நேராக இல்லையது சூலையாலே, வேரப்பாதேவதையே டேழாங்கர்ப்பம் விரித்து நன்றாய்ப் புகலுகிறேன் விரும்பிக்கேளே.

### கருக்குழியின் ஆறு வியாதியுங் கூறுகின்றார்.

புகலுகிறேன் முதல்தரந்தான் மலடியென்றப்பூவைக்கு கருக்குழிதான் விளக்கமற்று, அகலுகிறேன் அகலாமல் பாசம்பற்றி அடைத்திருந்தால் விந்தங்கேயணுகாதப்பா, நிகலுகிறேன் மறுகரந்தான் கருக்குழியில்வாயு நிறைந்திருந்தால் விந்தங்கேநேராதப்பா, தகலுகிறேன் பின்னுமங்கு கருக்குழியில்மூடி தசைவளர்ந்தால் விந்தங்கேதான் செல்லாதே.

செல்லாது நாலாவதப்பாகேளு சிறியவட்கருக்குழியில் புழுதான்சேரில், செல்லாது ஐந்தாவதப்பாதேளு செறிந்தங்கே கருக்குழியில் தோரிக்கட்டி, செல்லாது ஆறாவதப்பா கேளு செப்புகிறேன் கருக்குழிதான் மதர்த்திருந்தால், செல்லாது இவை ஆறுவியாதியாகுஞ் சென்றபின் விரோதமேழாகுங்காணே. 2

### கருக்குழி விளக்கமற்று பாசம்பற்றியமுதல் வியாதியின் குணமும் அதற்கு ஔஷதமுங் கூறுகின்றார்.

காணப்பா இவைவிபரம் விரித்துச்சொல்வோங் காரிகைக்குப் புணர்வேளைத்தலைதானொந்தால், கோணப்பா கருக்குழியிற்பாசம்பற்றிக் கொண்டுதென்றுதானதற்கு சாந்தி செய்வாய், பூணப்பா கோழியுடப்பித்துதானும் புகழானபரித்திவிரைபருப்போடொக்க தோணப்பா அவள் குளித்த அன்றுதொட்டுச் சொல்லுகிறேன் மூன்றுநாளரைத்துக் கேளே. 4

### கருக்குழியின் வாயிவினலாய இரண்டாம் வியாதியின் குணமும் அதற்கு ஔஷதமுங் கூறுகின்றார்.

கேளப்பா இம்மருந்தையோனிக்குள் தேய்த்துக கெடியானபுருஷனையும் புணரச்சொல்லி, நாளப்பா இப்படியே மூன்றுநாட்செய் நலமான பாசமற்றுக் கர்ப்பமுண்டாம், ஆளப்பாபுணர்வேளையுடம்பு நொந்தால் அப்பனேவாயு

நிறைந்திருக்குதென்று. வாளப்பாபெருங்காயம் நெல்லெண் ணெய்வார்த்து மத்தித்து யோனிக்குட் பூசச்சொல்லே.

கருக்குழியில் சதைவளர்ந்த மூன்றும் வியாதியின்

குணமும் அதற்கு ஔஷதமுங் கூறுகின்றார்.

புசியேமூன் றுநாள் புணர்ந்தானுகிற் புதல்வருண்டு மூன் றுவதப்பாகேளு, கூசியேபுணர்வேளை யவட்குதானுங்குறையா மல் நெஞ்சுவலிபிடித்துதானல், தாதியேயோனியெல்லாஞ் சுருகிக்கொள்ளுந்தசை வளர்ந்திருக்குதென திப்பிலியூரம், மாசியேகோழியுடப்பித்துச் சேர்த்துவாட்டியே யோனிக்குள் தடவச்சொல்லே. 6

கருக்குழியிற் புழுசேர்ந்த நாலாம் வியாதியின்

குணமும் நுதற்கு ஔஷதமுங் கூறுகின்றார்.

தடவியே மூன்றுநாட் புணர்ந்தானுகில் தப்பாதுபிள்ளை யுண்டாம் நாலாங்காட்சி, அடவியேபுணர்வேளை முதுகுநொந் தால். அவட்கங்கே கிருமிநிறைந்திருக்குதென்று, விடவியே இந்துப்பு அரிதாரம்காயம் வெந்நீரில் மூன்றுபணந்தூக்கி யாட்டி, படவியே மூன்றுதினம் யோனிக்குள் தேய்த்துப் படுத்திடவேபிள்ளையுண்டாம் பண்புதானே. 7

கருங்குழியிலிரத்தமூடிய ஐந்தாம் வியாதியின் குணம்

ஔஷதமுங் கூறுகின்றார்.

தானென்ற ஐந்தாவதப்பாகேளு தழுவயிலே கெண் டைக்கால் வலித்துதானல், வானென்ற சோரியவட் கருக் குழியை மூடிமறைத்திருக்குதென்றறிந்து மைந்தாகீயும், பானென்றகடுக்காயும் பஞ்சதாரை பச்சைபூரம்புழுகும் ஆட்டிவாங்கிமானென்ற அவள்குளித்த மூன்று நாளும் மாதுஉண்ண உள்ளுக்குங் கொடுத்திடாயே. 8

யோனியிற் பூசமருந்தும் கருக்குழி மதர்த்திருக்கும்

ஆறும் வியாதியின் குணமும் அதற்கு ஔஷதமும்.

கொடுத்திடவே பிள்ளையுண்டாங் குறைதானில்லைக், கூறக்கேள் யோனிக்குமருந்துகூட்டு, நடுத்திடவே குங்குமப்பூ அதிமதுரந்தானும் நற்சீரகத்துடனே மூன்றுங்கூட்டி,

டுத்திடவே யோனிக்குட் பூசிக்கொண்டுப் பாயலின்புணர்ந் டவே கர்ப்பமுண்டாம், எடுத்திடவே அருவதப்பாகேளு ப்பமிட்டால் புணர்வேனேமதர்த்து தென்னே. 9

மதர்த்துமே கொழுந்திருக்குதென்று தானும் வாகான வர்க்காரங் கடுக்காய்ச்சாரம், சதைத்திவைகட்சமனுக வுரைத்து வாங்கித்தடவியே புணர்ந்திடவுமூன்றுநாளும், தத்துமெத்த கர்ப்பமுண்டாம் ஏழாங்காட்சிப் பேயாலும் திராறும் பிழைதானுண்டு. சுதத்துமினி சாந்தியொன்று நட்சமாகச் சொல்லுகிறே னன்ருகக் கேளுகேளே.

சாந்தி கூறுகின்றார்.

கேளப்பா சூதயிலேமாதளேயினிலேயுங் கெடியான கஸ் தூரிமஞ்சள் தானும், நாளப்பா அரைத்து நன்ருய்ப் பாத முதல்சிரசுநயமாக மேல்நோக்கி தடவச்சொல்லி, வேளப்பா புருஷனை தானுதிக்கசெய்துவிபரமுடன்கீழ்நோக்கிப்பார்க்கச் சொல்லி, வாளப்பாமருந்தெல்லாந் தூற்றிவாரி மாயிலேலெல் லாந்தான் வாங்கிக்கொள்ளே. 11

வாங்கியதோர் மருந்ததனை அவள்முன்காட்டி மைந் தனே வாசலிலேபுதைத்துவைத்து பாங்கிதனைக்குளிப்பி த்துப் புடவை நல்கிப்பண்பான அகிலுடனே சாம்பிராணி தந்தம், தேங்கியதோர் தேகமெல்லாம் புகைத்துநன்ருப் தின மொன்றுமூன்றுதரம் புகைத்தப்பாது. ஏங்கியதோ தேவ தையும் பூதப்பிரேதம் ஏவலொடு பிசாசுவகையெல்லாம் போமே. 12

மருந்து எடைபாகங் கூறுகின்றார்.

போகுமப்பாமருந்துவகை யோனிக்குப்பூச பூட்டுகிறே னெடை பாகம்பிரித்துக்கேளு, ஆகுமப்பாவகையொன்றுபண யெடைதானென்று ஆண்பிள்ளைக்கவ்வண்ண மரைத்துப் பூசு, ஏகுமப்பாபெண்ணுக்குப்பணஎடைதான் ஐந்து எடுபடுங் காண்வியாதிமுதல் விரோதமெல்லாம், மாகுமப்பாமலடில் லைப் பிள்ளையுண்டாம் பாடினேன் கர்ப்பத்தின் கோளைத் தானே. 13

பத்தியங் கூறுகின்றார்.

தானென்றபத்தியஞ் சூக்ஷத்தில்சொல்வேன் சாதக மாய்க்கட்டியதோர் உப்புமாகும், வேனென்றப் புளியாரை

சீயக்கொழுந்துமேலான நெல்லிக்காய் அரிநெல்லிக்கா
தேனென்றவெள்ளாடு முயல் ஆமையாகுந் திறமான ஊ
குருவிகாடைமானும், பானென்றமறையாகும் சுறுமீனு
பண்பானகெளிற்றுமீன் மிளகுமாமே.

ஆமப்பாசர்க்கரைதேன் சிறுகீரையாகும் ஆவின்பா
நெய்யாகும்சிறுபயறுமாகும், ஆமப்பாதுவரையொடு பொ
னுங்கணி அவரைக்காய்தூதுவேளை சமூலமாகும், ஆமப்பாதி
தீத்தநெல்லாமாகும் ஆகாதனைப்பாகாபுளி துவர்ப்பாகா
ஆமப்பாபழவகைகளெல்லாமாகும் ஆத்தாட்குப் பூசித்தும
வுமாமே. 1

மநுவாகும்குளிர்ந்தஜலங் கிட்டஆகா மைந்தனே கொதி
தண்ணீர்துகவுநன்று, சதுவாகும்வேதமுறை கண்டுசொன்
னேன்சத்தியந்தான் இந்த நூல்சார்ந்து நீபார், அதுவாகு
மிதுவாகுமென்றேயெண்ணி அலைந்தலைந்து திரியாமல்
அருளைநோக்கி, பொதுவாகும் நினைவுகொண்டு இருப்பாரா
கில்புத்திசித்திமுத்தி முதல் புனிதமாமே. 16

கற்பக்கோள் முற்றிற்று.

அகஸ்தியர் திருவடிகளே சரணம்.

---

கடவுள் வணக்கம்.

# பால வாகடத் திரட்டு

எண்சீராசிரிய விருத்தம்.

சீரானபராபரத்திற் பரமாய்நின்று திரிபுவனந்தாக்கிய வை யாளானென்றப், பேரானவஸ்துவெனும் விமலர்பாதம் பேணியேநமஸ்கரித்துப் பிரியமாக, நேரானபாலசாஸ்திரத் தைப்பாட நினைந்துமுன்னூல் விதித்தபடி நேர்மையோடு, சூரானமதிமாயைத் தொழிலைநீக்கிச் சொல்லுகிறேனுள்ள படிச் சொல்லுகிறேனே. 1

சேஷார்த்த வீட்சியம்

அறுசீராசிரிய விருத்தம்.

வாலக்கிரகக் குணக்குறியுமருந்தும் மந்திரம் இயந்திரமும்
காலக்கழிப்பும் நீர்சொரிதல் கட்டுங்குளிசவேருடனே
கோலக்குளிகை எண்ணெண்ணப குணத்தின்படிசொல்வதற்கு
சீலக்குருவாம் விநாயகனார் சிந்தித்தோர்சஞ்சீவியென்றே. 2

## நூல்.

### கற்பஸ்ரீகட்கு 10 மாதத்திற்கும் வருநோயும் அதற்கு ஔஷதமுங் கூறுகின்றார்.

### கலிவெண்பா அதுவே உலா.

அத்தியுருத்தோனிடத்தில் அமர்ந்த உமையாளீன்ற
சத்திக்கணபதியின் தாள்போற்றி எத்திசையுங்
கெர்ப்பமின்னருக்குக் கிளைத்தபிணிதான்தீர
கற்பமதாங்கிரியைக் கண்டுரைப்பேன் உற்பத்தி
திங்கள்முதல்கர்ப்பஞ் சிறுவலியாய் தான்வலிக்கில்
எங்கள்மறைப்பூசந் திலாமிச்சு மங்கைநன்னீர்
வார்த்தரைத்து ஆப்பாலில் வாகாவேகொடுக்க
சோத்திரண்டாமாதஞ் சினுகினல் மாற்றிகொள
தக்கோலம் தாமரையின் தன்பூவும் நீரரைத்து
அக்காலமேகொடுநீ ஆன்பாலில் எக்காலம்
6 மூனந்திங்கள்தனில் மூறுக்கிவயிறுளைக்கில்
வாணிமலர்தெங்கமுநீர் வன்கிழங்கு பேணி
7 பாலிலதைகொடுக்க பாவையர்க்குக்கர்ப்பம்
நாலில்வலித்து ரத்தல்நாடினல் சூலியர்க்கு
8 நெய்தல்கிழங்குநொச்சில் நீர்வார்த்தரைத்தனே
உய்தபசும்பாலில் உண்ணவே ஐந்தாம்
9 மாதம்வலிக்கில் வரும் ஆம்பலில் பூவும்
வேதமதைவிலாமிச்சம் வேரும் போத
10 நீர்வார்த்தரைத்த நிட்செயம்பாலிற்கொடுக்க
கூர்ஆறில்கற்பக் குடலமுன்று நேரே
11 சுற்றிக்குடல்வலித்துச் சுழுன்றுமே நீர்ச்சுருக்கில்
பற்றியிதற்கும்மருந்து பகரக்கேளே உற்ற
12 திப்பிலியுமுந்திரிகை சேர்ந்தநெய்தல்கிழங்கு
அப்பில்அரைத்துப்பாலி லேயருந்த ஒப்பில்லா
13 ஏழில்வலிக்கில் இலாமிச்சம் சந்தமும்
வாழுந்தக்கோலம் வதைமுன்றும் சூழும்
14 கோவினுடப்பாலில் கொடுக்களட்டாமாதம்
பாலவகைகால் அயரும்பசிக்கன்னநி தேவை

15 இல்லைதான் இன்னம் இதற்குமரைப் பூவும்
தொல்லைநெய் தல்கிழங்கும் தொந்தித்து நல் ஆவி

16 பாலிலதைகொடுக்க பாவைநவமாதம்
சூலின்வலிக்காணில் அரசந்தோலும் கோ

17 மருதந்தோல்நீரில் வாகாகவேயரைத்து
கருத்தாய்ஆவின்பால் கண்டுகொடு பருக

18 பத்தாகுமாதமதில் பாவைவயிறுனைக்கில்
எத்தாகும்சர்க்கரை யிலுப்பைப்பூ சித்தா

19 நீரில்அரைத்துப்பாலில் நினைவாகதான் அருந்த
பேருமத்தித்தோர்க்குப் பேசுவேன் கூறும்

வயிற்றில்பிள்ளை மத்தித்து போனுல் வீழ மருந்து

20 அறிந்துநிலக்குமிழ்வேர் அரைத்துக்கரைத்து
விரைந்துகுடிச்சுப்பிள்ளை வீழுமே வரையில்

21 அரனுர்உரைத்த தறிந்துமுனிதானுரைத்த
திறமாகும் என்றிதனைச்செப்பு

உருதரிக்குமிலக்கணங் கூறுகின்றூர்

அறுசீராசிரிய விருத்தம்.

ஆகநாள்வந்துவிட்ட ஐந்தாநாளகடுகுபோலாம்
போகஈரைந்தாநாளில் பொருந்தியமுட்டைபோலாம்
ஏகமாதத்தில்பிண்டம் இரண்டினில்மார்புமட்டாம்
பாசமாய்மூன்றுந்திங்கள் பகர்உந்திமட்டுமாமே. 22

மட்டுடல்நாலாந்திங்கள் வளர்ந்திடும் பாதமெங்கும்
கட்டுடன்ஐந்தாமாதம் கருதுபூரணமாய்ஆறில்
தட்டுடன்எலும்புசீவன் தலைமயிர்நரம்புஏழாம்
எட்டுடன்அறிவாம்ஒன்பதில் தசம்பிறவிதானே 23

மாதாபிதாவால் பிள்ளைக்கு வருநோய் கூறுகின்றூர்.

எண்சீராசிய விருத்தம்.

பிறந்தநாள்பிணைக்குந்தானே தன்தாய் பிதாவாலே சிசுவுக்குமேலேதோன்றும், சிறந்தபிணிமாந்தகணங் காப்பான் தோஷம் தீதான அக்காரங்கள்கிரந்தியுண்டாம், அறந்தழைக்கு மருத்துவச்சியாலேதீரும் அதுஅன்றிமருந்தறிவாஆனல்தீரும், திறந்தெரிந்து பார்த்துவிடுஞ்சிறுபிள்ளைக்குச்சீராகவருநோய்கள் செப்பக்கேளே. 24

செங்கிரந்திக்கருங்கிரந்தி செவ்வாப்புத்தான் தீயானக் கரப்பானும் அரையிற்கானும், அங்கமெல்லாஞ் செவ்வாப் புச்சிவந்து காணும் அதுஅன்றிக்கருங்கிரந்தி தொண்டைக் கட்டும், பிங்கிரகம்பேய்த் தோஷம் பக்ஷித்தோஷம், பின்னு வெகுரோகங்கள பிரித்துச்சொல்ல, அங்கரிது குழந்தை பிணியறிந்துதீர்க்க. ஆராலுமாகாதென்றரன் சொன்னரே.

சொல்லுகின்ற குழவிக்குக்கரப்பானேது தோஷ மென்ற வினையேது மாந்தமேது, கொல்லுகின்றகணமேது அக்கரங்களேத கூறும்வைசூரியென்றக்குளறலேது, புல்லு கின்றதாயாலே தந்தையாலே புணைந்துகொடி படர்ந்தது போல் படர்ந்துதிப்பால், கொல்லுகின்றகரப்பானுங் கர்ப்ப மேகம் கோதுற்றதோஷமெல்லாம் முலைப்பால்சூடே.

சூடானமாந்தமெல்லாந் தாய்ப்பபால்மந்தம் தொகை யான கணங்களெல்லாங்கர்ப்பச்சூடு, பீடான அக்கரங்கள் எல்லாந்தாயும் பிதாயிருவர் புணர்ச்சியினல் எழுந்தசூடு, பாடானவைசூரியேல்லாம் அநுபோகத்தால் படர்ந்துதிந்த வினையெல்லாங் கர்மத்தாலே, காடானவகைபோலே சொன் னதற்குக்கண்டுவருந் தோற்றமினி கழறுவேனே.

குழந்தைகளை நோய்கள் வாதிக்கும்நாள் கூறுகின்றார்.

கழறுனகரப்பான் தான் பிறவி நோக்கிக்கண்டமுதல் நாள்தொடங்கித் திங்கள்மூன்று, புழறுனகுழவிகளை வதைக் குங்காலம் புணர்ந்த பலதோஷமெல்லாந் திங்கள்மூன்றுபழ றுந நாள்தொடங்கி வருஷம்ஒன்று, பதைபதைக்கக் குழவி களை வதைக்குங்காலம், சிழறுனமாந்தமெல்லாம் வருஷந் தொட்டுச் செறிமூன்று வருஷமட்டும் வதைக்கும் என்னே.

என்னவேகணமூன்று வருஷந்தொட்டு ஏழாண்டுமட்டுக் கும் இருக்குங்காலம், பன்னவேஅக்கரங்கள் ஏழாண்டுத் தொட்டுப்பகர்முப்பதாண்டுமட்டும் படருங்காலம், உன்னவே வைசூரியோகமெல்லாம் உயிர்பிரியுங்காலமட்டும் உரித்துதா னென் றின்னவேமுன்னூலில் முனிவர் சொன்ன இயல்பு கண்டிந்நூலில் சொன்னதாமே. 29

பிள்ளைப் பிறந்தவுடன் சிறிசிறியழுததால் விக்கல் பெருமலுக்கு மருந்து.

திருமேதிங்கள் சென்றுப்பிள்ளைப்பெற்றால் சிறியழும் பாலகர்க்கு மருந்துகேளு, கூறுடனேசிறுதேக்கு திப்பிலியுங் கூட்டிக் குறுகவே பொடிசெய்தேன் ஆவினெய்யில், வேறு படகொங்கைபிள்ளை யுண்ணும்போது விக்கல்போம்பொரும

னுடன் விஷமும்போகும், பாருடனே திப்பிலி ரோகணியுங் கூட்டிப் பருவமுடன் செய்குழைத்து தனத்தில் பூசே. 30

பிள்ளை வயிறு வீங்கினால் குடித்தபாலெதிரிட்டால் கெட்டாவி விட்டால் மருந்து

பூசுவாய்பிள்ளையுட வயிறுவீங்கில் பொடிமதுரங் காடியரைப்பூசத்தீரும், கூசியே குடித்த பாலெதிரிட்டாலும் கொட்டாவிவிட்டாலும் கூறக்கேளு, பாசமுள்ள வெள்ளுள்ளி அசமதாகம் பரிவுடன்கிழாயம் வைத்துபருகதீரும், தோஷங்கண்டெச்சமுலையுண்ணுதாகில், துலங்கவே அதிமதுரம்பொடியதாக்கே. 31

பிள்ளை வயிறு நொந்தழுதால் மலங்கட்டினால் மருந்து.

பொடியாகப்பால் அரைத்து முனைக்கண்பூசிப் பிள்ளை ஸ்தனம் உண்ணவே போகுநோயும், துடியாய்ச்சேய்வயிறு நொந்து அழுதானால் துலங்குபுன்னை சிறுதேக்குக் கோஷ்டங்கொண்டு, வடிவாகநீர் அரைத்துக்காய்ச்சியேதான் மைந்தன் வயிற்றில்பூச நோயுந்தீரும் அடிவயிறுநொந்து மலங் கட்டுமாகில் அதிமதுரம்பிசித்துளிர் சர்க்கரையும் அரையே.

பிள்ளைக்கு சிறுநீர் இறங்காவிட்டால் தோஷங்கண்டால் மருந்தும் குளிசமும்.

அரைத்துநெய்யில் பகட்டவேமலம் இறங்கும் அதுவல்லால் நீரிங்க எலிபுழுக்கை, உரைத்திடுவாய் வெள்ளரிக்காய் விரையுங்கூட்டி உகந்தரைத்து அடிவயிற்றில் பூசவேதான், நிரைத்திடவே நீர் இறங்கும்பாலும் உண்ணும் நினைவாக மஞ்சளதுத்திவேருங்கொண்டு, பரைத்திடுவாய் மஞ்சல்நூல்குளி சங்கட்டில் பறக்குமேதோஷமுடன் பல நோய்தானே. 33

எட்டுவித தோஷகுணங் கூறுகின்றார்.

செங்கிரந்தி கருங்கிரந்தி பக்ஷிதோஷம் பரவை தோஷக்குணம் வெண்பா.

செங்கிரந்திதேகம் சிவப்பாம்கருங்கிரந்தி
பொங்கிமிடறுகட்டிப் போகுமே நங்காய்கேள்
பேய்ப்போலே சீறியழும் பிறந்தபக்ஷியின் தோஷம்
நீ இப்பரவைதோஷத்தை நேர். 34

புள்ளுத்தோஷம்-கற்பம் அழிந்ததோஷம்குளிதோஷகுணம்

நோய்த்திடுமே நின்றபுள்ளுத்தோஷம்
வாராய்கழியும்பச்சை வாறுபோல் நோராய்

அளிதோஷங்கால்பின்னும் ஆகுமதுவாந்திக்
குளிதோஷம் ஆமென்றே கூறு. 35

தேரைத்தோஷம்-மூட்டுத்தோஷம்-பெண்தோஷக்குணம்

கூறுமதுதேரைக் குணந்தேகந் தான்வற்றும்
மாறுபட்டுத்தோஷமூலை மறக்கும் விறுடனே
பெண்தோஷந்தான் மயக்கும் பேராகும் எட்டும்
நண்பாகுந்தோஷத்தை நாடு 36

எண்வகை மாந்தகுணங் கூறுகின்றார்.

மாந்தம்-செரியாமாந்தம்-தலைமாந்தம்-போர்மாந்தக்குணம்

நாடுதனில்மாந்தம் நன்றாய்வயிறுபோம்
தேடுசெரியமாந்த சேதிகேள் ஓடகடு
மார்க்கரைத்தால்போல வலிப்பாந்தலைமாந்தம்
சாக்கைப்போர்மாந்தத்தைக் காண் 37

கட்டுமாந்தம் விஷமாந்தம் நீர்மாந்த குணம்.

காணவயிறுபோம் கட்டும் அதுமந்தம்
வானம்போல் உப்பி மலம்போகா தூன
விஷமாந்தம் மெய்விரைக்தும்மேலே மிகவெதும்பும்
இசையாய்நீர்மாந்தம் இயம்பு 38

கழிமாந்த குணம்.

இயம்புவதுமேனி எங்குங்குளிர்ந்திருக்கும்
திப்புகழிமாந்தத்தின் சேதிகேள் சொயம்பி
பலவிதமாய்தான்கழியும் பார்க்கில் இவை எட்டும்
உலகில் இது வெவ்வேறுரை ஆக மாந்தம்-8 39

எண்வகைகணங் கூறுகின்றார்.

கணம்-மஹாகணம்-கழிகணம்-சுழிகணக்குணம்

உரையாய்க்கணங்காரியம் உண்மைமஹாகணந்தான்
நிரையாய்உதடுவெடி நேருமே குரைசேர்
கழிகணந்தான் வயிறுபோம் காணவிலா இரண்டும்
சுழிக்குங்கணமெனநவ சொல் 40

வரட்கணம்-நீர்க்கணம்-மூக்குக்கணம்-மூலகணக்குணம்

சொல்லாய்வரட்கணந்தான் சுரம் அஸ்தியில் நிற்கும்
செல்வாய்நீர்க்கணம்வேர்வைச் செய்யும்-நல்லாய்கேள்
மூக்குக்கணமூக்கும் மூலகணஞ் சீதரத்தம்
தக்கும் அடிதள்ளும் தான் 41

ஆமகணம்-ஆமசன்னி-ஊதுகாமாலை-மஞ்சட்காமாலை குணம்

தானலரும் ஆமகணம் தையலே ஆமசன்னி
ஊனமுறநெற்றிச் சுழியுண்டாம் தேனேகேள்
காமாலையூதும் கருதுமஞ்சட்காமாலை
மாமூத்திரம்மஞ்சள்நிற மாம் 42

இனி இவைகளை தனித்தனி விளக்குவதும்
கிரந்தி வருவிதங் கூறுகின்றார்—வெண்பா.

எல்லாக்கிரந்தியெழும் வாதப்பித்தப்
பொல்லாதசேஷ்மத்தால் பொங்கிவிடும் வில்லான்
நீள்புருவத்தாளே நிறைந்ததுசெயற்கரப்பான்
ஏழ்புவியோர்க்கென்றே இயம்பு 43

செங்கிரந்தியின் குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

பிள்ளைப்பிறந்தவுடன் அழுதுப் பிறதுமிடறுதனைக்கட்டி
மெள்ளப்பூனைக்குரல்போன் றுவிடாமல் நீர்மலம்வயிறாதித்
துள்ளிக்கைகால்சிவப்பேறிச் சும்மாக்கிடக்குமதென்னில்
கள்ளமானசெங்கிரந்திக்கருத்தாய் இதனைக்கண்டுகோளே

செங்கிரந்திக்கு மருந்தும் குளிப்பாட்டவு மருந்து

கோரோசினைமுதலைப்பாலில் கொடுக்கக்கற்பூரவள்ளியிலை
நேரோடுஉள்ளித்தனைநறுக்கி நிகருங்குன் றிமணியிலையின்
சாறும்அருந்தமுருங்கையிலைத்தன்சா றருந்தசெங்கிரந்தி
தீரும்செம்முள்ளியினிலையைத்தினமும்நீரில்குளிப்பாட்டே 45

கருங்கிரந்தியின் குணம்.

முழங்கஅழுதுமுலையுண்ணு மூர்ச்சையாகும் உடல்வெதும்பும்
கொழுங்கண்திறவாய்வரட்சிகொண்டே அதரங்கறுப்பேறும்
அழுங்கி அலறும் குரல்கம்மும் அதிகமாக வயிறூதும்
புழுங்கும்வலிக்குங்கருங்கிரந்திப்பொல்லாதெனவும்
[புகன்றனரே. 46

கருங்கிரந்திக்கு மருந்து.

ஓணான்யிரத்தம்காளவாயன் உகந்தபாலுங் தான்கொடுக்க
முணுகரிய கத்தபத்தின் மூத்திரம் அவுரிச்சாறுசமன்
நாணுவசம்பு உள்ளிபுமாய் நறுக்கி ஏரண்டெண்ணெயுடன்
ஆணல்எரித்துக்கொடுத்திடுநீ ஆறும்கரிய கிரந்தியதே. 47

கருங்கிரந்திக்கு எண்ணெயுங் குளிப்பாட்டவும்
எண்சீர் விருத்தம்

நெய்யுடனே விளக்கெண்ணெய் நல்லெண்ணெகூட்டி
நீடுஞ்சங்கிலைச்சாறு சமனாய்விட்டுத், திய்யாமல் கடுகம்தான்

நீர் அரைத்துத் தீதில்லாரவியில் வடித்தேயெடுத்துப், பைய வொரு பண எடைதான் உட்கொடுத்துப்பாங்குடனேமேலெ ங்குந் தடவிவைத்துச் செய்யமுன்னிக்கிரந்தி நாயகம் நீர்ப் போட்டுத் தினமுமே குளிப்பாட்டத் தீருமென்றே. 48

கருங்கிரந்திக்கு எண்ணெய் உள்ளுக்கும் மேலுக்கும்பூச.

மூக்கரை சாரணை முடக்கொத்தான் செந்நெருஞ்சில்முத் தெருக்கஞ் செவியினுடன் ஓரிதழ்தாமரையுய், ஆக்கமுடன் ஈருள்ளிமயிலிறகுகூட்டி ஆமணக்கெண்ணெயில் எரித்துள் கொடுபின்பு, தாக்கி மேல்பூசியிடவந்தவலி நிற்கும் தாயையும் பத்தியம் சமரசம் வைக்கப், பூக்கமழுங் குழல்மடவாய் உமைக் கரன் புகன்றபுகழுரையு மிதுவாகும் புவியிலுள்ளவர்க்கே. 49

பன்னிரண்டு கிரந்திக்கும் பதினெட்டுச் சூலைக்கும் எண்ணை.

ஆசிரிய விருத்தம்.

அண்டபகிரண்ட முதல் கொண்டுமனு விண்டு தொழ ஆமணக்கெண்ணெயதுசேர், அடவான தேங்காயைத் திருகி முன்பாலையெடு அவிர்செம்பரித்திச்சாற்சேர், கண்டதொரு பாண்டங்கலந்தடுப்பேற்றியே காய்ச்சிவடி எண்ணெயதிலே, கற்கம் இனிவர்க்கமொடு சுக்கது கிராம்புடன் கனிவாயுக ந்தஏலம், கொண்ட சிறுதிப்பிலிச் சண்டமானதபூரங் குன்று மிளகுப் பொடியதாய், குறையாமல் இவ்வகை வகைக்கே விருகனெட்டை கூட்டிவிடும் எண்ணெயதிலே, இரண்டுபடி ஒரு சங்குதந்த குழவிக்கீய ஏகுநோயானவகைகேள் ஈராறு கிரந்தியும் அறுமூன்று சூலையும் ஏங்கியோடிப் போகுமே. 50

தீராத அசாத்திய கருங்கிரந்தியின் குணம் தன்வந்திரி.

எண்சீராசிரிய விருத்தம்.

பாரே நீ கருங்கிரந்திக்குணம் ஏதென்றால் பனிபோலே சீறியமும் முலையுண்ணாது, ஆரேதான்முறிமுறித்து உடலும் விம்மும் அரியநாவரட்சியுடன் கண்விழிக்கும், வாரேதான் மலர்முகமும் வாடிக்காணும் வல்வினையாய்குக்கில் புழுவிளை யும்பாம், மாரேதானமைந்தன் அஞ்சு நாளில் சாவும் மஹா கொடிது கருங்கிரந்தி யுரைத்தோம் நாமே.

கிரந்தி வகுப்பு முற்றிற்று.

---

கடவுள் துணை.

இனிதோஷம் வருமாறு

அகஸ்தியர் திருவடிகளே சரணம்.

# தோஷவகுப்பு பட்சித்தோஷ குணம்.

அறுசீராசிரிய விருத்தம்.

உக்கமாய்க்கழிவதன்றி உவாந்தியுமிக உண்டாகி
இதமொடுதலையேடாமல் இருகண்ணில் பீளைக்கட்டி
விதவிதமாகமேனி வெதும்பியேபேய்போல் சீறும்
பதமிதுமுனிவன்சொன்னப் பட்சியின்தோஷந்தானே. 52

பெருகிவயிறுதான்போகும் பேதம்உப்புங்கண்குழியும்
பெருகுங்கழுத்துமுகஞ்சிறுக்கும்பேரானகுரல்போல்சீறயுழும்
அருவிமுலையும்உண்ணு அலருந்தண்ணீர்க்குடியாது
பருவவிடயோன்தான் அரியப் பகரும்பட்சிதோஷமிதே.

பட்சிதோஷ நிவர்த்தி குளிசமும் மருந்தும்.

பட்சியின் தோஷந்தீரப் பனையின் வேர்க்குளிசம்ஆடி
உச்சிதமணித்தக்காளி உகந்திடும்வேரோடுள்ளி
பிச்சியின்வேரோடெண்ணெய்ப் பிசைகதிர்படமேசெய்து
உச்சியில்இட்டுப் பின்னம் உள்ளுக்குக்கொடுத்திடாயே 54

இதுவும்பட்சிதோஷநிவர்த்தி குளிசமும்சாந்தியும் தன்வந்திரி.

எண்சீராசிரிய விருத்தம்.

காணவேசெப்பேடு தகடுவாங்கிக் கண்மணியே எண்கோணம் அதன்மேல்வட்டம், பூணவேசிங்கிரீயும் ஸ்ரீயுஞ்சவ்வும் பூட்டியே எண்கோணம் அதிலேயூன்று, தோணவே நான் சொல்வேன் தருமமாக தூக்கானஐயுமென்று நடுவிற்போடு, மாணவேபோட்டதிலே பஞ்சநூலால் மகிமையாய்ச் சுற்றி நன்ருய்க் குளிசம் ஆடே. 55

ஆடுகிறஉழுந்தோடு அரிசிப்போட்டு அச்சமறசமைத்து ஒரு பாண்டந்தனில், வாடுகிறஎருக்கிலையில் சாதம் வைத்து வளமாக மூவிளக்குமாவால்ஏற்றி, நாடவேமந்திரத்தால் நூற்றெட்டோதி நயமாகசாந்தி செய்துகுளிசங்கட்டுப், பாடுகிற தில்லையந்தான் பட்சித்தோஷம் பலத்தநோய்ப் பறந்தோடும் வித்தைத்தானே. 56

பறவை தோஷகுணம்—அறுசீராசிரியர் விருத்தம்.

குஞ்சியின் உடம்பு நொந்து குடல்தனில்பாலுந்தங்கா
நெஞ்சையுஞ்சுழியாய் வாங்கும் நெற்றியும் வலிப்புண்டாக்கும்

துஞ்சிடும்பேதுசற்றே நுணக்கெனவலித்துச்சீறும்
பஞ்சின்மெல்லடியினளே பறவையின் தோஷந்தானே 57

குடித்தபால் எதிரெடுக்கும் குழிந்திடுந் தலையுங்கண்கள்
அடிக்கடி திடுக்கிட்டேங்கும் அகமதில்தாகமாகும்
எடுத்திடக்கையில் தங்கா எதிரிளைப்பெடுக்கும்பிள்ளை
கடுத்துடன்வயிறுபோகும் கருதுநீபறவைதோஷம் 58

தன்வந்திரி.

உச்சிமுளைத்தனைப்பற்றி உடல்எங்கும் வெதுப்புண்டாம்
எசசமாகநாவுலர்ந்து இரண்டுகண்ணும்வெளுப்பெய்தும்
மஞ்சள் முறித்தால்போல் பசும்பொன்னிற முகமினுக்கும்
இச்சைப்புரியுங்குழல்மாதே இதுவேபறவைதோஷமென்றே.

பறவை தோஷத்துக்குக் குளிசமும், கியாழமும்.

பறவையின்தோஷந்தீர பயன்உரைத்திடுவேன் இந்த
துறையைக்கேளாய் ஆலின் துளிர்தனைக்குளிசம் ஆடித்
திறமைசிரகம்பிருள்ளித் திகழ்வாய்பூலாவேரும்
உறவதாய்க்காய்ச்சியேதான் உறுபிணிக்குழவிக்கியே.

இதுவும் பறவைதோஷ நிவர்த்தி தன்வந்திரி.

வருத்தம்வெள்ளைக்குன்றியதை பலியும்பொங்கலிட்டு
மழித்தசாபம்நிவர்த்திசெய்து மகிமைவடக்கின்வேர்வாங்கிக்
கறுத்தசெவ்வாய்நாளதுதான் கனகமதனிற்குளிசமிட்டுக்
கருத்தக்குளிசம்கட்டிக் கழிப்புங் கூடக்கழித்திடுமே. 61

எட்சித்தோஷ குணம்.

தேயும்உடம்புமிகநாறும் செல்வன் துலைப்பால் மறந்திருக்கும்
தாயைக்கண்டாவொவ்வாது சற்றேவயிறுதானெழுகும்
பாயும்புலிபோல்பதறியழும்பாலரைக்கண்பால்பார்த்திருக்கும்
பாயும்விடையோன்தான் அறியப்பகராய்எட்சிதோஷமிதே.

வித்தாந்தேகமிகநாறும் மெல்லிமுலைப்பால் அருவருக்கும்
சற்றேவயிறுதான் கழியுஞ் சண்டாளம்போல்சுரங்காயும்
தத்தந்தாயைக்கண்டாலேதவனம் அதுவாய்சீறி அழும்
மற்றிங்கண்ணைப்பிசைந்து மண்ணில்பிரளும்பாலனதே

மண்ணில்புரண்டேமண்ணைப்போல் மடிந்துதான்புரளும்
சன்னிக்குணமாம்மாந்தமிது தான்சண்டாளசிசுயோகம்
வெண்ணிவேதன்வந்திரி விளம்பும் இந்நோய்கண்டுக்கொன்
எண்ணிப்பறக்கும்பட்சியென்ற இயல்பாந்தோடமிதுதானே.

எண்சீராசிரிய விருத்தம்.

போமேதான் எட்சிதோட குணத்தைக்கேளு பேரான உதிரத்தில் சூடுகொண்டு-வாமே தான் மயக்கிவித்துத் தலையெடாமல் வரண்டுமே கண்பீளைக்கட்டிமூடும், காமேதான் உடல் வற்றிக் கனலேமீறுங்கற்மாதி விளையிதுகாண் சிசுகட்கெல்லாம், ஆமேதான் விதவிதமாய் மேனிவற்றும் ஆகவுமீ எட்சித்தோட குணந்தான்பாரே. 65

எட்சித்தோஷ நிவர்த்தி குளிசம்.

அறுசீராசிரிய விருத்தம்.

தானே சுக்கிரவாரமதில் தனித்த அசுவசெந்தித்தான்
மானேகாப்புமீந்திட்டு-ம-ந-சி-வ-ய-வென் றுருவேற்றப்
பானே நூற்றெட்டுருவேற்றி பண்பாய் வடக்கின் வேர்பிடுங்கி
தேனேபட்டுநூல்குளிசமிட்டுத் தேவிநிறித்தி அருகில்வையே.

வைய்யேபூசைசநேமமதாய் வாழைக்கனிகள் அதுபடைத்து
துய்யச்செம்பில்சலமொண்டுத்தோடநிவர்த்தித்தான் செய்து
தையல்தேவிதனை நினைந்து தண்ணீர்ஓதி தான் தெளித்து
மையக்குளிசந்தனை யெடுத்துமைந்தன் தனக்குக்கட்டிவிடே.

எட்சித்தோஷ நிவர்த்திவேறு சுளிசமும் குளிப்பாட்டவும்

எண்சீராசிரிய விருத்தம்.

வேலமரப்புழுக்கூட்டில் கன்னிநூல்சுற்றி விளங்குமஞ்சள்பூசித்தூபங்காட்டிச், சாலவுமேழுக்குளநீர் மந்திரித்துத் தலைமீதே சொரிகளீள ஆறம்வீழ்தைப், பாலனுக்குக் குளிசங்கட்டிக் கோழிபலிகொடுத்துத் தலைச்சுற்றி அப்பால்போட்டு மேலுக்குநிலவிளா ஆதல்வில்வ இலையாதல்போட்டுக்குளிப்பாட்டநன்றே. 68

எட்டுவகைப் புள்ளின் பெயர் கூறுகின்றார்.

அறுசீராசிரிய விருத்தம்.

வீங்குப்புள் தூங்குப்புள்ளும் விளக்கொளிக்கணன் வெங்கண்
[ணன்
தீங்குசொல் கருடக்கண்ணன் செங்கணன் வரட்புள்தோடம்
பாங்குடன் கொடுபேய்க்கண்ணன் பட்டதோர் எட்டுப்புள்ளும்
ஈங்குள்ளகுணங்கள் கண்டால் இன்னது யிசைக்கின்றேமே.

வீங்குப்புள்ளின் தோஷகுணம்.

உச்சியுங்குழிந்துநாவு உலர்ந்திடும் உவந்திப்பண்ணும்
பச்சென மலமுந்தானும் பாலதுபோல ஆகும்

பிச்சுடன்எடுக்கும்பாலும் பின்கையால் முகந்துடைக்கும்
நிட்சயம்வீங்குப்புள்ளின் நிகழ்குணமென்றுசொல்லே. 70

வீங்குப்புள் தோஷக் குளிகை.

மதுரமுத்தம்அதிவிடையம் மானேகடுக்காய்மாவசம்பு
உதிருந்தேவதாரமஞ்சள் உடனேவகைக்குஒரளவாய்
அதிருங்குறிஞ்சிபொடுகலை சாறதனாலறத்து உண்டைசெய்து
சதிரமுலைப்பால்தன்னிலிட தணியாதோஷம் தணிந்திடுமே.

தூங்குப் புள்ளியின் தோஷம்.

வாங்குந்தாகம்நீர்குடிக்கும் வயிறுங்கழியும் வாந்தியுமாம்
பாங்காயத்திரும்பிமுகம் பார்க்குபயமாய் அழுதுவீரென்னும்
தூங்கித்துஞ்சிப்பாயல்மிசைச் சோர்ந்தேயலறி எழுந்திருக்குந்
தூங்குபுள்ளின்தோஷமென சொன்னார்அரனார்தோகைக்கே

அரண்டெழுந்திருக்குஞ்சோரும் அருந்திய எல்லாங்கக்கும்
இருண்டிடுமண்கள்தானும்இமையின்மேல்சொருகிகொள்ளும்
முரண்பெழுப்வீரிட்டேதான் மூர்க்கமாய் பல்கடிக்கும்
சுருண்டுதான் கீழேநோக்கும் தூங்குப்புள் தோஷந்தானே.

தன்வந்திரி.

ஓடும்உறக்கம் மயக்கமுடன் ஓகோஉவாந்திவயிறிழியும்
பாடுஞ்சிரசுப்பள்ளமதாய்ப் பாங்காய்மேல்மூச்சேறிட்டு
வாடும்பாலன்எந்நேரம் வகையாய் அழுகும்முகம்வேகும்
சூடுமலர்வேல்விழியாளே தூங்கப்புளளிதோஷமிதே.

தூங்குப் புள்ளின் தோஷ நிவர்த்தி.

தோஷந்தணியரோசனையும் தாவுமஞ்சள்வசம்பேலம்
வாசவேப்பின்ஈரக்கோடு வகையாய் ஓமம்விளாவேரடு
பாசமதுவாய்அரைப்பதைத்து பாலன்தனக்குமுழுக்காட்டிக்
கோதுமதுவாய்நூற்றெட்டுக் குணமாஞ்சாந்தித்தான்செய்யே

வவ்வால்சிறகுதன்னில்ஊமத்தின் அறுகம்வேர் சுருட்டிச்
செவ்வாய்க்கன்னிப்பெண்நூற்ற நூலால்சிறகுதனில்சுற்றிக்
கவவாய்ப்புனலும்சொரிகுளிசம் கட்டிக்கோழிபலிகொடுத்து
நவ்விவிழியாய்க்கூவிளவேர் நன்றாய்அரைத்துப் புகட்டுகவே

விளக்கொளிக்கண் புள்ளின் தோஷம்.

குடித்தபால்எடுக்கும்மெய்யும் கூர்மையாய்க்காயும்ஓயும்
அடிக்கடிக்காயும்அன்றி அறியதாய்ச்சிந்தைநோக்கும்
பிடித்துதல்முலைவுண்ணுது பெருவிடாய்க்கொண்டுச்சோரும்
விடுத்திடும் நோய்தான் விளக்கொளிக்கண்ணன்தானே.

விளக்கொளிக்கண்புள் தோஷநிவர்த்தி வெண்பா.

சின்னவசம்புள்ளிச் சிறுவிளாதான் நாலும்
நன்னுகைவேமுடிந்து நற்சிலைத்-தன்னுலே
மார்பில்படக்கட்ட வாருதுதோஷமெலாம்
காரிழையாய்ச்சொன்ன திகைக்காண் 78

வெங்கண்புள்ளின் தோஷம்.—அறுசீராசிரிய விருத்தம்.

வெளுக்கெனகழியும்பால்போல் விளரிமெய்த்துவண்டுக்காயும்
குளுகென இரைச்சல்உண்டாம் குடித்தல்வண்ணம்பேதிக்கும்
அளித்திடும்வயிற்றின்உள்ளே ஆனதோர்வலியும் ஆகும்
வெள்ளிபட்டைஆமேஎன்றில் வெங்கண்ணன்குணமுமாமே.

வெங்கண்புள் தோஷ நிவர்த்தி—வெண்பா.

கன்னிஅன்னம்தன்னுடனே கடுக்காய்ப்பொடிக்கூட்டி
உன்னிதமாய்த்தான்பிசைய ஊறுநீர்மின்னேகேள்
திப்பிலித்தூள்இட்டருந்த சேர்ந்தசிறுவோர்க்கு
ஒப்பில்லா தோஷமெலாம்ஓடும் 80

கருடக்கண் புள்ளின் தோஷம்.

அறுசீராசிரிய விருத்தம்.

புதுப்புனல்வடந்துகொண்டு புகழ்முலைப்பாலெடுக்கும்
எதுப்படக்கண்ணுந்தாழும் இருபக்கம்பிளைகட்டும்
முதிர்ப்பிள்ளைப்படும்பாடாக முந்தியேபற்றிநிற்கும்
விதத்தினைக்கருடக்கண்ணன் மிகுத்திடுந்தோஷந்தானே.

கருடக்கண்புள் தோஷக்கு மருந்து.

தனியுங்கோரோசனையுடனே சாற்றுமதுரம்திப்பிலியும்
கனிவாய்பெண்முலைப்பால்தனில்கலந்தேஅரைத்துஒருசங்கு
பிணியாங்குழவிக்கிடும்போது பேரும்அநேகதோஷமெலாம்
பிணியுந்தணியுமென்றேதான்பேதை கரனுர்மொழிந்தனரே.

செங்கண்புள் தோஷம்.

சிவந்துகண்ணீர்ச்சொரிந்து சிரங்குளிர்ந்திருக்கும் வெம்பி
தவழ்ந்துபோய்நிலத்தில்வீழ்ந்து தடகையால்முகந்துடைக்கும்
விவந்தியாய்அழுதுபாலன் வெப்புநீராய்பேதிக்கும்
சிவந்ததோர்குணங்கள்கண்டான் செங்கன்புள்தோஷமாமே

செங்கண்புள் தோஷத்துக்கு எண்ணெய்.

மொழியுமதுரம்சீரகமும்முத்தம் ஏலம்பத்திரிக்காய்
பொழியுகிராம்புசண்பகமும்பொன்னேலவங்கப்பட்டையுடன்

கிளிசேர்மொழியாய்விருகன்எடை கேளுமுசுக்கயிலைநன்றாய்
தெளியுங்காணிசிறுகீரைச் சிந்தில்வேரும்பலமொன்றே.

பலமேசொல்லும்ஈருள்ளிப் படிகால்சாறுக்காயிரின்வேர்
வளமாய்எண்ணெய் இரண்டுபடியய் இவைகலந்தடுப்பில்
நலமாய்எரித்துககுழவிகட்கு நன்றாய்ச்சங்குபுகட்டிடவே
வலுமையானபிணிதோஷம் வாராதென் றுவகுத்தனரே.

வரப்புள்ளின் தோஷம்.

உடலதுவரண்டுமெத்த உறங்கிடும்மேனிவற்றும்
கடல்யிரைந்தால்போல்சத்தங் கறுகுறுஎன்றேமீறி
திடமுடன்நாவரண்டு திக்கெங்கும்பார்த்திருக்கும்
விடமதுபோலேகாயும் விரண்டிடும்வரட்புள்தானே. 86

வேப்பம்பூப்போல்வயிறெழுகும் விடாதவெப்புத்தலைவயும்
பூபுனல்மாந்திபுறங்கையால்பொருந்தமூக்கைபே துடைக்கும்
சோப்பாய்நாவுவரண்டு சலங்குடிக்கக்கண்டுப்பறதவிக்கும்
சேப்பங்கய்த்தின்முகமாதே செப்பாய்வரட்புள்தோஷமிதே.

தன்வந்திரி வேறு.

பாகன்மேனிவாடிப் பசலைவாய்விழிகள்நீராய்
சீலமாய்விலாகுளிர்ந்து சீறும்பால்எதிர்எடுக்கும்
கோலமாய்க்கண்குழிந்து குணமதுபலவேசெய்து
மாலுறவயிறுபோகும் வரட்புள்ளின்தோஷந்தானே.

அடித்தபின்புமேனிவற்றிக் கண்ணின்மணிகள்நீர்கவங்கித்
துளிர்த்துளிராய்க்குளிர்ந்துமிக தொண்டைநாவுமிகவரண்டு
மூத்தவேப்பம்பழச்சார்போல் வயிறுபோம்தலையசைக்கும்
அமுத்தவுடம்புமிகவெதும்பும்ஆண்குரல்போல்வேற்றுகுரலே

தரலேகையால்முகந்துடைக்குங்குழறிப்புறங்கையாலுந்துடைக்கும்
பரலேநாவுமிகவரண்டு வாயால்குடிக்கமிக தவிக்கும்
அரலேஉஞ்சித்தானமூகும்அன்னத்கிரேஷவிடாயப்போலே
எரலேஇக்குணங்கண்டால் வரட்புள்தோஷமென்றே.

வரட்புள் தோஷநிவாத்தி.

மென்றேவட்டநரிவிரட்டி வியாழந்தன்னில்காப்பிட்டு
துன்றுஞ்சேவல் பலிகொடுத்து தோஷந்தீரவெனப்பணிந்து
குன்றின்மஞ்சள்அஞ்சோதி குழைந்தைத்தாயைகுளிப்பித்து
மன்றில்வேரைப்பிடுங்கிகட்ட வரட்புள்தோஷம்போய்விடுமே

அந்திப்புள் தோஷம்.

பாலகன்மேனிவாடி பசைந்துகண்விழித்துப்பின்னும்
சிலக்கைகால்குளிர்ந்து சீறும்பால்எதிரெடுக்கும்

மேலெல்லாம்நரம்புதோன்றி மேனியும்வெளுத்தகாடும்
ஆலமேயுண்டகண்ணா அந்திப்புள்தோடந்தாறே. 92

அந்திப்புள் தோஷநிவர்த்தி.

வகுக்குந்துவாலைதனைக்கேளு மானேசின்னிவிலாநொச்சில்
பகுக்குஞ்சீந்தில்தான்வேம்பு பையநதுக்கிவசம்புள்ளி
தொகுக்கத்துவளைதானிடித்து துவாலைகண்டங்காலதன்னில்
மிகுக்கமுடித்துகட்டிடவே விரைந்துதோடம் போயிடுமே.

நீர்ப்புள் தோஷம்.

நெஞ்சுவரண்டுகண்குழிந்து நீடும்பெருமூச்சுண்டாகி
பஞ்சுபோலகண்வெளுத்துப் பாலுங்குடியாதேயலறி
துஞ்சாதிரவுபகலுந்தான் சருங்கப்பண்ணிமிகவேர்க்கும்
செஞ்சொற்கிள்ளைமொழிமாதே செய்யநீர்ப்புள்தோடமிதே.

நீர்ப்புள் தோஷநிவர்த்தி—எண்சீராசிரிய விருத்தம்.

பச்சோந்திதன்னை ஸ்ரீங்காரஞ்சொல்லிப் பாங்குடனே
பிடித்துவந்து மஞ்சள்நூல்சுற்றி. அச்சமறப்புறமடைநீர் எழு
தரஞ்சொரிந்தழகான செஞ்சேவல்பலிகொடுத்து, நிட்சேப
மாய் இயந்திரம்கட்டத் தீரும் னிகரானமருந்துதனைனிகழ்த்
துங்கரிலை, வெச்செனவிட்டணுக்கரந்தை சிரங்கூட்டிவேதோ
நீர்க்கொதித்திடவே வியாதிபோமே. 95

நீர்ப்புள் தோஷநிவர்த்தி தன்வந்திரி
அறுசீராசிரிய விருத்தம்.

தோதமுதலைக்கொழுப்போடு துருவவட்டதுத்தியின்வேர்
மாதேயிதளைக்குளிசமிட்டு மருவப்போட்டுக்கட்டினபின்
ஓதேதோடமந்திரத்தால் ஒருநூற்றெட்டுச்செபித்திடுவாய்
பாதேநீர்ப்புள்தோடமது பயந்துபறந்துஓடிடுமே. 96

புள்ளின் தோஷம்.

உச்சிக்கண்ணுந்தான்குழியும் உண்ணும்பாலுந்தங்காது.
பச்சைநிறம்போலவயிறுவடும் பறவைக்குரல்போல்சீறியழும்
எச்சம்இளைக்குந்தண்ணீரை எடுத்துகுடிக்கும் மெய்மறக்கும்
கச்சையணிந்தமுலைமாதே காணும்புள்ளின்தோடமிதே. 97

புள்ளின் தோஷநிவர்த்தி.

புள்ளின்தோஷந்தீர சிறுபுள்ளடிவேர்க்குளிசஞ்செய்து
மெள்ளஓரிதழ்தாமரையுல் வெந்தயமுடனேவிடத்தேரும்
எள்ளத்தோரளவாய்மிளகும் இதமாயதனைக் குடிநீராய்
உள்ளத்தோர்மனதாகியநீர் உண்டிடநன்றெனஓதுமிதே.

புருஷ தோஷம் தன்வந்திரி.

போமேஉச்சிக்கண் குழியும் பொருந்துண்பாலுந்தங்காது
போமேவயிறுபச்சென் றுப் பொருமியழுகும்பறவைகுரல்
தாமேகுறுகும்ஒருவேனைத் தனிலேசீறியழும்
காமேகறுதக்குயிலாளே கருவால்புருஷதோஷமிதே. 99

புருஷதோஷனிவர்த்தி—எண்சீராசிரிய விருத்தம்.

புருஷனென்ற உடடும்பினுட நாக்குவாங்கிப் புகழான எருக்கனுர்க்குளிசமாடிப், புருஷனென்ற தாம்பூலமுன்னே வைத்துப்புதுமையாய்ப் பூசைசெய்யச்சொல்வேன்கேளு, புருஷனென்ற நயவசியநூற்றெட்டோதி பூமூலையாய்ப்பாலகர்க்குக் கட்டுகட்டு, புருஷனென்ற குழந்தைகட்குகட்டும்போது புகழ்பலி ஒன்றன்கொடுக்க தோஷம்போமே. 100

பெண்ணின் தோஷம் – அறுசீராசிரிய விருத்தம்.

நெஞ்சுவரண்டுகட்குழிந்து நீடும்பெருமூச்சுண்டாகிப்
பஞ்சுப்பொலேகண்வெளுத்துப் பாலுங்குடியாதேயலறித்
துஞ்சாதிரவும்பகலுந்தான் சுருங்கித் தேகமுகம்வேர்த்துச்
செஞ்சொன்மயக்கமுண்டாகில் பெண்ணின் தோஷமிதே.

பெண்ணின் தோஷகுணம் தன்வந்திரி.

அரியவையர்க்கும் ஆணுக்கும் அதனில்தோஷமேதென்றால்
கருவாம்அஞ்சுமாதத்தில் காணில்கலந்த தாய்முகத்தை
பெறுவாள் அந்தப்பிள்ளைக்குப் பேணில்சுளுக்கும்வயிற்று [வலில்
கருகுமுகமும்பேயின் குணங்கண்டேயறிந்துச் செய்வீரே.

பெண்ணின் தோஷநிவர்த்தி.
எண்சீராசிரிய விருத்தம்.

செய்யவேபஞ்சவண்ணமலரெடுத்துச் சேகரமாய்ப்பஞ்சவண்ணமான அன்னம், ஐயமில்லாஐந்துவெள்ளிப் பணமும் வைத்து அதனுடன்தீபத்துதூபம் நெய்விளக்கு, வைக்கதலியிலையில் உரு எழுதிதானேவரைதோறுஞ் சாம்பிராணி வத்திநட்டு, பொய்யல்ல நான்சொன்னேன் பண்டிதற்குப் பொதுவாகமுச்சந்தி அதில்வைப்பீரே. 103

வைத்திடனே தோஷமெங்கே கிரகமெங்கே வலியெங்கே நோயெங்கேபறந்துபோகும், தைத்திடவேசிசுவுடையப் பருவந்தன்னை நாட்டமுடன்கண்டறிந்து கருத்திற்கொண்டு, மெய்த்திடவே வதிட்டரைப்போல் பெருமைபூண்டு நரகம் போச்சுப் பாதகருக்கில்நூல்தான் கிட்டிடாதே. 104

### இதுவும் பெண்ணின் தோஷநிவர்த்தி வேறு.

### குளிசமும் குடிநீரும் கைகாலிற் கட்ட மருந்து.

பாவையின்தோஷம்தீர பரித்திவேர்குளிசமாடி
பூவைகேள் கஞ்சாங்கோரைப் புனலினிற் காய்ச்சியேதான்
தேவைநீகுடிகேள்சின்னி சிறுவிளாவசம்போடுள்ளி
மரவைசிலையில்முடித்து மாறுவகைகாலிற்கட்டே. 105

### முட்டுத்தோஷம்—தன்வந்திரி.

### அறுசீராசிரிய விருத்தம்.

போமென்றகுழந்தைமேனிப் பொன்னிறம்வாடிவேரும்
தாமென்றவயிற்றில்பாலும் தங்காமல் வாயால்போகும்
நாமென்றக்கண்குருந்து நாக்குவாய்க்கருகித்தோன்றும்
காமென்றமாதவிடையின் கன்னியரெடுத்தக்கூடே. 106

### முட்டுத்தோஷ நிவர்த்தி—எண்சீராசிரிய விருத்தம்.

கூறுனமுன்மந்திரத்தினலே குளிர்ந்தசலமொண்டுவேப் பிலையாலோது, ஊறுனதாய்ப்பிள்ளை யிருவருக்கும் ஓதியே யிருவேளைச்சாந்திசெய்நீ, சீரானதிப்படியே ஏழுநாள்செய் சிவசிவா பறந்தோடுந்தானும், வேரானமந்திரமே யதில்வே றில்லைவெகுவான நோயெல்லாம் ஓடிப்போமே.

### குளித்தோஷம்—அறுசீராசிரிய விருத்தம்.

உச்சியுங்குழிந்திருக்கும் உயர்விழிலலையமாகும்
மிச்சமாய்வாந்திசெய்யும் வேர்வையுமிகவேகாணும்
பச்சுப்பச்சென்றுதானும் பலபலவண்ணமாக
எச்சமாய்க்கழிச்சலுண்டாம் இதுகுளித்தோஷந்தானே.

### தன்வந்திரி வேறு.

பாரேஉச்சிக்கண்ணிரண்டும் பரிவாய்ப்பள்ளம்வீழ்ந்திருக்கும்
சாரேகழிச்சல்உண்டாகும் தணல்போல்தேகம்மிகக்காயும்
வாரேகுய்யம்புண்ணாகும் வளமாயுடலுதிகவற்றும்
மாரேதுன்பமிகப்படும்பார் மனையாள்குளித்துக்கண்டதுதே.

தண்ணீர்குடிக்கும்நெஞ்சுலரும்தளர்ந்து பிள்ளைதான்உலரும்
கண்ணீர்சொரியும்கால்வீங்கும் கழியுஞ்சத்திமிகவுண்டாகும்
அன்னமேநீஅஞ்சாதே அறிந்துசொன்னேங்குளித்தோஷம்
பெண்ணேசுவிலைவிடத்தலைவேர் பிடுங்கிகட்டுப்புகழ்பெறவே.

## குளிதோஷநிவர்த்தி தன்வந்திரி.

### எண்சீராசிரிய விருத்தம்.

தோஷமிது தாமைக் குட்டிவிளாவேம்புசோம்பு மஞ்சள் வசம்புடனே சுக்குங்கூட்டிவாசமிது அரைப்பரைத்து வைத் துக்கொண்டுவாகையிலைபேராட்டு நீர்க்காய்ச்சியேதான் தேச மிது தாய்ப்பிள்ளையிருவருக்குந் தேய்த்துமே முழுக்காட்டிச் சொல்லுவேன் கேள், பாசமிது முக்கிணற்றின் தண்ணீர் மொண்டுப்பசுமஞ்சள் அரைத்ததிலே கலக்கிடாயே. 111

கலக்கிடாயமங்ஸ்ரீயும் ஐயும்சவ்வும் கண்மணியே அறு காலைநூற்றெட்டோதி, வலக்கிடாயமேல் தெளித்துக்கடுகவாரு வாசமுறுந்தேகமோ பசும்பொன்வீசும், அலக்கிடாயசூரி வேர்ப்பிடிங்கிவந்து அன்பாகப்பஞ்சநூல்குளிசமாடி, வலக் கிடாயபாலனுக்குக் கட்டிப்போடு மகத்தான குளித்தோஷம் பறந்துபோமே. 112

குளிதோடந்தான்தீர சுடலைதன்னில்குளித்து முளைத்த றுகம்வேர்க்குளிசமாடி, புளிதோஷந்தனையகற்றிக் கீழக்காய் நெல்லிப்புகழும்மான்பச்சரிப்புள்ளிேனுடு, வளிதோஷந்தனை யகற்றும்வசம்பு உள்ளிவன்சாறுகொடுத்துமேல் துவாலை செய்யக்குளிதோஷம் வாந்தியொடுதாகந்தீருங் குறுமுனிவ னுரைத்தபடிக்கூர்ந்துசெய்யே. 113

கேளுநீகருடனுடக்கூட்டுக்குள்ளே கிடந்ததோர் முட்டை யொடெடுத்துவந்து, ஆளவேசுட்டதனைச் சாம்பலாக்கி அழ காக குழந்தைகட்குத்திலர்தம்போடு, வாளவேமுன்கூட்டைச் சுட்டச்சாம்பல் மைந்தனுக்கு நெற்றியிடமயக்கந்தீரும், தாள வேகுளிதோஷம்பக்ஷிதோஷம்தான் பறக்குந்தப்பாது தனித் துச்செய்யே. 114

சொரிந்தாவின்நெய்உரியில் நல்லெண்ணெய்ப்பாதி சுக மான நன்னாறித்தண்ணீர்விட்டான், கரந்தைபொன்னுங் கண் ணியுமேபலமொன்ருகக் கழிஞ்சி ஏலரிசிச்சீரகமுங் கூட்டிப், பொருந்தவே ஆவின்பால் வார்த்தரைத்துப் புகழுடுப்பில் ஏற் றியேகாய்ச்சிக்கொண்டு திருந்தவேகுளிதோஷம்போவதற்கு சிறுகரண்டிப்புகட்டிடவே தெளியுங்காணே.

### குளிதோஷ நிவர்த்தி—அறுசீராசிரிய விருத்தம்.

ஓமந்தண்ணீர்காட்டரத்தி உயர்ந்தபவித்திபயற்றம்வேர்
ஆமேகுளிசமதுகட்டி அன்பாய்சொரியும்புறமடைநீர்

போமேகோழிப்பலிகொடுத்து புறமாய் சுற்றிபோட்டாற்கால்
தாமேகுழவிபிழைக்குமென்றுத் தையற்கரனுர்சாற்றினரே

இதுவுங்குளிதோஷ நிவர்த்தி தன்வந்திரி.

வேப்பங்கொழுந்துப்பிடியொன்று மிளகுபத்துவசம்புசுக்கு
வாய்ப்பமலையைத்தான்வாங்கி வளமாய்சமனுய் அரைத்திட்டு
பாய்ப்ப அதனைவடித்திட்டு பாங்காயுள்ளேபுகட்டிடவே
வாய்த்ததோடங்கழிச்சல்களும் வயமாய்நிற்குங்கண்டாயே.

குளித்தப்பெண் கண்டதோஷம்—தன்வந்திரி.

தாயின்முலையில்வாய்வைக்குஞ் சற்றேயுண்ணு நிகைத்திருக்கும் தேய்வாய்தேயும் மெய்வேர்க்கும் சிறுகவெதும்பும் வயிறுளையும், காயவாய் உறங்குஞ்சத்திக்கு சற்றேசென்ருல் விரோசிக்கும், பேயநோய்க்கொண்டதலகுளித்த பெண்ணுள் கண்டதோடமீதே.

கனமாயிதனைக்கண்டுணர்ந்து காலமாலையிருவேளை
குணமாய்ஓம்சடாட்சரத்தைக் குருநீர் அதனைமேல்தெளிக்க
வனமாயிந்நோய்வர்க்கமெலாம் மாறிப்போகும் இதுதன்னல்
தினமும்வேண்டாம் மூவைந்துதினந் தெளிக்கநோய்போம்.

குளித்தவன் எடுத்த தோஷம்.

மதலையின்மேனிவாடிவயிற்றினில் பாலுந்தங்கா
சதலையிற்குழியுண்டாகி சத்தியும்எடுக்குமீராய்
நூதலினிற்சலமுகண்ணி நோக்கியவிழியுந்தாழ்ந்து
குதலைவாய் கருதித்தோன்றுங் குளித்தவளெடுத்தக்காலே.

பாலகன்பவளவாயிற் பனியெனவேர்க்கும்மூக்கும்
ஆலகண்வளையமாகும் அடிக்கடிவயிறுபோகும்
காலதுபின்னிக்கொள்ளுங் கதரியேயலறிச்சீறும்
சீலமாய்விழித்துத்தாவுந் தீதவளெடுத்ததாலே 121

குளித்தவளெடுத்தகதோஷ நிவர்த்தி.

எண்சீராசிரிய விருத்தம்.

ஆரியதோர் இன்னமொருகிரியைக்கேளு அழகானபாலனுமேமெலிந்துவாடில், சீருடனேமாந்தகணதோடமெல்லாந் தெறிப்பட்டுப்போவதற்கு சேதிக்கேளு, வேறுவகைதூதுவளை குப்பைமேனிவிளங்குகின்றக் குருவிச்சித்தும்பையோடு நீருடனே வேருவகைகொண்டு வந்துநிட்சயமாய்க் குளிசம்நீர் திகழ்ந்திக்கட்டே. 122

இதுவுங்குளித்தவளெடுத்த தோஷநிவர்த்தி வேறு.

கட்டுவாய்திருகுகள்ளிவடக்கு வேரைக்காப்பிட்டு ஞாயிறு
நாட்பிடுங்கிவந்து சிட்டுவாய்க் குளிசமுடன் நீர்ச்சொரிந்துசுக
மாகக்கட்டிடவேநோய்கள் தீரும், மட்டாகமூன்றுநாள் நீர்ச்
சொரிந்து மதலைக்குச்சாந்திசெய்ய மயக்கந்தீரும், தொட்டி
ருந்த தோஷமெல்லாந் துடித்தேயோடுஞ் சொன்னபடிக்குளி
சமும் சொரிந்திடாயே. 123

இக்கிரியை மாந்தகணதோஷத்துக்குஞ் செய்க.

கர்ப்பம் அழிந்ததோஷகுணமும்—அறுசீராசிரிய விருத்தம்.

குடித்தபாலுந்தங்காது குஞ்சியுடம்புமிகநொந்து
மிடித்தநெஞ்சுயர்ந்தண்ணாந்து மிகவேநோகுஞ்சடமாறும்
படியுங்கைகால்அழுக்கேறிப் பதைத்துவருந்தப்படுமாலும்
துடிக்குச்சமனும்இடையாளே சொல்லரியழிந்ததோடமிதே
காலம்பின்னும்உடம்பிளைக்கும் கிழயுஞ்சத்தமிகவுண்டாம்
மேனியம்சிவக்கும்உடல்நாறும் விழியுஞ்சொருகிமிகமயக்கம்
வேலுஞ்சேல்போல்விழியாளே வில்போலபுருவமுடையாளே
கேளுமிந்தகுணங்கண்டால் கெர்ப்பம் அழிந்ததோஷமிதே.

கர்ப்பம் அழிந்ததோஷநிவர்த்தி குளிசமும் குடிநீர்.

கெர்ப்பமழிந்தோஷத்தின் கிலேசந்தீரக்கிரியைக்கேள்
காப்பக்காட்டாத்தியின்வேரைக் கதிக்கவேகுளிசஞ்செய்து
அப்பப்பரித்திவேர் அமைத்து அருந்தக்குளிர்ந்ததண்ணீரை
கற்பப்பனையின்வெல்லமதைக் கரைத்துநீரில்கொடுத்திடுமே.

தேரைத் தோஷகுணம்.

தேனேர்மொழியாய்கேளாய் தேரக்குணம்இயம்புகிறேன்
ஊனேவற்றியுடம்புலரும் உயர்ந்தேநெஞ்சுதான் கூறும்
மானேகண்ணும்பொடிந்திருக்கும்கையுங்காலுஞ்சுரிமுடக்கும்
மானேவயிறுபுடைத்திருக்கும் பலமுந்தீயும்வாயலரும். 127
உலருந்தண்ணீர்தாகிக்கும் உந்திமலருங்குரல்வேறும்
மலர்ந்தாமரைப்போல் முகமும்வாடியொடுங்கிச் செவிதாழும்
முலையின்பாலும்உண்ணாது மூச்சுவாங்கும் இதுதீர
பலருஞ்சொன்னார்என்னுமல் பழிச்சேதென்றுக்கேட்டிடுமே.
காலுங்கையுமிகவற்றிக் கட்டிப்போட்டால்போல்பிள்ளை
வேலும்வற்றிவெளுப்பிட்டு வேறேகுணமாய்க்குரல்நெறித்து
சாலமுலைப்பால்குடித்தாலுஞ் சற்றுந்தேறுதிருப்பதெனில்
நீலவட்டமுலைமாதே நிசமாம்தேரைத்தோஷமிதே. 129

தேரை தோஷத்துக்கு மருந்து—ஆசிரிய விருத்தம்.

புள்ளடிச்சிறுநீரைநீராரைதன்னுடன் புகழ்காணிநீர்முள்ளி
யும்பொய்யாமல் இவ்வகை சமூலமுடனே களாபுனமல்லிக்கு

மிள்நீவியும்மொள்ளவருகரிசலாங்கண்ணியுடனேமுடக்கொத்
தானுவேர் சமனதாய்முந்நாழிநீர் தனைநாலிலொன்ருகவே
முதல்பாகமாயிறக்கிமெள்ள அதிமதுரமும் திப்பிலியிஞேடே
லம் மிளகுவகைக்கால் பலமதாய் மென்பசும்பால்விட்டரைத்
துக் கலந்துமேயிருநாழிநெய்யுடனே உள்ளபடிநன்ருய் எரித்
ததைவடித்தபின் உரைத்திடு கரண்டியளவா உண்டிடக்குளி
தோஷந்தேரையின் தோஷமுடன் ஓடியேபோய்விடுவதே.

சகலதோஷ நிவர்த்தி தன்வந்திரி.

எண்சீராசிரிய விருத்தம்.

நிமையான தோஷசர் வாங்கமெல்லாம் நிமைப்போதில்
தீருமாற்று மூலஞ்சொல்வேன்வமையான வ-ன-சி-ம-ய-என்று
தானே வங்சிங்என்று சிவ-வ-ந-ம என்ன தமையானதோஷ
நிவர்த்தித் தானுச்சுசொல்லவும் போகுமோ சூட்சாசூட்சம்
கமையான தோஷநிவர்த்தித்தன் ... கவலை நீக்கிக்காட்சிப்
பெறுவாய்தானே. 131

சகலதோஷத்துக்கும் குளிசம்.

கீழ்க்காயினெல்லிவேர் முடக்கொத்தானவேர் கிருஷ்ண...
யுள்ளநாயுருவிகஞ்சாங்கோரை,தாழ்க்கையின் விடத்தலைவேர்
நிலக்கடம்புதழைத்த சிறுபுள்ளடி பேய்ச்சுரையின்வேரும்
கோழ்க்காயின் எட்டுவிதவேரு வாங்கிக்குளிசமிட்டுக் குழந்
தைக்குந்தாய்க்குங்கட்ட ஊழ்க்கான சகல தோஷங்களெல்
லாம் ஓடிகடலிற்புக்கும் உண்மைதானே. 132

தோஷங்களுக்கெல்லாம்மாத்திரை—எண்சீராசிரியவிருத்தம்.

அதிமதுரம்மரமஞ்சள் முத்தக்காசு அதிவிடையம் வசம்பு
கடுக்காயும் நல்லபுதிதேவதாரமெல்லாஞ் சமனுய்ச்சேர்த்துப்
பொடுதலைச்சாற் விட்டரைத்துக் குன்றிப்போல கதிபெறவே
யுண்டைசெய்து முலைப்பால்தேனில் கருணையுடனே கொடுக்க
மதலைகட்குசதியான தோஷமெல்லாம் பறந்தோடி சமுத்தி
ரத்திற் புக்குமெனச்சாற்றினேமே. 133

சகல தோஷத்துக்கும் துவாலை கைகாலிற்கட்ட மருந்து.

அறுசீராசிரிய விருத்தம்.

வகுத்துந்துவாலைதனைக்கேளு மானேசின்னிவிளாநொச்சில்
பக்குஞ்சீந்தில்தான்வேம்பு பையநறுக்கிவசம்புள்ளி
தொகுக்கத்துவளைத்தனையிடித்து துவாலைகண்ட கால்தனில்
மிகுக்கமுடிந்துகட்டிடவே விரைந்து தோஷம்போமே. 134

திரா தோஷகுணம்—அறுசீராசிரிய விருத்தம்.

செய்யக்கண்ணுமிகச்சொருகும் சிதந்தண்ணீராய்கழியும்
மையமேனிக்கறுப்பாகும் மாங்காய்ப்போலேஆசனமாம்
வையதேகம்மிகஇளைக்கும் வானம்போலேவயிருகும்
செய்யதோஷமிதுதானே திராதென்றுதான் உரையே 135

சேயினுடம்புக்கனுறுஞ் செல்லாமுலைப்பால் அருவருக்கும்
காயுமுடம்புகண்குழியுங்கண்டால் இதுதான் அறியாயோ
தேயுமுடையாய் சிவனணைத்திராதோஷமென்றேதான்
ஆயுர்வேதத்தளவுகண்ட அகத்தீஸ்வரனர் அருளினரே.

தோஷ வகுப்பு முற்றிற்று.

அகத்தியர் திருவடிகளே சரணம்.

## மாந்தம் வருமாறு கூறுகின்றார்.

---

அன்னமும்பாலுநெய்யும் அழுகியபழமுந்தேங்காய்
பின்னையுங்கடலைவெல்லம் பெரியதோர்க்கதலிப்பண்டும்
தின்னுமோர்க்காலந்தன்னில்தீயென வெதுப்புமாகில்
ஒண்ணில்லா பிள்ளைக்குத்தான் உகந்துமேமாந்தமுண்டாம்

அன்னையப்பால்மலக்கட்டாகி அதன் உடல்கனத்துதோன்றி
திண்ணத்தால்வாயுபண்டந் தின்றதனலேமாந்தம்
பின்னைதான்மயிர்க்குச்சிட்டுப் பிள்ளைக்குவெதுப்புக்காணும்
மன்னைத்தஇடையாய்கேளாய் மிகுத்திடுங்கழிச்சல்தானே.

மாதாவயிற்றின்மந்த முலைப்பாலேயருந்திவருமாந்தம்
ஓதாம்அரம்பைத்தெங்கிளநீர் சுரபிமாங்கிஷங்கனிகவிச்சு
பேதாமலைதுவரைகடலை பேசுமொச்சைப் புளியங்கொட்டை
மாதாகொள்ளி பிள்ளைக்குவருங்காண்மாந்தந்தப்பாதே.

தன்வந்திரி.

எந்தநோயும்வருவிதந்தான் இனித்தவெல்லமுந்தேங்காய்
சொந்தஉண்டைஉளுவையுடன் துள்ளுவாளைவரால்கெண்டை
சந்தமேதிப்பால் இறைச்சி சருகுந்தண்ணீர் புளிமோர்தான்
வந்தபாகல்சுரைக்கதலி வருகுமாந்தமிவைதின்றால் 140

மாந்த தொகை 21 கூறுகின்றார்.

என்னுமாந்தவகைகேளு இயலும் வாதமாந்தமுடன்
உன்யபித்தமாந்தம் உயர்செறி சேஷ்மமாந்தம்

பன்னியவிஷமா மாந்தம்பாடுதுபோரின்மாந்தம்
துன்னியவாலைமாந்தம் சுரமாந்தம் இன்னங்கேளே 141

எண்சீராசிரிய விருத்தம்.

கேளேநீர்மாந்தமுடன் செரியாமாந்தம் கேடுபுரிகட்டுமாந்
தத்திஞேடு-பாளானமால்மாந்தம் துலையாமாந்தம் பகரரியளரி
மாந்தந்தலையின்மாந்தம் தளானகணமாந்தம் வலிப்புமாந்தம்
சதியானசுழிமாந்தம் மூக்குமாந்தம், வேளான சன்னிமாந்தம்
ஊதுமாந்தம் வீக்கமுறுமாந்தமுடன் இருபத்தொன்றே. 142

வாதமாந்த குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

ஒன்றும்வாதமாந்தகுணம் உரைக்கக்கேளு திருக்கறவே
பொன்றுநால்கைகுளிந்து தாம்பொருமும் விழிபார்த்தழுகும்
குன்றுபெய்யில் வேர்வையுமாம் குழியவலிக்கும்பலவிதமாய்
துன்றுதுடிக்குங் கோட்டாவிதுளையு நாசிபுண்ணுமே. 143

பித்தமாந்த குணம்.

ஆமேபித்தமாந்தகுணம் அடுத்தேவாந்திபேதியுமாய்
தாமேமூர்ச்சையாய்க்குரலும் தயங்கிக்கம்மலாகிவிடும்
போமேமேனிமஞ்சனித்துப் புசியும்வேர்வையாய்க்கடுக்கும்
வாமேகுழவிதேகமெங்கும் வலிக்குங்குளிருமயக்கிடுமே. 144

சேஷ்ம மாந்தகுணம்.

மயக்கிடுஞ்சேஷ்மமாந்தம் வுகையினைதகையாய்க்கேளு
முயக்கிடுகளிருண்டாகும் முழுதுடல்சிலுகிலீர்ப்பாம்
பயக்குநாவுயவெளுக்கும்பயந்தே அரலைதான்கொடுக்கும்
சயக்கவயிறுகழிந்துவருந் தளராபொருமும்வயிறதுவே 145

மாந்தகுணம் கூறுகின்றார்.

பிள்ளையுங்கலத்திருக்கும் பிரண்டைபோல்காலும்பின்னி
உள்ளமுங்கண்சிவந்து உடம்பினில்நோயுங்காட்டும்
துள்ளியேகையில்தங்கா துடுக்கெனச்சுழலுமாகில்
கள்ளமாய்க்குரலுந்தாழ்ந்துக் கண்குழிந்திருக்குமாந்தம் 146

மாந்தத்தின்குணமேகேளாய் வயிறுபோம்வெப்புநாறும்
சோர்ந்துகைகால்குளிர்ந்து தோகையேமுலையுண்ணாது
வாந்தியுமிகுமேபண்ணும் வாயுமேயுலர்ந்துக்காயும்
மாந்தியேமயக்கமுண்டாம் மாந்தத்தின்குணமதாமே. 147

மாந்தத்தின்குணமேதென்றால் வயிறுகழியுமயக்கமதாய்
காந்துப்பசியுமில்லாமல் காமவிசாரங்கொண்டவர்போல்
சோர்ந்துகிடக்குங்கைகாலு குளிர்ந்தேகாணுந்தொல்லுலகில்
காந்தள்மலர்போல்கையுடையாய்க்கனத்தமாந்தகுணமிதுவே

தன்வந்திரி.

பாரேசீதமலமுடனே பதமாய்க்கழியும் பலவிதமாய்
தேரேநெட்டப்பாலதுபோல் தெளிந்தகண்ணீர்போலவுமே
வாரேகழியுக்குணம்பாரு வலமாய் உள்ளங்கைகாலும்
தேரேகுளிர்ந்ததண்ணீர்போல்நிசந்தானென்றுதான்பாரே

பாரேவெதும்புங்கண்சுழலும் பனிபோல்தேகமிகவேர்க்கும்
பாரேமுகமும்பலவிதமாய்ப் பளிங்குபோலே ஒளிமினுக்கும்
பாரேயிந்தக்கூறதனைப் பருவம்அறிந்துகொண்டெல்லாம்
பாரேயிந்தக்கூறிதானே பண்பாய்மாந்தமென்றுரையே.

மாந்தத்துக்கு பச்சிலைச்சாறு வெண்பா.

நொச்சிப்பொடுதலையும் நுணவேலி இந்நான்கும்
பச்சையிலைசரியாய்ப்பாலருக்கு அச்சமற
நீர்வரவேதான்நறுக்கி நீகொடுக்கவேமாந்தம்
ஊர்விட்டுப் போமென்றுரை. 151

அறுசீராசிரியர் விருத்தம்.

உத்தாமணியும்பேய்மிரட்டி உகந்தசாணைக்கிலையுடனே
வித்தாரமுள்ளவெதுப்படக்கி வேளைநொச்சில்இவை ஆறும்
ஒத்தேவதக்கிச்சாறுகொண்டு உயர்ந்தவசம்புசிறுதேக்கு
சுற்றேஆயையொடுச்சுட்டுச்சாற்றிக் கொடுமாந்தம்போமே 152

மாந்தத்துக்குவேறுசுரசம் நிலமண்டிலவாசிரியப்பா.

ஒருபிடிபொடுதலை ஓர்கல்லுப்புடன்
இருவிதம்ஒன்றதாய் இடித்துச்சாறுசெய்
சிறுவிதசட்டியிற் சிறுகசெய்தபின்
தருவிதம்உண்டிடத் தணியுமாந்தமே. 153

மாந்தத்துக்கு வேறுகுழம்பு—அறுசீராசிரிய விருத்தம்.

வெற்றிலைக்காம்புபதினைன்று மேவுவசம்புஅவ்வளவு
பற்றியஉள்ளித்தான் இரண்டுப்பண்பாந்திப்பிலிதான் ஒன்று
சுற்றிவெதுப்பித்தான் அரைத்துச் சுகமாய்ப்பகுவந்தக்கபடி
வற்றியவெந்நீர் தனிலிடவே மாந்தம்போமென்றருளினரே

மாந்தத்தக்கு வேறு குடிநீர்.

விடுமேஓமம்உள்ளியுடன் மீறுமிளகுதிப்பிலியும்
நடுமேசீத்தனிலமுடிந்து நன்றாய்நாழிநீர் தன்னில்
இடுமேஅடுப்பில்எட்டொன்றாய் இதமாய்க்காய்ச்சிக்குடிநீரை
கொடுமேமாந்தம்உள்ளவெலாங் குடிபோமென்றுகூறினரே.

### வேறு மருந்து.

வல்லக்குரேட்டைஇலையதனை வாட்டிப்பிழிந்துதானதிலே
கல்லியோடுநல்வசம்பக் கனத்தவட்டத்திரும்பியுடன்
சொல்லிச்சுட்டுஆட்டியலத சுருக்கில்கலக்கிவார்த்திடவே
மல்லும்பொல்லாவினையான மாந்தம்போமென்றருளினரே.

வேலிப்பரித்திமேனியுடன் வேளையிண்டுப்பொடுதலையும்
ஆலித்தின்னும்அகத்தியிலை ஆறுமவதக்கிச்சாறுகொடு
கோலவசம்புஆமையோடுக் குலவும்ஓமம்ஈட்டரைத்துக்
காலிற்கையில்துவளையிட்டுக் கடுகக்கொடுமாந்தம்போமே.

### மாந்தந்துக்கு வேறு துவளை தேறையர்—கலிவிருத்தம்.

ஆவும்சின்னி அடவிவெண்ணொச்சிலை
ஏவுவேட்பிலைச்சிந்தில் இடித்துநீர்
மேவுமூன்றுநாள் தேல்த்துவளையிட
நோவுமாந்தம் நொடிக்குளேபோம்

### மாந்தத்துக்கு வேறு கியாழம் – வெண்பா.

வேளைவேர்ச்சுக்குடனே வெந்தயமும்வெள்ளிப்
பாளைசேர்ஓமம் பருவசம்பு வாள்விழியாய்
ஒன்றாகக்காய்ச்சி உடன்குழவிக்கீயக்
கண்டாலும் மாந்தம்போம் சாண் 159

### எண்சீராசிரிய விருத்தம்.

என்றேமஞ்சணத்திநொச்சியில் இனியவேலிக்கழல்கொடியும்
ஒன்றாய்ஒவ்வொன்றொருபிடியாய் ஒக்கவறுத்துச்சட்டிதனில்
நன்றாய்க்கருக்கிநீர்நாழி நயந்துவிட்டுஅடுப்பேற்றி
கன்றாய்ஓமம்வசம்புச்சுக்குமிளகுப் பொடுதலைக்காயாமே.

ஆமேதிப்பிலிஅதனோடு அருநல்லெண்ணெயில்சிவக்கத்
தாமேவறுத்துப்பொட்டணமாய் சமைந்தநீரினுடன்போட்டு
வேமேகாய்ச்சியோர்சங்கு விரைவில்கொடுப்பீர் ஆமாகில்
போமேமாந்தமுள்ளவெலாம் போயிக்கடலிற்புக்கிடுமே. 161

உத்தாமணியிலைவேளையின்வேர்உகந்தநொச்சிபொடுதலையும்
சித்தமுருங்கைநுணாசாக்குச் சோவறுத்துநீர்விட்டு
ஒத்தாய்ஓமம்திரிகடுகு உயர்ந்தவசம்புமுடிந்ததனை
வைத்தெட்டொன்றாய்க்காய்ச்சிதர மாந்தம்எல்லாம்ஓடிடுமே.

சுக்குமிளகுதிப்பிலியும் துய்யஓமம்உள்ளியுடன்
ஒக்கதறுக்கிச்சீலையினில் உகந்துமுடிந்துநீர் உழங்காய்
செக்கச்சிவக்கக்காய்ச்சியபின் சீராய்ச்சங்குபுகட்டிடவே
மிக்கமாந்தபிணிதோஷம் விட்டேயோடுங்கண்டாயே. 163

### தன்வந்திரி—எண்சீராசிரிய விருத்தம்.

கியாழத்தால்மாந்தங்கள் போகக்கேளு கெடியானமாசி
பத்ரிபற்பாடந்தான், கியாழத்தாலநாயுருவிமுட்காவேளைசுரு
சீரகத்துடனே கோழியெச்சம், இயாழத்தால்பற்பமாய்ச்
செய்துக்கொண்டு இருவேலிசங்குச்சுக்கோடேஏலம், கியாழத்
தால்ரோகணியும் பறங்கிச்சக்கைச் சீக்கணும்பட்டைக் காவட்
டம்புல்வே. 164

புல்லானகடுக்காயும் மாசிக்காயும் புகழானவசம்போடு
தான்றிபுத்தம், வில்லானநீர்படியிரண்டதாகும் விதமாஎட்க
டொன்றாய்ச்சியேதான், கல்லானமாந்தமொடு கழிமாந்தங்
கள்கைப்பிணிப்பால் வந்ததொருகழிச்சல்மாந்தம், மல்லான
மாதாவாய்ச்சிறுபண்டத்தால் மருவிவந்தமாந்தரெல்லாம்
மயங்கிப்போமே. 165

### அறுசீராசிரிய விருத்தம்.

என்றேஓமம்திப்பிலிசுக் கிருசீரகமுங்கொத்தமல்லி
யன்றாமையோடுகுராசானி பகரநிறுத்துஓர்நிரையாய்
துன்றாநீரில்கானரைத்து துதித்தநல்ல துவயையென
உண்டாமாந்தம்உள்ளஎலாம் ஓடுங்கண்டாய்உண்மையிதே.

மாசிலார்க்குமாந்தஉண்டை வண்மையுடனேதான்அறைக்க
ஆசையாகவாய்விளங்கம் ஆமைஓடுநன்மிளகு
வாசமானபொடுதலைக்காய் வசம்புதிப்பிலிகழல்பருப்பு
கூசாமல்சரிநிரையாகக் கூட்டிநீவைத்தணத்திடுமே. 167

அரைத்தமருந்துபொடுதலைச்சாறம் மிதனிலேவிட்டரைத்து
நிறைத்தசூசைக்காயளவுநிழலில் உலர்த்திக்குளிகைதனை
சுரத்தின்கழிச்சல்இருமலுக் சொற்சிறுவழுதலைகியாழத்தில்
உரைத்துஉண்டைதனைகொடுக்க உடம்பிற்பிணியும்தீருமே.

வாந்திப்போருமலுக்கெல்லாம் வளரும்வேலிகியாழத்தில்
ஓய்ந்தவெகுவாய்க்கழிச்சலுக்கு ஓமக்கியாழந்தன்னிலிட
கேந்தியானமாந்தத்துக்குக் கியாழமறிந்தேயிடுவீரேல்
மாந்தம்விட்டுத்தானகலும் வளரும்பிள்ளையாமென்றே. 169

திரிகடுகே மம் உள்ளிச் சீர்பெருங்காயமற்றக்
கரியசீரகம்வகைக்குக்கணக்கது விரகன்நாலு
அரியதோர்வசம்புமூன்று அரிதகிப்பதினைந்தாகும்
புரியசாரணைவேர்ஐந்து பொடுதலைக்கொழுந்துமாமே.

கடுக்காய்களில் எழுவகைப்படும் அவையான.

விசையன்கடுக்காய் விந்தியதேயத்திலுற்பத்திபேய்ச்சுரைக்காய்போன்றிருக்கும் இதற்குவாதந்தீரும், உரோகணி கடுக்காய் கன்னிமாகுமரியிலுற்பத்திநால் வகிராயிருக்கும் இதற்குசன்னிதீரும், பிரிதிவிகடுக்காய் சௌராஷ்டிரதேயத்திலுற்பத்திமேற்றோல் மெல்லியதாயிருக்கும் இதற்குப்பத்தியந்தீரும் அமுர்தகடுக்காய்காசி தேயத்திலுற்பத்தி சதைபோன்றிருக்கும் இதற்குசேஷ்மந்தீரும், சீவந்திக்கடுக்காதகானிலுற்பத்தி பொன்னிறமாயிருக்கும் இதற்குமூலந்தீரும் திரிவிருதைகடுக்காய் மலைகளிலுற்பத்தி பஞ்சவண்ணமாயிருக்கும் இதற்குவிரணந்தீரும் அபையன் கடுக்காய்பொதிகைமலையிலுற்பத்திகறுப்பாயிருக்கும் இதற்குதுன்பந்தீரும்.

ஆம்பெருந்தும்பைக்கொழுந்து அவ்வளவுவேலிப்பத்ரம்
ஓம்பெறதான்வெதுப்பி ஒன்றாகவேஇடித்து
தாம்பெருந்தும்பைசாற்றில் தனிபொடுதலைபின் சாற்றில்
காம்படஅரைத்துச் சுண்டைக்காளவுண்டைசெய்யே. 172

செய்ததோர்குளிகைதன்னைத் திகழ்நிழல்உலர்த்திக்கொண்டு
வையகபாலர்தங்கள் வளர்பருவத்தைப்பார்த்து
கொய்யகால்அரைமுக்கால் முழுக்குளிகைவெந்நீரிலீய
மைமாந்தக்கட்டுமாந்தக்கழிச்சலும் வலிப்புபோமே. 173

மாந்தத்துக்கு வேறு குளிகை தேரையர்—கலிவிருத்தம்.

போகுஞ்சண்பகப்பூ இலாமிச்சம்வேர்
ஏகுங்கோஷ்டமோ டேலங்கோரோசினை
வேகுஞ்சாத்திரபேதி மதுரமும்
வாகுவெட்டிவேர் மாசிப்பச்சொன்பதே 174

ஒன்பதுவகைக் கொன்றுக்கழஞ்செடை
மின்பதுவெட்டி வேர்த்தண்டுச்சாற்றினில்
நன்பதுஏழு நாழிகையாட்டிநீ
பின்பதுகுன்றிப் போலத்திரட்டியே. 175

திரட்டிடுஉலர்த்தி யொருமாத்திரை
விரட்டிடுமுலைப்பாலிள வெந்நீரில்
குரட்டிடும்இழுத்தே கொடுமூன்றுநாள்
கரட்டுப்பின் கடும்பிணியாவுமே. 176

மாந்தத்துக்கு வேறு குளிகை தன்வந்திரி.

உரைப்பேன்பூரம்பலம்அரைதான் ஓகோலவங்கம்ஏலமுடன்
திரைப்பேன்வசம்புசீரகந்தான் திறமாய்மாசிஅதிவிடையம்
கரைப்பேன்வகைக்கால்பலமாய் கனமாய்பூரஞ்சுத்திசெய்து
மரைப்பேன்கல்வம்அதிற்போட்டு மாசிப்பத்திவேர்ச்சாறே.

வேர்ச்சாற்சாமம் ஒன்றரைப்பாய் விஷ்ணுக்கரந்தைச் சாற்சாமம், வேர்ச்சாற்வார்த்து அரைத்துக்கொண்டு விதமாய்க்கொத்தமல்லியைப்போல், வேர்ச்சாற்குளிகைசெய்துக் கொண்டுவிளங்கநிழலில் உலர்த்தியபின், வேர்ச்சாற்குளிகை செப்பில்வைத்துவேதப்பொருளை மனதிலெண்ணே. 178

எண்சீராசிரிய விருத்தம்.

எண்ணவே குளிகையொன்றெடுத்துகொண்டு எழிலான மாந்தத்தின் கியமுழுத்திய, எண்ணவே ஓடிவிடுமாந்தமெல்லாம் இயம்பினேன்முன்சொன்ன தெல்லாம்போகும், எண்ணவே இம்மொழிபோல் ஆர்தான்சொல்வார் எடுத்தமுறையாடுமிந்த முன்னூருபாரு எண்ணவே முன்சொன்ன மாந்தமெல்லாம் என்சொல்வேன் பறந்தோடும் இதனுல்பாரே. 179

மாந்தத்துக்கு வேறு நெய்.

கட்டளைக் கலித்துறை.

சுத்தாவின் நெய்யும் ஒருநாழிஓமம் துதிவலந்தான்
உத்தாமணி இலை வெற்றிலைக்காம்பொவ் வொருபிடியாய்
விந்தாசுக்குடனே வசம்புள்ளி விருகனிடை
எத்தாய் அரைப்பித் தெரியிடமாந்தங்களேகிடுமே. 180

மாந்தத்துக்கு வேறு எண்ணெய்.

ஏகும் அகத்திச் சாரணை வேலி எண்ணெய் ஒர்உழக்காய்
வேகமதாங் கூனன்முதுகுள்ளி வெண்வசம்பு
ஆகமதாக விருகன்னெடையும் அரைத்ததனைப்
பாகமதாக எரியிடமாந்தம் பயந்திடுமே. 181

சொல்லாறுவல்லின்மெல்லினமோடிடைதோன்றிலொன்று
நில்லாதுநேர்நிரை நேராய் நிறைந்துநிரம்பியநூற்
கல்லாதமாந்தர்க டேமாங்கனியென்பர் கற்றுணர்ந்த
நல்லாரெவர்களுங் கூவிளங்காயென நாட்டுவரே. 182

தன்வந்திரி—கலி விருத்தம்.

செய்திடமாந்த எண்ணெயைச் சொல்வேன்
வைதிட இஞ்சி சங்குடன் சின்னி

கைதிடகாணி கரந்தையும்வன்னி
நெய்திடஎல்லாம் நோய்ப்பிழிந்திடே 183

பிழிந்துசிற்றேரண் டத்தின்எண்ணெய்
கலந்திட்டேயொரு கட்டையால்தீயிடு
செலந்திகழ்க்காய்ச்சிசிறுக இறக்கிடு
மெலிந்தநோய்தீர விளம்புவேன்கேளே. 184

கேளிடு மாந்தம் மலபந்த மாந்தம்
சேலிடு சலத்திற் செனி சிரமாந்தம்
பாலகர்உண்ணப் பறந்திடும்பாரு
சீலக்கொடிய சீதளம்போகுமே. 185

மாந்தத்துக்கு எண்ணெய்—அறுசீராசிரிய விருத்தம்.

விளக்கெண்ணெய் அரைஆழாக்கு வெண்காயம்பெரும்பூண் [டைந்து
தளுக்குறுமணித்தக்காளிச் சாறதுஉழக்கதாகும்
களக்கமாய்ச்சாறும் எண்ணெய் கலந்துவெண்காயந்தன்னை
அளக்கவே அரிந்துபோட்டு அடுப்பில்வைத்தெரித்திடாயே.

எரித்த பொன்னிறமதானல் இறக்கிநீ வடித்துக்கொண்டு
விரித்திடுங்கடுகுரோணி விளம்பிய விருகனென்று
தரித்துமே வறுத்துதூளாய் தானதிற்போட்டொன்ருக
பிரித்தொருகரண்டிஎண்ணெய் பிள்ளைக்குக்கொடுப்பதாமே.

கொடுக்கவேதான் உட்காய்ச்சல் கொடுங்கணக்காய்ச்சல் [மாந்தம்
முடுக்கிய தொண்டை வாய்ப்புண் மூலத்தின் சூடுமற்ற
படுக்கவே மிகப்பொல்லாத பதவகை கழிச்சலெல்லாம்
அடுக்குடன் ஓடிப்போமென் றறைந்தனர் நூல்வல்லோரே.

மாந்தத்துக்கு வேறு எண்ணெய்.

கஞ்சாங்கோரைப்பிரமியிலை கனத்தத்துளசிபழம்பாசி
செஞ்சாமிலவிளாவல்லாரைச் சிந்தில்தண்டுசமூலமுடன்
மிஞ்சாவசம்புரோகணியும் வெண்காவெளியோர்விருகனிடை
அஞ்சாஎண்ணெய்ஓர் ஆழாக்குஅதிலிட்டெரித்துப்பதம்பாரே

பாரேயிறக்கிவடிகொண்டுப் பரிவாந்துட்டெடைஒன்ருக
கூரேபாலர்உள்ளுக்குக் கொடுக்கமாந்தம்போமிப்பால்
காரேயிச்சாபத்திமாய்க் காதலனைப்பெற்றத்தாயை
நீரேவைக்கநலமாகும் நீலவிழிமாமடமயிலே. 190

தோஷ மாந்தத்துக்கு தைலம் தேறையர்
கலி விருத்தம்.

அன்னமேமுருங்கப்பட்டை அத்துடன்
மின்னமேவெண்கருவும் வெள்ளுள்ளியும்

இன்னம் வேப்பெண்ணெ யிவைநாலுடன்
சன்னமேசெய் தைலம் இறக்கிடே. 191

இறக்கிடுந் தைல மதிற்குத்தியே
உறக்கிடுங் கண்ணில் இட்டுற நாவினில்
துறக்கிடுந் தடவத் தோஷமாந்தமும்
மிறக்கிடுமிதுமெய்ம் முறைகண்டிடே. 192

மாந்த தோஷத்துக்கு சாறு வெண்பா.

ஈரவெண்காயமுடன் எழில்மூடக்கொத்தான் இலையும்
பேராய்வெதுப்பிப் பிழிந்திட்டுச் - சேரவே
மூன்றுகாசெடைபுகட்ட முனைமாந்ததோஷம்
ஊன்றுதாலில்லாமல் பறந்தோடும் 193

மாந்த தோஷம் வலிப்பு மலக்கட்டுக்கு பச்சிலைச்சாறு
எண்சீராசிரிய விருத்தம்.

நல்வேளை இலைவசம்பு வள்ளித்தமாலம் நையவேநறுக்கி வெதுப்பிப்பிழிந்து, சல்லியமாங் குழந்தைகட்குப் பருவம் பார்த்து தக்கக்கால் அரைமுக்கால் முழுச்சங்காக, புல்லவே புகட்டிடவே மாந்ததோஷம், பொல்லாதவலியும் மிக்கட்டுந் தீரும், அல்லளகப்பவள இதழ்ப்பெண்ணேயிதை அன்புடனேசெய்தருமம் ஆக்கமாமே. 194

மாந்ததோஷம் வலிப்புக்கு உச்சியிலப்புதற்குங்
கால்கையிற் கட்ட மருந்து.
அறுசீராசிரியர் விருத்தம்.

சிறுபுள்ளடியும் வெள்ளுள்ளி தின்னும் நற்கீழ்க்காய்நெல்லி
உறவாய் அரைத்துப் பிள்ளைதன துச்சில்தப்பி மிஞ்சினதை
நெறியிரண்டு மூன்றுக்குளிகை நேராய் உருட்டி நெடுஞ்சிலை
மறைவாய் அதனிலே முடிந்து மாறுகை காலிற்கட்டே. 195

மாந்தம் பாலகிரியைக்கு கிழாயம்.

வேலிப்பரித்தி யொருபிடியும் விரும்புஞ்சுக்கு சடாமாஞ்சில்
கோலவிளாவும் வசம்புள்ளிக் குறித்தமிளகு கூனனுடன்
சீலஓமம்சீரகமும் சிவக்கக்காய்ச்சி யெட்டொன்றாய்
பாலர்க் கொருசங்கிடுவீரேல் பாலக்கிரியைப்போய்விடுமே.

மாந்தம் வயிற்றுப்பலுக்கு மருந்து.

அசமதாகமும்வசம்பு ஆனசட்டிகாயவைத்து
மசமாய்வருத்து பொடிசெய்து மணிசாற்றிலிவையிரண்டும்
நிசமாய்க்குழப்பி கொதிபிட்டு நீயோர்சங்குகொடுத்தாற்கால்
அசையாமாந்தம்வயிற்றுப்பல் அகலும்பின்னர் அணுகாதே.

மாந்த உப்பிசத்துக்கு கிழாயம்.

ஒப்பும்ஓமம்காசெடையை உகந்துசட்டியினிற்வறுத்து
குப்மைமேனிவேர்பட்டை கூறும்இரண்டுபலந்தானே
அப்புஓர்அரைப்படிவிட்டு அளவைவற்றவேகாய்ச்சி
வைப்பாய்க்கொடுக்கவேஉப்பல் மாந்தம்போகுங்கண்டாயே.

மாந்தம் வயிற்றுவலி செரியாமாந்தம் வயிறாதலுக்கு மருந்து.

வெலிப்பரித்திச்சாழறக்கில் மீறுவசம்புதிரிகடுகு
மாலிக்கோரோசினைஐந்தும் வகைக்குவிருகனெடையிரண்டு
வேலிகொழுந்துமேநான்கு விருகனரைத்துட்கொளமாந்தம்
பாலர்வயிற்றுவலிசெரியா மாந்தம்வயிறாதற்மோமே. 199

மாந்த பொருமலுக்கு எண்ணெய்—எண்சீராசிரிய விருத்தம்.

பேய்பிரட்டி வெதுப்படக்கிப் பொடுதலைத்தான் பிரமியலைவேலியொடு துளசிதுத்தி, சாய்கின்ற அகத்தியிலைச்சமன் இடித்துச் சாறுபடிகால்பச்சைமஞ்சட்சாறு, வேய்கின்றவீசமது கூடக்கூட்டி விளக்கெண்ணெய்ப் படிஅரையுமாகவே தான் ஆய்கின்றஓமங்கால்பலமதாகும் ஆமையோடுச்சுட்டுப் பலமுங்காலே. 200

காலானஉள்ளிபலங் காலதாகும் கனவசம்புபலங்காலும் இடித்துக்கொண்டு, மாலானஎண்ணெயினிற்கலந்துக்காய்ச்சி வடித்துஒருதுட்டெடையும் எண்ணெய்தானும், வேலானவெங்காயம் பணவெடைதான்ஒன்றுவிபரமாய் பொரித்துபோட்டிழைத்தபின்னும், பாலானபெருங்காயம் பணஎடையுரைத்துப் பண்பாகவே கொடுக்க சேதிகேளே. 201

கேளேநீமுதல்நாளிற்கழிச்சல்மெத்த கிளரிவரும் மற்றுநாளதுதுவக்கி, தாளேநீபொருமலுடன் சத்திமாந்தம் தணியாகஉறக்கமதுதீருந்தீரும், நாளேநீவியாதியது தீரமட்டும் நலமான எண்ணெயதுகொடுக்கநன்று, நீளேநீபதியந்தான் பிசகவேண்டாம் நீலவிழிமாமயிலேநிதானிப்பாயே. 202

மாந்தத்துக்கு எண்ணெய்—அறுசீராசிரிய விருத்தம்.

நன்றேசங்குஆமணக்கு நாவல்நன்னறிக்கருந்துளசி
கொன்றேசின்னிபற்பாடம் குப்பைமேனிக்கௌதும்பை
வென்றேயிவைவகைவகைக்கு வேர்பிடிவெட்டிரவிஇருநாள்
ஒன்றேஉலர்த்திதான்இடித்து ஒருதூணிநீரில்ஊட்டிடுமே.

ஊட்டிடுமணித்தக்காளியுடன் ஓரிலை தாமரை அவரிபுங்கு
நாட்டிடுஇவ்விதம் வகைவகைக்கு நாழிச்சாற்றில்பிழிந்தூட்டி
வாட்டிடுசிங்கிமதுரமுடன் மாஞ்சில்சண்பகபூவுடனே
மாட்டிடுலவங்கம்செவ்வியமும் கடுக்காயுடன்வால்மிளகதுவே.

அதுவேகண்டுபரங்கியுடன் அடவாய்வீதம்வகைவகைக்கு
வதுவேஇரண்டுவிருகனிடை வாங்குகடைசரக்கவைஎல்லாம்
பதுவேஇளம்வறுப்பாய்வறுத்து பாங்குடன்இடித்துதூளாவா
அதுவேநீரிலுடன் தாக்கி அறிவாய்ப்பின்னுமருந்ததுவே.

மருந்தேலிங்கம்மனேசிலையும் வாளம்பூரம்கெந்தியுடன்
பொருந்தேபுழுகுகஸ்தூரிப் புகழாய்விராகன்எடைஇரண்டு
அறுந்தேவீதம்வகைவகைக்கு அடைவாயெடுத்துதூள்செய்து
வருந்தேகோரோசினையதுவும் வளமாய்விருகன்எடைபோடே

எடையாதேசிற்றுமணக்கு எண்ணெய் அதிலொருபடியிட்டு
நிடையாய்அடுப்பில்இதைஏற்றி நீஇருசாமம்எரித்துப்பின்
கடையாய்சுண்டும்நீரெல்லாம் நலமாய்செழுமை நிறங்காணும்
படையேதுரத்தம் நோய்போகும் பண்பாயிரக்கிபார்த்திடவே

இறக்கிஅதனைவடிகட்டி எடுத்துஇறுத்தி கலசமதில்
வறக்கிவாலைப்பதம்வைத்து வஸ்துஇதுவெனப்பணிந்திட்டு
நறக்கிஎண்ணெய்தனைகொண்டு நலமாய்இரண்டுகழஞ்சுயிடை
உறக்கிபிள்ளைதனக்கேழு உபாயமாய்உள்ளுக்குக்கொடுமே.

இதுவுமது வேறு சந்தம்.

கொடுத்துமேஇரண்டுநாழிச்சென்றபின் முலைப்பாலீந்து
எடுத்தநாள்தவருயிந்த எண்ணெயைக்கொடுத்தபின்னர்
அடுத்ததோர்குழந்தைமாதா அவளுக்குப்பத்தியங்கேள்
விடுத்ததோர்வறுத்தஉப்பு வெந்நீரும்மிளகுசாரே. 209

வெந்நீரும்அன்னம்உண்டால் வினையதுஅகன்றுபோகும்
கன்னியேபதனமாக காமனைநினைக்கலாகா
நன்னிமையாகயேழு நாளதுகடந்துதானல்
பின்னுமேவருகாதுண்மைப் பிள்ளையுஞ்சுபஸ்தம்நன்றே.

சுபஸ்தமாம்ஏழுஞ்சென்று பின்புநீ ஏழுந்தள்ளி
நிபஸ்தமாய்தாயும்பிள்ளை இருவர்க்கும்தலைநீர்வாரு
தபஸ்தமாய்ஓமந்தேய்த்து சலமதுவெந்நீர்ப்பட்டால்
சபஸ்தமாய்வினைவிட்டோடும் சடமதுவலுக்குந்தானே. 211

வலுக்கவேஇந்தஎண்ணெய் மாந்தத்துக்கெல்லாம்ஆகும்
குலுக்கவேஎண்ணெயதன்னைக் கொடுத்தபின்பேதியாகும்.

உலுக்கவே அதிகபேதி சோபமும்மூர்ச்சையானல்
தெலுக்கென சுக்கைச்சீவி க்ஷணமதிற்கிழாயம்வையே.

வைத்துமேகியாழம்ஆக்கி வதுவினிற்கழஞ்சுமூன்று
உத்துமேகொடுத்தபின்பு உபாயம ய்முலைப்பால்வூட்ட
சித்ததும்களையுஞசோபம் க்ஷணத்தினில்வாங்கிப்போகும்
வற்றினதேகந்தானும் வச்சிரம்போலேயாமே. 213

மாந்தம் கருங்கிரந்தி அட்சரம் கணங்கள் மேகவெட்டைக்கு
எண்ணெய்—அறுசீராசிரிய விருத்தம்.

மணித்தங்காளியிலைத்துளசி வளருந்துத்திப்பிரமியிலை
கணித்தவில்வம்வல்லாரைக் கையாந்தகரைப் பொடுதலையும்
தணித்தநுணுபுங்கிலைச்சங்குச் சமனிவையிடித்துச்சாறுபடி
துணித்தஒன்றுதான்ஹிக்காய்ச் சுக்குக்கடுக்காய்த்திப்பிலியே

திப்பிலிபொத்தோடரத்தை திகழும்ஓமம்வசம்புடனே
மப்பிலியானகஸ்தூரிமஞ்சள் வகைக்குப்பலமரையாய்
இப்பிலிசாதிக்காயொன்று இலவைகளிடத்துச்சாற்றிலிடு
எப்பவிளக்கெண்ணைபடியொன் றிட்டுளரித்துப்பதமெழுகே

மெழுகுப்பதமதிலெண்ணெய் வடிவிடுமொருகரண்டிதன
அழகுபெரியோர்க்கிருகரண்டி ஐந்துஏழுநாலிடவே [யர்க்கு
கழகுமாந்தம்அட்சரமும் கணங்கள்கரியகிரந்தியொடு
விழுகுங்கொடியப்படர்மேக வெட்டைத்தீரும் பைங்கொடியே

ஊதுமாந்த குணம்.

உடலெல்லாம் ஊதிக்காணும் உலர்ந்தியுங் கழிச்சலுண்டாம்
குடலெலாம்இரைச்சலாகிக் கூப்பிடுஞ்சமுத்திரம்போல்
தொடையெலாம்வலிக்குமிக்கச் சுரமுடன்கடுப்புமாகும்
அடவினல்வூதுமாந்தம் அதுசெயுங்குணங்கள்தானே. 217

ஊதுமாந்தத்துக்கு குளிகை—கலி விருத்தம்.

ஓதுங்காரம் அரை ரண்டுரோகணி
நீதியாய்க்கருஞ் சீரகம்நீண்முலை
மாதுபாலினில் மாத்திரைசெய்திட
ஊதுமாந்தம்விட் டோடுவதுண்மையே. 218

மாந்தம் ஐந்துக்கும் கிழாயம்—அறுசீராசிரிய விருத்தம்.

பொடுதலைவேம்புமாவும் புளிநுணுநொச்சில்வேலி
சடுதியில்ஈர்க்கிவ்வேழும் சமன்கொண்டுக் கிழாயம்வைத்து

இடுவகைஓமம்உள்ளித் திப்பிலிக்கூடக்கூட்டி
அடுதர்நீர்நாழிதன்னில் அடுப்பிளில் எட்டொன்ருக்கே. 219

ஆக்கிடுங்கிழாயந்தன்னை ஆனதோர் சங்குவார்க்க
போக்கிடும்ஊதுமாந்தம் போர்மாந்தம் சத்திமாந்தம்
தேக்கிடும்செரியாமாந்தம் சிறந்திடுங்கட்டுமாந்தம்
தாக்கிடும்மாதம்ஐந்தும் தரணிவிட்டோடுமென்றே 220

மாந்தம் ஏழுக்கும் மருந்து தேறையர்.

கலி விருத்தம்.

நீங்குரோகிணி சேர்உள்ளித் திப்பிலி
ஓங்குமாமதுரம்வகை ஒன்றுக்கு
காங்குநீயோர் கழஞ்செடைத்தூக்கியே
வாங்கும்அண்ட வெள்ளைக்கருவார்த்திடே. 221

வார்த்திடுமூலைப்பால் யிதமாகவார்
ஊற்றிடுஅரைத்துள்ளுக்கு மூன்றுநாள்
ஏற்றிடும்வகைமாந்தம் ஓர்ஏழையும்
ஆற்றிடும்புளி உப்பாகா தன்னமே. 222

மாந்த மப்க்கத்துக்கு மருந்து.

அறுசீராசிரிய விருத்தம்.

உத்தாமணியைஅனல்தாக்கி ஒடுக்கிக்கயக்கி ரசம்வாங்கி
பெற்ருர்பாலிற்சிரகமும் பேதிக்கடுகுரோகணியும்
வித்தாரமாகஅரைத்தறுத்த வெப்புமாந்தமயக்கம்போம்
நற்ருமரைப்போல்முகநல்லாய் நல்கமாந்தம்நாடாதே. 223

பித்தகணபாண்டுக்குக் கிழாயம் தன்வந்திரி.

எண்சீராசிரிய விருத்தம்.

வாய்க்கவேசிறுதேக்குவாம்விலங்கம் வால்மிளகுரோகணியும் சுக்கோடேலம், சாய்க்கவேதிப்பிலி இலவங்கந்தான்றி தக்கோலம்போஸ்ததூக்காய் வகைவகைக்கு, மாய்க்கவேகால் பலமாய் நிறுத்துக்கொண்டு வண்மையாய்த்தூளிடித்துப் பாண்டத்திலிட்டு, காய்க்கவே இருநாழிசலமும்விட்டுக் கடுகவேயெட்டொன்ருய்க்காய்ச்சிறக்கே. 224

இறக்கியேகொடுத்துவிடக் கிராணிமாந்தம் இயல்பான சுரக்கட்டிவிஷதோஷங்கள், உறக்கியேஇசிவுபண்ட மாந்தத் தோடுஉற்றதொரு கிருணிசோகைக்காமாலை, நொறுக்கியே கொண்டசுரம் கோழைகட்டுநொடிக்கின்றக் கொட்டாவிம்மல் தும்மல், நறுக்கிவிடும்பித்தகணபாண்டுஎல்லாம் நமன்ஓடிப் போவான்பார் கிழாயந்தானே. 225

கர்ப்பமாந்தகுணம் சறுவேந்தம்.

மொழிகிறேன்கர்ப்பமாந்தக் குழிதனைமுயலக்கேளாய்
பொழிகிறேன்பெண்ணுளதானும் புதுவரகரிசிக்கொழியல்
விழிகிறேன்மிதமற்றேதான் விளம்பரம்உண்டதாலே
கழியிளங்கருவுக்கேதான் கனலதால்சூடுண்டாமே. 226

சூடதால்வாதவாயு தோன்றிடுங்குணத்தைக்கேளு
பாடதால்கருவிற்பற்றிப் பலபலநோய்தான்காணும்
வாடலோடுறுத்திவாயு வன்னியுங்கூடச்சேர்ந்து
தேடவேபிறந்தபிள்ளை தேகத்தில்நோயைப்பாரே 227

தேகத்தின்மேலேநோய்தான் கிலேஷ்மநாடிதானும்
ஆகத்தின்மூலச்சூடு அருகியே மிகுத்துதானல்
போகத்தால்புணர்ச்சிசெய்த பொருட்டதால்சிசுவுக்கேதான்
நாகத்தின்இரைச்சல்போல நடுக்கிடும்நாடிதானே 228

நாடியில்வாதநாடி நடக்குமே சர்ப்பம்போல
ஓடியேசரசரென்று ஒந்தியைப்போலேபாய்ந்தால்
வாடிடும்பிள்ளைதேகம் வாயெல்லாம்புண்ணாய்ப்போகும்
பேடியின்மூலைப்பாற்சுண்டிப் பிள்ளையும்இளைக்குந்தானே.

பிள்ளையும்பிறந்திரண்டு ஆண்டதுசென்றுதானல்
பிள்ளையேஅரையிற்கட்டிக் கிலேசமாய்வரட்சிக்காணும்
விள்ளவேதேகமெல்லாம் மிகுந்ததோர்கனவினலே
துள்ளவேபாலன்தானும் துடித்ததோர்வீக்கமாமே. 230

துடித்திடும்வெளுக்குந்தேகம் தொண்ணூறுநாட்சென்றால்
கடித்ததோர்விஷம்பட்டார்போல் கைகாலும்புண்ணாயிடும்
வடித்திடுஞ்சுழற்றல்வாய்நீர் சுரண்டிடும்அதன்பின்நெஞ்சில்
தடித்திடுங்காறல்காணும் தலையதுநடுங்குந்தானே. 231

நடுக்குமேமூன்றாண்டின்மேல் நாடியும்அசதிகாணும்
படுக்குமேபாயல்மீதே பாலதுகுடித்திட்டாலும்
எடுக்குமேவாந்தியாகும் இறைச்சலும்வயிறுநோயாம்
குடிக்கிறசாரமெல்லாங் குடங்கொண்டுபாயுந்தானே. 232

பாயுமேகருக்கும்போது பசுமையாய்க்கொடிபோல்வீழும்
வாயுமேதவறிக்கண்கள் மதுவெனச்சிவந்துகாணும்
தேயுமேதேவாங்கைப்போல் செகத்தனர்சொல்லுவார்கள்
நோயுமேபட்சித்தோஷம் இதுவெனஅருளுவாரே 233

அருளுவோம்இந்தநோயின் அசாத்தியசாத்தியங்கண்டு
வருளுவோம் கர்ப்பமாந்தம் வல்பிணிவிட்டுநீங்க

வெருளுவோம்புங்கின் எண்ணெய் விதமதைசொல்லகேளாய்
தெருளுவோம்மூன் றுநாழி திருத்தமாய்ப்பருப்பைவாங்கே.

கர்ப்ப மாந்தத்துக்கு புங்கின் எண்ணெ.

வாங்கிடுபுங்கன்கொட்டை அதனுடன்பருப்பைவாங்கி
தீங்கில்லாரவிநாள்மூன் று தினந்தினம்உலர்த்திதானும்
பாங்குடனெடுத்துஇந்த பருப்பையும்உரலில்தாக்கி
தாங்கவேஇடித்துமாபோல் தானதைபாண்டத்தாட்டே. 235

ஊட்டிடுதூணிநீரில் ஒருமைாய்சொல்லக்கேளாய்
நாட்டினிற்கருடமூலி நன்னிலப்பனையும்அத்தி
சாட்டிடுசங்குசின்னி சாரணைக்குன் றிவெள்ளை
மாட்டிடுக்ண்டங்காரி மாதளைலலவேம்பென்றே. 236

வேம்புடன்குப்பைமேனி வில்வவேர்கீழ்க்காய்நெல்லி
காம்பதுஅழிஞ்சில்நாவல் கரிசலாங்கண்ணிதுத்தி
ஆம்பதுஆடாதோடை அல்லியும்கொத்தான்சூரை
வேம்பதுசிவனார்வேம்பு வெண்ணொச்சில் துளசிவேரே. 237

வேருடன்வகையொன் றுக்கு விளங்கவேபலந்தான்கொண்டு
சீருடன்ரவியில்மூன் று நாளதுஉலர்த்திச்சேர
நேருடன்உரலில்தாக்கி நிலைபெறஇடித்துத்தூளாய்
கூருடன்தோண் டிவேறே குணமதாய்வடிதாவகட்டே. 238

கட்டியமாவைக்கொண்டு கருதிடுமுன்புநீரில்
அட்டிசெய்யாதேபின்பு அருளுவோம்மூலிச்சாறு
தட்டிடுபிரமிச்சாறு தைவேளை அவுரிசூரி
வொட்டியதும்பைக்காட்டு அகத்தியும்பொன்முசுட்டை. 239

அகத்தியும்மணித்தக்காளி அடவுடன்வகைவகைக்கு
துகத்தியசாற்றில்வீதம் துரிதமாய்ப்பலம்இரண்டாம்
சகத்தியமாகஇந்த சாறதைநீரிலிட்டு
அகத்தியம்இன்னஞ்சொல்வோம் அகத்தியன்சொற் கேளே.

உரைக்கவேகடுக்காய்க்கண்டத் திப்பிலிச்செவியப்உற்ற
விரைக்கவேமதுரங்கோஷ்டம் வெட்பாலையரிசிகோலம்
நிரைக்கவேதேவதாரம் நிகழ்பெறுமாஞ்சல்சிங்கி
உரைக்கவேசாதிக்காயும் தான்றியும்ஏலமாமே. 241

ஏலமாம்புழுகுதானும் இருவிநாவியுமேயாகும்
வாலரோகிணியுமாகில் கஸ்தூரிபண்பாய்வீதம்
ஞாலமேவகைவகைக்கு நளினமாம்விருகன்மூன் று
சாலவேமரங்கிநீயும் சட்டியில்வறுத்துக்கொண்டே. 422

கொண்டுநீஇடித்துத்தூளாய்க் கொட்டிடுமுன் சலத்தில்
நன்றுநீசொல்லக்கேளு நவிவோம்கடைசரக்கு
வண்டதுவாளம் வீரம் மஞ்சளும்கெந்திசூதம்
துண்டதுபூரம்சாதிலிங்க மும்பூரமாமே. 243

பூரமுமுதலாய்வாங்கிப் புகலக்கேள்வகைவகைக்கு
தீரவேவிருகன்நாலு திருத்தமாய்தூளாய்ச்செய்து
கூறவேமுன்சலத்திற் கொட்டியேபின்புகேளு
ஆரசேராமணக்கு அவ்வெண்ணெய்ப்படிரண்டாமே. 244

படியதுரண்டதாகும் பாங்சடன்நீரில்தாக்கி
வடிபெறமூன்றுநாளும் வன்னியாம்ரவியில்வைத்து
கடிபெறஅடுப்பிலேற்றிக் காலாக்கிமூன்றுசாமம்
துடிபெறகொதிக்கக்காய்ச்சச் சுண்டியேபடிரண்டாமே. 245

ரண்டதாம்பாகமானல் இறக்கியேஆறவைத்து
கண்டுநீவடிதான்கட்டிக் கலசத்தில்அதனைத்தாக்கி
நன்றதாய்ககமலம்வைத்து நாயகிப்பூசைசெய்து
என்றிடும்நோய்தனக்கு எண்ணெயைக்கொடுத்துப்பாரே.

கொடுக்கிறவிதமேதென்றல் குழந்தைக்குஅதிகாலத்தில்
நடுக்கிறஎண்ணெய்தன்னில் நாலதுகழஞ்சுவாங்கி
துடுக்குடன்நவநாளுந்தான் துலங்கவேகொடுத்துநீயும்
வெடுக்கென அதிதபத்தியம் விளங்கிடுங்குணத்தைக்கேளே.

குணங்குறிகுழந்தைப்பெற்ற தாய்தனக்கென்னப்பத்தியம்
மணங்கமழ்பீர்க்கன் காயும் வறுத்ததோர்உப்புமாகும்
புணங்கலாம்வெந்நீராகும் போசனம்ஆறலாகா
விணங்கவேலவங்கப்பூவும் மிளகுடன்காரங்கூட்டே. 248

கூட்டலாம்இருபோதன்னம் கொள்ளுடன்அகத்திக்கீரை
நாட்டவேபகைபும்போகம் நவையுறும்புளியம்ஆகா
தேட்டமாய்பெண்ணுள்தன்னை தெளியபத்தியந்தான்சொல்
வீட்டைவிட்டுழலவேண்டாம் மிகுத்தநோய்ச்சிதறிப்போமே.

போகுமேஎண்ணெயுண்டுப் பின்புமேநவநாள்தள்ளில்
ஆகுமேதேகவக்ரம் அதிதமாம்பொன்போலாகும்
நாகுமேபத்யமாறி நாளதுசென்றுதானல்
வேகமேநீங்கிப்போகும் விளங்கொளிசடலமாமே. 250

### நீர்மாந்த குணம் அதே சலமாந்தம்.

அறுசீராசிரிய விருத்தம்.

தளிர்ந்துகுளிருஞ்சிலிர்த்துவரும் நாவில்நீருய்லைக்காளம்
கழிந்துவயிறும்கபொருமுங் கைகால்மெய்யுந்தினவெடுக்கும்
மெலிந்துஉடம்புமிகபருக்கும் மெநவாய் பேசும்உறக்கமதாய்
தெளிந்துசிரிக்கும்நீர்மாந்தஞ் செய்யுங்குணங்களிதுதானே.

### நீர்மாந்த குணம் அதற்கு எண்ணெய் தன்வந்திரி.

எண்சீராசிரிய விருத்தம்.

தலையதுநோவாய்முகமதுமினுக்குந் தவிக்கவேமலஞ்சிறுத்
திட்டு. மூலையதுமுகவாதுடம்பெலாங்குளிர்ந்து மூத்திரங்குறி
கடுத்திறங்கும் மலைமருந்திரஉள்ளிமூக்குரட்டை வயங்குசா
றெவ்வொன்றோர் உழக்காய், குலவிளக்கெண்ணை தனிலெ
ரித்தருந்த கொடியநீர்மாந்தமுங்குணமே. 252

### நீர்மாந்தத்துக்கு வேறு ஔஷதம்.

எண்சீராசிரிய விருத்தம்.

நொச்சிலை வேளையிலைக் குப்பைமேனி நுணாஇலையும்
பேய்மிரட்டித் தும்பையோடு, பச்சிலையாய்க்கொண்டுவந்து
வெதுப்பியேதான்பதமாகசாறுவரப் பிழிந்துக்கொண்டு, உச்
சிதமாய்மிளகுள்ளி வசும்போடோமம் உகந்துவருமுதற்சாற்
றில் அரைத்துககாய்ச்சி, நிட்செயமாய்ப் பாலகர்க்குக்கொடுக்
கவேதான் நீர்மாந்தம்போகும் நித்தன் முனிசொன்னரே.

### நீர்மாந்தத்துக்கு வேறு கிழாயம் தன்வந்திரி.

அறுசீராசிரிய விருத்தம்.

மாந்தம்போகக்கருநீலி மகத்தாஞ்செவியங்கிழாயமிட
வாய்ந்தநோயும்நீர்மாந்தம் வணங்கியோடும்பண்டிதரே
தோய்ந்தஇதுதான் அறிவீர்கட் சொன்னமொழிபுந்தப்பாது
ஏந்திழைநீர் இந்நூல்போல எவருஞ்சொல்லார் அறிவாயே.

### நீர் மாந்தத்துக்கு வேறு எண்ணெய்.

எண்சீராசிரிய விருத்தம்

பார்க்கவேவெதுப்படக்கி சிற்றம்மாணின் பச்சரிசிபீநாரி
நுணாசாறுக்கி, வார்க்கவே வகைக்குச்சாற் படிகாலாகும் வள
மாக எண்ணெயது நாழியொன்று, தீர்க்கவே வசம்புள்ளி மஞ
சளுந்தான் சேர்த்துவகைக் கரைபலமாய்க் கூடக்கூட்டி,
காக்ககநெரி திரளங்காய்ச்சிறக்கிக் கரண்டியிடமூன்றுநாட்
சலமாந்தம்போம். 255

நீர்மாந்தத்துக்கு வேறு எண்ணெய்.

நிலமண்டிலவாசிரியப்பா.

சீறிய ராட்சசன் சிறையினில் வைத்த
நாறிய நல்லிலை நாட்டிலுள்ளோரை
மீறிய மிரட்டிலை வீறுடன் இரண்டுங்
கூறிய இதனைக் குணமுடன் நம்பே. 256

எண்சீராசிரிய விருத்தம்.

நம்புவது வெதுப்படக்கி காக்கைமல்லி நல்லிலையுஞ்சமனு கச்சாறுவாங்கி, வெம்பியதோர் வேல்விழியாள் மீதுறையும் வேரு வெகுவாசமுடையோசி, குதிரைப்பல்லன், துண்டமதாய் நறுக்கிடுவாய் கழஞ்சுவீதம், தூக்கிடுவாறெண்ணெய் சேர் சமனுய்சேர்த்து, தென்புடனே எரியிலிடு மெழுகதாக தினமுமோருகாசெடையாய் குலுக்கிடாயே. 257

இதுவுமது வேறு பிட்டவயல்சாறு.

குலுக்கிடுவாய் மூலைப்பாலில் மூன்றுநாளுங் கூப்பிட்டேயோடிவிடுஞ்சலமாந்தந்தான், அலக்கமரும் பிள்ளை மாந்தவிர்போலாகும் அதைவிட்டு இன்னமோரடவுகேளு, கலக்கமறதிப்பிலியு மிளகுதாளுங்கனமான இந்திலையில் பிட்டவியல் செய்து, நலக்காமல் தினபொழுதுவார்த்தாயானல் நாடிவந்த சலமாந்தம் நீங்கிப்போமே.

நீர்மாந்தத்துக்கு வேறு எண்ணெய்.

அறுசீராசிரிய விருத்தம்.

சிற்றுமணக்கெண்ணெய்பலம்ப திகழுமயூரம்விருகனென்று
வற்றுசுத்தித்தான்செய்த வாளம்விருகனிடைரண்டு
பற்றுவெள்ளைமிளகதுவும் பகரும்விருகனெடைரண்டு
கற்றைகுழலாளேலவங்கங் கதித்தவிருகனெடைரண்டே.
எடையேகொஞ்சம்எண்ணெயைவிட்டிதமாயரைத்தெண்ணெயிற்கலந்து
தடையில்லாமல் ஒருகரண்டிதானே மூன்றுநாட்கொடுக்க
நடைபோல்திறந்தசலமாந்தம் மாறிப்போகுமடவன்ன
நடையாய்ப்பொரிமுளகுநீருய் நல்லச்சாதமுண்டிடுமே. 260

விஷமாந்த குணம்.

சிறியவன்வயிறிரைந்து சினத்திடும் உருட்டிப்பார்க்கும்
கருவுடன்பெற்றத்தாயார் கையினிற்றங்காப்பிள்ளை
அறிவுள்ளமேனிவாடி அரைக்கின்கீழ்குளிர்ந்திருக்கும்
வெறியெனவெருவும்வேர்க்கு விஷமுள்ளமாந்தந்தானே.

வாந்தியும்வயிறுபோகும் வாகுசேர்விழியுஞ்சோரும்
மாந்தியேசோர்ந்துவீழ்ந்து வயிற்றிலேவலியுண்டாகும்
சேர்ந்திடுமலமுந்தானுஞ் சிக்கியேவயிறுபோகும்
ஆய்ந்திடும்நூல்வல்லோர்கேள் அதுவிஷமாந்தந்தானே.

சீறியலைபோல்வயிறிரையும் சிறக்கப்பார்க்குங்கண்சொருகும்
பாறிவயிற்றில்நோயதனால் பறந்துப்பிள்ளையோய்ந்திருக்கும்
ஆறியாறிச்சுரங்காணும் அடுத்துவாந்திவயிறோடும்
தேறீர்இதுவிஷமாந்தமெனச் செப்பீருலகிற்பண்டிதரே.

### விஷமாந்தத்துக்கு கிழாயம்.

சுறும்ஓமம்பொடுதலையுங் குளிர்ந்தமஞ்சணத்திநொச்சில்
வேறுவேளை வேர்சமனாய் வெளுத்த உள்ளிவசம்பினொடு
ஆறநறுக்கி வறுத்ததனை அளமாய்க்காய்ச்சியுண்டிடவே
பாரமானவிஷமாந்தம் பறந்தேயோடுங்கண்டாயே. 264

### வேர்மாந்த குணம்.

பேராமாந்தத்தின்குணங்கேளு பொருமிவயிறெழுகும்
மார்பைத்துடிக்குந்தலையசைக்கும் வயிறுவலிக்குமிகசோரும்
நேரேசத்தியுண்டாகும் நெற்றிநரம்புபுடைத்திருக்கும்
பாரோர்அறியபாலகர்க்குப் பரிந்தேயிதனைப்பார்ப்பாயே.

வாயுடன்நெஞ்சுலர்ந்து வயிறதுகழியுமாகில்
காயவேயுடம்புசோர்ந்து சடுதியிற்பொருமிஊதும்
காயமும்வாடிதானுங் கண்களுமலர்ந்துமூடும்
மாயப்போர்மாந்தமென்று வகுத்திடுந்தெரியத்தானே. 266

### வெண்பா.

பொருமுங்கழியும் புரண்டுவலியுண்டாம்
மருவிமுலைஉண்ணு மயங்கும் வெருவிமிக
சத்திசெய்யுங்கட்குழியும் தாகமிகவெதும்பும்
வற்றியிடும் போர்மாந்தமாம். 267

### அறுசீராசிரிய விருத்தம்.

ஏற்றேயிருந்துமிககழியும் இடையிற்சுரமுந்தான்தோன்றும்
தோற்றும்உடலைஉருக்கும் தோன்றும்விலாவுமுதுகெலும்பும்
வேற்றோர்உடலாய்சத்தியுண்டாம் மிகுத்தமலமும்ஒழிக்கும்
கூற்றுணுகும்போர்மாந்தக் குணமிதுசுதற்குப்பொல்லாதே.

போர் மாந்தத்துக்கு மருந்து.
வெண்பா.

தின்னசமதாகத்தைச் செவ்வறுப்பாய்த் தூளாக்கி
வெந்நீர் முலைப்பாலில் மேற்பொடியிட்டுண்ணப்
பொருமல் கழிச்சல் போர்மாந்தம் வாந்தி
ஒருநொடியிற் போமென் றுரை. 269

போர் மாந்தத்துக்கு வேறு மருந்து.

பாவட்டைக்கழல்கொடியும் பண்பாய்இவைமூன் றும்
போவெட்டிவேரும் பொங்கமாய் நீல்காட்டைப்
பாக்களவு வெந்நீரிற் பாலகருக் கீந்திடவே
போக்கும் போர்மாந்தமது போம். 270

கோழிக்கல்லீரற்கல் கூறுநற்சீரகமும்
தாழ்வில்லா இலவங்கம் தானரையாய்த் தோழீகேள்
பாலில்அரைத்துண்ணப் பாரிற்போர்மாந்தம்
வார்க்குமாந்தம் போமாம். 271

அறுசீராசிரிய விருத்தம்.

உப்பைவறுத்துக்கொட்டியபின் உத்தாமணியுந்தும்பையிலை
செப்பமானவெற்றிலையும் சேர்சமனுய்வதக்கியதை
நுட்பகமாகநீர்வாங்கி நொடியிற் கூனன்வசம் புரைத்து
அப்போதீயப் போகமாந்தம் அகலுமென்றே அருளினரே.

போர்மாந்தத்துக்கு வேறு
எண்ணெய்.

காட்டுமல்லிகை ஈருள்ளிக் கருஞ்சீரகமுங் கடுக்காயும்
நாட்டுக்கடுகுரோகணியும் நல்லவச்சிரப்பால் விளக்கெண்ணே
கூட்டிஎரித்துப் பாலகர்க்குக் கொடுக்மாந்தம் போர்மாந்தம்
ஓட்டிவிடுங்காண் இந்தெண்ணெய் உலகோர்க்குண்டுசெய்து
[கொடே.

ஏறுஞ்சத்திச்சாரணைவேர் இதமாய்எண்ணெய்ஒருழக்கு
தாறுங்கூனன்முதுகுள்ளித் தனித்தவசம்புவிருகனெடை
ஏலஅரைத்துஎண்ணேயுடன் எரிந்துபாலர்க்கீந்திடவே
சோருமாந்தம்போர்மாந்தம் சொல்லாதோடிப்போய்விடுமே.

போர் மாந்தத்துக்குஞ் சவலைக்கும் வேறு மருந்து.

கூனன்முதுகு வசம்புள்ளிக் கூறும்ஓமம்நுணுவேலி
மானேபொடுதலை வாரடையும் வளரும் வெற்றிலையின்காம்பும்
கானேகிராம்பு கருகியிட்டுக் காய்ச்சிச் சவலைப்பிள்ளைக்குத்
தானேகொடுக்க போர்மாந்தம் தங்காதோடிப் போய்விடுமே.

போர் மாந்தத்துக்கும் வாந்திக்கும் வேறு மருந்து.

எண்சீராசிரிய விருத்தம்.

வசம்புடனே மயிலிறகு சாம்பலாக்கி வசமாகவேப்பீர்க்
கில்முலைப்பால் வார்த்து, கசமாகநறுக்கியதை பிழிந்துசற்றே
காதலுடன்தேனுமொரு துள்ளியேகுத்தி நிசமாகசீரகமுங்
கிராம்புசேர்த்த நிண்ணயமாம் நிம்பவிரைப்பொடிமேல்தூவி,
வசமாகவேயருந்த மருந்தில் மாந்தம் வல்லப்போர் மாந்த
மொடு வாந்திப்போமே. 276

போர் மாந்தத்துக்கு வேறு கிழாயம்.

அறுசீராசிரிய விருத்தம்.

நொச்சில் ஈர்க்குநுணாஈர்க்கு னுவல்மாஈர்க்குப் புளியீர்க்கு
மிச்சமான வேப்பீர்க்கு மூறுங்கொடி வேலியினீர்க்கு
இச்சைபொடுதலையின் கொடியும் இதமாய்வலைக்கு பிடியும்
செச்சைப்பூண்டு திப்பிலி துட்டெடையொன்றுமே.

ஆமேபாண்டத்தினிவிட்டு அப்புநாலுபடிவிட்டு
காமேதானரைபடியாக காய்ச்சியொருசங்கந்திசந்தி
போமேமூன்றுநாட்கொடுக்க போர்மாந்தம் விட்டேபோகும்
தாமேஇச்சாபத்தியஞ்செய் சகலநோயுந் தான்போமே. 278

பால்மாந்த குணம்.

கண்ணுகுழியும் செவிதாழுங்கருத்து மயங்கிகோழையுண்டாம்
பண்போல்உதரந்தானொந்து புளித்தேகழியும்வயிறூதும்
பண்ணுர்மொழியும்பால்மாந்தம்பாரில்இந்நோய்தீரவென்றல்
அந்நாள்ஆவின் நெய்தனிலே அன்பாய்வைக்குந் திறஞ்
[சொல்வாம்

பால்மாந்த குணமும் அதற்கு ஔஷதமும்
எழுசீராசிரிய விருத்தம்.

பாலதைக்கழியும் பாலதையெடுக்கும் பரதவித்திடும் பலவித
[மாய்ச்
சாலவேகரங்காய்வெதும்பிடுங்குளிருந் தலையெடுத்திராமலே
[மயங்கும்
சீலமாய்தாயார் லங்கணமிருந்து திகழ்பொடுதலைபின் காய்
[வறுத்துக்
கோலஇந்துப்புவசம்புள்ளிமிளகு கொளசமன்கொடுத்திட
[குணமே.

செரியாமாந்த குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

மிக்கக்காய்ச்சல் தலைவலியும் மிகவேவயிறு நொந்தழும்
றக்கமலமாக்கரைத்தாற்போல் சாலகழிந்துகண்ணரைக்கண்
தொக்கப்பக்கந்தான்படுத்து சோறுங்கிரைத்தண்டதுபோல்
சிக்கென்றிலங்குமுகமாதே செரியாமாந்தகுணமிதுவே. 281

ஆமேவசம்புசடாமஞ்சல் ஆனஉள்ளித்திரிகடுகு
பூமேஓமம்கருஞ்சீரம் புகழும்ஆமையோடெல்லாம்
தாமேஇடித்துபொடியாக்கி தண்ணீர்காய்ச்சிகொடுத்திடவே
போமேசெரியாமாந்தமெலாம் புலத்திட்டோடுங்கண்டாயே.

வேலிப்பரித்தியிலைவாட்டிப் பிழிந்துமிளகுவசம்பள்ளி
சாலஅரைத்தநெய்துளிவிட்டுத் தானேயருந்தகுணமாகும்
எலும்எருமைவெண்ணெயுடன் இசைந்தமருந்துடன் இஞ்சிக்
கோலங்கேளும்பெருந்தும் பைக்கூட்டியருந்திடகுணமாமே.

எண்சீராசிரிய விருத்தம்.

ஓமமுடன் கனக்கோஷ்டம் காசுதானும் உயர்வசம்புங்
கருக்கிட்டுக் கியாழமாக்கி, தாமமுடன்அருந்திடவே செரியா
மாந்தம் சுழிச்சலுமே போமென்றுக் கருதிச்சொன்னேம்
சாமமுடன் உப்பலும்போம்வலியுந்தீர்ந்துசதிருடனே உண்ட
தெல்லாஞ்செரிக்கும்பிள்ளை, நாமமுளச்சொற்கேட்டு நாமுஞ்
சொன்னேம் நலமாகும் புவியோர்க்கு நன்மைதானே. 284

கட்டுமாந்த குணம்.

தாயார்முலையில்வாய்வைத்துச் சற்றேஉண்ண திகைத்திடும்
ஓயாதழுகைசிற்றிருமல் உள்ளேசுரமுமிகவுண்டாம்

சேயாமலமுஞ்சலங்கட்டிச் சிங்கப்பண்ணும்பசியில்லை
மாயாமசக்கும்இதுகட்கு மாந்தமென்றுவகுத்தனரே. 285

இதுவுமது—எண்சீராசிரிய விருத்தம்.

கொட்டாவிதலை நோயுமலம் போகாமல் சுறுவேர்வை வயிற்றுவலி குடலிரைச்சல், தொட்டாலும்உடலெங்குங்கனல் போற்காயுந் தூக்கமதுபோலிருந்து சேர்ந்துமாந்தி, பட்டாலேவயிறுமிகக் கழிந்திடாமற்பலநாளும் இப்படியே மலச்சிக்குண்டாம், மட்டாருங்குழல் மடவீர்கட்கு மாந்தம்வகையறியும் வாகடநூல் வல்லோர்தானே. 285

கட்டுமாந்தத்துக்கு கியாழம் அறுசீராசிரிய விருத்தம்.

சீந்தில்தண்டுங்களிப்பாக்கும் சிவேதைவேறுங்கடுக்காயும்
காய்ந்தசுக்குரோகணியுங் காயும்நீரில்கொதிக்கவிட்டு
ஏந்துமுலையாய்இந்நீரை எட்டொன்ருக்கிக்கொடுகட்கு
மாந்தமானசுரமும்போம் வயிறுங்கழியுங்கண்டாயே. 287

கட்டுமாந்தத்துக்கு வேறு எண்ணெய்.

அருமேசிற்ருமணக்கெண்ணெய் அளந்துக்கால்படிதானதிலே
கடுமேஅகத்திதுளசியுடன் கதித்ததககரைகமுற்கொடியும்
வடுமேநொச்சில்செம்முள்ளி மணித்தக்காளிச்சமனுக
கொடுமேஇடித்துசாற்படிகால் கூட்டிக்கடைசரக்கைகேளே.

கேளேகடுகுரோகணியும் கிளருங்கடுக்காய்ச்சீரகமும்
வேளேகரியசீரகமும் வெண்காயம் வெள்ளைப்பூண்டும்
பாளேவசம்புபூதகரப் பானின்பட்டைச்சாற்வேளை
ஏளேவிருகனெடைமூன்று இடித்துப்போட்டின்னம்பாரே.

பாரேசதுரககள்ளிப்பால் பரிவாயொருகரண்டிக்கூட்டி
தாரேகாய்ச்சிவடிகட்டி தனயர்க்கொருதுட்டெடைகொடுக்க
வாரேகழியும்அந்திதனில் * மரீசிசாம்பலுஞ்சுக்சம்
நீர்வார்க்காய்ச்சியொருசங்கு நீயிடுகட்டுமாந்தம்போமே. 290

* மரீசி - மிளகு.

எண்சீராசிரிய விருத்தம்

* அடவியினில்திருடிமலை வாக்காலிப்பால் அவையொவ்வொன்றேருழக்களந்துகொண்டு, திடமுடன் ஆமணக்கெண்ணெய்நாழிக்கூட்டித் * திரிபலைவெள்ளுள்ளி விருகனிடையிரண்டு, பொடிசெய்துபோட்டெண்ணெய் தலையெரித்துபுகட்டுமோர்காசெடைமேல்விலாவிற்பூச, தடமுடையகட்டுமாந்தங் கணபேதங்கட்சாராதென் றுமைக்காரர் சாற்றினரே. 291

* அடவியினில்திருடி சதுரக்கள்ளி மலைவார்க்காலி-வெள்ளாடு
* திரிபலை - கடுக்காய் தான்றிக்காய் நெல்லிக்காய்

தலைமாந்த குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

கைகால்குளிர் துதிரம் பொருமிக்கணக்கப்பாவையுண்டாகி
மெய்தான்வேர்வைமுகத்திலெழும் விரைந்தேவலிக்குபலவித
பொய்ஏப்பங்கொட்டாவியுடன்புண்போல்நாசிநீர்வ யுப் [
மைசேர்விழியாய்தலைமாந்தம் வந்தகுணமிதுகண்டாயே 292

உத்தரம்-வயிறு

தலையுங்கனத்துஉடலூதி சரீரந்தனிலேவலியுண்டாம்
குலையும்வலித்துத்தள்ளிவிழும் குளிருஞ்சுரமும்வேர்வைவிடும்
சிலையின்புருவத்தலைநிமிரா சேஷ்டைமிகவேசெய்விக்கும்
மலையினுயர்ந்தகனத்தாளே வாதைப்படுத்துந்தலைமாந்தம்.

தலைமாந்தத்துக்கு மருந்தும் துவாலையும்.

வெதுப்படக்கிப் பேய்மிரட்டித்தும்பைத்தானும் வேலை யிலைவெள்ளருகுவேரோடுள்ளி, மதிப்பசதகுப்பியுடன்தேசத் திப்பிலிவசம்புடனே ஓரெடையாய்வாகாய்க்கூட்டிக், கதிப்ப விவைநறுக்கியசாறுள்ளிக்கிந்து காய்ந்தசலத்தேதபிழிந்துக் கைகலங்கங், கொதிப்புடனே வலிப்பகலுந் துவாலைசெய்யக் கூசாமல் தலைமாந்தர் குணமதாமே. 294

தேசம்-தேசபுரம் ஷை இந்ததலைமாந்தத்துக்கு ஏலாதி மாத்திரை கொடுக்க மிகவும் நன்று.

துலைமாந்த குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

அடக்கிடாபெருகும்வாந்தி அதிகமாய்ச்சுரமுந்தோன்றும்
முடக்கிடுமுகக்கடுப்பாய் மூரிகோட்டாவியுண்டாம்
விடக்குமேவலிப்பெடுக்கும் விரைவிரைத்திருக்கும்வேர்க்கும்
அடக்கிடாதுலைமாந்தத்தை அறிந்துநீரடக்குவீரே 295

துலைமாந்தத்துக்குக் காந்தாதிக்கிழாயம்—தன்வந்திரி.
எண்சீராசிரிய விருத்தம்.

விரண்டோடக் காந்தாதிக்கிழாயஞ் சொல்வோம் மெய்யு தகம்பெருமருந்து சுற்றேரண்டம், பிரண்டோடநரிமிரட்டிக் கொட்டான்சின்னி மேலானகடுக்காயுமாசிபத்திரி, திரண் டோட பற்படகந்தான்றிமுத்தம் திரிபாலை அதிவிடையம் ஊசிப்பாலை, கரண்டோடகருக்கியிவைக் கொட்டிப்போட்டுக் கருநீலி நிலவேம்புப் பொஸ்தக்காயே. 296

மெய்யுதகம் சிறுநீர் மெருமருந்து ஈசுரமூலிசிற்றேரண்டம்
சிற்றாமணக்கு நரிமிரட்டி கிலுகிலுப்பை.

காயோடுபத்திரியின்தாளிசந்தான் கரியவேப்பிலை முத் தஞ்சிற்றாமுட்டி, ஈயேகதூளிடித்துஅதனிற்போட்டு இரண்டு படி தண்ணீர்விட்டெட் டொன்றாக்கி, காயோடு வயிரவனுங்

கூடச்சேர்த்துக்கக்க நீயெடுத்தியகணரோகங்கள், வாயோடே பேசாமல் சர்வரோகம் வணங்கியேயோடுமிதில் வண்மைப் பாரே. 297

வயிரவனுங் கூடச்சேர்த்தென்பது சிறுகீரையானுலும் வயிரவமாத்திரை யிழைத்துக்கூட்டுக.

துலைமாந்தத்துக்கு விரோசிக்க வேறு மருந்தும் எண்ணெயும்

பாக்களவுவெண் உயவைவேர் அரைத்துபாலையுடமுலைப் பாலில் கலந்தேயீய, தாக்கவேவயிறுபேதிக்கும் பின்புதயங்கு விளக்கெண்ணெயுடன் வசம்புவேளை, ஆக்ககொற்றுன் திரிபலையுந் திரிகடுகெந்தானும் அங்கோலப் பொடியைப்போட்டெரித்து நக்க. மூர்க்கமுடன் சந்துதலை நெஞ்சில்தேய்க்க முரிந்தோடிப் போந்துலையின் மாந்தந்தானே. 298

உயவைவேர்-வெள்ளைக்காக்கணன்வேர் திரிபலைநெல்லிக்காய்-தான்றிக்காய் திரிகடுகம்-சுக்கு-மிளகு-திப்பிலி-அங்வகாலம்—அழிஞ்சில்.

சுழிமாந்த குணம்.

துறுப்புமிகும்காச்சலுடன் சுவாசந்தோற்றும் தூக்கமது பிடியாது தொங்கிக்காயும், இறைப்பெடுத் விக்கலுடன் விலாவிற்பள்ளம்வந்துகொங்கைக்குடியாது வீங்கினர்போல், வெறுப்பார்கள் கிறுவன்மேல் இனியேதென்பார்வேறேநீ மனைந்தவிக்கவேண்டாஞ் சொன்னேன், அறப்பான குணங்களிது தானுங்கண்டால் ஒஓ சுழிமாந்தமென்றுசொல்லே. 299

சுழிமாந்தத்துக்கு எண்ணெய்.

சொல்லவே சாலை துழாய் தோடைதும்பைத்தோகை குழல்முடிப்பிலையுங் குறுகிநாதம், வல்லியுடன் சிட்டியுமே நறுத்தைக்கூட்டிவாகான இலையெல்லாஞ்சாறுவாங்கி,சொல்லுமே சாதிக்காய் திப்பிலிக்காயம் சேர்கடுகுரோகணி ரோசினையும் உள்ளி, வெல்லுதற்கு வகைக்கழஞ்சுவெதுப்பித்தட்டி வீறன எண்ணெய்ச்சாற் சமனுய்ச்சேர்த்து, நல்லகமலாக்கினியில் மெழுகதாக்கிநாவில் எண்ணெய்க்காசெடைதான் நாட்டிப்பாரே. 300

சாலை-கோடகசாலை-துழாய்-துளசி-தோடை-ஆடா-தோடை-தோகைகுழல் முடிப்பிலைமுதியார் கூந்தல் குறுக்கிநாதம்-சங்கிலை-வல்லி-சீந்தில்-சிட்டி-சிற்றிச் செடிநறுந்தை-நறுத்தாளி-(இகதைந்தடியான் வந்தச் செய்யுள்.

சுழிமாந்தத்துக்கு வேறுஎண்ணெய் —தேறையர்கலிவிருத்தம்

தாளும்சருள்ளிச் சாறுவேன் இண்டிச்சாற
கேளும்ஆமணக் கெண்ணெய்வகைக்குசேர்

சூளவேளரித்துப் பலங்கொண்டிடில்
வாளவேசுழி மாந்தமும்நல்குமே. 301

இக்தொன்று மொருதொடர்.

வீக்கமாந்தகுணம்—அறுசீராசிரிய விருத்தம்.

தப்புறுவீக்கமாந்தந் தன்னையேபன்னக்கேளு
கப்புறுகாதுங்கண்ணுங் கனக்கவேவீங்கும்வற்றும்
ஒப்புறுநாவும்புண்ணாய் ஓய்விலாச்சுரம்உண்டாகும்
வெப்புறுகைகால்நொந்து வெறுத்திடும்அன்னந்தானே.

மாந்தவீக்கம்-வீக்கம்-விஷவீக்கம்-விஷபாகவீக்கம்-சுரம் நீர்க்கட்டு-மலக்கட்டுக்கு-கிழாயம்—எண்சீராசிரிய விருத்தம்.

பாடுவோம்-பூவரசம்-பழுப்புசங்கம் பட்டைசிந்திற்கொடியும்துளசிசுக்கி, நீடுவோம்வரள்முள்ளி முருங்கையீர்க்கு நீர்முள்ளிச்சாறுவேலியின் தின்வேரும், சூடுவோம்பிரமியிலை மருள்கிழங்குத்தூதுவளை சுறுகுறிஞ்சான் சத்திமூலம், கொடுவோம் கருஞ்சீரம் இவைவகைக்குக் கொண்டுசமன் எடையாக தூக்கிடாயே. 303

* சத்திமூலம்-சத்திச்சாரணைவேர்.

இதுவுமது.

தூக்கியேகியாழமிட்டுஎட்டொன்றாக்கிச்சுகமாகநல்கினால் மாந்தவீக்கம், வீக்கிவிஷவீக்கம் விஷபாகவீக்கம் மீதுசுரம் நீர்க்கட்டுமலக்கட்டும்போம், ஆக்கவேமுறையறிந்துசெய்தால் நன்மைஅல்லாட்டால் கற்மம்வந்தெய்துமெய்தும், தாக்கமே பண்டிதரே நூலைத்தேடிசாயுச்யரகசியத்திற் சார்ந்திடீரே.

இக்கிழாயம் சிறியவர்க்கும் பெரியவர்க்குமாம்.

முக்குமாந்த குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

அதுவாமுக்குமாந்தகுணம் அறியக்கேளுதிருக்கறவே
நிதமுங் *குழவிமுக்கிமுக்கி நின்றேகழியுஞ்சீயமலமும்
புதியசுரமுமேலாடிப் பின்கால்வீங்கும்உழலையுமாய்
சதைதோல்எலும்புநரம்பிருக்க தழலாயுலர்த்திஉருக்கிடுமே.

* குழவி - பிள்ளை.

முக்குமாந்தத்துக்கு கிழாயம்.

ஓமத்திப்பிலிமிளகுள்ளி *ஒடுங்கிஓமம்சமனாக
நாமச்சீலைதனில்முடிந்து *நாழிநீர்விட்டெட்டொன்றாய்
வாமம்காய்சிமுன்முடிந்தமருந்தை அவிழ்த்துதான் அரைத்து
தாமமூன்றுவேளைநல்க சகலமாந்தமும்போமே. 306

* ஒடுங்கியோடு-ஆமையோடு நாழி-படி இம்முக்குமாந்தத்திற்கு கஸ்தூரிஎண்ணெய்க்கொடுக்க மிகவுநன்மை.

வரள்மாந்த குணம்.

தோலுந்திரங்கிஉடல்வெளுத்துச் சுழலுமயக்கமுண்டாகும்
பாலு * மடுக்கும்மெய்யிளைக்கும் பார்க்கும்போது பலகுண்மாம்
காலுங்கையுந்தான்வற்றிக் கடுப்பும்வலிப்புங்காண்பித்தே
வாலர் தன்னைஉருவழிக்கும் வரள்மாந்தத்தின் குணமிதுவே.

* மடுக்கும்-குடிக்கும்.

* வரட்கிண்டிச்சாறுவேளை மணித்தக்காளிக்கழற்சி
கரிசாலைத்துளசி * நீலி கன * சதம்சமனுய்க்கூட்டி
அரற்றியேஇடித்தச்சாறு அழக்குஒன்றுவின்நெய்தான்
உரற்றியேஓரழக்கு உண்மையாய்க்கூடச்சேரே. 308

இதுவுமது.

கூடகஸ்தூரிமஞ்சள் கோஷ்டமுங்கரியசீரம்
வாடவேகடுகுரோணி வகைக்கரைவிருகன்கூட்டி
போடவேபொடிதான்செய்து புனிதமாகக்கலந்து
நாடவேஅடுப்பிலேற்றி நலமொடுகாய்ச்சிக்கொள்ளே. 309

கொள்ளவேசததிதன்னில் கொடுமேதுட்டெடைஉள்ளுக்குத்
துள்ளவேசகலதோஷஞ் சுருக்கினில்தீர்ந்துரத்தம்
உள்ளவேபரவிப்பிள்ளை உடலதுபருக்கும்பின்பு
எள்ளலின்றிக்குளிர்ந்து இன்புடன்வளருந்தானே. 310

உப்பல் மாந்தத்துக்கு மருந்து—கட்டளைக்கலிப்பா.

குப்பைமேனியும் உப்புங்கசக்கியே கொள்ளச்சாறொரு
காசெடைதானும், செப்பமாகுமேஉப்பலின் மாந்தமுஞ் சீக்கி
ரம்ஒருநாளினில்தீர்ந்திடும், தப்பினுலும்முட்காவேளைச்சுக்கு
டன் தக்கஓமம் வறுத்துத்தொகையிட, ஒப்பிவாதொரு உப்பி
லின்மாந்தம்போம் ஓதினுர்கள் உயர்தொழிலாளியே. 311

துட்டுமாந்தம்-கிருமி சுழிகண் துட்காய்ச்சல்-நளிர்மாந்தம்
புரளிக்கு எண்ணெய்—அறுசீராசிரிய விருத்தம்.

வெந்தவித்தூற்றுகின்ற விளக்கெண்ணெய்நாழிதன்னில்
அந்தகரையினற்சாற்றும் அதுபடியேதான் ஒன்று
தந்தநாயுருவிவேறும் தைவேளைநாயின்வேளை
முந்தவே *கொழுஞ்சிவேரும் மூக்கரைசாறணையின்வேறே

*கொழுஞ் கொள்ளுக்காய்வேளை.

இதுவுமது.

வகைக்கொருளஆமிச்சங்காய் அளவுசாந்தரைத்துக்கொண்டு
பகைப்பிலாவசம்புஓமம் பண்புகஸ்தூரிமஞ்சள்

மிகப்புடன்சரி *விளங்கம் மிகுவகைக் *கரையதாக
திகைத்தவெள்ளுளிதானுஞ் சேர்த்திருபங்கூட்ட 313

*விளங்கம் வாய்விளங்கம் * கரையதாக பலம் அரையாக.

இதுவுமது.

கறுத்தசீரகமும்வெந்தயங் கடுகுரோகணிவகைக்கு
நிறுத்தொக்க ( ) ஒருபங்காக நீர்விட்டுத்தானரைத்து
மறுத்தசட்டியிற்கலந்து வகையுடனென்றூற்றி
பெருத்திடுமெழுகுபாகம் பிழையறவடித்துக்கொள்ளே 314

( ) ஒருபங்கு-ஒருபலம்.

பிள்ளைக்குத்தக்கயெண்ணெயைத் தானதுபுகட்ட இந்த
பிள்ளைத்தாய்தனக்குஉப்புக் கைப்புடன் தவிர்த்திட்டாக்கால்
தெள்ளியதுட்டுமாந்தம் கிரியும்சுழிகணந்தான்
நள்ளிவருவாயுட்காய்ச்சல் நளிர்மாந்தம் பறவிபோமே. 315

உளைமாந்த குணம் – எண்சீராசிரிய விருத்தம்.

வஞ்சியேகருவாளை அறிந்துபாரு வண்மையுடன்வாயுகத் தக்குடலைப்பற்றி, மிஞ்சிமலஞ்சிக்கிக் கருகியேதான் மிகுந்த சலம்மலம் இரண்டுங்கட்டிக்கொண்டு, அஞ்சியேஅலறி அழும் தேம்பித்தேம்பி அன்னையைமிகுதிபெறதேடுமெற்ற, ஒஞ்சிப் உண்ணுதுமிரண்டுப்பார்க்கும் உளைமாந்தக்குண மிதென்றுணர்ந்துகொள்ளே. 316

உளைமாந்தத்துக்கு எண்ணெய்.

கொள்ளவேவியாதியென்றால் கொஞ்சமல்லக்கொடுங்காரம் ஏற்றுதற்குவகையைக்கேளு, விள்ளவே * நிலவேரு * சிவயொகிவாளம்விரைவானநிம்பவேர்! உள்ளிக்காயம், கள்ளவே ஒன்றுக்குக் கழஞ்சுசேர்த்துகருத்துறவே எண்ணெய் உழப் படியில்வெந்து உள்ளதொருகாசெடையாய் உள்ளேவாருமொருமித்து உளைமாந்தம் ஓடிப்போமே. 317

*நிலவேரு-நாகப்பூச்சி *சிவயோகி-வசம்பு உள்ளிவெள்காயம் காயம்-பெருங்காயம்.

உளைமாந்தத்துக்கு வேறுஎண்ணெய்-தன்வந்திரி வஞ்சிதுரை
உளைமாந்தெண்ணெய்
தளசிறுநாகம்
வள *பெருமருந்து
நளினமருந்தே
*பெருமருந்து ஈசுர மருந்து 318

மருந்தானவசம்புசீரகம் இரண்டும்மானே நாரத்தம்வேர் பூண்டுக்காயம், விருந்தானதிவைவகைக்குப் பலங்கால்வீதம் வீண்போகா தக்காளிச்சார் விட்டாட்டி, குருந்தானஎண்

ணெய்சேர் அதில்கலக்கிக்குருபையது நித்திரமும் போற்றிப் போற்றி, திறந்தான அடுப்பேற்றிக் காய்ச்சிக்கொண்டுத் திற மையாய்க்கரண்டிநிறை மூன்றுநாளே. 319

இதுவுமது—வெண்பா.

மூன்றுநாள் வார்த்திடவே மூரியுளைமாந்தம்
ஊன்றிமுறிந்தோடும் உண்மையேமூன்றுநாள்
சத்தியந்தான் உப்புபுளி பாதையேயாகா
இல்லத்திற்காணும் இது 320

இம்மூன்று மொருதொடர்

உளைமாந்தத்திற்கு வேறு கிழாயம்—எண்சீராசிரிய விருத்தம்

சங்கம்வேர்க்கொடிவேலி ஆடாதோடை தண்கொன்றை வேர் இந்துப்புடனேகாயம், புங்கினுடப்பட்டை இருநாழித் தண்ணீர்புகம்பெறவே வார்த்துழக காய்க்காய்ச்சிகொண்டு, துங்கமிகுதழைந்தைகட்குக் கொடுக்கவேதான் தொடர்ந்து நின்ற உளைந்தத் தீரும்தீரும் பங்கயப்பூவானவேல் விழிபருத் துப் பணைத்து புடைத் திறுகுதலைப்பாவாய்செய்யே. 321

உளைமாந்தம் உட்சுரம் எலும்புருக்கு வேறு மருந்து.

அறுசீராசிரிய விருத்தம்.

*விருச்சிலையுங் கருப்புட்டி கூடஅரைத்தெள் எண்ணெயிலே
மருவிகுழப்பிவிழுங்கவுளை மாந்தம்உட்சுரம் எலும்புருக்கி
உருவிதிகுஞ்சொன்னபடி யுண்மையிதுதான்கண்டாயே
கருவிநிகரளந்தாளே காலகாலனடிபணியே 322

*குருவிச்சி-புல்லுரி

அட்சரமாந்தகுணம்—எண்சீராசிரிய விருத்தம்.

நாடுமேஅஸ்திமிலேசூடுகொண்டு நல்லுடம்பு குளிந்துசுர ங்காயும்ஓயும், ஓடியதோர்சுவாசத்தால் அனல்புடைக்கும் உதடுகளும் வெடித்துவாய்புண்ணும்நெஞ்சு, தேடி அன்னை அமுகவப்பால்துயரமெற்றத் தேம்பிவாய்திறப்பதற்கு அறு மையாகி, வாடுமேசிறுவனுக்கு தேகமெல்லாம் வழும்புடனே பேதியக்ரமாய்ந்தமென்னே. 324

அட்சரமாந்தத்திற்கு எண்ணெய்.

மாந்தையது *காளி *முனி *குமரிச்சார்சேர் வாங்குவது எண்ணெய்ச்சேர் உள்ளிச்சாறும், சேர்ந்தகாரைப்பூலா துத் திவேர்த்தோல் செயமெழுகுபோல் அரைப்பாய்மலமதாக, வாய்ந்ததொரு வெந்தயமும் பலமதாகவறுத்திடித்துஏகமாய் கலக்கிக்கொண்டு, சாந்தமாய்த்தியெரித்து மெழுகதாக்கிசாதக மாய்புண்வாயில்தடவிடாயே. 325

பேய்மாந்த குணம் — அறுசீராசிரிய விருத்தம்.

இடுப்புடன்கைகால்நெற்றி * இம்முகம்விழியும்மூக்குப்
பிடித்திடும்பிடரிதன்னைப் பின்னித்தான் நம்மைப்பற்றி
வடிப்புடன்வலிப்பிழுப்பு வாயினல்நுரைநீர்வீழும்
படத்தகல்அல்குலானே பாருபேய்மாந்தந்தானே. 325

* இமம் - பனி இப்பேய்மாந்தத்துக்கு வல்லாரைநெய் கொடுக்கமிகநன்மை.

பட்சித்தோஷம்-மாந்தம்-சுழிமாந்தம்-வயிற்றுப்பிசம்-கணம்-நாவரட்சி-காய்ச்சல்-குளிர்தொந்தசுரம்-மூக்குக்கணம்-பால்கிறிச்சினம் இவைகட்கு கஸ்தூரி எண்ணெய்.

கலி வெண்பா.

ஏகநாயகன்றன் இணையடியைப்போற்றிசெய்து
வாகுடனேஎண்ணெய் வசனிப்பேன்யோகமுள்ள 326
காரோசினையும் கோஷ்டம் அதிமதுரம்
சீரந்திப்பிலி தேவதாரமுடன் பேரான 327
சந்தனமும்ஏலம் தன்னுடனே மாசிக்காய்
வெந்தயமும்சுக்கு வெள்ளுள்ளி அந்தமுள்ள 328
பேரானகஸ்தூரிப் பெருவசம்புரோகணியும்
பாரமுள்ளமூங்கில் பச்சைத்தோல் சீராய் 329
வகைக்குவிராகனெடை வாடமிறுத்துவருத்துத்
தொகையாய்அரைப்பதற்கு சொல்லக்கேள் தகமையுடன்
எருமுட்டைப்பீநாரி இசைந்ததொருச்சாற்றில்
வருந்திஅரைத்து வழித்ததனைத் திரும்ப 331
விளக்கெண்ணெஓர்படியும் விட்டெரித்துத்தான் இருத்து
மலக்காமல்நோய்க்கெல்லாம் வைப்பாய்க்கலக்கமற 332
பிள்ளைப்பிணிக்குப் பேராகத்தான்கொடுக்க
உள்ளநோய்ப்போகும் ஓதக்கேள் கள்ள 333
மாந்தவயிற்றுப்பிசமும் வடிவாய்இளந்தேகம்
சோர்ந்துகிடக்கும் சுழிமாந்தம் கார்ந்தும் 334
நாவரட்சிக்கணமும் நளிர்காய்ச்சலுங்குளிரும்
தூவிரத்த தொந்தசுர மேவும் 335
மூக்குக்குணமும் மூதிர்ப்பால்கிறிச்சினமும்
* பக்கியின்தோஷம் பழுங்காய்ச்சல் அக்கணமே 336
இத்தனைநோயெல்லாம் இருப்பிடத்தைவிட்டுவிட்டு
கத்திவிழுந்தோடுங்காண் 337

* பக்கி - பட்சி.

பதினெட்டு மாந்தத்துக்கும் சாதிக்காய் எண்ணெய்.
எண்சீராசிரிய விருத்தம்.

சாதிக்காய் சாதிப்பத்திரி கிராம்புஏலம் தருகோஷ்டம் அதிவிடையம் குங்குமப்பூ, போதிக்கும் அதிமதுரம் பஞ்சமூலம் பொறிகடுக்காய்த் தான்றிக்காய் மாசிக்காயும், ஓதியகற்கரியசீரகம் தக்கோலம் உயர்வான குராசானி ஓமத்தோடு கோதில்லா, சதகுப்பைச்சித்திரைமூலம் கூறுவகைக்கேயிரண்டு விருகன் கூட்டே. 338

பஞ்சமூலம்-கண்டுபாரங்கி சித்திரமூலம்-சுக்குசெவ்வியம் பேரரத்தை தக்கோலம-வால்மிளகு.

இதுவுமது.

கூட்டியே ஓமமது விருகன் ஐந்துகுணமான வசம்பதுவும் விருகன் ஆறு, மாட்டியே வசம்பைச் சுட்டுச்சாம்பலாக்கி மற்றமருந்தெல்லாஞ் சூரணமேசெய்து, காட்டியே கணப்பூண்டிண்டங் கொழுந்துக் கனத்தப்பழம்பாசி இலந்தங்கொழுந்து, நாட்டியே நுணாஇலை நாவற்கொழுந்து நல்லவிடத்தாரையிலைக் கருவேலாமே. 339

கலி விருத்தம்.

ஆமேசங்கிலை ஆங்கழலின்கொடி
தேமேவட்டத் திருப்பிக்கரந்தையும்
தோமேபாச்சோற்றிப் பேயின்பாச்சோற்றியும்
பாமேநல்லப் பகன்றையும் ஆகுமே. 340

சுழல்களச்சி வட்டத்திருப்பி-பங்கம்பாலை-கரந்தை-விட்ணுக்கரந்தை பகன்றை-கிலுகிலுப்பை.

எண்சீராசிரிய விருத்தம்.

ஆகுமே சடைச்சியிலைக்குதிரைவாலி அழஞ்சிறு புள்ளடியும் கண்டங்கத்தரி, சோகியொடு செருப்படையும் துளசித்தும்பை சுயகோழி அவரையுடன் ஆடாதோடை ஏகுமேவல்லாரைப் பொடுதலையும் வேலி எடுதவசிமுருங்கை வரப்பூலாபத்ரம், பாகுமேஇலைகளெலாம் இடித்தச்சாறுப் படியொன்றும் உப்பிலிவேர் பெருங்கிழங்கே. 341

கிழங்கானபூதகரப்பான் தன்பட்டைக் கெடியானவாதகரப்பான்பட்டை, முழங்கான திருநீற்றுப் பச்சைவேரும் முக்யகருவேப்பிலையின் ஈர்க்குதானும், வழங்கான வகைக்குக்கால்பலமே வாங்கிவகையாகச் சூரணித்துமுன் மருந்தில்சேர்த்து, குழம்பான சாறுஞ்சூரணமுமொன்றாய்க் கூட்டியேவிளக்கெண்ணெய்ப்படியில்தாக்கே. 342

இதுவுமது.

தாக்கியேமுலைப்பால் ஓர் ஆழாக்குவிட்டுத் தண்மையாம் பக்குவமாய்க் காய்ச்சிக்கொண்டு, தேக்கியே கரண்டியள வைந்துநாளுந்திறமையுடன் கொடுத்து பத்தியம் காப்பாகில், தூக்கியே ஈரொன்பான் மாந்தந்தீரும் துடியானகணம் எட்டுந்தீர்ந்துபோகும், நீக்கியே பெரியவர்க்கேழ்நாள் கொடுக்க நீள்மேகம் கிரந்தியெல்லாந் தீருந்தானே. 343

சகல மாந்தத்திற்கும் மாத்திரை புலிப்பாணி.

நான்இனிதான் இன்னமொன்று சொல்லக்கேளு நய மானவில்வவேர் விளாவின்வேரு, மானவேநாய்வேளைக் கஞ் சாங்கோரை வண்மையாய்ச் சின்னியொடு காட்டுமொச்சை தேனனதிருநீற்றுப் பச்சைதும்பைத் தெளிவான சிறுதும் பைக் கண்டங்கத்ரி, வானைஅமுக்கருசங்கங்குப்பி வளமான நுணவேலிப் பரித்தியாமே. 344

ஆமேமீமுடக்கொற்றான் வெண்காய்வேளை அடவானசா றணையுட்முடைநாறி, தாமேமீகொழுஞ்சிப் புண்ணாக்குப்பூண்டு தவானபிரமியொடு சித்திரமூலம், வாமேமீகோவ்வையுடன் மணித்தக்காளி வகையானக் கையானுங் கீழ்க்காய்நெல்லி, போமேமீ இந்தவகை வேர்கள்தானும் புகழாகக்கஞ்சுநிரை பிலமாய்த்துக்கே. 345

தூக்கியே வசம்புடனே ஓமம்சுக்கு துன்பமிலாச்சதகுப்பி திரிபலாதி, ஆக்குடையதேசபுரம் அத்தித்திப்பிலி அரத்தை களுஞ் சீரகமுங் காட்டுச்சீரம், போக்குடைய புதிவாலுழுவை தானும் பொங்கமுடன் பொஸ்தகக்காய்ப் பரசங்கொட்டை, தாக்குவாய் வகைவகைக்குக் கழஞ்சுதூக்கிச் சாணாக்கிச்சாற்றி னல் அரைத்திடாயே. 346

திரிபலாதி-கடுக்காய்-தான்றிக்காய்-நெல்லிக்காய்-அத்தித் திப்பிலி-ஆனைத்திப்பிலி சாணாக்கிச் ஜனகி பூண்டு.

அரைத்திடுவாய் அப்பைச்சாரணையும்வேளை, அழகான அகத்திச்சாறிண்டஞ்சாறும், துரைத்திடுவாய் இருசாமம் மயு னம்போலேதுடியுடனேதான் அரைத்திருபங்காக்கி, விரைத் திடுவாய்த் துவரையைப்போல் உருட்டிப்போடு விதமாக ஒரு பங்கில் விபரங்கேளு இரைத்திடுவாய் சுத்திசெய்த வாளந்தா னும் இதமான கடுகு ரோகணியும்பாரே. 347

அப்பை-அப்பைக்கோவ்வை.

இதுவுமது.

பார்க்கவேவகைவகைக்குக்கழஞ்சுதூக்கிப் பாங்காக முன் மருந்தில் ஒக்கச்சேர்த்து, வார்க்கவே அகத்திச்சார் நிலவாகைச்சார் வளமாகவிட்டரைப்பாய் சாமம்மூன்று, வேர்க்கவே துவரையைப்போல் உருட்டிச்சேர்த்து விதமாகநிழல் உலர்த்தி எடுத்துக்கொண்டுநோக்கவே குழந்தைகள் தன்பிணிகட்கெல்லாம் நிக்ஷயமாய்த்தான் கொடுகைத்தீரும்பாரே. 348

பாருநீ அப்பைச்சார் நாய்வேளைச்சார் பண்பான துளசிச்சார்சிறுதும்பைச்சார், வீருநீ எருமுட்டைநாறிச்சாறும் விதமானகாட்டுமொச்சையிலையின்சாறும், சேருநீவயிறு கட்டிப் பிணிகட் கண்டால் செயலாகும் முன்குளிகைசெலுத்தி போட, தீருநீ இச்சாற்றிலெதிலானாலும் திறமாகத்தான் கொடுக்கத்தீரும்பாரே. 349

தீருமேமாந்தத்தின் வகைகள்யாவும் திறமானதோஷமொடுவலிப்புக்காய்ச்சல், ஆறுமே அக்கினியின் மந்தந்தானும் அன்பில்லா அநேகவதநோய்கட்போகும், கூறுமேசிசுவருத்தந்தீர்த்தோர்க்கெல்லாம் குற்றமொன்றும்வாராது வறுமைநீங்கும், வீறுமேபோகருடகடாக்ஷத்தாலே விதமாக புலிப்பாணிப்பாடினேனே. 350

இவ்வேளுமொருதொடர்.

உரம்விழுந்தால் முடுகுதைலம் தன்வந்திரி.

அறுசீராசிரிய விருத்தம்.

இல்லாப்பூண்டுப்பலம்பத்து இனி வனக்கடுகுபலம்பத்து
கல்லாக் குழிதைலஞ்செய்துக் கடுகளடுத்துப்பதபடுத்தி
பொல்லாநோய்கட்குடல்வாதம்போதும்போதும் துவாலையுட
வல்லாப்பிள்ளை உரம்வீழ்ந்தால் வலைபோல்பூச உரம்விடுமே.

பூண்டு—வெள்ளைப்பூண்டு.

மாந்தவகுப்பு முற்றிற்று.

இனிகணம் வருமாறு.

அகத்தியர் திருவடிகளே சரணம்.

# கணவகுப்பு.

இஃது

கணம் வருமாறு - அறுசீராசிரிய விருத்தம்.

ஐயது கூடித்தென்றால் அரிவையர் துயரந்தன்னால்
செய்ய பற்புனலருந்தி செறிசலசோவிக்கன்றாய்

பைரவல்குலாளும் பசியுடனிருந்ததாலும்
துய்யதோர்குழவிகெட்டுக் கணங்களுந் தோன்றுதமன்றே.
சேஷ்மம் பற்புனல் - பலநீர்

கணங்களின் தொகுப்பு—எண்சீராசிரிய விருத்தம்.

கணங்கட்பேர் விரித்தறையக்கேளுகேளுகனவாதகணம் பித்தக்கணங்குளிர்ந்த மணமானசேஷ்மகணம் பிள்ளைகட்கு மாந்தகணம்அதிற்பிரிவுஐந்தாம், இப்பால், துணமாநீர்கணம் பிகரளிக்கணமும் நல்லச்சூலிகணஞ் சுழிகணமஹா கணந் தான், குணமான ஊதுகணம் வரட்கணந்தான் கொதிப்பு கணம் வீக்கணம் இன்னங்கேளே. 353

கேளேநீபிறக்கணமும் அந்தகன் தன்கணமும்மந்தாரக ணம்எரிகணந்தான், மூளேநீராமகணம் ஆமகண மெற்ற முக் கணம் மூலகணம் போராமத்தின், வாளேநீகணம் இரத்தகண மாம்எல்லாம்வகுத்துரைத்த திருபக்துமூன்றுமாக, கோளேது இதுதானே ஆயுர்வேதகுறிப்பறிந்தார்க்கல்லாமல் மற்றோர்க் கேதே. 354

வாதகணத்தின் குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

வாதகணத்தின்குணத் வகுப்போம் உடலும்பாரமதாய்
போதஇரைக்கும்நாவரளும் பதைந்தே இருமுந்தாகமுடன்
பாதவரைக்கும் சரங்காயும் பசியும் எடுக்கா மலங்கருகும்
பேதமாகநீர்ச்சுருக்காம் பித்தகணத்தின் குணங்கேளே.

பித்தகணத்தின் குணம்.

கேளேபித்தகணத்தியல்பைகெடியாய்உடலும் எரிச்சலுண்டு
நாளே உலர்த்திமார்பிடிக்கும் நாக்குங்கடைவாய்ப்புண்ணகும்
பாளே சுரமுங்காய்ந்தெரிக்கும் பருக்கக்கழியும் மஞ்சட்போல்
தாளேமயக்கும் தலைகிறுக்கும் சாற்றுஞ்சேஷ்ம குணங்கேள்

சேஷ்மகணத்தின் குணம்.

குணமாஞ் சேஷ்மகணத்தியல்பை கூறக்கேளு உடலமெலாம்
உணவாம் தினவுமெடுத்துசொரி ஊறிக்கரக்கால் வீக்கமதாம்
மண்வாய்நாறும்வெடிப்புடனேமார்பிற்கோழைஇருமலுடன்
அணமேவெடித்துப் புண்ணகும் ஆறுதவனமிகுத்திடுமே.
அணம் - கீழ்வாய்மேல்வாய்புறம்.

ர்ணத்தின் குணம் கூறுகின்றார்.

மாந்தமுதிர்ந்து சுழிக்குங் கோ வயிறுநொந்துநாவெந்து
ஏந்தும் எதிரே மூச்செறிந்து இருமலிருமி சத்திக்கும்
போந்தஉடம்புபலவிதமாய் பொறுத்துச்சுரம் உண்டாம்
காந்தள்மலர்போல்கரமுடையீர்கணத்தின்வகையென்றுரை.
கோ - கண் சத்தி உவாந்தி.

இதுவுமது.

விழிநிறம்வேறதாகும் வெறித்ததுஉருட்டிப்பார்க்கும்
குழிவிழுந்துச்சித்தாழ்ந்து குணுகுணம்பலவுஞ்செய்யு
மொழிவது * மிடறுகம்மி முகங்குறுவேர்வையுண்டாம்
கழிவபிதுவறுகாய்ந்தால் கணமெனக்கருதுவாயே. 359

* மிடறு - தொண்டை

சீதரத்தமாய்க்கழியுந் திருப்பக்கெட்டப்பால்போலே
பேதங்கறித்தண்ணீரதுபோல் பின்னுங்கழியும்வயிறுப்பும்
ஏதங்கைகால்முகங்கருகி எரிந்துகுளிர்ந்துவெதுப்புண்டாம்
கோதேஇருமலுண்டாகுங் குறிதானறியுங்கணங்கட்கே. 360

எண்சீராசிரிய விருத்தம்.

நடுங்கியதோர் பித்தமதுகோபங்கொண்டுநல்லவாயுவைப் பற்றி அழுத்திக்கொள்ளும், கடித்திருந்தபிள்ளைக்குக்கடுத்தச் சூடுகனகனப்பு ஏந்நேரங்கைவிடாது, ஒடுங்கியேவாயுலர்ந்து தண்ணீர்கேட்கும் உண்மையாய்மலபேதி வழும்பாய்வீழும், மடங்கியே ஊன்கழனீர் அபானவாசல் மாருமலெப்போதும் வருகும்பாரே. 361

இதுவுமது தன்வந்திரி—அறுசீராசிரிய விருத்தம்.

பாரேகணத்தைப்பகரக்கேள் பகரும்உடம்பில்சுரம்வீசும்
பாரேஉட்சுரமிதுதானே பகருங்கணம்மலம்உட்சேரும்
பாரேமார்புகூண்டெழும்பிப் பதமாய்தேகம்மிகவற்றிப்
பாரேவாயும்மிகநாறும் பதமாய்மலமும்வெட்டையென்றே

மலமும்சலமும்மிகத்தீய்ந்து மார்பில்அதிகசுரங்காயும்
மலமும்வயிறுமிகஎரியும் வளமாய்த்தலையுமிகமயக்கும்
சலமுவாள்தீதான்குறையும் சண்டாளம்போல்உட்சுரமும்
தலமேபன்னிரண்டாண்டுமட்டும் தனதாய்வருகுங்கணமிதே
இவ்விரண்டுமொருதொடர்.

எண்சீராசிரிய விருத்தம்.

பாருநீஇக்குணத்தால்கணங்களென்றுப்பறிரோகங்கண் டறிநீ புத்தியாக, சாருதற்குக்குமுழ்வேரு *சித்திரபாலை சாந் *தருக்கன் *காந்திவேர் *பொன்னும்பூவேர், பேரான *மதிமயக்கிக்கணப்பூண்டுவேரும் போதரவாய்ப்பட்டை வகைப்பல மேதாக்கு, மீறிஅரைமெழுகதுபோல் எண்ணெய்நாழிவெந்த பின்புபீங்கானிலிறுத்துவையே. 364

*சித்திரபாலை-சிறுஅம்மான்பச்சரிசி *அருக்கன்-அருக்கு *காந்தி - விட்ணுக்கரந்தை *பொன்னும்பூவேர்-ஆவாலாவேர் மதிமயங்கி-கொன்றை.

இதுவுமது.

இறுத்திட்டஎண்ணெய்க்கு பொடியை சொல்வேன் ஏலம் சிரகம்*மதுரம்பலமேவாங்கி,வறுத்திடித்துப்பொடித்திடுவாய் மயனம்போல வாரிஎண்ணெய்மேல் தூவிகுலுக்கிவைப்பாய், நிறுத்துஒருகாசெடையாய் மூன்றுநாள்தான் நேராகமூலைப் பாலில் கலந்துவாரு. துரத்திவிடும் அபானத்தால்சொரிந்தரத் தோன்றினதோர்கணமெல்லாந்தூரப்போமே. 365

*மதுரம் - அதிமதுரம்.

கணத்துக்கு வேறு எண்ணெய் தன்வந்திரி.

*கிணமானகிணமிதற்கு மருந்துசொல்வேன் கிரியை யென்றவல்லாரைமாசிபத்ரி, கணமானவில்வமொடு விளா வின்சாறும் கடியானஅத்திப்பால் ஆலம்பாலும், திணமான உள்ளிச்சார் *நிம்பச்சாறும்திறமான முலைப்பாலும்ஆவின் பாலும், கிணமான ஆவின்நெய் வெள்ளாட்டின்பால்கேள் சிவந்தகொம்புத்தேன்கோவ்வைச்சாறே. 366

கிணம் - கணம் - தசவாயு - திசவாயு வென்பது போன்ம ருவியது *நிம்பம் - எலுமிச்சம்பழம்.

சாறிதெல்லாம்வகைக்குப்படி அரைதான்வாங்கி சமர்த் தானதென்னங்காய்ம்பாலுநாழி, சாறிதெல்லாம் ஒருசட்டித் தனிலே ஊற்றிச்சாதிக்காய் சாபத்ரி ஏலம்கிராம், சாறதிலே *திரிகடுகு *திரிபலாதி சடாமஞ்சில் அதிவிடையம்மாகிக்கா யும், சாறிதிலேவகைக்குப்பலம்ஒன்றுவாங்கிச்சன்னயமாய்த் தூளிடித்துவைத்துக்கொள்ளே. 367

*திரிகடுகு - சுக்கு-மிளகு திப்பிலி *திரிபலாதி - கடுக்காய் தான்றிக்காய் - நெல்லிக்காய்.

வைத்துக்கேள் சந்தனத்தூள் அறுகங்கட்டைவலுவான வெட்டிவேர் விலாமிச்சோடு. கைத்திறமாயிடித்து வகைப்ப லந்தான்வாங்கிகால்படிதான்நீரதிலேயிதனைப்போட்டு, வைத் துப்பார்க்கியாழமதுபாதிவாங்கி மகத்தானசாறதிலே யொன் றுய்வார்த்து, வைத்துப்பாரடுப்பேற்றி எறித்துமேதான் மச் சயமாய்நீர்ச்சுண்டிநெய்போலாமே. 368

நெய்போலாம்பதத்திலே மருந்தைக்கொட்டி நேசமுடன் பூரணமாய்க்கிண்டுகிண்டு, நெய்போலாங் குழம்பாகும் பதத்

தைக்கண்டுநேசமா யிறக்கிவைத்துதேவிதன்னை, நெய்யென் றவாலைத்தான் போற்றுப்போற்று னினைவாக லட்சணமுநீ தானேது. நெய்யானநெய்யிதுதான் வலுத்துப்போச்சு நிக ரில்லாசஞ்சீவி இதுதான்பாரே. 369

பாரேதான் கரண்டிநிரைமண்டலமேகொண்டால் பா மானமுன்சொன்ன கணமெல்லாம்போம், பாரேதான்வாரத் தாலெழுந்த நோய்கள்பன்னிபன்னி ஓடுமேபின்பாராமல், பாரேதான்புளிகசப்பு வாதபண்டம் பாற்றறவுமாகாது தள் ளிப்போடு, பாரேதான்தேரைக்கணந் தேரைப்போலே பழு தில்லைஎட்டாண்டுமட்டுண்டாமே. 370

உண்டாதும்அந்நோய்க்கு இந்தநெய்யை உற்பனமாய்க் கொடுத்துவிடுபறந்துப்போகும், உண்டாகும்வாதபித்த சேஷ் மமூன்றும் ஒடுங்கியே மூலத்தில்சுணமேயாகி, உண்டாமே உறுதிபற்றிக் காலமெல்லாம் ஓஓஓ புண்ணுபுட்சுரமும்வீசும், உண்டாமே உடம்பிளைக்கும்பித்தவெட்டை உத்தமமாயெரி குன்மம் உயர்ந்துபோமே. 371

உயர்ந்துபோம்தாதுடைந்துதேகம்பாழாம் உற்பனமாய் அன்னரசம்அற்பமாகும், உயர்ந்துப்போம்முப்பானி ரண் டாண்டுமட்டும் விட்டுவிடாதிந்தகணம் ஓஓபாரு, உயர்ந்துப் போம் ஆருண்டு பிராயமட்டும் உறுதிபடும்முப்பத்திரண்டிற் குள்ளே, உயர்ந்துபோமிந்நோய்க்கு இந்நெய்யைத்தான் உட் கொள்ளமண்டலத்தி லோடிப்போமே. 372

முப்பானிரண்டு - முப்பத்திரண்டு.

ஓடிப்போம் பந்தியந்தான் இச்சாபத்தியம் ஓஓஓ நெய்யி னுடஅதீதமென்ற, ஓடிப்போம்கணரோகம் தேரைக்கூறும் உயர்ந்தகணங் இந்தநெய்யிலயர்ந்துபோகும்ஓடிப்போம்இந்த வகைஆருஞ்சொல்லார்ஓங்காரப்பித்தத்தின் அதீதப்போக்கு, ஓடிப்போம்யான்உரைத்தேன் எவருஞ்சொல்லார் உத்தமி யாளம்பிகைதான் அதீதம்பாரே. 373

## கணத்துக்கு வேறு குடிநீர்

### கலி விருத்தம்.

வில்லபத்திரிதுத்திவெண்காயமும்
நல்லவெந்தயம் ஒக்கநன்றாய்வரு
வல்லநல்லநீர்வார்த்துப்பின்சிரகம்
சொல்லக்காய்ச்சிக்கொடு கணஞ்சோறுமே. 374

கணத்துக்கு வேறு சூரியபுட நல்லெண்ணெய்.
அறுசீராசிரிய விருத்தம்.

சிறுபுள்ளடியுங்கழல்கொழுந்து சிறந்தஅவுரிசாறுக்கி
நறுதேன்பொடுதலைஒருபிடியும்மையநறுக்கிநல்லெண்ணெய்
நிறுமுன் அரையாய்க்கதிரோன்முன் நேரேவைத்துநீயருந்த
நறுமென்குழலாய்மேல்பூச நாதனருளால்கணந்தீரும் 375

கணத்துக்கு வேறு ஏண்ணெய்—வெண்பா.

விளக்கெண்ணெவில்வம்மீற்றவுரி ஈருள்ளி அளக்கவகைக்
கோர் உழக்காக்கி, விளக்கமுற்றுக் கடுக்காயுங் கூட்டி காய்ச்சி
சிறுவோர்க்குக்கொடுக்க கணம்போமென்றேக்கூறு. 376

கணத்துக்கு வேறு எண்ணெய்—அறுசீராசிரிய விருத்தம்.

பொன்னுங்கணிவேருடனே புளியம்ஈர்க்குவேப்பீர்க்கு
மின்னேஒவ்வொருபிடியதனில் விதமாய்க்கோழி அவரை
[யின்வேர்
சொன்னேம்பலமேயரையாக துள்ளறுக்கிஎண்ணெயிட்டுண்
[ணப்
பானுபுடம்வைத்து ஓடுங்கணமும்வாராதே. 377

பானுபுடம்-சூரியபுடம்

கணத்துக்கு வேறு ஏண்ணெய்—கலி விருத்தம்.

கடுகருஞ்சீரகம் கடுகுரோகணிவிடு வனமல்லிகைமீறும்
இண்டிலைஇடுமூலைப்பாலினில் ஈருள்ளிஉசிலையு
கொடுவிளக்கெண்ணெயில் கூறுகணங்களே 378

கடு கடுக்காய் வனமல்லிகை காட்டுமல்லிகை

கணதுக்கு வேறு நெய்—அறுசீராசிரிய விருத்தம்.

கோட்டம்நல்லெண்ணெய்நெய்யும் குறித்தசண்பகப்பூகந்தம்
நீட்டியஅவுரிதுய்ய நிலக்குமிழ்கடுகுரோணி
நாட்டிலாமிச்சைமிக்க நலந்தருகிராம்புபாகம்
ஈட்டியேசாறுகொண்டு எரித்துண்ணகணம்போமின்னே.

கந்தம்-வெங்காயம்.

கணத்துக்கு வேறு மருந்து.

கீழ்க்காய்நெல்லிம்வர்பட்டைக் கேள்கருவேப்பிலைச்சீரகமும்
வாழக்காய்ப்பச்சைநெல்லுமிதான் வகைக்குவிருகன்
[ஒன்ருக
மூழ்க்காய்க்குஜப்பாலிற்போட்டு முழுதும்இரவில்ஊறியபின்
காழ்க்காய்க்காலமேஅரைத்துக் கடுகப்பிழிந்துமுக்காலே

குஜப்பால்-முலைப்பால்

இதுவுமது.

காலைமூன்று மேகொடுத்து கதிக்கசாயங்காலத்தில்
ஆலைமிளகுபற்பமதாய் ஆக்கிச்சிரக முஞ்சற்றே
சாலைப்பொரியவேவிட்டுத் தண்ணீர் ஊற்றிகாய்ச்சிகொடு
வேலைப்பழித்த விழியாளே மிகுந்தகணமும்போமென்றே

கணச்சூடு தணிய எண்ணெய்

சிற்றாமணக்கின் எண்ணெய்ப்படிதிறமாய் என்றுவல்லாரை
சற்றுச்சாறுப் படி அரையும் தானேவெந்தயம்பலம் இரண்டு
அற்றுபசும்பால்விட்டரைத்து அந்த எண்ணெயிற்கலந்து
வற்ற எரித்து *அயிரிட்டு வார்க்கணச்சூடுப்போமே. 382

அயிர் - சர்க்கரை.

கணம் இருமல் வாநாற்றத்திற்கு கிழாயம்.

மணித்தக்காளி ஒருபிடியும் மானேவெந்தயம்பலநாலு துணித், தீருள்ளித்தான்மூன்று துட்டெடையெல்லாம் பொன்னிறமாய் குணித்துவருத்து இரண்டுபடி *குசம்விட்டெட்டொன்றாய்க்காச்சி கணித்து மூன்றுநேரங்கொள் கணவாய் நாற்றம் இருமல்போம். 383

*குசம் - தண்ணீர்.

இங்ஙனமுற்சொல்லிய மாந்தமுதிர்ந்து கணமாகி இரண்டுந் தொந்தித்து மாந்தகணமாகி, வருதல் கணமாந்தமென கூறு.

மாந்த கணத்துக்கு பச்சிலைச்சாறு.

எண்சீராசிரிய விருத்தம்.

நொச்சியிலைத் துளசியிலை மொசுமொசுக்கை நோக்கியே மூன்றுமொருசமனுய்க்கொண்டு, சச்சமுடன்பிட்டவியலாகச் செய்து சாறெடுத்து ஒவுசங்குபாலகர்க்கு, இச்சையுடன் தான்கொடுக்கமாந்தமே து எழிலானமாந்தகண மோடிப்போகும். கச்சணிந்தபொற்சயில நகிலத்தாளே கடல்சூழ்ந்தமண்டலத்திற் கருதிப்பாரே. 384

மாந்தகணத்திற்கு வேறு கிழாயம் வெண்பா.

மாந்தகணம்போம் வல்லப்பெருமல்போம் சேர்ந்திருமல் போகுஞ்சேஷ்மம்போம் *காந்திதுளசியும் திப்பிலியும் சொல்லுமய்மா புல்லுரீ இகளசி எரித்தருந்தக்கால் 385

காந்தி - விட்ணுகரந்தை.

மாந்தத்துக்கு வேறு மருந்து—கட்டளைக் கலித்துறை.

நன்னாரியும்சிறுகீரை *வனமல்லி நாவல் இண்டுப்
பொன்னாருஞ்சங்கம்வேர்பாவட்டை *நீலிப்பொருந்துகொஞ்சி

எந்நாளுங் காய்க்கின்ற வட்டக்கிலுப்பை இவைக ளெல்லாம்
மின்னார்பிள்ளைக்கிய மாந்தகணம்விரண்டோடிடுமே 386

வனமல்லி - காட்டுமல்லிகை *நீலி - அவுரி

பொருமல்மாந்த கணத்துக்கு வேறு மருந்து

இடுமேதுளசிச் செம்புள்ளித்தும்பை இலையுடனே
வெடுமேநற்சீரகமுங் கஞ்சாங்கோரைதை வேளையுடன்
கொடுமேநறுக்கிப்பு கட்டிடச்சாற்றைக் குழவிகட்கு
விடுமேபொருமல்மாந்த கணங்கள் விட்டோடிடுமே 387

மாந்தகணப் பொருமலுக்கு லேகியம்

விட்டிடுஞ் சாரணவேர்ப்பட்டைத் தட்டி விதமுடனே
கிட்டிடுந்தே சாபுறஞ் சமன்கூட்டிக் கிளர்பொடியாய்
மட்டிடுந் தேனில் இலேகிய மாக்கி *மதலைக்கிட
பொட்டென மாந்தகணத்தின் பொருமலும் போய்விடுமே
*மதலை - பிள்ளை

மாந்தகணத்துக்கு வேறு மருந்து—எண்சீராசிரிய விருத்தம்.

புங்குபுளிநொச்சில் மாவேம்போடெக்கப் பொடுதலை
வேலிக்கருவேப்பிலைநாரத்தை சங்கவுரி பொன்னவரைப்பிடி
ஒவ்வொன்றுதானும்இலை ஈர்க்கெடுத்துச்சட்டியிட்டு, தங்கு
ரோகணியுமிந் தோமமுடிந்து தான்போட்டுத் தண்ணீரும்
நாழிவார்த்து, அங்கெரித்து வற்றமுடிந்தம்மருந்தை அரைத்து
கொடுமாந்தகணம் அடங்கிப்போமே. 389

மாந்தகணத்துக்கு வேறு நல்லெண்ணெய்.
கலி விருத்தம்.

போகவே இன்னம் புகலுவோங்கேளு ஆக மருளின் கிழங்கு
டன்உள்ளி தாகவே *நிம்பச் சாறுவாங்கி ஏகவே எண்ணெய்
எரித்து நீ உண்ணே.
*நிம்பம் - எலிமிச்சை

இதுவுமது.

உண்ணகணங்கள் ஓடுமேமெய்யா மண்ணில்மாந்தகண
நோய்ச் சேஷ்மம் கண்ணிற்காண கதரிடும்பாரு எண்ணுமே
இந்த எண்ணெயைச்செய்திடே.

மாந்தகணத்துக்கு வேறு எண்ணெய்.
அறுசீராசிரிய விருத்தம்.

யுள்ளடிப் பொடுதலைச்சாற் புசிப்பதோர் தகரைச்சாறு
மெள்ள மிளகுத்தக்காளி மிகுகருநோச்சில் *பாசி

வெள்ளைப்பூண்டும் வசம்புவெண்காயச்சாறுதானும்
தெள்ளிதாய்சமன்கொண் டெண்ணெய்சேர்த்தெரியுங்காலே.
*பாசி-பழம்பாசி.

இதுவுமதற்கு கிழாயம்.

காலமே இந்தஎண்ணெய்க் கடியசாயங்காலந்தன்னில்
சீலமாஞ்சுக்கோடோமம் சேர்ந்தபொன் முசுட்டைவேளை
ஏலமாம்நாட்டுமூலம் இதமாய்த்திப்பிலியுங்கூட்டி
கோலநீர்க்காய்ச்சிக் கொள்ளக்கோடு மாந்தகணமும்போமே.

மாந்தகணத்துக்கு வேறு எண்ணெய்.
எண்சீராசிரிய விருத்தம்.

வல்லாப்பிரமிசெருப்படைநீர் முள்ளிமணக்குமணித்தக்காளி மொசுமொசுக்கை, சொல்லெரு மைத்தக்காளி துளசிதானும் துடிகோழி அவரைநெய்ச்சிட்டி யெல்லாம், வல்லதோர் வகைவகைக்குப் பிடியொன்ருக நவை இல்லா இலைகளெல்லாங் கொண்டுவந்து கல்லது வைத்துப்பிழிந்து படிகால் சாறு கனமான எண்ணெய்படி அரையதாமே. 394

இதுவுமது.

அரையாதாம் துமட்டிக்காய்துவைத்தச்சாறும் அறிய வெண்காயச்சாறும் ஒருசெரங்கைநிரையதாம்விட்டெல்லாங் கலந்துக்காய்ச்சி நேர்கடுகு பதமாகும் போதிலேகேள், கரையதாம் கார்போக அரிசிபூண்டு கருஞ்சீரம்வசம்புவகைவகைக்கு தானே, விரையதாம்விருகனென்று நறுக்கிப்போட்டுமெழுகு பதமானவுடன் இறக்கிடாயே. 395

கலி விருத்தம்.

இறக்கியே வடிகட்டி இதமுற சிறக்கவேகொடு *செம்மலுக்கன்புடன் வறக்கிடும் நல்ல மாந்தகணமுடன் திறக்கும் அட்சரம்தீருமிதுண்மையே. 396
*செம்மல் - பிள்ளை.

மாந்தகணத்துக்கு வேறு நெய்.
அறுசீராசிரிய விருத்தம்.

*வேலிப்பரித்திச மூலமுடன் வெள்ளைச்சாரணைக்குட்டிவிளா
மூலிவேளைவேர்வசம்பு முதியவெள்ளை வெண்காயம்
கோலிநறுக்கிச்சாற் *மேதி கொடுத்தவெண்ணெய்தனிலெ [ரித்து
சீலமுலைப்பால் தனில்கொடுக்க சேர்ந்தமாந்தகணம் போமே.
*வேலிப்பரித்தி - உத்தாமணி *மேதி - எருமை.

மாந்த கணத்திற்கு வேறு எண்ணெய்.

எண்சீராசிரிய விருத்தம்.

விளக்கெண்ணெய் ஒருநாழி நுணாஇலைச்சாற் றிருப்பமுடன் ஒருநாழி தானேயாகும்; இளக்கமாய் ஈருள்ளிச்சாறு நாழிஎழில்வில்வத்தின் கொழுந்துப்பிடியிரண்டு, துளக்கருஞ் சீரகம் இரண்டுவிராகன்தானும் துவர்கடுக்காய் நாலதுவும் பொடியேசெய்து, விளக்கமாம் வெண்காரம் விராகனிரண்டு விபரமுடனே பொரித்து அதனிற்கூட்டே. 398

இதுவுமது.

கூட்டியே கொதிக்கையிலே சரக்கைப்போட்டு குணமாக பதம்பார்த்துதான் இறக்கி ஆட்டியே வடித்துவைத்துகொண்டு நீயும்அழகாக சங்கெடையாய்ப்புகட்டிவந்தால், வாட்டியே எழுந்தபொல்லா வியாதியானகணஞ்சொல்லாமல் ஓடிப்போகும், காட்டியேகைப்புபுளி கவிச்சிறச்சிக் கருதாமல் பத்தியத்தில் தாயைவையே. 399

விஷமாந்தகண விக்கலுக்கு கிழாயம்.

*முருவிலிகன்னாரியொடு வெண்காயந்தான் முதிர்வசம்பு இந்துப்புக் கடுக்காய்முள்ளி, மருவியநாரத்தை எலுமிச்சை வேளைவாகான *மலைதாங்கிக் கீழ்க்காய் நெல்லி மருவியதோர் பூசனியுமேபாச்சோற்றி வளந் *குறட்டை *மால்கரந்தைவகை ஒன்றாக்கி, பெருகுநல்ல நீர்விட்டுக்காச்சிக்கொள்ளப் பிலத்த விஷ மாந்தகணம் விக்கல்போமே. 400

*முருவிலி - வவ்வாலொட்டி மலைதாங்கி - பங்கம்பாலை *குறட்டை-காக்கணன் மால்கரந்தை-விட்ணுக்கரந்தை

ஊதுமாந்த கணத்தின் குணம் தன்வந்திரி.

அறுசீராசிரிய விருத்தம்.

தானேஊதுமாந்தகணம் தனதாய்உரைப்பேன்மடமயிலே
வானேகாலுங்கண்உடம்பும் வளமாய்வீங்கிநாபுண்ணாய்
ஆனேகேளாய்சுரம்உண்டாய் அன்னந்தண்ணீர்கொள்ளாது
கானேகாலுங்கைசோர்ந்துகனத்தசுவாசம் அதிகமென்றே.

இதுவுமது.

அதிகமாய்ஊதுமாந்த கணமதுபனிரண்டாண்டு
அதிகமாம்அந்நாள்மட்டும் ஆம்இதுநோயின்காலம்
அதிகமாய் மருந்துகேளாய் அன்புடனேஉரைப்பேன்தானே
அதிகமாம் தேவிவாலை அருளினல் உரைப்பேன்கேளே.

இதுவுமது.

ஊதுமாந்த கணத்துக்கு எண்ணை.

உரைப்பேன் எந்தன் குருவருளால் ஒலு முள்ளிநீர்முள்ளி
திரைப்பேன் இரண்டுவேர்காயம்தேங்காய்நெற்றுபாலுடனே
கரைப்பேன் கையான் கரந்தையுடன் கண்டங்கத்திரிவசம்
[பேலம்
திரைப்பேன்வெட்பாலரிசியொடு திகழுமாதளம் பழச்சாறே.

பழமேவட்டத்திருப்பியுடன் பற்பாடகமுப் முத்தமுடன்
தழமேஓரிதழ் தாமரையும் தண்தாமரையும் செங்கழுநீர்
பழமேசூரத்தாவாரை வல்லாரையின் தன்சாறுடனே
வழுவேவிளாவின் பிசின்வகைமருக்காரைப்பிசினுஞ்சேரே.

சேரேஇலவம்பிசின்சேரு செங்கத்தாரி முருக்கன்சாற்
மாரேமாசிக்காயுடனே மகிமைகடுக்காய் அதிவிடையும்
சீரேவாலின்மிளகோடு சிவந்தசாதியத்திரியும்
வாரேஎல்லாம்வகைக்குக்கால் வளமாய்பொடித்துஒன்றுக்கே

பொடித்திடுமருந்திறேடே புகழ்விளக்கெண்ணெய்வார்த்து
அடுத்ததோர் அடுப்பில்ஏற்றி அழகதாய் தீயைமூட்டி
வடித்துமேகடுத்திரண்டாங் வளமதாய்இறக்கிக்கொண்டு
தடுத்ததோர் தேவிமாதை தயவாய்பூசித்துப்போற்றே. 406

போற்றியஎண்ணெய்தன்னைப் புகழ்ந்துட்டெடைதான்ஈய
ஆற்றியமூன்றுவேளை அழகதாய்க்கொள்ளச்சொல்லு
மாற்றியபுளிப்புதள்ளு வகையுறபுகையுமாகா
ஏற்றியகவிச்சுதள்ளு இவையெலாம் ஆகாதன்றே 407
இவ்வேழுமொரு தொடர்

கணமாந்தகுணம் மாந்தகணமெனினுமொக்கும்.

செடலமாம் கருவிலான சிசுவதற் கின்னங்கேளு
விடலமாம்கணமாந்தந்தான் மிகுங்குறி குணத்தைப்பாரு
அடலமதாகப்பெண்ணுள் அடவதாய்தலைக்குளெண்ணெய்
தடமதாய்த்தேய்த்துச்சுத்த சலத்தினில் முழுகினாலே 408

இதுவுமது.

முழுகியேஅன்னம்உண்டு முழுக்கென எழுந்தபோது
அழுகியமயக்கசோப தாபமுமிகுதியாலே

தழுவியேபடுக்கமாது சடுதியில்உறக்கங்காணில்
விழுகியே *உதரனவாய்வால் விரகலாகரிதானுமே 409

* உதானன் நாபியில் நிற்கும் வாயு.

நாகுமேஅவள்மோகத்தால் நாயகனோடேசேர்ந்து
நோகவேதேகமெல்லாம் நுசிதமல்லாடும்போது
தாகபோகத்தால்அந்த *சமானனும் வாய்வெழும்பி
ஏகிடுங் *கமலம்புக்க இறித்திடும்குளுமைவந்தே 410

* சமானன் - காந்தரக்குழியிற் சந்திடைநிற்கும்வாயு
* கமலம் - பிரமைசொலிக்கும் ஸ்தானம்.

குளுமையாய்ஏழுநாளும் கூறியதலைஇடிக்கும்
எளுமையாம்பெண்ணாளுக்கு எழும்பிடுங் கபாலசூலை
வளுமையாம்பின்னும்ஏழு வளம்பெறநாள்சென்றாக்கால்
வெளுமையாய்தேகம்எங்கும் வெளுத்துடன்வயிறுநொந்தே

நொந்ததால்சூதகத்தில் நோயிதுஎன்றுசொல்வார்
பந்துபோல்நாபிதன்னில் பாசிபோல் இருக்கும்என்பார்
வெந்துதான்பித்தச்சூட்டால் மிகுந்ததோர் நோயிதென்பார்
தந்திரவாய்வினாலே சன்னியும்இதுவென்பாரே. 412

இதுவெனகணமாந்தந்தான் ஏறியேபெண்ணாளுக்கு
வதுவெனக்கருவின்பற்றி மஞ்சனும்பிரந்துதானால்
பதுவெனமாதுக்கேதான் பாலதுமிகுதியாகும்
அதுபத்துநாளுந்தானும் அமிர்தமேபெருகுந்தானே. 413

பெருகிடும்பத்துநாளும் பின்புநாள் மேலேசென்றால்
கருகிடும்மூலச்சூட்டால் கல்லுபோல் கட்டும்பாலும்
மருகிடும்அதுநாள்கொண்டு மஞ்சனும் இளைக்கும்தேசம்
தருகிடும்வாந்திவாய்நீர் தலையதுசுழற்றலாமே 414

தலையதுசுழற்றல்காணும் தான்வரும்நாளுகேளு
கொலையதுதந்தைதாயார் நொடுமையவினையினாலே
நிலையதாய்க்கர்மநோய்தான் நிலைத்திடுஞ்சிசுவுக்கேதான்
அலையுறபிறந்தபிள்ளை அகதிரண்டாண்டுபின்பே 415

இதுவுமது.

பின்புமேவருக்கும்நோய்தான் பிலத்ததோர்வினையைக்கேளு
தென்புடன்தேங்காய்வாழை தித்திப்புவடைபாயாசம்
அன்பலாச்சுளையும்மீசு அரிசியின் யடையுந்தானும்
நன்பதுகுழந்தைக்கேதான் நாட்டிடில்கணந்தானுமே. 416
மீசு-மிகுதி.

கணம்வரும்மாந்தத்தாலே காதலன்குணத்தைக்கேளு
துணம்எட்டுநாளைதள்ளிம் துலக்கிடும் சந்திக்காணும்
பணவயிறிரைச்சலாகி பாசிபோல்பேதியாகும்
விணைவிழிசுழன்றுசோர்ந்து விடவிடென்றுலரும்நாவே
காதலன் - பிள்ளை

நாவதில்சலமிராது நடைமுதல்அசதிகாணும்
காவதுஎன்றுபாலன் கதறிடும் எடுக்குந்தாகம்
கூவதுஎன்றுநாலு நாள்துகோஷமாகும்
தாவதுகண்மாந்தந்தான் தாயினில் அணுகும்பாரே 418
கோஷம்-ஒலி.

அணுகிடுமாந்தத்திற்கு அறைகிறேன் புடதியாய்க்கேள்
வணுகிடும்இதனைப்போக்க வைத்தியர்உலகில்இல்லை
நணுகிடுமைத்தனுரை நாடிமுனதடுதுபார்த்து
கணுகிடுங்கைவல்யந்தான் தாவிதந்தாதியாமே. 419

தாதியைப்பார்த்துமாந்த நோய்தனை அளவைத்தேரி
சேதியைசாத்தியச்செயலினை அறிந்துமேவி
தீதுறுகணமாந்தந்தான் தீரவேமருந்துகேளு
மேதினியோர்களுக்கு விரும்புறேன் எண்ணைதானே 420

சாத்தியம்-அசாத்தியம், அது உண்மையும்-சந்தேகமும்.

கணமாந்தத்திற்கு எண்ணெய்.

விரும்பக்கேள்சித்திரமூலி விளங்கவேகுன்றிசங்கு
திருப்பவேமுல்லைமுன்னை சிற்றுமல்லிப்பேராமல்லி
அரும்பவேகாட்டகத்தி ஆவாரைப்பொன்ஆவாரை
குரும்பளைமணித்தக்காளிக் கொள்ளுக்காய்வேளைரே 421
காட்டகத்தி-வீழி.

இதுவுமது.

வேரினில் வகைஒன்றுக்கு விரும்பிடும்பலமுக்காலாய்ச்
சேருநீஒன்றாய்வாங்கி செயம்பெறரவியில்மூன்று

ஆருமேஅறியதானும் அடவுடன்தான்உலர்த்தி
பாரினில்உரலில்இட்டுப்பாய்ச்சிடுந் தோண்டிக்கொள்ளே.

தோண்டியேதூணிநீரில் தூளினைச்சேருதாக்கி
ஆண்டியேமருந்துபின்னும் அருளுவோம் புனல்முருக்கை
நாண்டியேநத்தைச்சூரி நாய்வேளைகுறிஞ்சான் இரண்டு
வேண்டியேநரிபயற்றம் நன்னறிப்பிரமியாமே. 423

பிரமியம்தும்பைபொன்னங் கண்ணியுமொசமொசுக்கை
திறமையாய்வகைஒன்றுக்கு சிறப்புடன்பலம்ஒன்றாக
திறமையாம்இதனைச்சாறுய்ப் பிழிந்துடன்முன்புநீரில்
ஒருமையாய்விட்டுத்தானும் உசிதமாஞ்சரக்கைக்கேளே. 424

சரக்கில்வால்மிளகுநல்ல சடாமாஞ்சில் அக்ராகாரம்
திறக்கவேசண்பகப்பூ செவ்வியம்மதுரம்கோஷ்டம்
புரக்கவோகடகசிங்கி புகலக்கேள் சுக்குதான்றி
உறக்கவேகடுக்காய் சாதிக்காயுடன்லவங்கப்பூவே. 425

பூவதுகடுக்காய்ப்பூவும் புகழுதாய்வகைக்குவீதம்
தாவதுகழஞ்சிரண்டு தனிதனியாகவாங்கி
வாவதுஇளம்வறுப்பாய் வறுத்துடன் உரலில்தாக்கி
மாவதுபோலேசாடி தோண்டிமுன் நீரில்தாக்கே 426

தாக்கியேபின்புகேளு தாரமும்கெந்திவீரம்
தோக்கியேவாளம்நாபி வெள்ளை அப்பிரகந்தானும்
வாக்கியேபுழுகுசலாசத்துடனே கஸ்தூரிவாங்கி
பாக்கியமாகவீதம் வகைவகைப்பலங்காலாமே. 427

பலமதாய்இடித்துத்தூளாய்ப் பாங்குடன்முன்புநீரில்
சலமதிற்கொட்டிப்பின்பு சாற்றுறேன் இன்னங்கேளு
பிலம்பேராமணக்கின் எண்ணெய் பிரியமாய்ப்படிரண்டிட்டு
வலமதாய் அடுப்பிலேற்றி வன்னியைமூட்டிடாயே. 428
வன்னி - நெருப்பு

வன்னியைமூட்டிரண்டு சாமமும்எரிக்கும்போது
பன்னியநீர்எல்லாந்தான் பரிவுடன்சுண்டிப்போகும்
முன்னியப்படிரண்டாகும் மோசமேவராதுஉண்மை
கன்னியாம்வாலைதன்னைக் கருதிடுசுண்டும்பாரே. 429

இதுவுமது

சுண்டிடும்பாகம்கண்டு சூக்ஷமாய்இறக்கி ஆற்றிக்
கண்டிடும்வடியேகட்டிக் கருதிடுங்கலசந்தன்னில்
பொண்டிடும்வாலைதேவிப் பூசையில்வைத்துப்போற்றி
தெண்டிணையோர்களுக்குத் தீவினையகற்றுமென்றே. 430

அகற்றவேகணமாந்தந்தான் அலறியேபோவதாக
தகற்றவேகாலைதன்னில் தாய்தனக்காறுகுன்றி
நகத்தவேகொடுத்துஎண்ணெய் நாடியேபின்புஏழு
தொகுத்தவேகடிகைசென்று பிறகுபத்தியந்தான்சொல்லே.

பத்தியம்லவங்கப்பூவும் பண்புநன்மிளகுங்கூட்டிப்
புத்தியாய்பழங்கொருக்காய் புளியதுகூடச்சேர்த்து
மத்தியேபடிநீர்க்கூட்டி வென்னியிற்கொதிக்கக்காய்ச்சி
சித்தியாய் *லவணந்தன்னிச் சிவக்கவும்வறுத்துக்கூட்டே.

*லவணம் - உப்பு.

கூட்டியேசாறுசெய்துக் கொண்டிடஅன்னம்வெந்நீர்
காட்டியேகர்ப்பச்சூடுக் கழன்றிடும்பேதியாகும்
நாட்டினில்மங்கையர்க்கு உண்டபின்இளைப்பில்லாமல்
மேட்டியாம்பனநுங்காக விழுந்திடுங்கணச்சூடாமே.

சூடதுகழன்றமற்ற நாளையிற்காலைநேரம்
நீடதுமிகுத்துபாலன் நேர்மையைஉரைக்கக்கேளு
வீடதில்உதித்தமாந்த கணமதுவிரண்டுப்போக
சாடிதுஎண்ணெய்தன்னில் சாற்றிடிற்கழஞ்சிரண்டே. 434

சாற்றிடஎண்ணெய்தந்து சார்ஒருநாழிச்சென்றால்
சாத்திடபேதிரண்டு தரமெனக்கழன்றுஓடும்
மாற்றிடும்அதன்பின்புகேள்? மாத்திரைக்கடிகைசென்றால்
கேத்திடலாகும்அன்னம் கொடுத்திடுஅமூர்தப்பாலே. 435

*மாத்திரை - ஒருநொடி.

கொடுத்திடஇந்தவிதம் கூறின் *நவநாள்எண்ணெய்
விடுத்திடும்அதனைத்தள்ளி மிகுத்துடன்நவநாட்சென்றால்

அடுத்துடன் ஓமம்தேய்த்து அடவுடன் தலைக்குவாரு
கொடுத்துடன் சிறுபருப்பும் சோறுமே கூட்டிடாயே. 436

*நவநாள் - ஒன்பதுநாள்.

இதுவுமது.

கூட்டிடுஇந்தவிதம் கோதைமாதினுக்கேபத்தியம்
நாட்டினப்போதேஎண்ணெய் நளினமாய்வலுக்குங்காயம்
ஊட்டிடுசடலம்விட்டு ஓடிடுங்கணமாந்தந்தான்
தேட்டிடஇளம்பாலன் தன் தேகமும்சுபஸ்தம்நன்றே. 437

கணமாந்தத்திற்கு வேறு எண்ணெய்.

ஆசிரிய விருத்தம்.

திறமான வெள்ளாட்டுப் பாலுமே இருநாழி திகழ்விளக் கெண்ணெய்நாழி, திருகுகளிபலம் ஒன்றிண்டங்கொழுந்தொருபிடிச்செண்பகப் பூமரமும், உறமான சாதியங்காய் லவங்கேலம் வெள்ளுள்ளி *பத்திரிப்பூண்டுடன் ஓதும் *இருசீரகம் வசம்பிலா மிச்சையும் உறுவெட்டி நன்னறியும், சிறுநாகமுத் தமொடு பூலாக்கிழங்குடன் திவ்வியமிகு கோரோசினை, சேர்க் கடுக்கா யுரோகணி கோஷ்டமும் பச்சைத்திரு *நாகமுஞ்சனதாய், சரமாகவே அரைக்காசெடைஅரைத்திரு தணலிலெரி பதமதாகதையலேபால் எண்ணெய் உண்டிடக் கணமாந்தம் தரணிவிட்டோடிவிடுமே. 438

*திருகுகளி-திருகுகள்ளி *பத்திரி-சாபத்திரி *இருசீரகம்-நற்சீரகம் கருஞ்சீரகம் *வெட்டி-வெட்டிவேர் *நாகம்-நாகேசரம் அன்றியுமிவ்வெண்ணெய் கொடுக்கும்போது முலைப்பால் கூட்டிக்கொடுக்கவும்.

கணமாந்தத்திற்கு வேறு மருந்து வெண்பா.

வால்மிளகுப்பூண், டோமம் வசம்புகருஞ் சீரகமும்
சாலக்கிராம்புசண்பகப்பூ மால்சரியாய்
தூக்கிப்பொடுதலைச்சார் துவள அரைத்துக்கொடுக்க
போக்கும் கணமாந்தம் போம். 439

கணமாந்தம் வயிற்றுளைவு பொருமலுக்கு
பாலசஞ்சீவி மாத்திரை—ஆசிரிய விருத்தம்.

சீர்கொண்டதுத்தம்வெண்காரமொடு *ரோசினைத் திகழ் கிலன்றநற் *கொழுஞ்சி, சிக்குமலம் வீழ்கடுகு ரோகணி *கழுஞ்

சுதிரிசேரவே சேர்த்த நன்ருய், வேர்கொண்டகத்தியிலை *நீர் விட்டரைத்துமேமெள்ள சாமம்மட்டும், விசைகொண்டழுத்தி அரை சிறுபயறுபோலவே மேன்மைபெற உண்டைசெய்து, கார்கொண்ட குழலழகு பெண்ணங்கே யழுற்காய்ந்தநீர் அநுபானமாம். கற்கம் அரிநல்லதொரு பத்திரிப் *புட்டிலுங் கன்னி இளமாது சித்ரவார்கொண்ட மென்முலைப்பாலிலும் இடுவதிது வல்டீணிச் சகலசுரமும், வயிறுளைவு பொருமல் கணமாந்தமும் வாராது வாலசஞ்சீவி யென்றே. 440

ரோகிணீ கோரோகிணீ *கொழுஞ்சி-கொள் ளுக்காய்வேளை *கழுஞ்சுதிரி-மூன்றுகழஞ்சு *நீர் அகத்தியிலைச்சாறு *புட்டிலி-புட்டிவெல்லம்.

கணமாந்தத்திற்கு வேறு எண்ணெய் தேறையர்

கலி விருத்தம்.

மாற்றிடு பொன்னுங்கணி வல்லாரையோ, டேற்றிடும் புளியாரைக்கீழ்க்காய் நெல்லி, சோத்திடுத் துளசிச்சிறு புள்ளடிப் போற்றிடும் வறட்பூலா தகரையே. 441

தகரை ஓரிதழ்த் தாமதாப் புங்கிலை, அரையத் தூதுவளையம்மான்பச்சிலை-துவரைப்பீர்க்கிலைச் சூரைவொண்ணுச்சிலை, அவரைச்செந்நாயுருவிக் காய்வேளையே. 442

*அவரை-கோழியவரை.

வேளை *முத்திருக்கன் சேவி ஆடுணைப்-பாளை *வேலிப்பரித்திமிளகுதக்-காளி ஆடாதோடைக் கருநொச்சில் நாய்வேளைச்சின்னி வேம்பு வட்டப்புல்லிதே. 443

*முத்திருக்கன்செவி-நிலக்கடம்பு *வேலிப்பருத்தி-உத்தாமணி *வட்டப்புல்-சாவட்டம் புல்.

இதுவுமது.

புல்லிதுகணப்பூண்டு நுணுத்துளிர்-சொல்லிது *பரிவாலிச் சிறுகீரை-வெல்லிது *மொசுக்கைவேர் முருங்கிலைச்-சொல்லிது பொன்முசுட்டை-யும் பாங்கிடே. 444

*பரிவாலி-குதிரைவாலி *மொசுக்கை-மொசுமொசுக்கை.

பாங்கிடத்தி நரிப்பயற்றங்கொடி-நீங்கிடத்தி நிலக்குமிழாவரை வேங்கிடத்தி சுரை விட்ணுகாந்தியும்-தாங்கிடத்தி சங்கங்குப்பி தாக்கிடே. 445

இதுவுமது.

தாக்கிடாச் சங்குதாளி நாவல் துளிர்-மேக்கிடாய்கண் டங்கத்திரிவில்வமும்-தேக்கிடாய் சீந்தில் குட்டிவிலாச்சமன்-ஒக்கிடாய் இடித்தோர் படிச்சாறுமே. 446

சாறுஞ் சீரகங் கிராம்பு வசம்போடு-சேறு உள்ளியுந்திப் பிலிபற்படம்-ஊறுமே கடுரோகணி மஞ்சளும்-பாரும் *பூவந் திப்பழமும் ஈருள்ளியே. 447

*பூவந்திப்பழம் - மணிப்புங்குப்பழம்.

உள்ளிடாமை ஒடுங் கருஞ்சீரகம்-வள்ளி *டாழிநுரை வகைக்கே பலம்-தெள்ளிடாட்டிச் சிற்றாமணக் கெண்ணெய் சேர்த் துள்ளிடாய்ப்படி தோற்றிரண்டேற்றிடே. 448

*ஆழிநுரை - கடல்நுரை.

ஏற்றிட்டே எரித்தே இறுத்தே உடன்-தோற்றிட்டேழ் தினந்துட்டெடை உள்ளுக்கு-வாற்றிட்டே கணமாந்தம் ஓர் ஏழயும் காற்றிட்டே புளி உப்பில்லைக் கண்டிடே. 449

இவ்வொன்பது மொருதொடர்.

நீர்க்கணமாந்த குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

இருமும்மூக்கில் நீர்வடியும் இடையில் இடையில் சுரங்காயும்
பொருமிவயிறுஇரைச்சலுண்டாம் போதபலவிதமாய் கழியும்
சொருகுங்கண்ணும்உடம்புமுகம் சோர்ந்துதலையும்புரட்ட
[லுண்டாம்
மருவிமயக்கம் உண்டாகும் வருகுநீர்க்கண மாந்தமுமே. 450

நீர்க்கணமாந்தம் கணமாந்தமெட்டு குடற்படுவன் நீர்ப்பாடு கர்ப்பப்பாடு நாவரட்சிசுரம்சூலையெரிவு வெப்புதோஷத்திற்கு

அமுர்தாதிக் குளிகை—எண்சீராசிரிய விருத்தம்.

அருளினர் அமுர்தமெனுங் குளிகைதானும் அதிமதுரம் சண்பகப்பூஏலமோடு, திருவுகோரோசினையுஞ் சாத்திரபேதி சிறந்த வெட்டிவேர்க்கோஷ்டம் மாசிப்பச்சை, தருவெனவே விலாமிச்சம் வேருங்கூட்டிச்சரியாக ஆதொண்டைச் சாறு விட்டுப், பருவமதாய் ஒருசாமம் அரைத்துக்குன்றிப் பரும னும் முலைப்பாலிற் பருகிடரே. 451

இதுவுமது.

பருகிடில் ஓர் உண்டைதனை முலைப்பால்தன்னில் பகைத் துவருங்கணமாந்த மெட்டுந்தீரும், திருகுடல்படுவன் நீர்ப்பா டுந்தீரும் சேர்கர்ப்பப்பாடு நாவரட்சித்தீரும், குருவெனவே இக் குளிகை சுரமுந்தீரும் குலையெரிவு வெப்புமுதல் தோஷந் தீரும், அருளெனவே முனியுரைத்தார் பாரின்மீது அமுர்தா திக்குளிகைதனை அரைத்திடாயே. 452

தியக்கத்தின் கணமாந்தம் போர் மாந்தத்திற்கு
கோடாசுழி தைலம் இதை தெற்கத்து கணமாந்த மென்பர்.

வசம்போமம் வெள்ளுள்ளிக் காய்ந்தானும் வகை வகைக் குக்கால்பலமாய்சிறுத்துகொண்டு, நிசம்பெறவேதூள்செய்து வைத்துமேலும் நினைவாகவேப்பெண்ணெய்படி அரைக்குள், தசம்பெறவேதூள்போட்டுஒருநாழிதான் தணலிலேகொதிக்க வைத்தாறுநாளும், கசம்பெறவேரவிபுடந்தான்வைத்தபின்பு கனத்தநிப்பியுடன் வேடுகட்டிக் கொள்ளே. 453

கொள்ளவே குழந்தைகளின் நிதானம்பார்த்துக்கொடுத் துவரதெற்கத்து கணந்தானேது, உள்ளவேமாந்தபோர் மாந் தமேது ஊழ்வினையால்வந்தசர்மாந்தந்தீரும், மெள்ளவேதாய் தன்னைப்பத்தியத்தில்வைத்து மிளகுநீர்ச்சாதமிட் டுண்ணச் சொல்லு, வள்ளியமாம் பொதிகைமுனி யருளினாலே மகா நோய்கட் பறந்துவிடும் வண்மைப்பாரே. 454

சிங்கிமாந்தகணத்தின் குணம் அதேவிஷமாந்த குணம்
தன்வந்திரி.

பேரானசிங்கிமா[illegible]ணத்தைகேளு பெருமையாய்உந்தி தணல்மேலெழும்பி, [illegible]னஈரலுமே புண்ணாய்வெந்து வலு மையாய் சுவாசமேலெழுப்புமாகி, சீரான்தேகஞ்சமூலங்காய் ந்து சிவசிவாதழல்போலே சுரமும்வீசும், வீரானசுவாசமது திக்குமுக்காடி வெளியாய் மயக்கிவைக்குஞ் சிங்கிகணம்பாரே.

சிங்கிகணம் பிள்ளைகட்கு சுரமிகுந்து சிவசிவாமாந்தசுர மிதுதானென்பார், சிங்கிகணமாந்தமிது ஏதென்றாற்கால் சிர கற்றிப்பதின்மூன்றுப் பிராயமட்டும், சிங்கிகணமாந்தமிது இருப்பிடந்தான் சிறுவனென்ற பிள்ளைக்குச்சுரந்தானாகும், சிங்கிகணமொழிவதற்கு அமுர்தாதிதன்னைச் சணமதிலே விள்ளுகிறேனி தனைப்பாரே. 456

சிங்கிமாந்த கணத்துக்கு அமுர்தாதி குளிகை.

இதனைப்பார் அதிமதுரம் கோஷ்டம் ஏலம் இனியகோ ரோசினையும் சாஸ்திரபேதி, இதனைப்பார் சண்மகப்பூ மாசிக்

காயும் இலவங்கப்பூவுடனே வகைக்குக்கால்தான், இதனைப் பார் இவையெல்லாங்கல்வத்திட்டு எழில்வெட்டிவேர் மாசிப் பத்ரிவேரும், இதனைப்பார்க்கருந்துளசி விலாமிச்சோடுஇன்ப மதாய் நால்வகையுஞ்சாற்பிழிந்தே. 457

இதுவுமது.

பிழிந்துமே கல்வத்தில் வார்த்தரைத்து பலமாக இருசா மம்விடாமலாட்டு, கழிந்துமேகுன்றிப்போ லுண்டைசெய்து கண்மணியே நிழலுலர்த்திச் செப்பில்வைத்து, வழிந்துமே வாலைமனோமணியைப்போற்றி வகையானமாசிபத்ரிக்கியாழுந் தன்னில், அழிந்துமே குளிகையொன்றுக் கொடுத்துப்போ அரஅராமுன்சொன்ன மாந்தம்போமே. 458

மாந்தம்போம் லவங்கப்பூ கிழாயந்தன்னில் மகத்தான மாந்தசுரம் வாந்திதீரும், மாந்தம்போம் முலைப்பாலில்கொடுப் பீராகில் வதைத்துவருங்குடல் படுவன்நீர்ப்பாடுதீரும் வயிற் றெரிவு அன்னவிடாச்சுரமுந்தீரும், மாந்தம்போம் உப்பிச மும் இருமல்போகும் மகத்துவமாம் அமுர்தமெனுங் குளிகை பாரே. 459

இவ்வைந்து மொருதொடர்.

நீர்க்கணத்தின் குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

நீர்க்கணக்குணமேகேளு சீரின்மேல்மனதுவைக்கும்
வேர்க்குங்கண் தாழ்ந்துசற்று வேர்வையில்வெதுப்புதோன்
நாக்குவாய்வரண்டுக்காணும் நல்லநீர்க்கழிச்சலுண்டாம் [றும்
பார்க்கிலோநீர்க்கணத்தின் பலபலகுணங்கள்தானே. 460

தாகமும்கழிச்சலுண்டாம் தலையதுசுமற்றல்காணும்
வேகமாய்ச்சுரமுஞ்சற்று விட்டுவி[illegible]னகாயும்
வாகுசேர்கண்ணுந்தாழ்ந்து வாயுட[illegible]ாஉலர்ந்து
சோகமும்வயிற்றில்நோவாய்ச் சோர்ந்துகைகால்தண்ணீரே

தன் வந்திரி.

முகம் புறங்கால் புறங்கையு மோதிமினு மினுப்புண்டாகும்
தகைசேர்தாக முண்டாகித் தண்ணீர்உழலை மிகக்குடிக்கும்
மிகவேமயக்கம் வெதுப்புண்டாய் வெடித்துநாவும் புண்ணாய்
மகமேரொத்த தனத்தாளே வருநீர்கணத்தின் வகையாமே.

இஃதொரு தொடர்.

நீர்கணத்துக் குடிநீர்

வெண்பா.

சாரணைக்காய்முக்குரட்டைத் தன்காய்பொடுதலைக்காய்
பூரணமாந்திரிகடுகு பூந்துளசிவாரணியும்

கொங்கையரேசீரகமுங் கூட்டிக்குடிநீராய்
உண்கவேநீர்க் கணந்தானேடும். 463

சுழிகணத்தின் குணம்.

அறுசீராசிரிய விருத்தம்.

சுழியெனுங்கணமேசொல்லில் சுழியவேசுவாசம்வாங்கும்
நளிருடன்சுரமும்தோன்றும் நயனம்பஞ்சடைந்துக்காணும்
தெளிவுடன் சந்துநொந்து திசைக் நெஞ்செரிப்புக்காணும்
குழியுமேஉச்சித்தாழிற் குணம்இஃதறிந்துசொல்லே. 464

நயனம் - கண்.

மின்னேகேளாய்ச்சுழிகணந்தான் மேவிசுவாசமிருமலுண்
[டாம்
பொன்னேமுகமும்மார்புகண்டம் புடைத்துக்காணும்உண்
[மையிது
சொன்னேம்வயிறுசரல்நெஞ்சு தொண்டைநாவுமிவைவெந்து
அன்னைமுலைப்பால்குடியாமல் அலறிஅழுகுமறிவாயே. 465

அன்னை - தாய்.

இருமுஞ்செருமுகம்மேல்மூச்சும் இருகைகாலும்குளிர்ந்திருக்
[கும்
பொருமும்வயிறுதான்ஊதும்பொல்லாச்சுரமும்மிகஉண்டாம்
அரிவைமுலையுங்குடியாது அயர்ந்துவெம்பிஅலறியிடும்
சொருதும்கண்ணும்நாவறண்டு சுழிகணஞ்செய்யுங்குணமிதே.

வார்முலையாரேகேளீர் மண்ணில்பிறந்தபாலகர்க்கு
ஈரல்வெந்துசுழிகணமாய் இருமலுண்டாய்எதிரிளைப்பாய்
நாரைப்போலேஅதுதுவண்டு நாசிஇரண்டுமெடுத்தெறியும்
பாரிலுள்ளப்பாலகர்க்குப் பரிந்தேஇதனைப்பாரீரே. 567

மார்பிலேசுழியாய்வாங்கும் வாயினில்நுரையுங்கோழை
சேரிலேபிள்ளைவாந்திச் செய்யுமேகழியும்காயும்
மூரியேமுகத்தில்மஞ்சள் முன்தலைமயக்கும்நோகும்
பாரினிற்பாலகர்க்கும் பரிந்துமேபார்த்திடீரே 468

சுழிகணத்துக்கு சஞ்சீவி எண்ணெய்--கட்டளைக்கலிப்பா.

பத்துக்காசெடை சண்பகப்பூவுடன் பகருஞ்சாதியின் பத்துரிக்காசெடை, முற்றுங்கேளரைக்கா செடைஆவினில் முளைத்தெழுந்தகோரோசனை முன்றுமாய், எத்துங்கேளிவைப் பொடியாய் விளக்கெண்ணெயான திலோர்படி தண்ணிலேயிடு, சற்றுத்தீயிற் கொதியிட்டறக்கியே தனயனுர்க்கிடுந்தான் விதங்கேளுமே. 469

### வேறு குடிநீர்.

கேளுந்துட்டெடை இட்டிடவேசுரம் கிறுகிறென்னவே வாங்குஞ்சுழிகணங். சூழுநோயுமிருமலும் தீர்ந்திடும் சுழிகணச் சஞ்சீவியிதாமென்னே, வாழும்உள்ளி வசம்பும்உசிலையின் வாய்த்தப்பட்டை இம்மூன்றும்நறுக்கியே, தாழிநீரினால்ஊறி இறுத்திடு தணியுமேசுழி தன்கணம் இன்றுமே. 470

தாழி - மிடா.

### சுழிகணத்துக்கு வேறு எண்ணெய்.

இண்டுகாரிஇம்பூரலின்வேர்கடுஇதைபொடித்துழக்கெண்ணெயிலேற்றியே, மண்பொனாபுடம் வைத்தெடுத்ததைமதலையோர் சுழிமாந்த மறுக்கவே, கொண்டகுன்றி மணிவேர்கிலுப்பைவேர் கூர்முசுக்கைத் துளசிநற்கூவிளை, கண்டுக்கொண்டு முன்போலேபுட மிட்டுக்கலந்துண்ணச் சுழிகாணாது பாருமே.

காரி கண்டங்கத்திரி இம்பூரல் சாயவேர் கடு கடுக்கா கூவிளைவில்வம்.

### வேறு குடிநீர் வேறு எண்ணெ.

பாரும்ஈருள்ளித்துருகடன்வந்தநீர் பாலிறக்கி இலுப்பை புண்ணாக்கையும், நீரிலேகரைத்தேகுழவிக்கிய நீங்குமிருமல் இளைப்புசுழிகணம், காருதாதுதுளசி நுணாசங்குகருதும்இரண்டுப் பொடுதலைச்செம்முள்ளிச், சாறும்ஆவின்நெய் சீரககற்கமும் தணலெரித்திட சுழிகண மாறுமே. 472

தாது - தாதுவளை.

### சுழிகணம் உப்பிசம் கோழைகட்டு இளைப்புக்கு வேறுமருந்து.

### அறுசீராசிரிய விருத்தம்.

குப்பைமேனிசாற்றில்உப்பை கூடக்கலந்துவேப்பெண்ணெய்
செப்பமாகமத்தித்து தேனேமூன்றுநாட்புகட்ட
தப்பில்லாமலேஇளைப்புதானே சுழிகணம்உப்பிசமும்
துப்புநெஞ்சிற்கோழையுடன் துயரங்கெட்டுஓடுமென்றே.

### சுழிகணத்துக்கு வேறு எண்ணெய்.

முலைப்பால்கடுக்காய்க்காட்டுவல்லி முதிர்ந்தஆவின்புல்லுருவி
இலைப்பாலிண்டுஈருள்ளி இயைமாணக்கின்எண்ணெயுடன்
தலைப்பாலகருக்கெரித்ததனைசொன்னபடியேகொடுத்திடவே
சொலிப்பாய்வந்தசுழிகணங்கட் சொல்லாதோடிபோயிடுமே.

கடுக்காய்காட்டுமல்லிகையும் கடியக்குமரிவெந்தயமும்
மிடுக்காய்சீரகமித்துடனே மேவுஞ்சாறணைஈருள்ளி

முடுக்காய் ஆமணக்கெண்ணையுடன் முடிக்காதெரித்துகொடுப்
பீரேல் துடுக்காய்வந்தசுழிகணந்தான் சொல்லாதோடிடுமே.
குமரி - கற்றாழை

சுழிகணத்துக்கு வேறு நெய்.

நாடுந்துளசிநா துநுணாநல்லச்சங்கும இண்டோடு
பூடும்பொடுதலைச்செம்முளிச்சாற்புகழும் ஆவின்நெய்தனிலே
சாடும்தணலில் இட்டுநன்றாய்த் தானேகொடுக்க வேமாறும்
ஆடுஞ்சுழிகணமானதெலாம் ஆறிப்போகுங்கண்டாயே. 476
*தூது - தூதுளை.

சுழிகணத்துக்கு வேறு எண்ணெய்.

நந்தியாவட்டவேறு நல்லநாய்த்துளசிவேரு
கந்தியசிவேதைவேரு காட்டுமல்லிகையின்வேறு
அந்தியபுன்னைக்காயின் அளவரைத்திப்பால்கேளு
சுந்திரகண்டங்கத்திரி தூதுளைசின்னியாமே. 477

சின்னியுமணித்தக்காளி செழித்தகொட்டைக்கரந்தை
கொன்னியக்குப்பைமேனிக் கோழியின் அவரைப் *பத்ரம்
இன்னிவைசமனதாக இடித்தரைப்படிச்சாறுகும்
மின்னியமாசிலாத விளக்கெண்ணெய் படியொன்றாயே. 478
*பத்திரம் - இலை.

ஒன்றதாய்க்கலந்தெரித்து உண்மையாய்வடித்துவைத்து
துன்றியபாலகற்கு துட்டெடைப்புகட்டவேதான்
கொன்றிடுஞ்சுழிகணத்தைக் குலவியதொண்டைக்கட்டு
என்றதுந்நீரும்பத்யம் இன்பமாய்க்காத்திடாயே. 479

சுழிகணசுவாசகாசத்திற்கு கிழாயம்.

*சிங்கிகர்கடகம் சீந்தில்சீரகம் வில்வஓடு
உங்கதிவிடையந்தானும் *உரோகணிகண்டங்காரி
பொங்கமாமுசுக்கைமுள்ளிப் புகல்தூதுவேளைத்திப்லி
கங்கைநீர்க்காய்ச்சிக்கொள்ளக் கணஞ்சுழி சுவாசம்போமே.

*சிங்கி-கர்க்கடகசிங்கி *உரோகணி-கடுகுரோகணி *கண்டங்கார்-கண்டங்கத்திரி.

*சூலிக்கணத்தின் குணம் தன்வந்திரி.

உண்டாஞ்சூலிக்கணங்கேளு உத்தசுவாசமேல் எழும்பி
தண்டாயிருமல்மிகஉண்டாம் தண்மைநெஞ்சுவாய்மட்டும்
தொண்டைநாவுவேவெந்து சோரும்பொருமிவயிறுப்பும்
வண்டார்முலையுங்குடியாது வகையாய்முகரும்நாறுமென்றே.
*சூலிக்கணம்-கர்ப்யக்கணம்.

சூலிக்கணத்திற்கு எண்ணெ.

முகமாம்எண்ணெகால்படிதான் முகிழ்சேர்துளசிச்சாற்காலாம்
தகமாய்நிலத்தின் துளசிசாற் தண்மைஅரைத்தார்படிகூட்டு
வகமாங்மஞ்சாங்கோரையுடன் வண்மைமாசிப்பத்திரியும்
அகமாம்வில்வம்உள்ளியுடன் அன்பாய்இடித்துசாற்பிழியே.

அன்பாய்அரைக்கால்வகைக்குபடி அளந்துநிறுத்திஒன்றுக்கி
வன்பாய்திரிகடுகுடனே தான் வறுத்திடித்துசூரணஞ்செய்
தென்பாய்இரண்டுவிருகனெடை தேனும்வார்த்துகலந்துவிடு
உன்பாய்எண்ணெய்அடுப்பேற்றி உருளுங்கடுகுபதந்தனிலே

தனிலேஇந்தக்கடைமருந்தைத் தயவாய்ப்போட்டுக்கிண்டிடுநீ
வணியேபிறக்கிகணபதியை வகையாய்தொழுது அடிவணங்கி
மணியேசூலிக்கணந்தனக்கு மைந்தன் தாயைச்சாந்திசெய்து
தொனியேமைந்தன்தொண்டைதனில் தொடுநீகாசுஎடை
[ரண்டே

எடையேஐந்துமாதமென்றால் எண்ணெய்ஐந்துநாள்மட்டும்
தடையாய்இச்சாபத்யமது தன தாய்பிராயம் ஐந்துமட்டும்
இடையாய்பிருக்கும்சூலிக்கணம் இதனைகண்டுதீர்த்திடுங்காண்
படையாய்வருஷம்ஆன கணம்பலிக்கும் ஒருமண்டலங்கொள்
இவ்வைந்து மொருதொடர். [ளே

மஹாகணத்தின் குணம் இதைமாக்கணமென்பாருமுளர்.

முகமும்புறங்காலும்கையும் மோதியேமினுமினுக்கும்
நகைவிழி *வெளுரிக்காட்டும் நஞ்சுண்டால்போல்மயக்கும்
மிகமிகவெதுப்பும்உண்டாய் வெடித்துநாவுதடுபுண்ணாய்
சுகமிலாவருந்தந்தோன்றும் சொல்மஹாகணத்தின்வாறே.
*வெளுரி-வெளுப்பு

மஹாகணத்துக்கு குடிநீர்—எண்சீராசிரிய விருத்தம்.

சிறுகீரைவேர்க்காந்தி கீழ்க்காய்நெல்லிச் சிறுபூளைஎருமுட்டைச் சீந்தில்தோடை, நறுகீரையாகிலித்தனையுமொன்றாய்நறுக்கியேநல்லதொரு பாண்டந்தன்னில், வருகீரை இளவறுப்பாகவேதான் வறுத்ததனைக்குடிநீராய் வற்றக்காய்ச்சி, இறக்கியேவைத்திருந்துக் கொடுப்பீராகில் ஏருமகாகணமென்றே இயம்பினரே. 487

பிரளிகணத்தின் குணம்—எண்சீராசிரிய விருத்தம்.

மிகுந்தபிரளிகுணத்தியல்பை விரிக்கக்கேளுசெருக்குலவே
விகுத்தமாகவயிறுவிம்மி மேலே ஏப்பமுண்டாகும்

சுகித்தவுடல்புண்போல்நொந்து துடித்தேஏங்கி அழுதலறும்
பகுத்தமலமும் மரப்போலே பரக்கக்கழியும் தவித்திடுமே.

தன்வந்திரி.

போதாபிரளிகுணங்கேளாய்பொருமிவயிறும் அதைப்புண்டு
கோதாமலமும்போகாது குடலைப்புரட்டி தான்வலிக்கும்
மார்தாமுலையும் வுண்ணாது வலுவைக்குலைக்கும் வாரிலரும்
மீதாமேல்மூச்சுண்டாகும் விழியுஞ்சுழலுமேசித்தம். 489

வெண்பா.

சித்தாஇளைக்கும் திட்டுத்திட்டென முக்கும்
முத்தாகமூக்கில்நீர் மூண்டோடும் தெத்தாரம்
மட்சட்பட்ர மணக்கும்மதிவதன
வஞ்சிப்பிரளிகுண மாம் 490
இரண்டுமொரு தொடர்.

பிரளிகணத்திற்கு எண்ணெய்—எண்சீராசிரிய விருத்தம்.

அவித்த சிற்றாமணக் கெண்ணெய்ப் படிதான் ஒன்று
அதில்நாலுருமட்டிக்காய்அரிந்துபோட்டு, இவித்தீரவெண்கா
யம்படியிரண்டுயிதமாக அரிந்துபோட்டின்னங்கேளு, கவித
கருஞ்சீரகந்தான்பணமாகாணி நற்குரோகணிபணம்அரைக்
காலாகும், நவித்தகஸ்தூரிமஞ்சள் பணமாகாணி நறுக்கிப்
போட்டடுப்பேற்றிக் காய்ச்சிக்கொள்ளே. 491

கொள்ளவேபதமறிந்து கரண்டிவீதம் கூறவேன் துட்
டெடைதான்குடிக்கும்போது, கள்ளமிலா *வீரோசனமாம்
இதற்குதானே கதரியேபிரளிகணங் காணாதோடும், தள்ளவே
வயிற்றுவலி பொருமலோடு சகலகழிச்சல் இவையெல்லாஞ்
சாந்தமாகும், விள்ளவேபத்தியந்தான்பிடிக்கவேண்டு விரும்
பாதே மாங்கிஷந்தான் கிட்டாகாதே. 492
*விரோசனம்-பேதி.

பிறக்கணத்தின் குணம்.

தாக்கிடுவாய்முன்போலே மூன்றுநாள்தான் தடவிவிட
புண்சூடுதனதுபோகும், தூக்கிடுமேமலபேதி பச்சென்றே
தான்தோய்ந்த தயிர்போலவுமேவயிறு உப்பி, தூக்கமிகும்
பால் *அருந்தும்கக்கும்காயும்காயும் சொருகிவிழிகால்கள் சில்
லென்றேதான், ஏற்கையிலேதலையாட்டல் குணங்கட்கண்
டால் இயல்பனபிறக்கணமென்றியம்பினேமே. 493
*அருந்தும் உண்ணும்.

பிறக்கணத்திற்கு எண்ணெய்.

இயம்பாரைகோழிகுரைஜனகிவேளை இலைவெதுப்பிரட்டி புலிஇடுகால்புள்ளு, சுயமாகவகையெல்லாஞ்சாறுவாங்கி சூட்டதிலே எண்ணெய்சேர் சமனதாக, வயம்உள்ளிக் கரியமணி இருஷிமூலம் வகைக்கழஞ்சி இடித்திட்டுதீயைமூட்டு, நயமாக முன்போல்காசெலடையேவாரு நாள்மூன்றில் பிறக்கணமும் நாடாதென்றே.

*ஆரை-வல்லாரை *கோழி-கோழியவரை *குரை-கஞ்சாங்கோரை *ஜனகி-ஜானகிபூண்டு *வெதுப்பி-ஒற்றைப்பேய்மிரட்டி *மிரட்டி-இரட்டைப்பேய்மிரட்டி *புலி-துடரி *புள்ளு-சிறுபுள்ளடி *உள்ளி-வெங்காயம் *கரியமணி-கருஞ்சீரகம் இருஷிமூலம்-வசம்பு.

வரட்கணத்தின் குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

நெஞ்சுதுடிக் கம்புகைந்திருமும் நிறமும்வேறேநாகறுக்கும்
வஞ்சம்அறவே ஒருவேளைவந்தேசரீரமெலாம் வெதுப்பும்
மிஞ்சும்இருமல்வயிற்றிரைச்சல்விட்டுத் திடமாய்துரும்பெடுக்
[கும்
மஞ்சார்குழலாய்வரட்சணத்தின் வாறுமிதனை அறிவாயே.

*அஸ்தியில்சுரமும்தோன்றும் அழன்றுநீர்தாகமாகும்
முற்றியேசிறுநீர்தானும் மூறுக்கியே வெண்மைகாணும்
சற்றுதான்வயிறுநொந்து சகிருடன்கடுப்புமாகும்
வற்றிடுஞ்சரீரம் எங்கும்வரட்கணம் என்றுசொல்லே. 496

*அஸ்தி-எலும்பு.

நாக்கில்மஞ்சள்வெள்ளை முள்ளு நடுவேவெடிப்புமூன்றுகும்
பார்க்கப்பிள்ளைஈடழியும் பருக்காதுடலும்இளைத்துவிடும்
மூக்கில்சளியும்இருமலுடன் முகமும்மஞ்சள் பூத்திருக்கும்
தூக்கமிகவேமயக்கமுண்டாஞ் சோருவரளின்கணம்இதுவே.

வரட்கணத்திற்கு எண்ணெய் கொச்சகம்.

ஆமணக்கின்நெய்நாழி ஆனபசுப்பால்நாழி
தாமணக்குமேஅரைக்கால் தான்கிழ்க்காய்நெல்லியின்சாா
வாய்மணக்குமேல்மதுரம் வாய்த்த கடுதான்றிசுக்கு
பூமணக்கும்வேர்காந்தி பொன் துளசிதூதுவளை 498

* மதுரம் - அதிமதுரம் வேர்காந்தி-விஷ்ணுகரந்தைவேர் கடு-கடுக்காய்.

வளையாம்பசரையுடன் வாகுபடவேசேர்த்து
இளநீரதனில்அரைத்து எண்ணெய்தனில்விட்டெரித்து

கிளர் அன்னம் உண்டதன்மேல் கேளுங்குடித்துறங்க
களையாகவேபேதி காலமே தானாகும் 499
அன்னம் - சோறு.

ஆகும் இருமல்கணம் *அஸ்திசுரம் உட்காய்ச்சல்
வாகுபடவேகடுப்பு வரட்கணமும் பூதகணம்
பாகுமொழிமாமயிலே பத்தியாய்நீருமென்று
தோகை உமையாள்பாகன் சொன்னார்முனிவோர்க்கே 500
*அஸ்திசுரம்-எலும்பைப்பற்றியசுரம்.

வரட்கணத்துக்கு வேறு எண்ணெ எண்சீராசிரிய விருத்தம்.

முள்ளிவேர் செவ்வள்ளித் தண்ணீர்விட்டான் முசுமுசுக்கைதூதுவளைக்கண்டங்கத்திரி, தெள்ளுகம்பிப்பிசின் கருஞ்சீரகம்நற்சிரம் நிருகுகள்ளிவேருடனே மணத்தக்காளி, வெள்ளுள்ளிவசமயினேடொவ்வொன்றுக்கு விராகனெடை விளக்கெண்ணெய்ச் சமனவடித்து, உள்ளுக்குகொடுத்துபின்புமேலும்பூச ஓடிகடல்புக்குவரட்கணமதாமே. 501

ஊதுகணத்தின் குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

காதுடன்கண்உடம்பு கனக்கவேவீங்கும்வற்றும்
போதவேநாவும் புண்ணாய்ப் பொருந்திய சுரமும் உண்டாம்
வேது கை காலுஞ்சோர்ந்து வெறுத்திடும் அன்னந்தன்னை
ஊதுநற்கணமாம் என்று உரைத்தனர் முனிவர்தானே. 502

ஊதுகணத்திற்கு மருந்து—வெண்பா.

நீர்முள்ளிச்சுட்டரைத்துநீள் *கரிப்பான் தன்னுடைய
சாறதனில்வெந்நீரிடத்தணியும் சாறதனில்
நாய்வேளைவேர் அரைத்து நல்லமுலைப்பாலிலிட
நோய்போகுமென்றுரைத்தார் நூல். 503
*கரிப்பான்-கையாந்தகரை.

கொதிப்புக்கணத்தின் குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

நெஞ்சுகொதிக்கும் விலாகொதிக்கும் நேரேநெற்றிவேர்க்கும்
பஞ்சுப்போலக்கண்வெளுக்கும் பார்க்கும்போதுபலவிதமாய்
துஞ்சுஒண்ணுதஇருமல்வந்து துயரப்பட்டுத்தலைநோயாய்
கொஞ்சுங்குரலும்கம்மிவிடும் கொதிப்புகணத்தின் குணமாமே

கொதிப்புக்கணம் (18) கணச்சூடு-அஸ்திசுரம்-அஸ்திவெட்டை-மேகவகை-பித்தவெட்டை-வரண்டதேகத்துக்கு கற்றாழை-எண்ணெய்-பிரமமுனி.

சிற்றாமணக்கெண்ணெய்ப்படியொன்று சிறந்தபழச்சாறி
[லந்தைச்சாறு
வற்றாஈருள்ளியின்சாறு வகைக்குகால்படிதானாக

நற்றாமரைமலர்முகமாதே நகிலம்பொற்சைலத்துறழும்
கற்றைக்குழலே மதர்விழியே கரியசீரகமுங்காலே. 505

எண்சீராசிரிய விருத்தம்.

காலாகும் இவையெல்லாம் எண்ணெயிலேபோட்டுக்கருங்கற்றாழஞ்சோறுபலமுமொன்று, காலாகவுழுசுத்திசெய்துப் போது கனமாகஅடுப்பேற்றி மெழு பதமாக்ககாலாங் *குமரிச்சோறுசிவக்கும்போத கண்டிறக்கி ஆறவைத்துநாளொன்றுக்கு, காலாககரண்டிநிறைஅந்திசந்தி கருதிகொண்டுவரத்தீரும்நோயைக்கேளே. 506

*குமரிச்சோரு-கற்றாழஞ்சோறு.

தீருமேபதினெட்டுக் கணச்சூடெல்லாம்செப்பரி அஸ்திசுரம் அஸ்திவெட்டை, தீருமேமேகவகைபித்தவெட்டைதீதாக வரண்டஉடல்உலர்ந்ததேகம், தீருமேசிறியோர்க்கும் பெரியோர்க்கும் சின்மயஞ்சேர் பிரமமுனி யொன்னமார்க்கம், தீருமே பத்தியமாய் இருந்தால்நன்று *தினகரனைக்கண்ட பனிபோல் நோய்ப்போமே. 507

*தினகரன்-சூரியன்.

வீக்ககணத்திற்கு எண்ணெய்—அறுசீராசிரிய விருத்தம்.

உள்ளியும்வசம்புஓமம் உயாதிமதுரங்கோஷ்டம்
வெள்ளியகிராம்புசுக்கு மிளகுடன்ஏலமிப்பால்
கொள்ளக் *கூத்தன்குதம்பைக் கூறியவேர்வகைக்கு
பொள்ளியவிருகன்ஒன்று பொடிசெய்துபின்புகேளே. 508

*கூத்தன்குதம்பை-மூக்கொற்றிப்பூண்டு.

கேள்விளக்கெண்ணெய்தன்னில் கிரமமாய்ப்போட்டுமேலும்
வாள்பெறஇரண்டுசாமம் வளர் *ஒளிபுடத்தில்வைத்து
நாள்சிறுகரண்டிஎண்ணெய் நல்கிடில் *மதலைகட்கு
காள்வினையானவீக்ககணமது தீருமென்றே. 509

*ஒளிபுடம்–சூரியபுடம் *மதலை-பிள்ளை.

அந்தகன்கணத்தின் குணம்.

உச்சிமூளைத்தனைப்பற்றி உடலம்எங்கும்வெதுப்புண்டாம்
பிச்சமாகநாவுலரும்விழிகளிரண்டும் வெளுப்பெய்தும்
பச்சைமஞ்சளதுபோலே பசும்பொன்னிறமாய் முகமினுக்கு
அச்சம்புரியுமுலையாளே அந்தகன்கணமென்றறிந்துரையே.

அந்தகன்கணத்திற்கு உள்ளுக்குதலையில்அப்புதற்கு மருந்து.

பொன்னுங்கணிசிறுகீரைபூலா அவரிவேருடனே
பன்னும்தேற்றான்கடுக்காயும் பலம்ஓரொன்றாய் அரைத்து

பொன்னேறுவின் வெண்ணெயுடன் புரட்டி *யருந்த அதனுடனே
*மின்னேர்முலைபால் கலந்தொக்கவீறு *சிரத்தில் *தப்புவதே

*அருந்தல்-சாப்பிடல் *மின்னார் ஸ்திரீகள் *சிரம்-தலை *தப்புதல்-அப்புதல்.

தப்புமருந்துவுணர்ந்தவுடன் தள்ளிப்பின்னுந் தப்புவிக்க
செப்புமருந்தனைதினமும் தின்னப்பார்த்துதான் கொடுக்க
சொப்புக்குழையாயிப்படியே கொடுக்கமூன்றுதினந் தானும்
தப்புவிதியாலுந்திரும்பும் தயவாயென்னச்சாற்றினரே. 512

## மந்தாரகணத்தின் குணம்.

மந்தாரகணத்தின்வாறு வகையறிந்திடவேகேளு
முந்தியேகணமுமாந்த முதியேயிசைந்துகூடில்
சந்தியில்சுரமயக்கும் சாந்திடுஞ்சுவாசம்வாங்கும்
கந்தியேவயிறும்உப்பும் கணத்தில்மந்தாரமாமே. 513

## மந்தாரகணத்திற்கு எண்ணெய்—எண்சீராசிரிய விருத்தம்.

நாயுருவிசாறுடனே கரிசலாங்கண்ணி நல்லதொரு வல்லாரைச்சாறுடனேயின்னம், தூயகவிழ்தும்பை *கண்டங்கரியநொச்சில்சொற்சாறுழக்குவகைஎண்ணெய்படியொன்று பாயும்வெள்ளுள்ளி *திரிகடுகு *திரிபலையும் பாகபலம் இலவங்கம்வசம்பிருவிருகன் ஆய்பதக்குநீர்வற்றிக் கடுகுமது சிவந்தால்ஆம் எட்டுக்கணங்களையும் அடக்கும் இதுதானே. 514

*கண்டம்-கண்டங்கத்திரி *திரிகடுகு-சுக்குமிளகுதிப்பிலி *திரிபலை-கடுக்காய் தான்றிக்காய் நெல்லிக்காய்.

## எரிகணத்தின் குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

பாயல்கிடக்கவொட்டாது பதைத்தேஎரிவுமிகஉண்டாம்
வாயில்மூச்சுப்பறிந்துவிடும் வாச *உமிழநீர்வடிந்துவிழும்
நோயில்பட்டுமிகஅழுகும் நோக்குங்கீழேமுகஞ்சாய்க்கும்
ஆயுள்வேதவைத்தியருக் கறைந்தோம்பிதுவேஎரிகணமே.

*உமிழ்நீர்-எச்சில்.

## எரிகணத்திற்கு எண்ணெய்.

தென்னங்குறும்பைச்சாறுழக்கு சீராந்தகரைச்சாறுழக்கு
வண்ணமுலையீர்பழம்பாசி வகையீருழக்குசாருள்ளி
இன்னங்குமரிவேர்ச்சாறு இனிய அலரி *மஞ்சணத்தி
கன்னங்கறுத்தஎண்ணெய்உறி கலந்தேஒன்றாய்காச்சுவதே

*மஞ்சணத்தி-நுணா.

ஏதமும்அரைகழஞ்சு இலவங்கப்பட்டைக்கோட்டம்
சாலநற்சீரகந்தான் சந்தனம்மதுரந்தாக்கிக்

காலமேவடித்தஎண்ணெய்க் காசெடைஉள்ளேகொள்ள
ஆலமாங்கணங்கள்எட்டும் அறுமென்றேரிஷிசொன்னரே.

ஆமகணத்தின் குணம்-இதுவே சீதகணம்.

ஆமகணத்தின் குணங்கேளு அடவுடவாகவெதும்பாது
சாமந்தோறும்வெதும்பிநிற்கும் தண்ணீருடலேஉண்டாக்கும்
சேமத்தடல்மிகஇளைக்கும் சீறியழுகும்பசியில்லை
நாமத்தருளும்இதுதானும் நடுங்கியிருக்குங்கண்டாயே. 518

சுழிக்கும்போருமும்வயிறிழியும் சுவாசமிகவும்உண்டாகும்
கழுத்தைநாணிக்கால்குளிர்ந்து கண்ணைமூடிவிழியாது
அழுத்தமானசுரந்தோன்றும் அயர்ந்துசீறிதிடுக்கென்னும்
சுழிக்கும்ஆமகணமென்று சொன்னர்அரனர் *தோகைக்கே.

*தோகை-உமை.

என்றேஆமகுணங்கேளு இனியதாய்நெஞ்சுதான் துடிக்கும்
வண்டேசிறுநீர்மஞ்சள்நிறம் வகையாய்புகையுமேல்கடுப்பு
கண்டம்உடம்புநிறம்வேரும் கனமாய்வந்துஒருவேளை
நன்றாய்வெதும்பும்சாவாங்கம் நலமாய்உருமல்மிஞ்சுமென்றே

மிஞ்சும்வயிற்றில்இரைச்சலுடன் மிகவும்தாகம்சுரமுண்டாம்
கஞ்சமூக்குமேலெழும்பும் கனமாய்சுவாசம்புகையெழும்பி
துஞ்சும்உடம்புமேல்வரண்டுத் துரும்புபோலேவடிவெடுக்கும்
கெஞ்சும்ஆமகணம்இதுதான் கேளாயிங்கோய்ஓ *ராண்டே.

ஆண்டு-வருஷம்.

ஆமகணத்திற்கு எண்ணெய்—அறுசீராசிரிய விருத்தம்.

ஆண்டென்ன இண்டம்வேர் இண்டந்தண்டு அன்பான சாறதிலே நாழிவாங்கி, பூண்டென்னக் குமிழினெடு மாசிப்ப தரி புங்கினெநிதத்துளசி உள்ளிச்சாறு தாண்டென்னமுடக் கொற்றான் நாதளஞ்சாற் தனதான நுணைஇலையின் சாற்றி னேடு, வாண்டென்னவல்லாரைக் கஞ்சாங்கோரை வகைக்கு இதுகால் படிச்சாற்வாங்குவாங்கே. 522

வாங்கியேஎண்ணெய்படி ஒன்றுவிட்டு வகையானசாதிக் காய் ஏலங்கிராம்பு, வாங்கியே கடுகுரோகணி கடுக்காய் வால் மிளகுஓமம்முடன்வசம்புசுக்கு, வாங்கியேவகைக்குபலம்நிறுத் துக்கொண்டுவறுத்துமே தூளிடித்து வகையாய்ச்சேரு, வாங் கியே அடுப்பேற்றிக் காய்ச்சிக்கொண்டு வற்றியபின் கடுதி ரண்டால் இறக்கிடாயே. 523

இதுவுமது.

இறக்கிடாய் மனேமனிதன் பூசைசெய்து ஏகாட்சர பூரணத்தை மனசில்போற்றி, இறக்கிடாய் நாலஞ்சு கரண்டி வீதம் இதமாகக்கொடுத்துவிடு அஞ்சவேண்டாம், இறக்கிடாய் முன்சொன்னநோய்களெல்லாம் எளிதான ஆமகணம் பறந்துஓடும், இறக்கிடாய் ஆமகணமாந்தமெல்லாம் என்னசொல்வேன் தீருமிந்த வித்தைப்பாரே. 523

வித்தைப்பார் சேஷ்மபண்டம் வாயுமண்டம் விருப்பமுடன் தள்ளிவிடு இதற்காகாது. வித்தைப்பார் நிலத்துளசி பிட்டவித்து விதமாகப்பிழிந் *தந்திகொடுத்துவா நீ வித்தைப்பார் உதயத்தில்எண்ணெய்வாரு விவரமாய் அந்தியிலே கிழாயம் ஏற்று, வித்தைப்பார் பிள்ளைவலி ஆமம் மாந்தம் வீரிட்டுஓடுமே இதனல் பாரே. 525

*அந்தி-சாயங்காலம்.—இவ்வாறுமொழி தொடர்.

ஆம கணத்திற்கு வேறு எண்ணெ – அறுசீராசிரிய விருத்தம்.

வேலிப்பரித்திக்கோழி அவரைவேருக்கிளுவை பொடுதலையும்
பாலிற்பெரியசிவேதைகள்ளிப்பச்சை வெளிச்சைவசம்புள்ளி
சீலக்கடுகுரோணியும் சீரங்கரியசீரகமும்
ஏலங்குழலாய்கிரைகழஞ்சு இதமாய்க்கூட்டிக்கொள்வாயே.

*வேலிப்பரித்தி-உத்தாமணி வசம்புள்ளி-வசம்பு உள்ளி.

நீலசிற்றுமணக்கெண்ணெய் நிகர்வெள்ளாட்டுப்பால்விட்டு
சாலஎரித்துமுலைக்காம்பில் சற்றேறதடவிமுலைகொடுக்க
ஆலித்துண்ணும்பிள்ளைதனக் காமம்வாராதன்றியுமே
சூலிக்கெண்ணெகொடுத்தாலும் தோன்றுதாமந்தோன்றுதே.

நீராமகணத்தின் குணம்.

தண்ணீருஞ்சீதத்தோடே தான்கச்சைமஞ்சளாகி
கண்ணீரும்பிளைப்பாய்ந்து கடுப்புடன்வலித்துசோரும்
உண்ணீரும்முத்துப்போலே ஓடவேகழிந்துதாகித்
தெண்ணீரும்நீராமத்தை எவருளார்நீக்கவல்லோர். 528

நீராமகணத்திற்குஞ் சீதகணத்திற்கு நெய்.

சட்டியைக்காயவைத்து தவளமாம்வெண்ணெய்தானு
அட்டெலிமிச்சாங்காயின் அளவதுபோட்டுருக்கி
கொட்டியமணித்தக்காளிக் கொட்டைப்பாக்களவரைத்து
இட்டஅந்நெய்யிற்போட்டு எரித்திளம்பதத்திறக்கே. 529

இறக்கியேஆறவைத்து எழில்சிறுபிள்ளைகட்கு
அறக்கிகாசளவுதானும் ஐந்துநாள்கொடுக்கமற்ற

உறக்கியபெரியபிள்ளைக் கொருகல்துட்டெடைகொடுக்க
கறுக்கியவெள்ளைச்சீத கணமதுதீருந்தானே. 530

சாறுங்குமரி கையாந்தகரைச்சாற்
தாருய்அரைத்து தூதளங்காய்போல்
மாறுஉலர்த்தி மண்டலங்கொண்டிடத்
தாருஒன்பதும் தாண்டிடும்பாருமே.

§ குமரி-கற்றாழை அஞ்சுபிராயத்திற்கு மேலிட்ட பிள்ளைகட்கும் பெரியவர்கட்கு மாகும்-- இவ்வாறுமொரு தொடர்.

மூலகணத்தின் குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

சீதரத்தமுமேகழிந்துதினமும் ஆசனங்கடுத்துளையும்
மீதுகாய்ச்சல்வயிற்றிரைச்சல் வடாததலைநோய்அதிகமுமாம்
காதப்படவேமுகமினுக்கும் கறுக்கும்சிவக்கும்பலவிதமாய்
ஓதும்உறுப்புமிகதள்ளும் உரைத்தோம்மூலகணமென்றே.

§ உளையும்-நோகும்.

இதுவுமது. தன்வந்திரி—எண்சீராசிரிய விருத்தம்.

அதீதம் பார்மூலகணம் ஏதென்றாற்கால் அஸ்தியிலே வாதபித்தம் அதிகமாகி-அதீதம்பார் சீதமுடன் இரத்தம் ஊற்றும் அதில்உளைச்சல் ஆசனத்தில் காற்றுமோங்கும்-அதீதம் பார் சுரமுடனே வயிற்றிரைச்சல் அதிகதலைநோய் வரும்விடாதுபாரு-அதீதம்பார் சண்டாளமூலரோகம் அதட்டுமே பத்தாண்டு மட்டும்பாரே 533

மூலகணத்திற்கு கிருதம்.

பார்க்கவே அதிவிடையம் கடுக்காய்சுக்கு பரங்கிச்சக்கை கசகசா விலாமிச்சோடு-பார்க்கவே சந்தனத்தூள் சாதிபத்திரி பண்பானநெல்லியொடு சிற்றாமுட்கு-பார்க்கவே செம்பருத்தி வில்வவேரும் பதமாக வகைக்கு பலம் நிறுத்திடித்து-பார்க்கவே சூரணித்து வைத்துக்கொண்டு பண்பான கற்கண்டுப் பலம் இரண்டே. 434

பலமிரண்டாம் ஐந்துபலம் ஆவின்நெய்சேர் பாலிகையிலேற்றிசுட்டி நெய்யைவார்த்து-பலமிரண்டாய் கொதிக்கையிலேமருந்தைப்போடு பதமாக சீரகமும் பலந்தான்போடு பலமிரண்டாங் கற்கண்டுபொடித்துத் தூவும்பதம்பாத்துக்கிளறிவரில் கிருதமாகும் பலமிரண்டாம் இம்மருந்தை இறக்கிக்கொண்டு பரிவுடனே பூசித்துப்பணிந்து போற்றே. 535

§ சோபாலிகை-அடுப்பு.

பணிந்துமே பாக்களவு உள்ளேகொள்ளு பண்பாக ஏழுநாள் உண்ணும்போது-பணிந்துமே ஓடிவிடும் மூலகணமெல்லாம் பதராதே பத்தியந்தான் இச்சாபத்தியம்-பணிந்துமே

முன்சொன்ன ரோகமெல்லாம்பஞ்சுபோல் பறந்துவிடும் பாரு, பணிந்துமே இந்நாலைப் பணியவேணும் பார்ப்பதுவும் இந்நூலைப்பாரு பாரே இந்நான்கு மொருதொடர். 536

மூல கணத்திற்கு வேறு மருந்து.

பழம்பாசி சமூலம் வெள்ளாட்டுப்பாலில் பாங்குடனே நன்றாகப்போட்டு காச்சி, செழும்பாக வெந்தபின்பு கோது நீக்கி § தேசியெனும் பழச்சாற்றைக் கூடவிட்டு, குழம்பாக விழுந்தபிறைக் குடிக்கும்போது குணமாகு மூலகணங் கோத்ரகேளாய், அழுங்குகருவேல்பட்டை தண்ணீரோடே அதிமதுரஞ் சீரகமும் ஏலங்கூட்டே 537

§ தேசியெனும் பழச்சாறு-எலுமிச்சம்பழச்சாறு.

மூல கணத்திற்கு வேறு மருந்துகள்.

பெருமரத்துப் பட்டைதனை வெள்ளாட்டுத்தயிரில் பிறகரைத்துகரைத்துமே கொடுக்கத்தீரும், திருவான பசும்பாலில் பரித்திப்பிஞ்சு சீரகமும் அரைத்துமே கொடுக்கத்தீரும், பரிவானசாறதனிற்சீரகமும் கூட்டிப்பண்புடனே வழங்கிடவே தீரும்பின்னர், பெரும் ஒதியம்பட்டைப்பாலினிலோயபிறங்கு மாதளம்பிஞ்சி தயிருமீயே 538

மூல கணத்திற்கு வேறு மரிந்து வெண்பா.

தின்னேலம் § நிம்பவிரை சேர்ந்தநிறுமாச்சுக்கு
மின்னேகேள்வெற்றிலையின் மேற்காம்பு-நன்னுய்நீ
§ தேசிப்பழச்சாற்றில் செப்பமுடன் அரைத்துக்
காசளவுவில்லைசெய்யுங் காண். 539

§ நிம்பம்-வேம்பு § தேசிப்பழம்-எலுமிச்சம்பழம்.

செய்யும்படிஅரைத்து சேர்ந்தவிதம்ஏழுதரம்
நெய்யிற்புடம்போட்டு நேர்த்தியாய்-தையலே
பாலில்உண்ணவேகடுப்பு பாலகர்க்குசிதரத்தம்
மூலகணம்ஓடுமென்றார் முன். 540

மூல கணத்திற்கு வேறு மருந்து - வெளி விருத்தம்.

ஆலாவாரை விடத்தேர்நாவல் ஆகியகருவவலும் ஆனக்கொழுந்தும் பட்டையும் நல்ல அத்திப்பட்டையுடன், சேலாதென்னம் மொக்குடனேசமன்தேடிக்குடி நீராய்சிரகம்விடையம் § மாசிக்கிராம்பு தின்னுஞ்சாதிக்காய் மேலாந்தீயில்வாட்டி விளாவின் மேவுந்தன்பிசினும் மேலும் இதைப்பொடியாகிய நீரில்மெத்தெனவே கரையாய், பாலாய் பதிமூலகணத்துடன் பாரிக்கல்சுரம் § பாறிடுமே மறுசட்டியில் மாற்றிதை பாலர்க்கீந்திடவே. 541

§ மாசி-மாசிக்காய் § பாறிடும்-ஓடிவிடும்.

முக்குக்கணத்திற்கு வேறு மருந்து.

கற்றாழைக்கொண்டுவந்து கழுவினசோறெடுத்து
எற்றானவெந்தயத்தோ டெலுமிச்சம்பழச்சார்விட்டு
சுத்தமாய்க்காய்ச்சிப்பின்னைக் கம்கபெறபாலகர்க்கு
சற்றுநீகொடுத்தால்முக்குக் கணமதுதரியாதென்றே. 545

மூலம்வருமாறு தன்வந்திரி—கலிவிருத்தம்.

பாருஞ்சிசுவதை பாவத்தைசெய்தபேர்
ஆருமறியவே யாஞ்சொல்வோங்கேளீர்
நீரும்அபானத்தில் நின்று *பொறிகொண்டு
சோருமூலத்தில் சூடுண்டாகுமே. 546

*பொறி-புலப்பொறி.

இதுவுமது.

உண்டானவிந்து ஒடுங்கிஒளித்துபோம்
திண்டான *மூவரும் திகைத்திட்டுநிற்பார்கள்
கண்டோமதுவென்றால் காட்சிஅதிகமாம்
நன்றானமூலம் நாசமதாகுமே 547

*மூவரும்-வாதபித்த சேஷ்மநாடி.

மூலம் 9-க்கும் குளிகை.

ஆக்கியமூலம் ஒன்பதும்ஓடிட
பாக்கியமொன்று பண்பாய்உரைக்கக்கேள்
தாக்கிரபூரம் § தாள் § சிலை § காரம்
தேக்கியகல்நார் சேருநீஐந்துமே. 548

§ தாள்-தாளகம் § சிலை-மனோசிலை § காரம்-வெங்காரம் இவ்வைந்தையுஞ் சுத்திசெய்து கூட்டவும்.

இதுவுமது.

ஐந்துஒருபலம் ஆகநிறுத்தி
பந்துக்கொடிக்கள்ளிப் பாலைவிட்டாட்டிடு
வந்துநாடசென்றபின் வழித்துக்குகையினில்
சந்துவாய்ச்சீலை தடித்தமண்போட்டிடே.

போட்டெடு குக்குடம் பொருமுஞ்சரக்கது
ஆட்டிடுகல்வத்தில் ஆவின்பால் § கள்ளிப்பால்
வாட்டிடுசாமம் § வயனமதாகவே
சாட்டிய § நிம்பழச் சாறுவார்த்தாட்டிடே. 550

§ குக்குடம்-கோழிப்புடம் § கள்ளி-கொடிக்கள்ளி § மயனம்-மெழுகுபோல § நிம்பழம்-எலுமிச்சம்பழம்

அன்றியும் 533-ம் பாட்டிற்சொன்ன மருந்துங்கொடுக்க

ஒருமருங்கினன்மை பேராமகணத்தின் குணம்.

கையுமேகால்குளிர்ந்து கண்ணுமேவஞையமாகும்
குய்யவேசுரமுந்தோன்றும் குடித்தபால்சர்த்திப்பண்ணும்
துய்யவேதிடுக்கிட்டேங்கும் சோர்ந்துதான்வயிறுபோகும்
பொய்யல்லக்கேளாயிந்த போராமகணத்தின்வாறே. 551

போராமகுணமேகேளு பொருமிடும்வயிறுதள்ளும்
நேராகவயிறுபோகும் நெற்றியில்வலிப்புதோன்றும்
சீராகமுலேஉண்ணுது சீறியேவெருவிபார்க்கும்
கார்குழல்தனத்தல்லுளே கண்டதிக்குணங்கள்தானே. 552

போராமகணத்திற்கு மருந்து - கொச்சகம்.

தும்பைப்பொடுதலேவேர் துய்யவேஷிப்பரித்தி
கும்பமதிக்கக் கொட்டியந்தசட்டியிலே
கொம்பெருமைமோர்நாழி கொஞ்சிவேர்திப்பிலியும்
உம்பாதிசீரகமும் ஓமம்இந்துப்போடெடையே. 553

எடைசேர்மருந்தனைத்தும் இயல்பாகவேசேர்த்து
அடவாய்அரைத்துகரைத் தனலிலதுகாய்ச்சியபின்
குடையிற்குழவிகட்குக் கொள்ளக்கொடுத்திடவே
புடைபோலேவாயுவதும் போராமம்போய்விடுமே. 554

முக்குகணத்தின் குணம்.

சோகமாய்நாக்குவெந்து சுரமுடன் தலேயுநாணித்
தாகமாய்வயிற்றைப்பற்றித் தான்சீதம்ரத்தம்வீழும்
மாகமாய்உறுப்புதள்ளி மாருட்டப்படுமேயாகில்
தோகையேகேளாய்முக்குக் கணமெனச்சொல்லுவாயே

கக்குமுலேயும்உண்ணுது காலுங்கையும்குளிர்ந்திருக்கும்
§ சொக்கும்உடலும்கண்சோரும் சொரிந்துமலத்தல்ரத்தம்
[வீழும்
நிற்குங்கடுக்கும்ஆசனவாய் நெருப்புப்பட்டால்போல்எறியும்
முக்குகணத்தின்குணமிதென மொழிந்தோம்இதனேபாராயே

§ சொக்கும்-மயக்கும்.

உதிரமாய்க்கழிதலன்றி உவாந்தியுஞ்சுரமுங்காணும்
சதிரமெல்லாம்நடுக்கும் சந்துகால்வலியுண்டாகும்
முதிரவேசீதங்காணும் முக்கியேஅடியுந்தள்ளும்
மதியுடன்அறியவல்லோர் வைத்தியரென்னலாமே. 557

கொள்ளமுக்குக்கணங்கேளு குழைந்தநாவுமிகவெந்து
தள்ளாச்சுரமுந் தலைவலியுந் தாகமுடனே நாவரண்டு
மெள்ளவயிற்றுக்கடுப்புடனே மேனிக்கறுத்து அசனமும்
விள்ளஇரத்தமாய்விழுந்து வீணில்தேகம்வற்றுமென்றே.

முக்குகணத்திற்கு எண்ணெய்.

வற்றவில்வம்விலாமிச்சு வகையாய்விட்ணுகிராந்தியுடன்
*முத்தம்ஓரிதழ்தாமரையும் முருங்கைவித்துத்துளசிவிரை
கற்றக்கோங்குப்பிசினேடே கனத்தாராரைப்பிசின்கூட்டி
அத்தங்கோட்ட *மதுரமுடன் அக்கராகாரந்தளிசமே. 559

*முத்தம்-கோரைக்கிழங்கு *மதுரம்-அதிமதுரம்.

தாளிசம்எண்ணெய்நாழி தளர்பெறுமருந்தெல்லாந்தான்
வாளிசம்வறுத்திடித்து வகைக்குஓர்பலமேசேரு
மாளிசம் *குமரிச்சாற்கால் வகைமுலைப்பால்காலாகும்
ஆளிசம்படி அரைக்கால் அழகுள *நிம்மச்சாறே. 560

*குமரி-கற்றாழை நிம்பம்-எலிமிச்சம்பழம்.

சாறிதுஎண்ணெய்ஒன்றாய் சமரசங்கலந்துக்கொண்டு
வாரிதுஅடுப்பில்சுற்றி வகையதாய்தீயைமூட்டி
காரிதுகடுகுகண்டால் கடுகநீஇறக்கிக்கொண்டு
மாரிதுவடுகன்பூசை மனேமணிப்பூசைசெய்யே. 561

கிழாயம்.

செய்துநீஎடுத்துக்கொண்டு செயம்பெறதுட்டெடைத்தான்
வைதுநீவைதுவாயில் வகைமூன்றுநாள்தான்வாரு
கைதுநீஇண்டந்தண்டைக் கண்டமாய்நறுக்கிக்கொண்டு
மைதுநீசீரகத்தை மலர்ந்திடப்பொரித்துக்கொள்ளே. 562

பொரித்துநீஇண்டந்தண்டை பொறுமையாய்ஊதிப்போட்டு
தரித்துநீஅதனிற்போட்டு தண்ணீர்காற்படிதான்வார்த்து
வறுத்துநீஎட்டொன்றாக்கி வார்ப்பதுமூன்றுவேளை
நெறிக்குமேகணமுன்சொன்ன தெல்லாந்தான்ஓடிபோமே

ஓடிடும்ஐந்துவேளை உறுதியாய்க்குடிக்கச்சொல்லி
வாடிடும்உதயவேளை வசனித்தஎண்ணெய்ஈநீ
ஆடிடும்ஔடதந்தன்னல் அடங்கிடும்நோயெல்லாந்தான்
தேடிடும்தருமம்வந்து சிக்கெனஎய்துந்தானே. 564

இவ்வேழு மொருதொடர்.

## மூலரத்தகண விஷமாந்தத்திற்கு எண்ணெய்.
### அறுசீராசிரிய விருத்தம்.

இதுவேகேளுவிளக்கெண்ணெய் ஏற்கப்படிதான்ஒன்றாக
மெதுவாய் *குமரி *நிம்பமுடன் வேண்டும்சுருள்ளின்சாறு
அதுவேவகைக்குக்கால்படிதான் ஆவின்பால்படிஅரைதான்
மிதுவேஇவைகள்ஒன்றாக்க மீறுங்கறந்தனைக்கேளே. 562

*குமரி-கற்றாழை *நிம்பம்-எலிமிச்சம்பழம்.

கேளேகோஷ்டம்அதிமதுரம் கிளருஞ்சண்பகப்பூஏலம்
நாளேசன்னலவங்கமுடன் நன்றாய்வகைக்குகால்பலமாய்
தூளேபாக்கிகலந்துவிடு சொன்னேம்வெந்தயம்ஓர்பலத்தை
ஆளேஇதனைமுழுதாக அரைத்தேஅதிலேகலக்கிடுமே. 563

இடுமேஅதனை அடுப்பேற்றி இறக்குமெழுகுபதமானல்
அடுமேஎண்ணெய்ஆறியபின் அடவாய்ஒருசிறுகரண்டிநிறை
கொடுமேமூலரத்தகணம் கூறும்விஷகணமாந்தமுடன்
விடுமேதோஷமுதலாக வேறேமருந்துவேண்டாமே. 564

## கணக்கடுப்புக்கு எண்ணெய்.

போக்கியகணந்தீராமல் பொங்கியகடுப்புக்கண்டால்
தாக்கிஆமணக்கின் எண்ணெய்தனில் *நிம்பச்சாறுவிட்டு
நீக்கியவெந்தயத்தை நிரைந்தரைத்ததனிற்போட்டு
சீக்கிரகாகப்பண்ணிச் செலுத்திடச்சிலுகவென்றே 565

## முக்கல் வயிற்றுக்கடுப்பின்குணம்—கலிவிருத்தம்.

சீதரத்தசிலேட்டுமம்போலவே
தாதுவற்றியே தாகமிகுத்திடும்
ஓதுகண்ட மலத்தில்உறுங்குறி
வாதமுக்கு வயிற்றுக்கடுப்பதே. 566

## முக்கல்வயிற்று கடுப்புக்கு மருந்து—அறுசீராசிரிய விருத்தம்

பரித்திப்பிஞ்சஞ்சாதிக்காய் பெருங்கிராம்பு அதிவிடையம்
அரத்தை *அசமதாகமுடன் அன்பாய்இலந்தைச்சலமுமவை
கருத்தாய்சமனாய்மிகஅரைத்துக் கட்டித்தயிரில்கலந்துண்ண
வருத்தமானகுழவிகட்கு வயிற்றுக்கடுப்புதீர்ந்திடுமே. 467

*அசமதாகம்-ஓமம்.

## மூலக் கடுப்புக்கு எண்ணெய்.

வெந்தயம்பலமும்பத்து விளக்கெண்ணெபடியில்போட்டு
அந்தமாய்நிலக்குமிழ்வேர்ப் பட்டையைஅரைத்துக்கூட்டி
விந்தையாய்அடுப்பில்வைத்துவெந்தபின் இறக்கிக்கொள்ளப்
பந்தமாய்வுறுப்புமூலக் கடுப்புபோம்பாலகர்க்கே. 468

இரத்தக்கடுப்பு மூக்கல்கடுப்பு கிராணி மூலத்திற்கு மருந்து.

வெல்லமுங்கவிழ்நல்தும்பை வீரைசூழ்புடவிமீது
அல்லவில்லாபுழுங்கல் அரிசியும்வகைவகைக்கு
சொல்லநாரத்தங்காய்நேர் சுகமுடன் அரைத்துமூன்றுப்
நல்லெண்ணெய் அரைஆழாக்கு நற்சட்டிதன்னிலூற்றே. 569

ஊற்றியேகாயவைத்து உடன் அதில்மருந்தையிட்டு
மாற்றியேதுழாவிமேலும் வளமுடன்எரித்திறக்கி
ஆற்றியேஅந்திசந்தி அன்புடன்மூன்றுநாள்தின்
கீற்றுதிரக்கப்புக்கிராணி மூக்கலுந்தான்போமே. 570

இரத்தக்கடுப்பு அடிபிறப்பட்டதற்கு வெந்தயகளி.

எண்சீராசிரிய விருத்தம்.

வெந்தயமோர் பலமதைதான்படியாவின்பால்வெந்திறக்கிமேன்மையதாய்வெல்லங்கூட்டிக், கந்தமலர்ப்பூங்குழலாய் பசுவின்நெய்யால் கருகாமல்கும்பாமல்களியாய்க்கிண்டி, உந்திவயிற்றெரிகடுப்போடு திரந்தானும்ஓடும்அடிபிறப்பட்டதுள்ளேவாங்கும், அந்திசந்திஇருபோதுட்கொள்வீரானல்அதிசாரவகையனைத்து மகலுந்தானே. 571

இரத்த சீதக்கடுப்புக்கு மருந்து—அறுசீராசிரிய விருத்தம்.

ஓர்எடைவிருகம்பட்டை உள்ளியும்பரித்திப்பிஞ்சும்
சாறுகட்சுரஞ்செய்து சாற்றினில் *மதுரம்குப்பை
கீரையின்வேரும்வெள்ளைச் செருடன்மாதுளையின்பிஞ்சும்
சீரகம்சரிவெள்ளாட்டின் சிறந்தபால் கறந்தரோதே 572

*மதுரம்-அதிமதூம்.

கலந்தைபால்குழந்தைக்கிய கடுப்புளரத்தசீதம்
மலங்கழிந்திடுதல்பச்சை மஞ்சளதென்னவீழ்தல்
உலர்ந்துடல்வரட்சிக்காய்ச்சல் உள்ளரோகங்கட்கெல்லாம்
சலசமாந்தளிர்போல்மேனி தருகுஞ்சஞ்சீவிதானே. 573

சீதக்கடுப்பு நீர்ச்சுருக்கிறது மருந்து தேரையர் கலிவிருத்தம்.

தீரவேஇளம்தென்னை யின்பாளையைப்
பூரவே *மடல்போக்கிமலர்இடிச்
சாறுவோர்ஆழாக்குச் சமன்தயிர்
நேரவே *பழம் நீள்பலம்ஏற்றிடே. 574

*மடல்-ஏடுபாளையைநீக்கி உள்ளிருக்கும் கொத்துசேர்க்க
*பழம்-எலுமிச்சம்பழச்சாறு.

இதுவுமது.

ஏற்றிடாய்தின முன்றிருநேரமும்
மாற்றிரத்தஞ்சீத வயிற்றுக்கடுப்

பாற்றிடாய்பெரும் நீர்ச்சுருக்காறிடும்
காத்திடாய்புளிபாகாதருந்திடே. 575

இஃதிரண்டு மொருதொடர்.

கிராணி கடுப்பிற்கு மருந்து—வெண்பா.

வெந்தயந் தான்கூட்டி மிகுந்தநிம்பச்சாறுவிட்டு
இந்தா இதனை எரித்துண்ண பந்தாரும்
மெய்யாங்கிராணி வெகுகடுப்புமேகமுதல்
பொய்யாதுமானே புகல். 576

*நிம்பச்சாறு-எலிமிச்சம் பழச்சாறு

ஆமக்கடுப்பிற்கு மருந்து—இதே சீதக்கடுப்பு.

அறுசீராசிரிய விருத்தம்.

என்றுமேபரித்திவித்து இயலும்சாதிக்காய்கூட்டி
நன்றுநன்னறிவேரும் நலவட்டத்திருப்பிமேலும்
குன்றுசீரகங்கிராம்பு குருகுபுள்ளடிச்சாறோடு
ஒன்றுமேவறுத்துசாற்றில் உகந்திடக்கடுப்புபோமே. 577

சகலவித கடுப்பிற்கும் குளிகை—ஆசிரிய விருத்தம்.

மதுரமதிவிடையமுடன் பெருமரப்பட்டையும், மாதளம் பிஞ்சினுடனே, மாவிளாவில்வதன் பிசினுடன்சீரகம் மான் குராசானிஓமம், மூதிரஇளநீர் தனிற்பூவும்வேர்காய்சாதி மூதிம் காரைவேரினுடனே, முன்னேஉரைத்தவிதமெல்லாமும்ஒரு கூறுமொழிகுல்லை இலைபாதியாய், சதிர்பரவுகஞ்சாவின் சார் வார்த்ததைசந்தமெடுத்துருட்டி, சாதிப்பழத்தளவு தயிரிற் கொடுக்கவே சகலக்கடுப்புமகலும், உதிர்விளாம்பிசினுடனே உள்ளியும் அரைத்ததனை உறுதயிரிலே அருந்த, உண்டான ரத்தசீதக்கடுப்பானதும் ஓடிவிடும்உண்மையிதுவே. 578

*குல்லை-துளசி சாதிப்பழம்-சாதிக்காய்.

சீய்மூலத்திற்கு மருந்து—வெண்பா.

செந்நாயுருவுயிலைச் சிறுகஒருபடியாய்
உண்ணநல்லெண்ணெய்தனில் ஒருழக்கு-மின்னே
*வரிக்குமரியன்னம் வாங்கிபஞ்சதாரை
வெருக்கியுண்ணச் சீய்மூலம்போம். 579

*வரிக்குமரியன்னம் வரிக்கற்றூழஞ்சோறு பஞ்சதாரை-சர்க்கரை.

இரத்தகணத்தின் குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

இடைவிடாமுக்கிமுக்கி இருமலுங்கழிச்சலுண்டாம்
அடைப்படாகழிச்சலாகி அடிக்கடியிரத்தங்காணும்
தொடையிடைவலிக்குந்தாகஞ் சொல்லொணாசுரமுங்காயும்
தடைப்படாவியாதியென்று சாற்றினர்முனிவோர்தானே.

கட்டளைக்கலித்துறை.

நாடிஅயர்ந்துஉளம்வாடி மென்றநாசபசி
கூடிஅசனம்புசிக்கவொட்டாது குழந்தைகட்கு
ஓடியரந்தமலந்தனிற் சேர்ந்துள்மூலமதால்
சாடிக்கும்ரத்தகணமெனவேமுனி சாற்றினரே. 581

இரத்தகணம் மூலகணம் அதிசாரத்திற்கு மருந்து—வெண்பா

ஓடும்வில்வபத்திரிவேர் உத்தகருவேல்கொழுந்து
நாடுதனில்நிம்பவிரை நற்சீரம்-சாடுவளர்
ஆவாரம்பூஅரிசி அஞ்சாதிபத்திரிக்காய்
தேவார்கிராம்புடனே சேர். 582

*அரிசி-ஏலரிசி காய்-சாதிக்காய்.

சேருமின்னூர்பாலில் சிறுகொட்டைப்பாக்களவு
கூறும்படியரைத்துட் கொண்டாற்கால் ஆறும்
இரத்தகணமூலகணம் எய்துமதிசாரம்
பெற்றசிறுவோர்க்குப் பேசு. 583

இரத்தகணத்திற்கு வேறு மருந்து—அறுசீராசிரிய விருத்தம்

செங்கழுநீர்சீரகமேலம் செண்பகமலருமதிமதுரம்
நங்குறுகோஷ்டந்தா துவளைவேர் நன்னாறியின்வேர் சமனாக
கொங்குபால்விட்டரைநெய்யில் குழைந்துஉள்ளங்கையில் [விட்டு
நங்கநக்கிடரத்தகணந்தானே ஓடிப்போமென்றே. 584

*நக்கிட - உண்ப-தின்ப நக்குவ-பருகுவ நால்வகையுணவில்-சோறுமுதலிய உண்டல் கறிமுதலிய மென்றுதின்னல் தேன்முதலிய நக்கல் சலமுதலிய பருகல்.

இரத்தகணத்திற்கு வேறு எண்ணை தேரையர் கலிவிருத்தம்.

கண்டிடுஞ்சாதிக்காய் சாதிபத்திரி
உண்டிடுலவங்கம் லவங்கப்பட்டை
கொண்டிடுமல்லிக் கோஷ்டங்கோரோசினை
செண்டிடுஞ்செண்ப மலர்சேர்த்திடே. 585

சேர்த்துக்கார்போ கரிசிமதுரமும்
பார்த்துமேலவங்க பத்திரிசீரகம்
ஏர்த்துசெங்களுநீர்க் கிழங்கேலமும்
கார்த்துஓர்வகைக்கால் பலம்ஆட்டிடே. 586

ஆட்டிடாமணக்கெண் ணெயீராற்பலம்
சூட்டிடாநற்பசு வெண்ணெய்ஆற்பலம்

மூட்டிடாளள்ளெண்ணெயில் மூன்றுநாள்
காட்டிடாமுருங் கைபிலேச்சாற்றிடே 587

சாற்றிடாளடைதான் ஈரெட்டுப்பலம்
சேர்த்திடளரித்தே மெழுகாம்பதம்
வார்த்திடாயபல மாமுறைமூன்றுநாள்
காத்திடாஉதிரக் கணந்தாளுமே. 588

இரத்தகணத்திற்கு வேறு எண்ணெ—எண்சீராசிரியவிருத்தம்

எண்ணெய்ப்படிகால்குமரிசோறுதானும் எழில்விளாங்காய ளவுகழுவிக்கொண்டு, அண் இரண்டுதுமட்டிகாய்சோறுகூட்டி அதில்*ஈரகாயம்பத்தரிந்துபோட்டு, கண்ணவேமெழுகுபதமா யெரித்து கனமான நூட்டளவுளண்ணெய்தானும், நண்ணவே நாலுநாட்கொருபோதீய நாடாதுரத்தகணந்தீருந்தானே.

*ஈரகாயம்-ஈரவெண்காயம்.

இரத்தமூலவரட்கணம் ஊதுமாந்தத்திற்கு மாத்திரை.

வெளி விருத்தம்.

சாதிக்காயுடன்மாசிக்காயுந் தண்கிராம்புகோரோசினைசீரம்
பூதிக்காயுடனேதிப்பிலியும் பொருந்தஅரைத்துமிளகளவாய்
நீதிக்காமெனநிழலுலர்த்தி நிகர்முலேயமுதிலிட
ஊதுக்கணமாந்தக்கண மூலவரட்கணம்ஓடுமே. 590

*சீரம்-சீரகம் முலேயமுது-முலேப்பால்.

ஆறுவகைமூலம்-வாயு-விஷக்கடி குன்மம்-சூலே-பிரமியம் ஐந்து மலக்கட்டு-எரிகுன்மம்-க்ஷயத்திற்கும்.

சஞ்சிவி குளிகை—அறுசீராசிரிய விருத்தம்.

*இருநாபிஅரிதாரமுடன் இரதம்கெந்திவெண்நாரம்
வருமேசுக்குதான்றிக்காய் வகுத்தமிளகுதிப்பிலியும்
தருமேவகைக்குகழஞ்சாரும் தானேவாளம்ஜலகழஞ்சு
அருமையென்றுநினையாதே அல்லாங்கழஞ்சுபதினேந்தே.

*இருநாவி-நாவி-கருநாவி இரதம்-பாதரசம்.

கையாந்தகரைச்சாறதனல் கனக்கஏழுநாளரைத்து
மெய்யாநாளுக்கொருசாமம் விடாமற்குணமாய்அரைத்ததனே
உய்யக்குன்றிப்பிரமாணம் உண்டைசெய்துநிழல்உலர்த்தி
ஐயாசஞ்சீவிக்குளிகையென அடவாய்சொன்னர்அகத்தியனர்

அதற்கனுபானம்.

மூலவாய்வுக்குசாதிக்காய்முனிந்த பல்வாயுக்குசிறுநீரில்
ஆலந்தரித்தபாம்புகடிக்கறிந்தே தேசப்பழச்சாற்றில்

மூலவியாதிவலிகுன்மம் முளைத்தநொச்சில்சாற்றிலிட
சூலைவலிக்குமுருங்கையுட சுதித்தபட்டைச்சாற்றிலிட 593
*பல்வாயு-பலவாயு ஆலம்-விலிம் தேசிப்பழம்-எலிமிச்சம்பழம்

அநுபானம்.

சயத்துவகைகள்பத்துக்குந் தான்வெள்ளாட்டுப்பாலிலிட
வயத்திவியாதிதான்தீர வருந்திபத்யமாகக்கொள்
மயத்துசாம்பல்பூசிநின்று மகிழ்ந்தேஆடும்அரன்பாதம்
முயர்சஞ்சீவிக்குளிகைக்கு முதலநுபானமிவையென்றே. 594

அன்றியும் ஐவகைப்பிரமியத்திற்கு மருதான்றிச்சாற்றில் மலக்கட்டுக்கு விளக்கெண்ணெயில்-எரிகுன்மத்திற்கு சிந்தில்சாற்றிலிடவும்-அடித்தள்ளினதற்கு மருந்து.

கரிசலாங்கண்ணிப்பழம்புளியுங் கதிக்கஅதனைமிகவரைத்து
சரியாய்புன்னைக்காயளவு சத்தம்எட்டுநாட்கொடுக்க
பிரியாதுள்அடித்தள்ளினதும் பேசாதோடுமடமயிலே
பரிவாய்நாம்சொன்னோம்இச் சாபத்தியமானதுநன்றென்றே
*சத்தம்-ஏழு

அடிதள்ளினதற்கு வேறுமாத்திரை—எண்சீராசிரியவிருத்தம்

*கோரக்கர்மூலியொருகட்டுதானும் குளிர்நீரால்ஏழுதரங் கழுவிப்போட்டு, தாரக்கமிளகிருபத்தொன்றும் பூண்டுதான் இருபத்தொன்றுகுழிக்கல்லிலிட்டு, ஆரக்கஅரைத்து குன்றி அளவுருட்டி அரிதானபரித்திஇலைச் சாற்றிலாதல், வேரக்க மாதளம்பிஞ்சதைவெதுப்பி விடுசாற்றிலிட அடித்தள்ளினது போமே.
*கோரக்கர்மூலி-கஞ்சா.

அடித்தள்ளினதற்குவேறுஎண்ணை--அறுசீராசிரியவிருத்தம்

ஒருதலைவெள்ளப்பூண்டு ஒன்றதுவசம்புநேராய்
விருதுடன்நறுக்கிமேலும் *வீழியின்இலையும்நல்ல
திருபொடுதலையும்தீண்ட சிறியபுள்ளடிவகைக்கு
ஒருபிடிபாண்டத்திலிட்டு உடனதைவறுத்திடாயே. 597
*வீழி-விழுதி.

வறுத்துபொன்னிறமதாக மருவுமுன்மருந்துகூட்டி
கறுத்திடும்படிகால்எண்ணெய் கலந்துகாய்ச்சிறக்கிக்கொண்டு
அறுத்துமுப்பொழுதுவார்க்க அடிஉள்ளேவாங்குமற்ற
வெறுத்திடுகணங்களெல்லாம் வீறிட்டுஓடிப்போமே. 598

அடித்தள்ளி இரத்தங்கண்டால் மருந்து.

இஞ்சிமேற்புறணிசிவி எழிலுடன்துவாரமிட்டு
மிஞ்சியபெருங்காயந்தான் விரகனென்றதற்குள்வைத்து

தஞ்சிமேமேலேமூடி தயிரினில்வேகவைத்து
அஞ்சியப் *பெருகுவேறில் அரைத்துண் தீருமன்றே.
*பெருகுவேறில்-வேருதயிரில்

*அஷ்டக்கணத்திற்கு பாலசஞ்சீவிமாத்திரை அஷ்டகணம்-எட்டுக்கணம் தன்வந்திரி—எண்சீராசிரிய விருத்தம்.

செயலானகல்நாரு *கிராம்புபத்திரி செவியந்திப்பிலி விடைதிந்தான்றியோடு, முயலானகருஞ்சீரம் அக்கரகாரம் முருகடுகுரோகணியும்சாதிக்காயும் வயலானபத்திரியும் கடக சிங்கி வசனித்தகூயாசானிகஸ்தூரிபூரம், மையலாஞ்சீரகங் கோரோசனேயோடேரக்கமரத்திட்ட குங்குமப்பூசமனதாமே.
*கிராம்புபத்திரி-இலவங்கப்பத்திரி.

சமன்இஞ்சிச்சாறரைப்புசாமம் ஒன்றுதனிகையான்சாறரைப்புசாமமொன்று, கமன்நாரத்தங்கனிச்சார் *கடிகை மூன்று கல்லிலரை பயறளவாய்நோய்கட்கிய, நமனில்லேஎட்சி நீர்ப்புள்பறவைதோஷம் நளிர்சுரமுங்கழிச்சலொடு இருமலீளை, எமனில்லை காசம்எட்டுக்கணமுமாந்தம் ஏகுமிதுபால சஞ்சீவியென்றே. 601

அஷ்டக்கணத்திற்கும் வேறு அமிர்தசஞ்சீவி குளிகை.
அறுசீராசிரிய விருத்தம்.

சாத்திரபேதிக்கோஷ்டமுடன் த'னேஏலம்இலவங்கம்
காத்திரமானசந்தனமும் கடுகுரோகணிஇலுப்பைப்பூ
தோத்திரமானநன்னாரி துய்யவிலாமிச் *சிறுவேலி
மாத்திரையாகஅரைப்பதற்குமருந்துஇன்னஞ்சொல்வோமே
*இருவேலி-வெட்டிவேர்.

சொல்லியதிப்பிலிஅதிமதுரம் துலங்குமுத்தக்காசுடனே
வல்லமுந்திரிகைப்பழமும் வளர்பேரீந்துப்பழமுடனே
எல்லாம்எடுத்துகமன்கொண்டுஇதயமாய்கருப்பஞ்சாறுவிட்டு
நல்லாய்யரைத்துகடலேநிறை நலமாய்நிழலில்வுலர்த்திடுமே.

உலர்ந்ததோர்மருந்துதன்னே உற்றதோர்வியாதிக்கெல்லாம்
நலம்பெறுமுலைப்பால்வெந்நீர் தன்னிலோர்உண்டைநல்கில்
கலந்திடுமாந்தம்அஷ்டக் கணங்களும்சுரந்தாகம்போம்
அலங் *குறுமுனியுரைத்த அமிர்தசஞ்சீவியாமே. 604
*குறுமுனி-அகத்தியர்.

அஷ்டகணத்திற்கு வேறுபூபதி மாத்திரை—ஆசிரியவிருத்தம்

ரந்தனம்நன்னாரிபுளியவித்தோட்டுடன் சாத்திரபேதியும் *முத்தமும், *தாமரைகிரைநாயுருவிவல்லாரை சாதிக்காயும் பத்திரி, இந்தவகைசண்பமெகல் நாருதிப்பிலிஇருவாட்சிவேருமதனில், *இருசீரகத்தோடு இலவங்கப்பட்டையும் ஏலம்உருத்

திராக்ஷமுதலாய், வித்தைகோரோசினைக் *கானிவேர் *திரு
மேனிவிரிகலங் கொம்புசமனுய், விடுநீரும்வல்லாரைக்காணி
யின்னீர்தனில் விதமாகவேயரைத்து அந்தமுளதேற்றுவித்
தென்னவும்உலர்த்திலே அநுபானமீதிலீய அஷ்டகணமுத
லாகவிட்டோடுமென முனிவரருளுர் பூபதியிதே. 605

* முத்தம்-கோரைக்கிழங்கு * தாமரை-ஓரிதழ்த்தாமரை இருசீரகம்-நற்சீரகம் கருஞ்சீரகம் * காணி-பொன்னுங்கணி * திருமேனி-குப்பைமேனி.

அஷ்டகணத்திற்கு வேறு எண்ணை—அறுசீராசிரியவிருத்தம்

வேண்டும்விளக்கெண்ணை படிவெள்ளாட்டுப்பால்அவ்வளவு
நீண்டக்கிளுவைக்கருவேலும் நினைவாய்ப்பட்டைசருள்ளி
ஈண்டங்கொழுந்துஒருபிடிதான் இவைகளெல்லாம்ஓரளவாய்
தூண்டும்பலமேசீரகமும் துதிகால்மாசுக்கட்டியதே 606

கொச்சகம்.

கட்டிப்பொடிமற்றவையே கடியகட்டிஎண்கணயிற்குள்
கெட்டிஅனலேற்றிக்கேள் மெழுகுபதமாக
பொட்டெனவேபாலவர்க்குப் பொங்கக்கரண்டியிட
அஷ்டகணகோஷமுதல் அணுகாதுமாந்தமுமே. 607

அஷ்டகணத்திற்கு ஒன்பது மாந்தத்திற்கும்
வல்லாரைநெய் ஆனந்தக்களிப்பு.

தானந்தனித்தவனுண்டி நல்ல-தயவாகதனயர்க்குபிணி
தீரநாடி ஆனந்தங்களிப்பையேபாடி-பெற்ற அன்னைப்பிதா
வுக் கறைகிறென்கோடி. 608

சித்திரமானதுப்புதுமை நல்லச்சீரானவல்லாரைநெய்
இகதருமை நத்தினபேருக்குரிமை அந்த நாதாக்களறிந்தாற்
காலறிவார்கள் பெருமை. 609

பத்திரமாம்பச்சைமூலி நல்லபாங்கான வல்லாரைப் பல
நூறிசாலில், வைத்திடுநீரெட்டுப்படியாய் இதை வகையாகவிட்
டெரிஎட்டொன்றதாக. 610

சுத்தாவின்நெய்யொன்றுவிட்டு இதில் சூட்டவேகடைச்
சரக்சவைகளைமூட்டு, வித்தானசுக்குடன்தீட்டு நல்லவித
மான ஏலம் கலங்கொம்புமாட்டு. 611

சத்தானசாதிக்காய்நீட்டு நல்லச்சாதகமானதோர் தாளி
சம் கூட்டு, எத்தானபத்திரிபோட்டு நல்ல இதமானகோஷ்டம்
விலம் வெட்டிநாட்டு. 612

சிங்காரமானநற்சீரம் நல்லச் சீரானதான்றிக்கோலம்
பொன்னுரம், வெங்காரம்வையகாரம் நல்ல வீறுனசண்பக
மும் கோரம். 613

சங்காரகுங்கஸ்தூரி மஞ்சட் சாதகமானதோர் இம்பூறல்வேரும், நங்கார்குளிக்குங்கச்சோளம் நல்லநலமானமல்லியும் ரோகணிசேரும். 614

இத்தயானசரக்கும் இதில் ஏற்றக்குறைச்சலிலாம லெவர்க்கும், கத்தனைப்போற்றிநினைக்கும் வகைக் கண்டுவிருகனெவடையதுதாக்கும். 615

அத்தனையும்படி ஆவின்பாலிலாட்டியே அம்மியிலரைத்திடுவீரே, வற்றினவல்லாரைநீர்க்குள் வகையாகவேசேர்த்தசரக்கைக்கரைத்து. 616

கண்டத்துபாண்டத்திலூற்றி சொன்ன கருதாவி நெய்யதை ஒருபடியூற்றி, விண்டித்துதீயனலேற்றி நல்லவிதமாகமொண்டதை திரள்பதத்தூற்றி. 618

கிண்டித்து தான்பதம்பார்த்து நல்லக்கெடியான பீங்காணில் துடியாகவடித்து, கண்டித்தநோய்களுக்கேற்று இந்த சதிரான வல்லாரைநெய்தினங்குடித்து. 618

இட்டிடும்வல்லாரைநெய்க்கு விட்டு ஏகும்வியாதியை இதமுடன்சொல்வேன், மட்டுப்படாதொந்தமாந்தம் இன்னம் மாருட்டமாய்வந்த வல்லப்போர்மாந்தம். 619

கட்டுக்கடங்காதமேகம் பொல்லா காறரோகமென்ற வருவிஷநோயும், முற்றின ஈளை இறைப்புகாந்தும் மூலகணங்களும் உட்சுரமேலும். 620

கத்திடுங்சர்த்திஇருமல் கொடுங் காசம்போல்கக்குஞ் சுவாசசுரமும், பற்றிடும்நெய்யென்ற தெல்லாம் நல்லப் பாங்காகவே ரண்டுநேரமருந்தே. 621

இவ்வல்லாரைநெய் சிறியவர்கட்கும் பெரியவர்கட்குமாம், பதினெட்டுக்கணம் கணவெட்டைச்சுரம் உலர்ந்ததேகத்திற்கு

பிரமமுனிசொன்ன எண்ணெ—சந்த விருத்தம்.

ஆட்டியஎண்ணெ அதுபடியொன்று
கூட்டெழுசுத்திக் குமரிச்சோறது
மீட்டுத்தேங்காயளவு வெந்தயம்
ஊட்டுதுட்டெடை யூதப்பொட்டிடே. 622

எண்சீராசிரிய விருத்தம்.

ஊறியதோர்சலத்தோடே வெந்தயமுங்கூட ஊற்றிவிடு எண்ணெயிலேகலந்தொன்றாக, கூறியீருள்ளி பலம்அரிந்துபோடு குமுறவேயடுப்பேற்றிமெழுகதாக, ஆறியபின்வடித்தெடுத்துவைத்துக்கொண்டு அழகாகநேரமொரு கரண்டிவீதம், கோறிகொடுபதினெட்டு கணமுந்தானே குணமாகுங்கண வெட்டைச்சுரங்கட்போமே. 623

தோஷம் 9-மாந்தம் 9-தெற்கத்துக் கனமுதலாகிய 18 கணத்திற்கும் எண்ணெய்.

வெள்ளீண்டுதூதுவளை சங்கும்குப்பி *வேலியொடு பூவரசு குப்பைமேனி, நள்ளாடாதோடைசாரணை பூலாவும் நரிபயற் றங்கொடி பிரமிவேளைக்கன்னி, பள்ளவேபதின்மூன் றுவேர் களியாவும் பரிந்திடித்தசாறுபடியொன்றதாகும், கள்ளமிலா விளக்கெண்ணெய்ப் படியிரண்டு கருஞ்சீரகம்புனுகோமம் பூண்டுதானே. 624

*வேலி-உத்தாமணி கன்னி-கற்றாழை.

பூண்டுக்கோரோசினையுஞ்சண்பகப்பூ புகழ்வசம்பு சாதிக் காய்தான்றிக்காயும், தாண்டுடனேவகைக்குப்பலம் அரைய தாகசமரசமா யரைத்தெண்ணை யதிற்கலந்து. நீண்டுடனே காய்ச்சியொருகரண்டிவீதம் நீனைவாககொடுத்துவரத் தீரும் நோய்கேள் கூண்டுடனே மாந்தமொன்பதுவும்போமே. 625

வெண்பா.

போகுமேகுழந்தைகட்குப் பொல்லாபதினெண்கணமும்
தாமேவியாதியெல்லாந் தாந்தீரும் தேமே
மலரளகமாதே மாயதெற்கத்துகணம்
தனமீதுதீரு முண்மைதான். 626

18-கணத்திற்கும் அட்சரம் காய்ச்சலுக்கும் பாலசஞ்சீவி எண்ணை– எண்சீராசிரிய விருத்தம்.

இம்பூரல்சிறுகீரை முசுக்கைக்கொவ்வை எலிசெவியுங் குரும்பை பொன்னுங்கணி இரண்டு, அம்பானருப்பையுட மேனிதானும் அவுரியுடன் பொடுதலைநல்லாடாதோடை, வம் பான வல்லாரைத்துளசி *வாலிவளர்தூதுவளை கோழியவரை கொன்றை, முன்பானதகரைகையாந்தகரையொடு முருங்கை யிலைப்பட்டை விட்ணுகாந்திகூட்டே. 627

*வாலி-குதிரைவாலி.

கூட்டு 9 ஓரிதழ்வசனம் படகம்நிம்பம் கொள்ளானைநெ ருஞ்சில்நரிப்பயறிருள்ளி, வாட்டுநறுவிலியினிலைசரசமெல் லாம் வாங்கியெண்ணைக்கொற்றைரட்டிவகையாய்ச் சேர்த்து, பூட்டுகற்கம் *பஞ்சமூலஞ்சாதிக்காய்புதியகருஞ்சீரகமும் சாதி பத்ரி, நாட்டு *பஞ்சதிரவியமோடுள்ளிதுக்கம் நற்கோரோசி னைக்காவகட்டிதானே. 628

* ஓரிதழ்வனசம் - ஓரிதழ்தாமரை * படகம் - பற்படகம்
* பஞ்சமூலம்-சுக்கு செவ்வியம் பேரரத்தை சித்திரமூலம் கண்டுபாரங்கி *பஞ்சதிரவியம்-ஏலம் சண்பகப்பூ சீரகம் கிராம்பு கோஷ்டம்.

இதுவுமது.

கட்டிக்கம்பி பிசினியொரு கழஞ்சுகூட்டி கலந்தரைத்து மெழுகுபதம்வடித்துகொண்டு திட்டமுடன் அருந்திடஅட்ச ரங்கட்காய்ச்சல்சேர்ந்த பதினெண்கண ழந்திசைக்கெட்டோ டும், வட்டதனைப்பெண்ணரசே பத்தியங்கேள் வகையான ஈருள்ள முருங்கக்கீரை, சட்டமுடனே எண்ணசொன்னேன் பாலசஞ்சீவி இந்தயெண்ணை பலந்தானே. 629

18-கணத்திற்கு வேறு நந்தீஸ்வரர் சொன்ன நெய்.

தேறவேயின்னமொரு கருவைக்கேளு சிவனெனக்கு சொன்னபடிசொல்லுகின்றேன், ஆறவேபாதனைதான் சமூலம்வாங்கி *அமுதசர்க்கரைசேர்த்துக் குழம்பதாக்கி, ஊறவே *ஆவெண்ணை கூடச்சேர்த்து உறுப்பாகப்பருவமாய்க்கிண்டி வைத்து, கூறவேசாதிக்காய் சாதிபத்திரிக்குணமுடனே ஏலரிசிக்கூடப்போடே. 630

* அமுதசர்க்கரை-சீந்தில்சர்க்கரை * ஆவெண்ணை-பசு வெண்ணை.

போட்டதனை அனலில்வைத்து வெதுப்பிநீதான் புனித முடன்பெழுகுமதம்வடித்துககொண்டு, நாட்டதனைகுழந்தை கட்கு கரண்டியிட்டால் நகருமே நோய்களெல்லாம் நாற்பத் தொன்றில், பூட்டதனை இதுபூட்டு கணங்கட்கெல்லாம் புகழாக சொல்லிவிட்டேன் அறிந்துபாரு, தேட்டதனைத்தேடாதே நெய்யைத்தேடு திறந்துவிட்டேன் குழந்தைகட்கு இதுநெய் யாமே. 631

நெய்யதனைக்குழந்தைகள்தான் கொண்டுதானல் நேரா னகணரோகம் பதினெட்டும்போம், பொய்யதனைச்சொல்ல வில்லை தோஷம்போகும் புதுமையுள்ளவயிற்றிரைச்சல்கழிச் சல் போகும்பையதனைப்பயல்களுக்குங் கொடுக்கலாம், உய்ய தனை ஒளியாமல்சொல்லிவிட்டேன் ஒருவருக்குஞ் சொல்லா ஒளித்துவைய்யே. 632

இம்மூன்று மொருதொடர்.

மாந்தம் 18-க்கும் கணம் 21-க்கும் வேறு எண்ணை.

அறுசீராசிரிய விருத்தம்.

பொன்னுங்கணியிலையுடனே புகழுந்துளசித்தகரையிலை
மின்னார்க்கீழ்வாய்நெல்லியிலை வெண்ணொச்சியிலையும்சின்னியிலை
பன்னார்நாயுரிவியினிலையும் பகரம்மானபச்சரிசியிலை
நன்னார்கருநொச்சியிலையும் நாடும்இலைகளெட்டொன்றே.

இதுவுமது.

ஒன்றேநாவலின் கொழுந்து உயராவாரையின்கொழுந்து
வென்றேவேப்பங்கொளுந்துடனே விளங்குஞ்சூரையின்
[கொழுந்து
மொன்றேமுடக்கொற்றாங்கொழுந்து முருங்கைதுளிர்புங்கன்
கொழுந்து, குன்றேரனையதனத்தாளே கோதில்லா
[கொழுந்துகளே. 634

கொழுந்துவகைகள் ஒரேழு கூறும் ஒரிதழ்தாமரையும்
வழும்புளியாரைவல்லாரை வாகாச்சிறுபுள்ளடியும்
எழிந்தநரிபயிற்றங்கொடிதான இண்டந்தண்டுமுசுமுசக்கை
விழுந்தஅகத்திப்பழுப்புடனே வீறுசீந்தில்கொடியாமே. 635

ஆமேஆடாதோடை செழும் ஆடுதின்னாப்பாலையொடு
காமேவிட்ணுகரந்தையுடன் கதித்தமுட்காவேளையுமே
தாமேஇவைகட்பதின்மூன்றுதரும் ஆவாரைதன்வேரும்
நாமேசொன்னேம்விடத்தலைவேர் நல்லநிலக்குமிழின்வேரே.

வேரேசிறுகீரையின்வேரும் வில்வவேர் உத்தாமணிவேர்
தாரேமிளகுதக்காளிவேர்தைவேளையின்வேர்சங்கன்வேர்
சாரேகண்டங்கத்திரிவேர்கனத்த நாய்வேளையின்வேரும்
பாரேகுட்டிவிளாவின்வேர் பருசங்கன்குப்பியின்வேரே. 637

குப்பிபதின்மூன்றும்வகைக்குக்கொள்ளும்ஒவ்வொருபிடியாக
வைப்பவேர்வகைகிழாயமிட்டு மற்றவையெல்லாஞ்சாற்வாங்கி
தப்பிசிற்றாமணக்கெண்ணை தானேபடியொன்றதில்சொன்ன
ஒப்பிக்கிழாயம்சாறுகளும் ஊற்றிக்கடைசரக்கைக்கேளே.

கேளே * கமடத்தோடோமம் கிளருங்கடல்லீரைசீரகமும்
காளேதிப்பிலிரோகணியும் சார்ந்தகிராம்புகருஞ்சீரம்
காளேதிகழ்பற்படகமொடு நல்லப் * பூவந்திப்பழமும்
ஆளேவசம்புபெருங்காயம் ஆனசெங்கதாரிப்பட்டை. 639

* கமடம்-ஆமை * பூவந்தி மணிப்புங்கு

பட்டையிவைவகைபதின்மூன்று பகரும்வகைக்குக்கழஞ்சொ
இட்டவஸ்திரகாயஞ்செய்தெண்ணை விட்டுஅடுப்பேற்றி [ன்று
வட்டமெழுகுபதத்திறக்கிவடித்தே அந்திச்சந்தியுமே [வோமே.
துட்டெடைஎண்ணை உட்கொள்ளத்துலையும் நோய்கட்சொல்

இதுவுமது.

சொல்வோம்அட்சரகண முடனே துடுக்காய்விடாமலேவலிக்
வல்லக்குமரித்தலைநோயும் வரட்கணமுடன்சுழிகணமும் [கும்
வெல்வோமாந்தகணமோடு மீறுநீர்க்கமம்இசுவுகணம்
புல்வோம்கோட்டாவிக்கணமும் போராடியமுக்குக்கணமே
மூக்குக்கணமுமுறுக்குகணமும் மூலகணமும்வலிகணமும்
சொக்குஞ்சொருகுகணத்தோடே துஷ்டச்சயித்தியகணமும்
ஒக்கும்பொருமல்மலக்கணமும் ஊதுக்கணமும்விக்கல்கணம்
தொக்குமிகுத்ததூங்குகணம் சொல்லிவையெல்லாந்தீர்ந்திடும்
தீருந்த *சநாட்கொருதரந்தான் சேரரண்டுதுட்டெடை
பாருஞ்சகலவியாதியும் பதரியோடும்பத்தியங்கேள்[கொடுத்து
காருங்கவிக்கப்புளியிறைச்சிக் கரப்பான்பண்டந்தள்ளிவிடு
சாருமிளகுநீறுஞ்சோறும் சாப்பிடகைவல்லியமாமே. 643

* தசநாள்-பத்துநாள்.

**சகலகணத்திற்கும் வேறு கிழாயம்—எண்சீராசிரிய விருத்தம்**

நீர்முள்ளிசுருள்ளித் திரிபலாதி நேரார்கபசுமோரிற்கிழா யஞ்செய்து, ஏரெட்டொன்றாய்க் காய்ச்சியிறக்கிக்கொண்டு இருப்புமொந்தைதன்னிலேவார்த்துவைத்து, சீராகஒருசங்கு இரண்டுசங்குதினங்கொடுக்க தீராதகணமுந்தீரும், சார்ந்தல ருங்குழல்மடவாய்மருந்தினோடு சங்கம்வேர் ஒக்கச்சாரித்துக் கொள்ளே. 644

**சகலகணத்திற்கும் வேறு நெய்—அறுசீராசிரிய விருத்தம்.**

காரைநற்கனியின்சாறு கரும்பினிற் பஞ்சதாரை
ஓரொருவகைக்குநாழி உடனேநானுளி * ஆப்பால்
சேரவேவிட்டுப்பாகாய்த் திரளநெய்யுழக்குவிட்டு
சாரநாளெரித்துக்கொள்ள சகலமாங்கணமும்போமே. 645

* பஞ்சதாரை-சர்க்கரை * ஆப்பால்-பசுவின்பால்.

**சகலகணத்திற்கும் வேறு எண்ணெ—எண்சீராசிரிய விருத்தம்**

விளக்கெண்ணெய் படியொன்றுதுமட்டிகாய்தான் வெள் வைக்கோல் சுட்டதன்சாற்படிதான்காலும், முளக்கமெனுந் தக்காளிச்சாறுகாலும் முதிர்ந்த வெண்காயச்சாறுபடிதான் காலும், இளக்கிஎண்ணெய்தனில்போட்டுக்கடைமருந்து இயம் புகிறேன்வால்மிளகுபணம் அரைக்கால், அளக்ககோரோசி னையும்பணம் அரைக்கால் அரையுங்கஸ்தூரிமஞ்சள்வெந்தய மாமே. 646

இதுவுமது.

வெந்தயந்தான்சிற்றரத்தைபேரரத்தை விதமானகருஞ் சீரம்லவங்கப்பட்டை, சிந்தனையில்லாபெரியலவங்கப்பட்டை

திறமானமாகாணிப்பணந்தான்தூக்கு முந்தவேஇடித்தெண்
ணெய்யதனிற்போட்டு முக்யபாய்பதத்திறக்கிக் கரண்டிக்கொ
ள்ள வந்தகணஞ்சலமுந்தான் போகுமென்று வசனித்தார்
மிளகுநீர்ச்சாறுஞ்சோறே. 647

சகலகணத்திற்கும் வேறுஎண்ணெ—அறுசீராசிரிய விருத்தம்

செப்புநெஞ்சில்சிறுபுளடி சிறியஅம்மான்பற்சரிசி
சொப்புத்தகரைவேருடனே கூறும்நரிப்பயற்றங்கொடியும்
அப்பும்அகத்திபட்டையினம்அருவெண்காயம்இவைவகைக்கு
தப்பக்கழற்சிக்காயளவு நறுக்கிவிளக்கெண்ணெயுமாமே. 648

ஆமேஅரைக்கால்படிதனிலே அன்பாய்போட்டுதான்கலக்கி
தாமேசூரியபுடமாக சாமம்இரண்டுதான் வைத்து
தோமேதுட்டெடையீந்தாக்கால் தோகாய்சகலகணந்தீரும்
பாமேமுக்கால்நின்றுவிடும் பத்தியமாகவைப்பாயே. 649

கணவகுப்பு முற்றிற்று.

இங்ஙனஞ் சொல்லிய கணங்கள் பாலகர்க்கு பதினாறு
பிராமட்டும் இருக்குமென்பர்.

அகஸ்தியர் திருவடிகளே சரணம்.

# கரப்பான் வகுப்பு

---

பதினெட்டுக் கரப்பான்களின் பெயர் கூறுகின்றார்.

எண்சீராசிரிய விருத்தம்.

செங்கரப்பான் அனல்கரப்பான் தானும்மண்டைசிரங்கு
பண்ணும்அரிகரப்பான்பொரிகரப்பான்,அங்கமதிலெழுகரப்
பான் தானுமிக்க அளராம்உதிரக்கரப்பான்கட்டியோடு, பொ
ங்கமாய்வீங்கியகரப்பானுந்தான் புகலரிசட்டைதடிவெடிகரப்
பான், சிங்கமுகளரிகரப்பான் வாதபித்தச் சேஷ்மத்தோடே
கரப்பான் பதினெட்டாமே. 650

வாதகரப்பான் குணம்—வெண்பா.

இயம்புதிமிர்க்காய்ச்சல் இயங்குவிக்குந்திரட்சி
தயங்குகணந்தோன்றும் தான்கரப்பான் நயம்படவே
செந்தாமரையாளே செப்பு. 651

பித்தகரப்பான் குணம்

செப்புத்தலைநெறித்து சேரும்காய்ச்சல்தினவு
ஒப்பச்சிவந்தெரித் துட்டணமுந்தப்பாமல்

வாந்திவரும்நீர்ச்சிவக்கும் வந்துமலஞ்சிக்கிவிடு
சேர்ந்தபித்தச்செங்கரப்பான் திண்ணம். 652

சேஷ்மகரப்பான் குணம்.

திண்ணஞ்சேஷ்மக்கரப்பான் செய்யும்வகைகேளு
பண்ணும்வாயிற்கிரந்திப் பற்றிவிடும் எண்ணரிய
மண்டைவலிக்கும் மணிப்புடையவாளகத்திற்
கெண்டைவிழியாளே நீகேள். 653

கரப்பான் குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

பிள்ளையுங்கனத்திருக்கும் பிரண்டைபோல்தடித்துக்கட்டும்
உள்ளமுஞ்சிவந்துகண்ணில் உடல்தனில்வெளுத்திருக்கும்
தள்ளவேமேனிவாடித் தலையெடுத்திராதுகண்டாய்
கள்ளவிழ்கோதைமாதே கரப்பானின்குணமிதே, 654

கரப்பானுக்கும் மேற்பூச்சுஎண்ணை—எண்சீராசிரியவிருத்தம்

மிளகுள்ளிவசம்புவகைவிரகன்ரண்டு வெண்காயம்பலம் அரைதான்நெல்லிமுள்ளி, இளகபூவரசம்பூச்சுட்டச்சாம்பல் இதமாகஒருபிடியும் இவையெல்லாந்தான், விளராக ஆடுதின்னுப்பாலைச்சாறுவிட்டரைத்து காலரைக்கால்படிதான் எண்ணெய், உளமகிழமருந்தையதிலிழைத்துதீயில் உண்மையுடன் கொதிக்கவைத்திறக்கிஆற்றே. 655

அறுசீராசிரிய விருத்தம்.

ஆற்றிக்கோழிஇறகதனல் அள்ளுள்வார்த்துகரப்பான்மேலே
தூற்றித்தடவகரப்பானுந் துலைந்தேபோகும் இப்பாலே
ஏற்றிஇரைச்சிக்கவிச்சுடனே இனியகரப்பான்பண்டமெலாம்
சாற்றஆகாவெனமுனிவர் சகசமாகமொழிந்தனரே. 656

கரப்பானுக்கு வேறு மேற்பூச்சு எண்ணெய்.

பூதகரப்பான்பட்டைப்பூ வாசம்பட்டைநுணைப்பட்டை
ஏதமில்கரப்பான்பட்டை இலுப்பைக்கட்டிச்சரியாக
சாதுஇவையெல்லாஞ்சுட்டுச் சாம்பலாக்கிநல்லெண்ணெய்ப்
போதகுழைத்துகரப்பான்மேல்போட தீரும்பொற்கொடியே.

கரப்பான் கிரந்திற்கு வேறு ஆதண்டை எண்ணெய்.

ஆசிரிய விருத்தம்.

புங்குடன் ஆதொண்டை நாய்வேளை சங்குடன்போதலூர் பிடிபிடியளிதாய், புதுவசம்புள் இருசீரகம் வெளிச்சை யொடுபொடுதலைகஸ்தூரிநிதியும், பொங்கமுள அரிதகியோட ளவுதான் அரைபோடுபடி வெண்காயமும், பொழிலாய்விளக் கெண்ணெய் இருநாழிதன்னுடனே போட்டிடித்துவைகளெல்

லாம், சங்கநற்குப்பிலே யின்றுசாறுகூடவேதானுமொருநாழி
விட்டு, தையலேபானுபுடமேற்றி யொருகாசளவுதான் பால
கர்க்கியவே, அங்கமதிலெழுகரப்பானேண்டுகர்ப்பத்தில் ஆமி
ருகிரந்திமுதலாய் ஆருந்துடித்துவிடவேறெண்ணெய்தேடாத
ஆதொண்டை எண்ணெய்யிதுவே 658

* கஸ்தூரி-நிசி கஸ்தூரிமஞ்சள் * அரிதகி-கடுக்காய்

கரப்பானுக்கு வேறு எண்ணெய் — தன்வந்திரி.

எண்சீராசிரிய விருத்தம்.

வளமாய்பார்சிற்றேரண் டெண்ணெக்கால்தான் வகையு
டனேபூவரசம்பூவுங்காயும், இளமாய்பார் இடித்ததனைச்சாற்
கால்கூட்டிஇனிசிவந்த *மணிக்காளிச்சாறுகாலும், தளமாய்
பார் *கருவாயின்பட்டை எலம்தண்மையென்ற சிவேதை
யொடுகரப்பான்பட்டை, குளமாய்பார்குமரிச்சா றரைக்கால்
சேர்த்து குஞ்சரமேகடைசரக்கு விரகனென்றே. 659

*மணிக்காளி-மணித்தக்காளி *கருவாபட்டை-இவங்கபட்டை

ஒன்றாகஇவையெல்லாங்கலந்துக்கொண்டு உத்தமமாய்
கடைசரக்கைசூரணித்து, தென்றாகதெளிந்துநன்றாய் அடுப்
பிலேற்றி தேவிமனோமணிதன்னை தியானம்பண்ணி, கன்றா
னக்கணபதியை வணங்கிபோற்றிக் கடுகடுத்துபதம்பார்த்து
இறக்கிக்கொள்ளு, துன்றாகதுட்டெடைதான் மூன்றுவேளை
தொட்டெடுத்து நாவுதனில்கட்டிப்போடே. 660

புகட்டியேமேலெங்குங்கடுகை பூசுசொல்லாதமுன் சொ
ன்னநோய்களோடும், மகட்டியேதாய் தனக்குகவிச்சாகாது
வையகத்தில் பூசணிக்காய்எள்கொள் ஆகா, அதட்டியே எரு
மைப்பால்நெய்யாகாது அன்பாகமற்றதெல்லாங்கூட்டச்சொ
ல்லு, தகட்டியேபதினாறுபிராயமட்டும் தன்மையுடன்மங்கை
யினால்நோயுண்டாமே. (இம்மூன்றுமொருதொடர்.) 661

செங்கரப்பான் குணம் — அறுசீராசிரிய விருத்தம்.

சித்தால்கேளீர்செங்கரப்பான் சிரசுவலிக்குமேல்சிவக்கும்
அத்தால்வெடிக்கும்நீரோடும் அநங்கேமூத்திரமலங்கட்டும்
மத்தால்அங்கமிகமெலியும் மாணக்குறிகளதுகண்டால்
ஒத்தக்கிரியைவகைதானும் உரைப்பேன்ஓஓஒண்ணுதலே

செங்கரப்பானுக்கு நெய்.

பத்துஞ்செங்கரப்பான்தீர பசுவின்நெய்உழக்காதொண்டை
முத்துநன்முதியார்கூந்தல் முருக்கிலைநெருஞ்சில்கொத்தான்
இத்துபூவரசுசின்னி ஈருள்ளிதன்னைக்கொண்டு
எடுத்துடன்அடுப்பிலேற்றி இருபதஞ்சிவந்தபோதே. 663

இதுவுமது.

போதநீகேளாய்முன்பு புகன்றதைவடித்துக்கொண்டு
நீதகல்கரண்டிவீதந் திகழ்ந்தசெய்தன்னிற்கொள்ள
மாதாவுந் தந்தைசெய்த வகையெலாங்கழிந்துபிள்ளை
பேதைசெங்கரப்பான்தீரும் பின்வேறுகுணம்சொல்வாமே.

கருங்கரப்பான் குணம்.

அரியகேளுகாங்கரப்பான் அழுகுங் *குழவிஉடல்வெதுப்பும்
செறியுமூலையும்உண்ணது தேகநிறமும்வெவ்வேருய்க்
கரியமேனிபசுநரம்பு * கதித்தேகாட்டும் பறபறத்து
முருக்கிமிகவுந்றுள்ளிவிடும் முகமும் * பதங்கள்ஊதிடுமே.

*குழவி-பிள்ளை *கதித்தல் எழும்புதல் *பதங்கள் கால்கள்.

கருங்கரப்பான் முதலிய பதினெட்டுக்கரப்பானுக்குமெண்ணே.

அரியமிளகுதுருசு *கடுஅதுவுங்கோஷ்டந்திப்பிலியும்
கரியசீரகமும்ஓமம் கஞ்சாங்கோரைக் *குழிமிட்டான்
சிரியாவாவரைப்பெரியாவாரைச் சிவனார்வேம்புத்தமதாளி
பெரியஎண்ணெக்கொதிப்பித்து பிள்ளைகட்குகொடுப்பீரேல்
வரியகரப்பான் பதினெட்டும் மறந்துபறந்து ஓடிடுமே.

*கடு-கடுக்காய் *குழிமிட்டான்-நத்தைச்சூரி *உத்தமதாளி-உத்தாமணி இகதைந் தடியான-வந்தசெய்யுள்.

அரிகரப்பான் குணம்—வெண்பா.

உத்தஅரிகரப்பான் ஓதக்கேள் ஒண்டொடியீர்
மற்றிலிங்கயோனிப்பற்று வந்திடும்புண் சத்தமாய்
ஆறுமல்புண்கரைக்கும் ஆஆஉருவழிக்கும்
மாறுது இக்குறைத்தின்வாறு.

அரிகரப்பானுக்கு - எண்ணெய் - தன்வந்திரி
எண்சீராசிரிய விருத்தம்.

சூரியானகழிச்சல்வகையெல்லாந்தீரும் குணமுண்டாமிவ்வகையிற்கூர்ந்துபாரு, அரிகரப்பான் எண்ணே தளைவருஷிப்பேண்கேள் அரியகொட்டைக்கரந்தைவேர் *படையின்வேரு, மூரியானபசரியிலை * நீலிப்பட்டை முற்றக் * கோடகசாலைவேரின்பட்டை, கரியானமிளகருணை வேலிநல்லகரிசாலைப் பெருங்களா படைவேரே.

படை-செருப்படை * நீலி-அவுரி * கோடகசாலை சதைகரண்டி * வேலி உத்தாமணி.

இதுவுமது.

வேரான ஆரைவேர் காணிவேர்த்தோல் வீறுபிரமட்டை
சிறுகீரையின்வேர், சீரானவட்டத்திப்பிலியின்வேர் சிவசிவா
புலிதொடக்கிவேரின்பட்டை,காரானபலம்அரையாய்நிறுத்து

வாங்கிகனவசம்பு பலம்அரையும்அதனேடொக்க, ஆரான ரெண்டம்படிகாலாக அவ்வகையும் இடித்துநீயதனிற்சேரே.

*காணி - பொன்னுங்கணி *பிரமட்டை - பேய்மிரட்டி
* வட்டத்திருப்பி-ஆடுதின்னுப்பாலே* புலிதொடக்கி - தொடரி
* ஏரண்டம்-ஆமணக்கு.

அதனிற்சேர்அடுப்பேற்றிக்கொதிக்கக்காய்ச்சி அச்சாற வடிக்கட்டிஇறுத்துக்கொண்டு, அதனிற்சேர்நாளேழுகரண்டி கொள்ளஅரிகரப்பான் சொரிகரப்பான்உமிகரப்பான், அதனிற்சேர்செங்கரப்பான்கருங்கரப்பான் அவைகதிரியோடுமே கண்பாராமல் அதனிற்சேர் மண்டைப்புண் கரப்பான்சூடு அரியவெட்டைகரப்பானும் மயங்கிப்போமே. 670

அரிகரப்பானுக்கு வேறு மேல்பூச்சுதைலம்.

போமென்றமேலுக்கு தைலஞ் சொல்வேன் புகலான உள்ளி *கடுஎருக்கன்பட்டை, வாமென்றமருக்காரை வேரின் பட்டை வட்டக்கிலுகிலுப்பை உத்தாமணியின்வேர்த்தோல் காமென்றநல்லெண்ணெய் அதனிலிட்டு காய்ச்சியேதுவளையிட கருகிப்போகும் நாமென்றஇருமூன்று வேளைபோதும் நல்லதுவாலைத்தைலம் நல்குவீரே. 671

*கடு-கடுக்காய் இருமூன்று-ஆறு இந்நான்கு மொருதொடர்

பால்கரப்பான் குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

காலதுகடுக்குஞ்சந்து *கண்டமும்வெடித்துப்புண்ணாய்
ஏலவேகடிவிஷம்போல் இருந்துபன்னீர்போல்பாய்ந்து
கோலமாய்வற்றிநாறும் குழவியுமொடுங்குமாயில்
மாலருங்குழலாய்வால கரப்பான்செய்வாறுதானே. 672

*கண்டங்-கழுத்து.

இதுவுமது தன்வந்திரி—எண்சீராசிரிய விருத்தம்.

பனியானவிகாரமுற்றநீங்கக்கூறுய் பறபறத்துதேகமெல்லாஞ்சொரிபோலாகி பிணியானசாரையுடல்போலேகாணும் பிணிவாயில்விஷசலந்தான் உதிரம்போல தினியானகுலைவற்றித்திருவழித்து திசதாதுபீடமெல்லாம் நடுநடுங்கி, வனியான இக்குணங்கட் கண்டுதானல்பாலகரப்பானிதென்றறியலாமே

பால கரப்பானுக்கு நெய்.

இயம்பவே இந்நோய்க்குநெய்தானென்று இன்பமாய் சொல்லுவோங்கேளுகேளு, இயம்பவேபூவரசம்பட்டைச்சாறு இன்பமுடன்தானேஓர் கடியுமெய்யா இயம்பவே *சிற்றேரண்டெண்ணெ*ஒன்று இயல்பாகஇவ்விரண்டுஞ் சேர்த்தெரித்து

இயம்பவேகசகசாபால்படிதான் ஒன்று *இருசீரகத்தினெடை கார்கோல் காலே. 674

*சிற்றேரண்டம்-சிற்றுமணக்கு *ஒன்று-படியொன்று *இருசீரகம்-நற்சீரகம் கருஞ்சீரகம்.

இதுவுமது

காலானஏலமுடன் லவங்கம்மாஞ்சில் கரிசாலைநுணா வேரும் வகைபலந்தான், நீலானநிலவுலர்த்திச்சூரணஞ்செய்நெடுஞ்சீனி பலம் ஐந்து நிறுத்தொன்றுக்கி, வாலானசாறெண்ணெய் அடுப்பிலேற்றி வகையுடனே கடுதிரண்டால் சூமணப்போட், டேலானகிண்டி நெய்ப்பாகமாக்கி அரக்கியந்த நெய்யதனை வடித்துக்கொள்ளே. 675

வடித்துமேகரண்டிநிரை உள்ளுக்கேற்றவால்கரப்பான் ரோகம் வகைகேட்டோடும், தடித்துமே ஏழுநாட்கொள்ளும் போது தவறுன புளிகசப்பிரைச்சிமீன்கள், மடித்துமே என் கொள்பாகற்காய் தள்ளுமற்றவெல்லாம் நோய்க்காகு மருவிக் கூட்டு அடித்துமேமேலுக்கு கடுகுபூசு அசாத்தியசெவ்வாப்பு செங்கரப்பான்போமே. 676

சூலை கரப்பான் குணம்—வெண்பா.

பிள்ளைமுகம்வாடிப் பேதவெடிமேனியெல்லாம்
சள்ளைப்பொருந்தி தவிக்குமே—மெள்ளக்கேள்
வள்ளல்முழங்கால்கையு மருவியுண்ணக்கூடாது 677
தள்ளுமென்ற சூலையதுதான்.

சூலைகரப்பானுக்கு எண்ணை—எண்சீராசிய விருத்தம்.

வடக்குவரும்புங்கு சங்காதண்டம்வேர்வலுவரைத்துமூன்றும் விரைவாகச்சேர்த்து, அடக்கமுள்ளவிளக்கெண்ணெய்ப் படிமீடாக ஆனதின்பீருள்ளிஉழக்கரிந்து, விடக்கடுகுரோகணிகால்பலம் *சமுத்திராவிதம்பாதிதூளாக்கி அதனிற்போட்டு, முடக்கிவிடுஞ் சூலைப்புண்கரப்பானேமுன் *பானுபுடம் வைத்து உண்ண நன்றே. 678

*சமுத்திரா-முடக்கற்றான் *பானு-சூரியன்.

மேற்கொள் உதாரணம்—வெண்பா.

சூலைப்பிடிப்பு சொரிசிரங்குவன்கரப்பான்
காலைத்தொடுவாயு கன்மலமுஞ் சாலக்
கடகத்தானேடிவிடுங் காசினியைவிட்டு
முடக்கற்றான் றன்னை மொழி. 679

ஊது கரப்பான் குணம்.

கேளாய்குளிர்காய்ச்சல் கிளருங்கடுங் *கழலை
மூளாவிதான்போல் முயன்றுநிற்கும் நாள்தோறும்

பூசம்போல்வீங்குவிக்கும் புண்ணுகிமூக்கரிக்கும்
வூதுகரப்பான்தோஷம் உற்று 680

*கழலை-கழலைக்கட்டி.

ஊதுகரப்பான் முதலாகிய பதினெட்டுக்கரப்பானுக்கும்
எண்ணெய்—அறுசீராசிரிய விருத்தம்.

அகத்திக்கர்ப்பூரவள்ளி அவுரிவெள்ளறுகுநுங்கு
மகத்துவஆடாதோடை மணித்தக்காளியும்ஆவாரை
சுகத்தொடுசங்கங்குப்பி சொன்னதோர்நிலக்கடம்பு
முகத்தி * நாயகங்கறுத்த நொச்சியுமுருக்குகூட்டே. 681

* நாயகம்-கிரந்திநாயகம்.

இதுவுமது.

பாரினில்ஈரஉள்ளிப் பலவகையுந்துவைத்து
சீர்பெறகைக்குழக்காய் சிறக்கவேபிழிந்துக்கொண்டு
ஏர்பெறஆமக்கின் எண்ணையும்அளந்துகூட்டி
வாரணிமாதேமஞ்சள் மரமஞ்சள் கஸ்தூரிமஞ்சள். 682

சிவதைகடுகுரோகணியும் சீரகமான திருவகையும்
நவதிரிகடுகூடனேதான் நல்லத்திரிபலையுங்கூட்டி
இவைவகைவிருகஞென்ருக எல்லாஞ்சரியாய்நீநிறுத்தி
தவமாயரைத்துமுன்சொன்ன சாற்றில்கரைத்துகலக்கவே.

எல்லாம்ஒன்ருய்தான்கலந்து இதமாயடுப்பில்வைத்தெரித்து
மெல்லமெழுகுபதத்திறக்கி வேறேகலசமதில்வடித்து
நல்லாய்கரண்டியெண்ணெயுமே நல்கஇப்படிமூன்றுநாள்
சொல்லகரப்பான்பதினெட்டுந் துயரப்பட்டுஓடிடுமே. 684

வாசுகரப்பான் வீக்கத்திற் குடிநீர் வெண்பா.

ஓடுகின்றசாரணையும் உப்பும் *அரிதகியும்
வாடுகின்றமாச்சுக்கும் மாககூட்டிநாடி
மருகிக்குடிக்க வாயுகரப்பான்வீக்கம்
பருகபருகக்கழியும்பார். 685

செவ்வாப்பு கரப்பானுக்கு விழுங்கு மாத்திரை தன்வந்திரி.
எண்சீராசிரிய விருத்தம்.

மயங்கிப்போம் விழுங்குமாத்திரைதான்சொல்வேன் மாதரசே சாதிலிங்கம்பூரம்பலம் மயங்கிப்போம்பூங்காவி வகைக்குகாலாய்வண்மையாய் கல்வத்தில்போட்டுக்கொண்டு, மயங்கிப்போம்கோதும்பைக் கஞ்சிவார்த்து மைபோலே சாமம்ரண்டோயாதாட்டி, மயங்கிப்போம்பயதுபோல் உண்டைசெய்து மரச்செப்பில் வைத்தடைத்து மகத்துவங்கேளே. 686

மகத்துவங்கேள் ஓராண்டு பிள்ளைக்கெல்லாம் *வல்சிதனில்பிடித்துண்ணமாந்தமேது மகத்துவங்கேள்சிறுகுழந்தை

யான தற்த மாசிபத்ரிக்கிழாயத்தில் உரைத்கிடாய்நீ, மகத்து வங்கேள்செவ்வாப்புகரப்பான்போகும் சரிசையாய்மாத்திரை யின் மகத்துவம்பார், மகத்துவந்தான் என்னசொல்வேன் இந்நூல்போக்கு மஹாரத்தச்சுருககமென மருவிப்பூனே.

வல்சி-சோறு இவ்விரண்டு மொருதொடர்.

காலகடுவன் மண்டைக்கடுவனுக்கு மருந்து மேற்கட்டு.
எண்சீராசிரிய விருத்தம்.

ஆமணக்கின் இலையதனைத்தலைக்கால்கட்டி ஆதித்தன் உதயத்கில்அவிழ்த்துப்போட்டு, காமகளைக்கும் சலம்விட்டுக் கழுவிபின்பு கனத்தாசங்கினிலைக்கொண்டுவந்து, பூமணக் கும்சட்டியிலிட்டேநருக்கிப்பொடியாகசெய்துபுண்மேல் தேங் காயெண்ணை, மாமணக்கத்தடவியந்ததூளைப்போட மண்டை கால்கடுவனுமேதீர்ந்துபோமே. (ஆதித்தன்-சூரியன்.) 688

கால்கடுவானுக்கு வேறு எண்ணை—அறுசீராசிரிய விருத்தம்.

இலுப்பைப்பட்டைப்பாவட்டை எழில்சதுரக்கள்ளிப்பட்டை
சலிப்பில்லாஈருள்ளியும் வசம்புமநறுக்கியெல்லாந்தான்
குலிக்கியெண்ணெயிற்காய்ச்சிக்கொடுக்கப்பாலர்கால்கடுவன்
அலுப்புப்பட்டுஓடிவிடும் அபில்கூர்மதர்மவிழிமாமயிலே.

எண்வகைக்கரப்பானுக்கு எண்ணை—எழுசீராசிரிய விருத்தம்

எண்வகைகரப்பான் இழந்திடக்கேளு ஈருள்ளிக்கரியசீர கமும் இயம்பியபூதகரப்பனும் வட்டக்கிலுப்பைவேர் காட்டி னிற்பாகல் ஒண்டியமூலமுடன் சதகுப்பை உயர்வெள்ளைக்காக் கணன்மூலம், ஓதியதேவதாரமும்வசம்பு உண்சங்குவெள்ளரு குடனே, நண்புள்ளசீனப்பட்டையுஞ்சுத்தி நவின்றிடும்வகை வகைப்பலங்கால், நாடுசோவாளவிரை இருபதுபின்னச்சங் கந்துப்பிச்சாற்நாழி, அண்டரைத்ததில்சிற்றாமணக்கெண்ணை அதுஒருநாழிவிட்டருந்த, ஆமொருகாசெடை உடல்தனில் பூச அவையெட்டும் அகலுமாமென்றே. 690

மூலம் வேர்மூலம் வேர்சினப்பட்டை பரங்கிப்பட்டை.

பதினெட்டுக்கரப்பானுக்கு—அறுசீராசிரிய விருத்தம்.

புங்கம்பூவும்புளிநடலைப் புனிதமானவசம்புள்ளி
கங்குவாதிசிரகமும் கதித்தபாலைநன்னாரி
பொங்குபசுவின்பால்வார்த்து போத எண்ணையெரித்திடவே
எங்குமுள்ளகரப்பாம்போமெரிக்கும் விளக்கினெண்ணையிதே

பதினெட்டுக்கரப்பானுக்கும் வேறு எண்ணெய்—வெண்பா.

செருப்பினடியிண்டு சேர்கிரந்திநாயகமும்
வெருக்கில்நிலக்கிழங்குவெண்ணொச்சில் நெருக்கசங்கங்

குப்பயிலேச்சங்கு கொட்டக்காந்தை
செப்புங்கழல்துளசி சேர். 692

நிலக்கிழங்கு-நிலப்பனைக்கிழங்கு சுழல்கழற்சி.

இதுவுமது.

சேருங்கருநொச்சில் செங்கரிப்பான் பெருங்கிழங்கு
கூர்முருக்கம்பட்டைக்கொடிவேலி சேருகின்ற
கோழியவரைஉள்ளிக் கோதையேதாதுவளை
கோளியுனதாந் தேட்கொடுக்குகொள். 693

செங்கரிப்பான்-கையாந்தகரை பெருங்கிழங்கு-சீனப்பா
கொடிவேலி-சித்திரமூலம் உள்ளி-வெண்காயம் கோளி-அத்தி

கொள்ளக்கரிசாலைக் கூறுஞ்சங்கம்பட்டை
அள்ளல்அவுரி அழகுகவர் முள்ளங்கிக்
கேளமுக்கருவின் கிழங்கிலையுமாகப்பா
தாளமூலிக்கூடத் தான். 694

பாதாளமூலி-ஆடுதின்னுபாளை.

வந்தகப்பட்டைபிராய் வளர்பூவரசம்பட்டைச்
செத்தப்பழுப்பு சிறுசின்னி ஒத்தநீர்
முள்ளிமுடக்கற்றான் முதிரபுங்கம்பட்டைதண்டை
தள்ளடுவாண்ணுசாணாக்கித்தான். 695

வத்தகம்-வெட்பாலை ஆதண்டை-தண்டை.

சிறுகுறட்டைச்சிந்தில் சேரும்பழுபாகல்
மூறுகுகண்டங்கத்திரிமுள்ளி அறுகுடனே
தன்னெக்கச்சாறு தனியேவடித்துக்கொள்
இன்னங்கேள்சொல்வாம் இசைந்து 696

பெருவாயன்லத்திப்பால் பேரானைலத்திப்பால்
குருவாம்பசுவிலுக் கோமயமும் கருகாத
நிம்பழச்சாறும் நிறைவெண்காயச்சாறும்
இன்பமுடன்எல்லாம் பதக்கு 697

பெருவாயன்-கழுதை குருவாம்-கிறமாம்.

எண்ணெய்க்குறுணிகலந் திவையேவெய்யில்வைத்து
பண்ணும்படிகற்கம் பகரக்கேள் நண்ணும்
மரமஞ்சட் குப்பை வளர் பூதப்பட்டை
தெரிபரங்கிப்பட்டையுடன் சேர். 698

குப்பை-சதகுப்பை பூதப்பட்டை-பூதக்கரப்பான்பட்டை

சேர்செங்கதாரித் திகழும்வேம்பானுடன்
கார்போகரிசி கனவாளம் பாரில்
வசம்புவகைக்கு இரண்டுவிருகனெடை
நிசம்பெறவேகாய்ச்சிவிடு நீர். 699

நீகேள்கரண்டிதா னேராகக்கொள்ள
வாகாய்கரப்பான் வகைதீரும் தோகாய்
சூலிக்குந் தான்கொடுக்கச் சொன்னாரறிந்து
பாலிக்கும்பத்தியஞ்செய் பார். 700

ஷை இதில் கருஞ்சீரகமுங் காட்டுச்சீரகமுஞ் சேர்க்கவும்.

இவ்வெண்ணெய்கர்ப்ப ஸ்ரீகட்கும் குழந்தைகட்கும் பெரியவர்கட்குமாம்.

பதினெட்டுக் கரப்பானுக்கும் வேறு எண்ணெ-தன்வந்திரி.

எண்சீராசிரிய விருத்தம்.

பார்த்திடாய் இருவேலிசெம்பருத்திப் பரிமணித்தக்காளியுடன் பொன்னாங்கணி, பார்த்திடாய் சூரியந்த நத்தைச்சூரி பகரம்மான் பச்சரிசிதகரைபாசி, வார்த்திடார்குட்டிவிளாம்பட்டைப்பாகல்வண்மை கருந்துளசிச் செம்முள்ளி இண்டு, கார்த்திடாய் பாவட்டைப்பொடுதலைத்தான் கருங்காலிக்கழலிலைபுள்ளடியதாமே. 701

இதுவுமது.

ஆமேதான்சுரைதுவரைக்கொன்றைபட்டை அழகானதவமுருங்கை *காலைமேலும், வாமேதான் அசத்திக்கற்றாழச்சோறுவகையான சின்னிஈருள்ளிப்பூண்டு, காமேதான் இவ்வகைக்குதனிச்சாற்வாங்கிக் கடும்பாண்டம் அதனிற்கால்படிதான் ஊற்று, தாமேதான் ரவியில்வைத்துகடை மருந்துதாரணியில்நலஓமம் சாதிக்காயே. 702

சாலை-கோடகசாலை.

காயோடுபத்திரியும்வசம்புகோஷ்டம் கண்மணியேகொத்தமல்லிக் காட்டுச்சீரம், வாயோடுதிப்பிலியும் இஞ்சிக்கூட்டுவகைவகைக்கு விருகனெடைஅஞ்சதாக, தாயோடு ஆமணக்கின் எண்ணைதானும் தப்பாமல்குறுணியதாய் அளந்து ஊற்றி, மாயோடு சரக்கையெல்லாமெழுகாய் ஆட்டி, வண்மையாய்கலக்கிட்டு மகிமைபாரே. 703

இதுவுமது.

மகிமையாய் எரித்திட்டு எண்ணெயாக்கி வளமாக சிறு குழந்தை ஆண்டீரெட்டு, மகிமைபாரிதுவயதில்கரப்பான்கண்டால்வகையுடனே பதினெட்டுக் கரப்பானும்போம், செகமகிழும்இந்தஎண்ணெய்செப்பக்கூடாதேயத்தில்உண்மையென்ற பண்டிதற்கு, அகமகிழும்நூலிந்ததர்மத்தோரை அங்கரத்தால் அவர்பதத்தைதெண்டஞ்செய்யே. 704

பதினெட்டுக்கரப்பானுக்கு வேறு எண்ணெ.

அறுசீராசிரிய விருத்தம்.

பூவரசுசெங்கத்தாரி பூதகரப்பான்கண்டங்காரி
மேவுநிலவாகைவகைக்கு வளங்கும்பத்துப்பலமாக
ஏவநறுக்கிக்கிழாயமிட்டு இறுத் * தாட்டுப்பால்படியொன்று
ஆவமிளகுசததுப்பை அரியவசம்புவலம்புரிக்காய் 705

ஆட்டுப்பால்-காராட்டுப்பால்.

காய்வெள்ளுள்ளிப்பரங்கிப்பட்டைக் கார்கோலரிசிகருஞ்சீரம்
மூவகைக்குழஞ்சிரண்டு முலைப்பால்லிட்டுத்தான் அரைத்து
பாயமுற்கிழாயத்திற்கரைத்து பாய்வெள்ளாட்டுப்பால்விட்டு
தோயும்எண்ணெயிற்கலந்து சுகமாய்மெழுகுபதமிறக்கே. 706

இறக்கிப்பிள்ளைக்குள்ளுக்கு ஈந்துமேலுக்கும்பூச
திறக்கும்பதினென்கரப்பானும் தீர்ந்துபோகும்உண்மையிது
பறக்குமின்னம்பத்தியங்கார் பவளவதரபயோதரபூ
சிறக்குமம்மூடையாளே செய்தேபரீஇக்கைப்பார்த்துவிடே.

தொண்ணூற்றாறு கரப்பானுக்கும் எண்ணெ.

கரிசாலை 9 கம்பந்திராய்வேரு கனத்தக்கருடக்கொடியுடனே
பொரிச்சால்பொரியும்பொரிகாரம்பூதகரப்பான்பட்டையுடன்
எரிச்சாறெண்ணெவசம்புள்ளி எனவேகெ - டக்கரப்பான்கள்
மறுத்தால்தொண்ணூற்றறுகரப்பான் மாட்டோமெனவே
[போய்விடுமே

மூந்நூற்றிருபது கரப்பானுக்கும் எண்ணெ.

எழுசீராசிரிய விருத்தம்.

சிறுகுறிஞ்சான்மிளகருணைக் காட்டுமல்லிகெப்பியிடு *பாலொடுவைநிலவிளாவும், அறிவாய்கேள் இவைவேர்கள்வசம் போடுள்ளி ஆகாசகருடனுக்கிழங்குஎல்லாம், தருகாமல்சமன் கூட்டிஅதில்எரண்டம் தந்திடுமேஎண்ணெயதுசமனுய்கொண்டு, முருவவேகாய்ச்சி வடித்தருந்தநித்தம் மூந்நூற்றிருபது கரப்பான் கிரந்திபோமே. 709

பாலொடுவை-கொடிப்பாலை.

சகல கரப்பானுக்கும் மேற்பூச்சு நல்லெண்ணெ.
எண்சீராசிரிய விருத்தம்.

வீங்கியகரப்பான்விடத்தலை *யிலையின் *கள்ளியுந்திருகிய கள்ளி, விளம்பிய *வஜூரம்மாவிலிங்குடனே *மூத்தமுந்தாழைக்கொம்மட்டி, ஓங்குறுகுப்பைமேனியும் அவுரிஉயர்பொடுதலைநிலக்கடம்பு உறும்எருமையின் ஆட்டாங்கொடிநொச்சில் ஒப்பும்ஆமணக் *கிண்டிநிலையும், ஆங்கிவை வகைக்குச்சாறு முக்கதனில் அதிகநல்லெண்ணையும் உழக்கு, அவையினிற்கற் சீரகம்கடுகுஅடர் *குருவிந்தம்குந்திரிக்கம், யாங்குள *குக்கில் *திரிகடு *காசியம்பகர்தேவதாரமிவ்வெடைதான், பலம்பலம் டசித்துபூசிக்கொள் கரப்பான் *பானுமுன்பனியெனப்படுமே

*இலையின் கள்ளி-இலைக்கள்ளி *திருகியகள்ளி-திருகுகள்ளி *வஜ்ஜூாம்-சதுரக்கள்ளி *முத்தம்-சங்கனம் *இரண்டு-ஈயச்செடி *குருவிந்தம்-கோரைக்கிழங்கு *குக்கில்-மைசாட்சி *திரிகடுகு-சுக்கு-மிளகு-திப்பிலி *ஆகியம்-கருஞ்சீரகம் *பானு-சூரியன்.

தீராதகெரள்ளிக்கரப்பான் குணம்—அறுசீராசிரியவிருத்தம்

கொத்துக்கள்ளியின்கரப்பான் குணத்தைக்கேளுகோகிலமே
மற்றும்வயிறுதான்வீங்கி மலமுட்டடைக்கும் இளைப்புண்டாம்
கத்துக்குரலும்அரையுண்டாங் கனத்தவிக்கல்உண்டானல்
பத்தும்பதியும்ஓதுவதென் பாலன்பிழைப்பதரிதாமே. 711

சிறுசிறங்கு கிறந்திசூலை சொரிக்கு சாறு.
ஆறுசீராசிரிய விருத்தம்.

கொடிக்கள்ளிதன்னைவாட்டி குறுக்கவேபிழிந்துக்கொண்டு
முடுக்குடன்தின *மூளைக்குமூன்றுநாள் உள்ளேவார்க்கிய
திடத்துடன்கிரந்திசூலை சிரங்கொடுசொரியுந்தானே
நடுக்கறதீருமென்று நாதனாருள்செய்தாரே. 712

*மூளை-குழந்தை.

சிரங்குக்கு தேங்காயெண்ணெ—கலி விருத்தம்.

காட்டுச்சீரகங் கார்ப்போகரிசியும்
மாட்டுங்கஸ்தூரி மஞ்சளும்ஏலமும்
நீட் *டரிதகி நீரடிமுத்துடன்
ஈட்டஆறுஞ் சமனெடையெடே. 713

*அரிதகி-கடுக்காய்.

இதுவுமது.

எடுத்தமைபொடிசெய்து வேண்டுமிளகினி
அடுத்தஓரெடையா *மத்தங்காயினுள்

தொடுத்தடைத்தொன்றரை எருமிட்டைசூழ்
பொடுத்தமாய்புடம் போட்டெடுத்தாற்றிட 714
*மத்தங்காய்-கடுக்காய்.

ஆற்றிமுற்பொடி கூட்டியகண்டமும்
நாற்றிட *நாளிகேரத்தினெண்ணெவிட்
டேற்றிடுசுழிக் கல்லில் அறைத்தற
மாற்றிடெண்ணெய்பின் வார்த்துநீயாட்டிடே. 715
*நாளிகேரம்-தேங்மாய்.

ஆட்டி *பானுமுன் அப்படிமூன்றுநாள்
காட்டிவைத்துக் *கடத்தினில்வந்ததோர்
சாட்டியசிரங்கின் தேல்தடவிட
நாட்டித்தினவு நமைச்சலும்போகுமே. 716
*பானு-சூரியன் *கடம்-சரீரம்.

சொரிக்கு மருந்து தேரையர் - கலி விருத்தம்.

பார்த்துபூவரசம் பட்டைஓர்பலம்
தார்த்துநீரகா ரத்தில்ஆழாக்கிட
ஏற்றுமூன்றுநாள் இவ்விதங்கொண்டிடில்
போற்றுமேசொரி போம்உப்புவிட்டிடே. 717
இஃதொருதொடர்.

பேய்ச் சொரிக்கு மருந்து—எண்சீராசிரிய விருத்தம்.

நோக்கமில்லாபேய்ச்சொரிக்கு மருந்துகேளு நுண்மையுடன் இந்துப்புபொடியாய்ச்செய்து, தாக்கவேநெய்தனிலே பொடியைக்கொட்டி தண்மையுடன் கிண்டியதை ரவியில் வைத்து, தீர்க்கமுடன் தலைக்கிட்டுமேலும்பூசி திறமாகமருநாள் தான் முழுகிப்போடு, தூக்கமில்லாபேய்ச்சொரிதான் ஓடிப் போகும் சுருக்கானமருந்திதுதான் சூக்ஷம்பாரே. 718

கரப்பான் வகுப்பு முற்றிற்று.

---

அகஸ்தியர் திருவடிகளே சரணம்.

# சுர வகுப்பு.

இஃது வாதபித்தசேஷ்ம சுரத்தின் குணம்.

அறுசீராசிரிய விருத்தம்.

மாங்கிஷந்தன்னில்வாத மதுபித்தந்தானுந்தோலில்
தாங்கியஎலும்பிலேயம் சுகமறத்தோன்றும்பின்னர்
சாங்கியமாகநின்று சரீரத்தில்நோயும்பண்ணும்
ஆங்கிதைச்சொல்லவொண்ணு தசீகமாம்உரோகந்தானே.

ஐயம் - சேஷ்மம்

வாதபித்தசேஷ்ம சுரத்திற்கு கோடாசூழி மாத்திரை.

கோரோசனையிருவிராகனெடை கூறுமுரோகணிவிராகனெ
ன்று, நேர்வாளந்தான்விராகனெனென்று நிகழுமுலைபால்விட்டு
ஊராயரைத்துபயறளவு உண்டைசெய்துநிழலுலர்த்தி
ஏரேவாதசுரத்திற்கு இஞ்சிசாற்றிலிட்டுமே. 720

இதுவுமது.

இடுமேபித்தசுரத்திற்கு இதுமுலைப்பாலில்இடதீரும்
அடுமேசேஷ்மசுரத்திற்கு ஆடாதோடையுங்காரி
பொடுமேதூதளைபிட்டவியல் பொருந்தஅவித்தசாற்றிலிட
படுமேஜன்னியெலாந்தீரும் பகருமிச்சாபத்தியமே. 721

காரி - கண்டங்கத்திரி

மாந்தசுரத்திற்கு கிழாயம்.

சீந்தில்தண்டுங்கலிப்பாக்கும் சிவேதைவேருங்கடுக்காயும்
காய்ந்தசுக்குரோகணியும் காயும்நீரில்தகர்த்திட்டு
ஏந்துமுலையாய்இந்நீரை எட்டொன்றாக்கிக்கொடுப்பீரேல்
மாந்தமானசுரமும்போம் வயிறுங்கழியுங்கண்டீரே. 722

சிவேதை (18)கஞ்சிலொன்றுகையின் பசும்பாலிற் பத்து தரஞ்சுத்திசெய்துகொள்க இச்சிவேதைக்குமுறிவுவெள்வேல் பத்து மிளகுகையிலிருந்தால்-பகையாளிவீட்டில் சாப்பிடலாம்

மாந்தசுரகணத்திற்கு வேறு எண்ணை.

எண்சீராசிரிய விருத்தம்.

கடுக்காய்தான்பதினாறுவிரைகட்போக்கிகஸ்தூரிமஞ்சள்
கருடக்கிழங்கு, முடுக்காக மூன்றுவரிசையாய்கொண்டு முறை
யுடனே பொடிசெய்து தைலந்தானும், அடுக்காக நாழியதில்
பொடியைப்போட்டு அனலிமுகம்வைத்துள்ளுக்குங்கொடுத்து
சடுக்கென உச்சியிலிடப்பொருமலோடு தணியாதமாந்தசுரந்
தணியுமென்றே. 723

தைலம் ஆமணக்குநெய் அனலிமுகம் சூரியபுடம்.

மாந்தசுரத்திற்கு வேறு கிழாயம்.

நெல்லியுடன் வேம்புபுளிகரந்தைதானும் நேயம் இருமுட்டி நிரையொன்ருக, சொல்லுமொரிதழின் தாமரையுங் கூட்டிசுக மாகவேநறுக்கித் தோகாய்நீகேள், உள்ளபடிசீரகம்கிராம்பு திப்பிலிஒன்ருகக்கூட்டியே உழக்காய்க்காய்ச்சி, மெல்லவே சிறுவோர்க்குகொடுக்கவேதான் வெதும்பாதுமாந்தசுரம்விட் டுப்போமே. 724

கரந்தை-விஷ்ணுகரந்தை இருமுட்டி-சிற்ருமுட்டிபேராமுட்டி

மாந்தசுரத்திற்கு வேறு கிழாயம்—அறுசீராசிரிய விருத்தம்.

போமோசருள்ளிப்பத்து பொடியாயரிந்துவில்வமொடு
ஆமேஅவுரிபூமிவிளா அரிந்துசிவக்கவறுத்ததனே
வேமேகாய்ச்சிசிறுவோர்க்கு விதமாய்மூன்றுநாள்கொடுக்க
தாமேயணுகுமாந்தசுரம் தணியுங்கணமுந்தரியாதே. 725

பூமிவிளா-நிலவிளா.

மாந்தகணத்திற்கு வேறு கிழாயம்—ஆசிரிய விருத்தம்.

புளிநுணைநெல்லிஓதி வேம்பொடுதகரையும் பொடுதலை அம்மானரிசியும், புகழெட்டுசர்க்குகூவிளஇலேயும் அவ்வோடு பொங்குசிறுபுள்ளடியிலே, நளிர்கோழிஅவரையிலே நிலவிளா தன்னிலேநறிபயற்றங்கொடியுடன், நற்பழகம் பாசியிலேவிஷ் ணுக்கரந்தை நன்ருறிகோரைக்கிழங்கும், தளிர்செருப்படை மணித்தக்காளி வல்லாரைதான் சிந்தில் போய்புடலெலாம், தனிவகைக்கொருபிடிகொடுவந்தரிந்துமே தக்கபொன்னிறம் வறுத்து, களிகளொருபடிசலம்விட்டு கால்படியாய்க் காய்ந்த கியாழமதிலே; கழற்கின்றகோஷ்டம் விளாம்பிசின் வில்வத் தின்கனபிசினிலவம்பிசினுமே. 726

கூவிளம் வில்வம் அவ்வோடு வில்வஓடு.

அறுசீராசிரிய விருத்தம்.

பிசின்மாசிக்காய்சாதிக்காய் பெருகும்வெந்தயமிவைவகைக்கு
விசிதவிராகளடையாக வெதுப்பிபொன்னிறமாய்வறுத்து
புசியப்பொடியாய்செய்தந்தப் பொடியைகிழாயத்தில்தூவி
உசிதஆறுவேளை துய்க்க ஓடுமாந்தகணசுரமே. 727

துய்க்க - சாப்பிட

நாட்படமாந்தசுரம் வாதபித்தசேஷ்மங்கடந்தசுரம்
கனல்சுரத்திற்கும் வில்வாதி மாத்திரை தன்வந்திரி
எண்சீராசிரிய விருத்தம்.

நவின்றசுரவில்வாதிகுளிகைகேளுநற்பச்சைப்பூரங்கால் இலவங்கால், நவின்றிட்டோம்வால்மிளகு சிறுநாகப்பூநன் ருனரோகணியு ஏலம்மாஞ்சி, நவின்றிட்டோம் சுக்குமே சீர

கங்கால் நளினசெவ்வாலம் பருப்பு நிகர்க்கு ஒன்று, நவின் றிட்டோம் பொற்றலையின் சாற்றுலாட்டி நவநாளுஞ் சென்ற பின்பு மிளகுபோலே. 728

பச்சைப்பூரம் பச்சைகற்பூரம் செவ்வாலம்பருப்பு வாளம் பொற்றலை கையாந்தகரை நலநாள் ஒன்பதுநாள்.

மிளகுபோல்வுண்டைசெய்து செப்பில்வைத்து விளங்கு கிற இஞ்சிதேன்மூலைப்பால்தன்னில், மிளகுபோ லிழைத்து ண்ண என்னசொல்வேன் இனிய நாட்சென்ற சுர மாந்தம் போகும், கடுகுபோல்வாதபித்த சேஷமமூன்றுங் கண்டந்த சுரங்கனல் சுரமுங் கழன்று ஓடும், மிளகுபோலிந்தமுறை இந்தபோக்கு மகத்தான நந்தீசர் செயலாங்காணே. 729

இவ்விரண்டு மொருதொடர்.

அட்சரமாந்தசுரத்திற்கு எண்ணை—அறுசீராசிரிய விருத்தம்

பூவரசிலையுங்காய்ப்பூ புகழ்பெறமூன்றுந்தானே
தாவரசமனதாக தயவுடனரைத்துநல்லாய்
ஆவரபலமொன்ருக அடையதைதட்டிக்கொண்டு
தேவர்கள்மகிழுஞ்சிற்றுமணக்குநெய் அரைசேர்கூட்டே.

கூட்டியேகாயவைத்து கூறதில்அடையைப்போட்டு
தீட்டிடுசிவக்கக்காய்ச்சி திகழடையெடுத்துபோட்டு
காட்டியஏலம்ஜாதிக் காய்சாதிபத்ரிமூன்றும்
ஆட்டியவகைவகைக்கு அரைவிராகன் தான்தூக்கே. 731

தூக்கிநீபொடியாய்ச்செய்து துகளிலாஎண்ணைதன்னில்
ஊக்கமாய்கலந்துபின்பு உள்ளுக்குளடைதான் துட்டு
பாக்கியமாகவார்க்கப் பாலரைமயக்கவந்த
ஆக்கியகாய்ச்சல்மற்ற அட்சரமாந்தம்போமே. 732

மாந்தகணசுரம் வயிற்றுப்பல் வாந்திக்கு இரதசிந்தூர
மாத்திரை—தன்வந்திரி—எண்சீராசிரிய விருத்தம்.

தாமோசச்சிந்தூரம் திரிபலாதி தருகுங்குமப்பூ கஸ்தூரி ஏலம்வாமேதான் திரிகடுகுரோசினைத்தான் வளமாக பலங்கா லாய் நிறுத்துக்கொண்டு, காமேதான் கிராம்பெடையும்விருக னென்று கருநொச்சில் சாறுவிட்டுசாமமாட்டி, நாமே சிறு பயறளவுஉண்டைசெய்துநல்துளசிசாற்றிலிடநயந்துகேளே.

திரிபலாதி கடுக்காய் தான்றிக்காய் நெல்லிக்காய் திரி கடுகு சுக்குமிளகு திப்பிலி ரோசினை கோரோசினை.

நயந்துகேள்கணமாந்தம் கணசுரங்கள் நற்பெரிய வயிற் றுப்பல்மாந்தம்போகும், நயந்துகேள் வாந்தி வயிற்றுப்பிசங் கள் நாடாது இவ்வுண்டைநளிநமேற்ற,நயந்துகேள் என்குரு

செயலால் சொன்னேன் நமசிவயமென் றருளை நாவில் போற்று, நயந்துக்கேள் இரஷி யென்றும் பெயருண்டாகி நாங் கண்டபலனெல்லாம் நவின்றிட்டோமே. 734

இவ்விரண்டு மொரு தொடர்.

மாந்தகணசுரதோஷத்திற்கு எண்ணை கும்மி.

ஆமணக்கெண்ணையதுநாழிதான் அடுத்தநுணாச்சாறரைநாழி
பூமணக்கீருள்ளிக்கால்நாழிப்
போதரவாய்க்கும்மி யடியுங்கடி-மன
தாதரவாய்க்கும்மி யடியுங்கடி. 735

இதுவுமது

வெந்தயமரைப்பலங்கூட்டி பெண்ணேமிகுத்திடும் நற்பதத்
பந்தயம்எண்ணையும் பேதிக்க உள்ளுக்குப் [திறக்கி
பழுக்கக்கும்மி யடியுங்கடி நீங்கள்
களிக்கக்கும்மி யடியுங்கடி 736

பாருமந்தசுரகணமுந்தோஷம் பாலகர்க்கெண்ணெய்கொடுத்
தேறுமேபிள்ளைதான் ஊறுமேபிணி [திடவே
மாறுங்கும்மியடியுங்கடி மனந்
தேறுமென்றேகும்மி யடியுங்கடி. 737

மாந்தகணசுரதோஷம் வயிறுகழிச்சல் பித்தம் இருமல் வாந்திக்கு பாலசஞ்சீவி மாத்திரை—எண்சீராசிரியவிருத்தம்

திரிகடுகுவெண்காரம்சாதிலிங்கம் சிறந்திடவே ஐம்மருந்துஞ்சமனதாக, நெறிபடவேஎலிமிச்சம்பழத்தின்சாற்றால்நிக வரைத்து ஒருசாமம் நிரையதாக, குறியுடனே உண்டைதனை பயற்றிற்பாதிகுளிர்ந்த நிழல்தனிலுலர்த்திக்குழவிக்கீய, மறிபடவே பாலசஞ்சீவியென்றுவகுத்துரைத்தார் மலையின்முனி மண்ணுள்ளோர்க்கே. 738

ஐம்மருந்து-ஐந்துவகை மருந்து.

இதுவுமது

மலையின்முனிதானுரைத்த வகையேதென்னில் மாந்தகணசுரதோஷம்வயிற்றிரேட்டம்,கொலைசெய்யும்பித்தமுதிர் இருமல்வாந்தி குலைத்திடுநோயுள்ளதுவுந்துடிதான்போக, நிலைபெறவேபத்திரியை பிட்டதாகி நீர்வாங்கிதிரிகடுகுகற்கமாக்கி, உலையுயர்ந்த கிழாயமதில் கற்கமோடு உண்டை யொன்று தானெடுத்து உரைத்திடாயே. 739

உரைத்திடுமே சுரமிருமல் கணவயமுள்ளு உகந்தகோரோசினையும்ஒக்கக்கூட்டி. கரைத்திடுங் காலிரத்த கனமூலங் கண்டால் கடுகவே சாதிக்காய்புளிவித்தோடு, அரைத்திடுமே

எண்டைஒன்று சரக்குங்கூட்டி அருந்திடவேவில்வபழச்ச தைக்குள்வைத்து, வரைந்திடுமென்றருள்முனிவன் விபஞ் சொன்ன வாலசஞ்சீவியென்றே வசக்கலாமே. 740

வதுக்குங்கால்பத்திரிதன்வகையைக்கேளு மணித்துளசி செம்முள்ளி ஆடாதோடை, பகுத்திடுவாய்தூதுவளை விட்ணு காந்தி பண்புசெறிகண்டங்கத்திரியினோடு, நிகழ்த்திடுமேவெ துப்படக்கிப்பேய்ப்புடோலும் நின்றசங்கின்இலைநொச்சில் னிரைதான்கூட்டி செருத்திடுமே சுவாசசுரமணதோஷங்கள் தெரிந்துரைத்தார் மாமுனி சஞ்சீவியென்றே. 741

பத்திரி-இலைவகை.

கணங்காய்ச்சலின் குணம்.

உந்திதனைப்பற்றியிரவளவும்புண்ணுய் ஒருக்காலே சுவா சந்தான்உண்டாம்மெத்த வந்துசுரம்பூசினூற்போலேகாய்ந்து வருசதமாய்திட்டுமுட்டாய்மயக்கங்காணும், இந்தவகைகணக் காய்ச்சலென்றே நாளும்இயம்புவார்புவிமீது நூல்வல்லோர் கள், சுந்தரியாளுமைபாகன் முனிக்குசொன்ன சூக்ஷிமிதுதா னறிவீருண்மைதானே. (உந்தி-மணிபூரமாகிய நாபி.) 742

கணக்காய்ச்சலுக்கு கலியாணபூசுனிநெய்—ஆசிரியவிருத்தம்

சீராரும்பூசினிச்சாற்றின் இளநீருடன்சொல்ஆவின்நெய் பாலுமாய், திகளுஞ்சதாவேரியின்கிழங்கிவையுடன் செய்வ செய்வகைக்கோர்நாழியாய், காராருரோகணிசண்பகம்வெட் டிவேர் கடல்பச்சைஅதிமதுரமும்காடுவார் இலவங்கம்இரு முட்டிதிப்பிலிக் கருதுசந்தனம் ஏலமும் பாராரில்மிச்சுமாவி தைக்கோஷ்டமும் பருவிலரம்பிசினியுடனே, பண்பிலவுதன் பிசின்வில்வபிசினோடுயர் பகருமொருபொன்முசுட்டை, நேரா ருமோர்வகைக்காசெடை நிதானமாய்னிலவரமதா யரைத்து, நேசமுடனெய்யிற் கலந்தெரிவடித்ததை நித்தங்கொடுத்துவி டுமே. 743

சதாவேரி தண்ணீர்மிட்டான் இருமட்டி சிற்றுமுட்டி பேருமுட்டி மாவிதை மாம்பருப்பு.

பஞ்சதிரவியமும்பண்பானதிப்பிலியும்
ஞ்சாவிருகனெடைரண்டாம் அஞ்சா
தரைத்துக்கரைத்துமெழு கர்னபதார்த்தம்பார்த்
ரைத்தபடியிறுத்துட்கொள். 744

திரவியம்-மிளகு கோஷ்டம் அகில் தக்கோதம் குங்குமம்

உள்ளேதான்கொள்ள தொருகரண்டிஎண்ணெ
ற் விள்ளாதுஆமம் விழுவிக்கும்மெள்ளமெள்ளப்

போருமம்அஸ்திசுரம் போக்கும் இதற்குநல்ல
சிறுனபத்தியமேசெய். (ஆமம்-சீதம்) 745

தீராஒஆமசுரத்தின் குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

பிறகுமதலைதலைநடுக்கும் தொண்டையில்சேஷமந்தான்
அறுதியாகதொட்டுநிற்கும் அரிதாம்கண்ணும்விரிந்திருக்கும்
*கரியவிழிகள்வெளுத்துவிடும் தாய்குளிர்ந்துங்கண்ணுறங்கும்
பரிமாய்குணங்களிறுகண்டால் பார்க்கத்தீராதென்றுரையே.

இரத்தசுரத்தின் குணம்.

தாகமுங்கழிச்சலாகும் தலையதுசுழற்றல்காணும்
வேகமாய்சுரமுஞ்சற்றே விட்டுவிட்டேகுங்காயும்
வாகுசேர்கண்ணுந்தாழ்ந்து வாயுடன்நாஉலர்ந்து
சோகமும்வயிற்றில்சோயும் சோர்ந்துகைகால்தண்ணீரே

இரத்தசுரமுதலாகிய பலசுரம் வெதுப்புதாகம் பழசுரத்
திற்கும் பாலசஞ்சீவி மாத்திரை.

நாவிதிப்பிலிவெண்காரம் நல்லக்காசெடைமூவைந்து
மேவுஞ்சாதிலிங்கமது வீசுங்காசெடைபத்தாகும்
தாவுநிம்பழத்தின்சாற்றால் சதமாயரைத்துஒருசாமம்
காவிங்கயற்கண்ணளே கடலைநிரைஉண்டைசெய்யே. 748

சுக்குநீர்தன்னில்கொள்ள சுகமுடன்வெதுப்புதீரும்
தக்கசீரகங்கிராம்பு தனிலிடதாகந்தீரும்
பக்காலின்விழுதிற்கொள்ள பண்டையின்சுரங்கள்தீரும்
மைக்கண்ணய்குளிகையின்பேர் பாலசஞ்சீவியாமே. 749

பக்காலின்-பக்கஆவின் பண்டை-பழப.

ஷை இரத்தசுரத்திற்கு 326ஞ் செய்புளிற்சொல்லிய
கஸ்தூரிஎண்ணெக்கொடுக்க மஹாநன்மை.

அன்பனுசுரத்தின் குணம்.

ஆர்க்குங்காயும்அன்பனுதி ஆனசுரத்தைஅறியக்கேள்
வேர்க்கும்வெதும்புங்கண்சிவக்கும்வெந்நீர்வேண்டும்பலகாலும்
பார்க்கப்பயமாயிருக்குதெனப் பதறிஅலறிக்கதறியழும்
சேர்க்கவயிறுசிக்கிவிடுந் தெருவிற்பிறப்பட்டோடிடுமே. 750

அன்பனுகிசுரமுதலாகிய குன்மம் இருமல் எண்வகைசுரஞ்
சீதபேதிகணமிருமலுக்கு எண்ணெ—எண்சீராசிரிய விருத்

கற்றாழஞ்சோறுகடுகளிப்பாக்கோடு கருவேம்பிரமி...
சுக்குங்கூட்டி, பற்றுமல்நாலி லொன்றுய்க்காய்ச்சிக்கொ...
பதராமல் எண்ணெயுடன் பருகுவீரேல், வற்றுக்கடல்வற்று...
சீதம்போகும் வலுவானகுன்மமுடன் இருமல்போகும், பெ...

ரூரே எங்வாந்தில்விக்கசுரம் சுரமும்சீதபேதி பேருலகில் நா
டாது பேசுவீரே. (*கடு-கடுக்காய்.) 751

மாங்கிஷ சுரத்தின் குணம்.

அதிகமாய்சரீரமெல்லாம் அனல்போலசுரமுங்காயும்
சதிரமெல்லாம்நடுக்கும் தான்மூச்சுமெற்றஓடும்
உதிரம்போய்உடல்வெளுத்து உருகியேகருகுமேனி
*மதியுமேமயங்கிமூர்ச்சை *மயிர்க்குச்சமாங்கிஷவெப்பே.

*மதி-புத்தி *மயிர்க்குச்சு-உரோமங்கட்சி லீர்த்தல்.

மாங்கிஷ சுரமுதலாகிய சகல சுரத்திற்கும் கர்ப்பூராதி மாத்திரை — எண்சீராசிரிய விருத்தம்.

§கர்ப்பூரம்கெந்தி இந்துலவங்கத்தோடுகனமான சாதிக் காய்சாதிபத்ரி செப்பமுடன் ஒருகழஞ்சு §தேசிச்சாற்றில் திறமாக ஒருசாமம் அரைத்துக்கொண்டு ஒப்புடனே உழுந் தளவு உண்டைசெய்து உகந்திஞ்சி சர்க்கரையிற் சுக்கில் ஊட்ட, நட்புடனே §எச்சுரமும் மூன்றேமுக்கால் நாழிகை யில் விட்டகலும் நாட்செல்லாதே. 753

§கர்ப்பூரம் - பச்சைக்கர்ப்பூரம் §தேசி - எலுமிச்சம்பழம் § எச்சுரமும் - எந்த சுரமும்.

அஸ்திசுரத்தின் குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

அஸ்திசுரகுணஞ்சொல்லி அனவேவெதும்பிமூலைஉண்ணு
புத்திகலக்குமுள்ளுளையும் போதவெள்ளோக்காளமிகும்
சத்திஎடுக்கும்நீர்ச்சிவக்கும் சாமந்தனிலேதான்காயும்
வற்றி § வீங்கிருமற்சோகை வருமேகடுப்புசுரந்தானே. 754

அஸ்திசுரம் வரட்கணத்திற்கு நெய்—ஒழுசீராசிரிய விருத்தம்

சாஸ்திரபேதிக்கோஷ்டம்மதுரம் சந்தனம்ஏலம்சீரகம்
தானுங்கொன்றைக்காய்ப்பிசிறேடு சங்கருத்திராட்சம்
காத்திரமானகொம்புடனெல்லிக் காய்வற்றல்சண்பகமும்
கனிகொத்தமலிவிலாமிச்சைக் காசளவெனவே ஆட்டி
பாத்திரமதனில்நெய்யொருநாழிப் பரித்திக்காயின்சாற்
பகருள் §வாணிச்சாற்வகைக்காலும் பதமாய்வடிலட்டுத்
தோத்திரமாகபலங்கால்சர்க்கரை துவளகரண்டியிட
தோன்றிய அஸ்திசுரம்வரட்கணமுஞ் சொல்லாதோடிடுமே.

§சங்கருத்திராட்சம்-சிவனுக்குரியஉருத்திராக்கமென்றூர் §காணி-பொன்னுங்காணி.

வாந்திசுரம்-இருமலுக்கு-சூரணம் — வெண்பா.

காரிவிரை அசுவம் காறுசிறுதிப்பிலியும்
றுசமன்பொடித்துக் கொடுக்க-ஆறுமே

வாத்தில்லிச்சசுரம்இருமல் வராதுகாணும்
சேர்ந்துதணியமிது தின் 756

* காரிவிரை-கண்டங்கத்திரிவித்து * அசுவம்-அமுக்கரா.

சீதசுரத்திற்கு-ஔஷதம் — அறுசீராசிரிய விருத்தம்.

*வமுதலைசீந்தில்கண்டு தாமரைவளைபத்தோடு
முழுதுளசுக்கு * முத்தக்காசுடன் ஒன்றதாக
பொழுதுடன்கூட்டிமேலே பொடிதூவிக்கொள்வீராகில்
எழுபதுலட்சசீத சுரமது இல்லைதானே. 757

சுரம்-இருமல்-சீதசுரத்திற்கு-கிழாயம்.

நாட்டு*மூலம்தூதுவளை நல்லக்கண்டங்கத்திரிவேர்
கோஷ்டசிங்கிமுசுக்கைமுள்ளிக் கொடியஅரத்தைதிரிமடுகு
ஏட்டின்படியேகிழாயம்வைத் திதமாய்ஆறுபோதருந்த
ஒட்டமோடுஞ்சுரமிருமல் ஓடும்சீதசுரம்போமே. 758

* மூலம்-சித்திரமூலம்.

விஷசுரத்திற்கு-கிழாயம்கலிவிருத்தம்.

* கடுகமூன்றுடன் கானவசம்பொடு
எடுபடுகிழாயம் எட்டொன்றாக்கியே
விடுவிடுதேனுடன் விரைவிக்கொள்ளவே
எடுபடுவிஷசுர சீதம்இல்லையே. 759

* கடுகமூன்று-சுக்கு-மிளகு-திப்பிலி.

சுரத்திற்கு எலாதிமாத்திரை — எண்சீராசிரிய விருத்தம்.

அரிய* ரோசினையெடை விராகன் மூன்று அதனுடனே
அதிமதுரம்கோஷ்டம் *இந்து, பெரிய இருப்பைக்கொட்டை
சாஸ்திரபேதி பெருஞ்சீரகமுங்கூட்டி, சரியாகவிருகனெடை
ஒன்றுகூட்டி தண்மை * குவரிச்சாறிவார்த்தரைத்து பின்பு,
உரியமுலைப்பாலிலரைகுன்றிப்போலே உண்முலைப்பால்தன்
னிலிட சுரமோடும்மே. 760

*ரோசினை-கோரோசினை *இந்து - இந்துப்பு *இருப்பை
இலுப்பை *பெருஞ்சீரகம்-சோம்பு-குமரி-கற்றாழை,

சுரம்-வரட்கணம்-இரத்தகணம்-குளித்தோஷம்-சவலைக்கு
கற்றாழை எண்ணெ - அறுசீராசிரிய விருத்தம்.

கற்றாழஞ்சாறுபாலுடனே காந்திநீர்அவ்வகையும்
வற்றாவகைக்குபடியாக வாராய்நிம்பம்இதிற்பாதி
சிற்றாமணக்குபடிமூன்று திறமையாககலந்திட்டு
சற்றேசந்தனங்கணப்பூண்டு தானேசிங்கி ஓர்பலமே. 7

§ சிற்றாமணக்குபடி மூன்று - சிற்றாமணக்கு நெய் பட
மூன்று § சிங்கி கலைமான் கொம்பு.

இதுவுமது.

பலமேஅரைதான் சண்பகமும் *பச்சைப்பூலாஏலமுடன்
நலமாய் * இரண்டுவாசவேர் *நாறிசாதிக்காய்பத்ரி
நிலமேவளருங்கொத்தமலி நீகேள்மதுரங்கோஷ்டமுடன்
பிலமேகடுகுரோ கணியும்பெண்ணேகிராம்பு * முத்தமுமே.

*பச்சை-பச்சிலை *இரண்டுவாசவே-வெட்டிவேர்-விலாமிச்சவேர் * நாறி-நன்னாறி * முத்தம்-கோக்கிழங்கு.

முத்தஞ்சன்னலவங்கமுடன் மொழியுஞ்சீரகம் இருவகையும்
சுத்தநாகம் சிறுநாகம் சொல்லுங்காசெடைஓரளவாய்
வைத்தேஅரைத்துஎண்ணை தனில்வகையாய்கலந்தேஎரியிட்டு
அத்தைவடித்துபுல்லுருவ ஆனக்காசெடைதூவிடே. 763

தூவுமெண்ணெயக்காசெடை தான் சுகமாய் இரண்டுவேளையும்
மேவிகுழவிக்கிடும்போது மிகுத்தகாய்ச்சல்வரட்கணமும்
கூவியோடும்இரத்தகணம் குளித்தோஷங்கட்சவலையுடன்
பாவாய்பாலர்க்கிடவேதான பகர்கற்றுமை எண்ணெயிதே.

பழஞ்சுரத்திற்கு கிழாயம்.

அரிய *தூதுகாஞ்சொரிவேர் ஆனசீந்தில் பற்படகம்
பெரியநொக்கில்பேராமுட்டிபின்னுஞ்சிற்றாமுட்டியுடன்
சிரியகடுக்காய்தான் கூடடிக் கிழாயம்வைத்துதான் இறுத்து
உரியதிப்பிலிபொடிதூவிஉகந்துகொள் பழஞ்சுரம்போமே.

*தூது-தூதுவேளை.

பழஞ்சுரம்-விடாக்காய்ச்சல்-ஆவசுரம்-விஷதோஷம்.

(13) சனிக்கு-ஏலாதிமாத்திரை-தன்வந்திரி.

எண்சீராசிரிய விருத்தம்.

நல்குவீர்நல்ஏலம்கிராம்பு முத்தம் நல்மதுரம் *இருவேலி
...சுக்கு, அல்குவீர் *மதுரம் *ரோசினைநன்னாறிஅரியநிலப்
...யின்வேர்தாளிகந்தான் வல்குவீர்சடரமாஞ்சிலசந்தனத்
...ள்வகையிலுப்பைப்பூவுடனேதேவதாரம், மல்குவீர்திப்பிலி
...ராகணிவகைக்கு வரிசையாய்கால்சுழஞ்சு நிறுத்துக்கொள்.

*இருவேலி-வெட்டிவேர் *மதுரம்-கொடிமுந்திரிப்பழம்.
*ரோசினை-கோரோசினை.

நிலத்துமேகல்வத்தில் போட்டபின்பு நிலையானசெவ்வி
ளநீர்தன்னைவார்த்து, வறுத்துமே இருசாமம்விடாமல் ஆட்டி
வழிமைபோல் ஆகுமிந்தவரிசைபாரு, குறித்துமேமுலைப்பா
லால்சாமமிரண்டு கூசாமல் அரைத்துமே வழித்தெடுத்து
பருத்தகுன்றியளவாகஉண்டைசெய்து *பக்ஷமொன்றுநிழல்
உலர்த்திபதனம்பண்ணே. (*பக்ஷம்ஒன்று-பதினைந்துநாள்.)

இதுவுமது

பதனமாய்மூலைப்பாலில் உண்டையீய பறக்குமேபழஞ்சு
ரம்விடாதகாய்ச்சல். விதனமாய் *அம்மையார்க்கூந்தல்கொ
ண்டுவிருப்பமாய்க்கிழாயமிட்டு அதனில்ஈய, மதனமந்தபதின்
மூன்றுசன்னிபோடு மகத்தான விஷதோஷங்கெதிகெட்டோ
டும், அதனமாய் ஆமசுரம்சுணைச்சுரங்கள் அச்சமுற்றகலும்
யேலாதிளன்றே. (*அம்மையார்கூந்தல்-முதியார்கூந்தல்) 768

இம்மூன்று மொருதொடர்.

அதிசாரசுர காசசுவாசவாந்தி சுரதாபவிக்கல் தாகத்திற்கு மருந்துங் கிழாயமும்.

*சிங்கியுடன் திப்பிலியும் *விடையங்கூட்டி தேனோடுகு
ழைத்துமேகுழைநதைக்கீய, இங்கிதமாய்கரகாசவாந்தியோடு
இன்பமுடன்தீரு *மியனசொல்லக்கேளு, தங்கியஆல்மாநா
வல்துளி தன்னோடேதான்காய்ச்சி அந்திசந்தி கொடுப்பீரா
கில் *அங்கியெனுஞ்சுரதபவிக்கலோடு அதிசாரகாகமவை
அகலுந்தானே. 769

*சிங்கி-கலைமாகொம்பு *மினே-மின்னே *அங்கி-நெருப்பு

பித்தசுரம் தாபசுரம் பழவெதுப்புக்குமேல்பூச்சு.

கோஷ்ட எண்ணெய்—எழுசீராசிரிய விருத்தம்.

சுரமகு கனிப[illegible] நெய்ந்நாழிச் சொல்லிடும்பால்
இருநாழிதோன்றும்ஓர் ஆறுநாழிநல்லெண்ணெய் தெகை
யதுசேர்ந்ததில்கறகம், வரும்பெருங்குரும்பைமதுரநன்னறி
வளர்க்குவேலிலை *ரோணிவாருசெவ்வள்ளிக்கொடி அமுக்க
ராவேர் வருமரஞ்சள்சந்தனமும், திருவுளசுக்கு *காசுடன்
அரக்கு திமிர்ந்திடுங்கோஷ்டமிவ்வகைக்கு திகழ்ஒருகழஞ்சரை
தெரித்திகைசேய்கட் *சிரத்தினும்உடம்பினிற்பூச. ப[illegible]
பித்தசுரம்புரிதாபப் பல்வசரம்பழ வெதுப்பும் *பானு[illegible]
பனிபோற்பறந்திடுமிதன்பேர் பாருநற்கோஷ்டெண்ணெ[illegible]
பகரே.

*ரோகணி-கடுகுரோகணி *காசு-காசுக்கட்டி *சிரத்தினு
தலையிலும் *பானு-சூரியன்.

சகலசுரங்களு மூன்றேமுக்கால் நாழிகையில்விட
பச்சைக்கற்பூரமாத்திரை—அறுசீராசிரிய விருத்தம்.

பச்சைக்கற்பூரந்தான் *பூபட்டைசாதிக்காய்வகைக்கு
மச்சைக்கழஞ்சுஇரண்டாக வாளம்ஆறுகலஞ்சுடனே
அச்சக் *குமரிச்சாறதனுல் அரைத்துஉழுந்துபிரமாணம்
மச்சத்துடனேஉலரவைத்து சர்க்கரைதனிலோர்குளிகையிடு

*பூபட்டை-லவங்கப்பட்டை *குமரி-கற்றாழை.

இதுவுமது.

இடநாழிகைமூன்றேமுக்கால் இவ்விரோசனந்தானகும்
படுமேசுரமுந்தான்தீரும் பண்பாய்வந்தகுளிருக்கு
தொடுமேகுப்பைமேனியிலை சொற்கொடிவேலிமிளகரைத்து
கொடுமே *விழுதுசரிகூட்டிக்குளிர்வரும்போதுகுணமாமே.
*விழிது-நிகழவரைத்து.

சகலகாய்ச்சலுக்கும் மாத்திரை.

ஆடுதின்னப்பாலைபட்டை அதைநிழல்உலர்த்திக்கொண்டு
சாடிய *கருவாய்ப்பட்டை சமனதாய்இடித்துதூளாய்
வாடியவஸ்திரகாயம் வண்மையாய்செய்துஅதை
பாடியபுளித்த *நிம்ப பழச்சாறுவிட்டு ஆட்டே. 773
*கருவாபட்டை-லவங்கப்பட்டை *நிம்பழம்-எலுமிச்சம்பழம்.

இதுவுமது.

ஆட்டியேபருத்திக்கொட்டை அளவதாய்வுண்டைசெய்து
கூட்டிய அநுபானத்தில் கொடுசர்வகாய்ச்சல்தீரும்
பூட்டியபுளிப்புகைப்பு புகலவேசற்றும்ஆகா
நாட்டியவிஷமும்போகும் நளினமறிந்திடாயே. 774

64-சுரத்திற்கு மருந்து.

விஷ்ணுவின்காந்திசுக்கு விளம்பியகடுக்காய்இண்டு
வட்ட *வாலுடனேகூட்டி வளம்பெறக்கொள்வீராகில்
எட்சுரம்அறுபத்துநாலும் இடாதுஇல்லைஇல்லை
விட்டதுபோகவென்று விளம்பினர்புவியுள்ளோர்க்கே. 775
*வாலுடன்-வாலுழுவையரிசியுடன்.

மீளாத ஐயசுரத்தின் குணம்.

*ஐயசுரத்தின்குணங்கேளு *அகடுபொருமிகள்வெளுக்கும்
கையுங்காலும்சோர்ந்துவிழும் கண்கள்உள்ளேதான்விழும்
*தொய்யசுரமும்விடாததுவும் சொல்லும்தோஷம் ஆறுற்
மெய்யும்நாக்குமேவரண்டு விக்கவெடுக்கமீளாதே [போல்
*அயம்-சேஷம் *அகடு-வயிறு *தொய்யல்-துன்பம்.

இதுவுமது.

மெய்யில்வந்தினைஞ்சுரந்தான் விட்டுவிட்டேவெதும்பி
கையுடன்கால்வெதும்பி கன்னங்காயும்நெஞ்சிடிக்கும்
உய்யும்உழலைவாந்தியுண்டாம் ஓடிஓடிக்கட்டுமது
அயம்பிழைப்பதரிதுகண்டாய் அதிகமாகுஞ்சுரந்தானே. 777

சுரத்திற்கு ஆகாபதார்த்தங்கள்.

பால்எண்ணை இளநீர்போகம் பருகிடுங்குளிர்ந்தசோறு
நால்நடைதயிர்புளிப்புக் கடுவேலைஇனிப்புபாகு

மால்தரும்மடமான்கன்றே வந்திடுஞ்சுரத்திற்காக
§ஞாலமேல்மனிதர்பேரில் நாட்டில்சன்னியாமே. 778
§ஞாலமேல்-பூலோகத்தின்மேல்.

இதுவுமது.

பச்சைமீன் இரைச்சிக்கோழி பழங்கறிதேங்காய்மாங்காய்
இச்சைநெய்ப்பருப்புமுட்டை எழிலுளபுனுகு §சந்தம்
§நச்சுள இவைகள்எல்லாம் நாட்டியசுரத்திற்காகா
கொச்சைமானிடர்கட்கொண்டால் கொடியமரணம்வந்திடுமே
§சந்தம்-சந்தனம் §நச்சுள-ஆசையுள்ள.

இதுவுமது.

தோசைபிட்டுபணியாரம் சொல்லும்பயதுஅவல்பொறிகள்
வேசைவுறக்கம்மஞ்சள்வாடை வேண்டாம்பழங்கறிபழங்கஞ்சி
ஆசையுடனேபொருள்தேடல் யாக்கையுறக்கம்இவைஆகா
தோஷமிருந்துபலபிணியாய்ச் சொல்லிமரணம்வந்திடுமே.

ஒருமருந்கிற் பெரியவர்கட்காயினும் 18-பிராயபாலிமர்கட்கும் ஒக்கும் ஆகையின் குழந்தையின் தாய்க்கொள்ளலாகா.
சுரவகுப்பு முற்றிற்று.

---

அகத்தியர் திருவடிகளே சரணம்.

# ஜன்னி வகுப்பு.

ஜன்னிவருவிதங்கூறுகின்றார் மாந்தசன்னியின்குணம்.

பத்தியத்தாழ்வால்மாந்தம் பகைசெயும்விதங்கள்மெத்த
சுற்றியமலக்கமுண்டாய்ச் சொல்லொணாசன்னிஎய்தும்
முற்றிசுரமுந்தாக முதிர்ந்திடும்நாவின்முள்ளு
புத்தியுங்கலங்கிக்கண்ணும் போதவேதாழுந்தானே. 781

இதுவுமது.

மாந்தமேகோபித்தாற்கால் வயிறுபோம் உப்பிக்கொள்ளும்
காந்தல்போல்மேனிதானும் கருகியேவெருவிச்சோரும்
சேர்ந்ததோர்பச்சைவெள்ளைச் சிறந்துமென்மலமுந்தீயும்
வாந்தியேபண்ணுங்கண்டாய் வலிப்புடன்சன்னிதானே.

இதுவுமது.

மாந்தமேகோபித்தாற்கால் வயிறுபோம்உப்பிக்கொள்ளும்
மாந்தமேகோபித்தாற்கால் வாய்தனைவெருவிச்சீறும்
மாந்தமேகோபித்தாற்கால் மயங்கியேகுளிர்ந்துகாணும்
மாந்தமேகோபித்தாற்கால் வலிப்புடன்சன்னிதானே.

இதுவுமது.

உருக்குஞ்சன்னிமாந்தகுணம் ஓயாதலறும்வாய்ப்பிதத்தும்
ஒருக்கண்திறங் கஒருக்கண்ணே உருட்டிவிழித்துபார்த்தழுகும்
துருக்கும்ஊசிப்போல்கழுத்து துவளநொந்துஉடலமெலாம்
பெருக்கநரம்புந்தான்தெறித்துப்பிழியும்பாசிப்போல்விழியே

மாந்தசன்னிக்கு புகை.

கஞ்சாவேரும்ஊமத்தைக் கடியதாயின் தன்வேரு
§பஞ்சாய்இவைகள்வேப்பெண்ணைபையவறுத்துபொடியாக்கி
§துஞ்சாநெருப்புபுகைகாட்ட தோற்றுஞ்சன்னிஅத்தனையும்
மஞ்சார்குழலாய்அடிதொழுது §மாய்ந்தேபோகுங்கண்டாயே.

§பஞ்சாய்-கோரைக்கிழங்கு §துஞ்சா-சாவாத §மாய்ந்சீத-பொன்றி.

மாந்தசன்னிக்கு வேறு மருந்து—தேறையர் கலிவிருத்தம்.

ஓடும்வேளைவேர் §உத்தாமணியின்வேர்
மூடுமாவிலிங்கை முருங்கைப்பட்டை
யோடுநால்வகைக் கோர்பலமேரசத்
தோடுவாங்கிமுறித்துசூடாற்றிடே. 786

§உத்தாமணி-வேலிப்பருத்தி.

ஆற்றிடாய்பின் அரிசியின் திப்பிலி
கோற்றிடாய்மிள கோடுசுக்கானது
ளேற்றிடாய் §நவலோகம்இழைத்துடன்
வார்த்திடாய்சன்னி மாந்தம்போம்பாரிதே. 787

§நவலோகம்-நவலோக பூபதிமாத்திரை யிழைத்துக்கொடுக்கவென்றார்.

பதினெட்டு மாந்தசன்னிக்கு மருந்து—பிரமமுனி.

அறுசீராசிரிய விருத்தம்.

சிறுகாளாயிலையும் §வெள்ளி சேர்ந்தவசம்புஓமமுடன்
அறிவாய்இடித்துசாற்வாங்கி அரியதுவளையிட்டுள்ளுக்கும்
நெறியாய்கொடுக்கநாள்மூன் றுநிகழ்பதினெட்டுமாந்தசன்னி
தெறிப்பட்டோடும்நோயல்லாம் சிரசுமுதல்தோஷம்போமே.

§வெள்ளுள்ளி-வெள்ளைபூண்டு.

தோஷசன்னி மாந்தசன்னி பித்ததிரம் வாந்திக்கு
கஸ்தூரிமாத்திரை வெண்பா.

கஸ்தூரிஒன் றுக்கமழ் §ஞாழல்இரண்டு
சித்தாவின்கோரோசினை மூன் று மூத்தான
மெல்லியர்தன்முலைப்பால் விட்டரைத்துக்குன்றிளடை
சொல்உருண்டைசெவ்வாய்துணைந்து. (§ஞாழல்பூ-குங்குமப்பூ

இதுவுமது.

துணிந்துண்டைவைத்திட்டால் தோஷசன்னிமாந்தசன்னி
மணிமாந்தபித்தசுரம் வாந்தி தணிந்தோடும்
முத்தாரம்பூண்ட முகிழ்முலையாயிப்பேர்
கஸ்தூரிமாத்திரையாங் காண். 790

மாந்தகண சன்னிக்கு கோரோசினை மாத்திரை.

சீர்சிறந்தமாசிக்காய் திப்பிலிகோரோசினையும்
கார்சிறந்தகோஷ்டம் கருஞ்சீரம்பேர்சிறந்த
அக்கராகாரம் அரைத்துமுலைப்பாலிலிட
இக்கணமேதீரும் இது. 791

மாந்தகண சன்னி ஏலாதிமாத்திரை—ஆசிரிய விருத்தம்.

ஏலாதிஉண்டைக்குநல்ஏலம் இலவங்கம்எழில்மதுரம் §இரு
வேலிவேர், இடுசுக்குநன்றிமுந்திரிகைபேரீந்திலாமிச்சுகோ
ரோசினை, தாளிசப்பத்திரிநிலப்பனைசடாமாஞ்சில் சந்தனந்
தேவதாரம்தன்னுடன்திப்பிலி இலுப்பையின்பூவுந் §கனித்
தக்கழஞ்சாகவே, மேலானகடுகுரோகணி கழஞ்சொக்குமதை
மீறுநீர்வார்த்திவைதனி, விழுதாய் அரைத்துண்டைகுன்றி
யளவா வேவெய்யிற்படாதமகைசெய்பாலானமொழிமங்கை
பாலதனிலேகொடுபார்மந்தகணமகலுமே, பண்பான §கூந்
தற்கிழாயத்திலிட்டிடப் பலசன்னியுந்தீருமே. 792

§ இருவேலிவேர்-வெட்டிவேர் § தனித்தக்கழஞ்சு-வகைவ
கைக்கு ஒவ்வொருகழஞ்சு §கூந்தல்-முதியார்கூந்தல்.

சன்னிசுரகபத்திற்கு வேப்பெண்ணை.

எண்சீராசிரிய விருத்தம்.

வேப்பெண்ணைய்படிஅரைதான்சங்கிலைச்சாற் விதமான
படிஅரைக்கால்பாவட்டைச்சாற், ஆப்பட்ட §முசுறுமுட்டை
படிஅரைக்கால் அளவாகஎண்ணையிட்டுக்கடைமருந்து, மாப்
பட்டசுக்குதிப்பிலி வசம்புவளமானமிளகு §இருசீரகந்தான்,
தாப்பட்டகஸ்தூரிமஞ்சட்பூண்டு தான்தனித்துவிருகனெடை
வாங்கிக்கொள்ளே. 793

§முசுறுமுட்டை-ஓர்விதஎறும்பின்முட்டை §இருசீரகம்
நற்சீரகம்-கருஞ்சீரகம்.

வாங்கியேபொடியாக்கி எண்ணையிட்டு வளமானமெழுகு
பதம்வடித்துக்கொண்டு, தாங்கியேதுட்டெடைதான் ஒருவே
ளைக்குதயவாகக்கொடுத்துவரதீரும்வியாதி, தாங்கிவிழுஞ்சன்
னிசுரங்கபமுந்தானே சொல்லுகிறேன்பறக்குமே மெய்தான்
ஈது, சாங்கமுள்ளஎண்ணையிதுகைவிடாதே தப்பாதேவெந்
நீர்ச்சோற்சாப்பிடாயே. 794

சன்னிசுரகபத்திற்கு வேறு வேப்பெண்ணை.

சாப்பிடவே வேப்பெண்ணை அரைபடி தானுகுந்தன்னேடு தனிக்குட்டிவிளாவின்வேரு, தாப்பிட்டதூதுளை நாய்வேளை வேருந்தருஞ்சிரகங்கஸ்தூரிமஞ்சளோடுமாப்பிட்ட வெண்காய சிற்றரத்தைமரமஞ்சள் இவையெல்லாம்எண்ணேயிட்டு, காப்பிட்டேஎரித்து பதமாயிறக்கி கரண்டிகொள்ள வியாதிபோம்.

சன்னிமாந்தத்திற்கு புகை—அறுசீராசிரிய விருத்தம்.

குக்கிலும்அகிலுங்கூட்டிக் தருசன்னிநாயகந்தான்
சிக்கென சாம்பிராணி திகழ்புகைகூட்டிப்பின்னர்
தக்கதோர்வேளைவேரும் சாரணைதானுங்கொண்டு
அக்கணம்புகைக்கசன்னி மாந்தமும் அகலுந்தானே. 796

குளிர்சன்னிசுரத்திற்கு இராமபாண குளிகை

மஞ்சளும்சாதிக்காயும் வருத் §திரிகடுகங்கிராம்பு
மிஞ்சியகடுகரோகணி மிகுமரமஞ்சள்நாளி
அஞ்சிய §நிம்பம்ஓர்நாள் சாறுவார்த்தரைத்துருட்டி
கொஞ்சியராமபாணங் குளிர்சன்னிசுரங்கள்போமே. 797

§திரிகடுகு-சுக்கு-மிளகு-திப்பிலி §நிம்பம்-எலிமிச்சம்பழசாறு

விஷசன்னிசுரம் விக்கல் குளிர்சன்னிக்கு ஏலாதி மாத்திரை.

தன்வந்திரி—எண்சீராசிரிய விருத்தம்.

ஈந்திட்டால்ஏலாதிஉண்டைக்கேளு இனிதான §திரிகடுகு சாதிக்காயும், ஈந்திட்டகிராம்பேலம் *ரோணிமஞ்சள் எழில் நாபிசாக்குவகைக்கழஞ்சதாக, ஈந்திட்டகல்வத்திற்பொடியாய் செய்து இருசாமம்பழச்சாறு தன்னலாட்டி,ஈந்திட்டப்பயற்ற ளவுஉண்டைசெய்து இனிமாசிப்பத்திரியின்கிழாயத்தாட்டே.

§திரிகடுகு-சுக்கு-மிளகு-திப்பிலி §கிராம்பு-ஜலம் §ரோணி-கடுகுரோணி

இதுவுமது.

ஊட்டவேவிஷசன்னி சுரமும்விக்கல்உறவான குளிர் சன்னிஊர்விட்டோடும், நீட்டவே இந்நூலைமுற்நூறுக்கிநிகழ்த்தினேன்குழைந்தைகளின் இரக்கத்தாலே, கூட்டவே சிசுவின்நோய்த்தீர்ப்பாராகிற்குருரமுள்ளபிறப்பதுவும் அற்றுப் போகும், தாட்டவே இந்நூல்ஆர்கொடுக்கப்போறூர் சண்டாளர்தங்களுக்கு எய்தாதன்றே. 799

விஷதோஷசன்னி மாந்தம் பித்தசுரம் வாந்திற்கு கஸ்தூரி மாத்திரை.

எய்தாமல்கஸ்தூரிகழஞ்சு ஒன்றுஇதமானகுங்குமப்பூக முஞ்சிரண்டு, எய்தாமல் *ரோசினையுங்கழஞ்சுமூன்று இவை மூன்றுங்கல்வத்தில்இட்டுக்கொண்டு, எம்தாமல்அமுர்தமெனு

முலைப்பால் விட்டுஇனிதான சாமம் ஒன்றரைந்துக்கொண்டு, எய்தாமல்குன்றிபோல் நிழல்உலர்த்தி எடுத்து செப்புதனில் அடைத்திடாயே. (* ரோசினை-கோரோசினை.) 800

இதுவுமது.

அடைத்திட்டமாத்திரைதான் ஒன்றெடுத்து அந்தெடைக்குமுலைப்பால் விட்டிழைத்துக்கொண்டு, விடைத்திட்டமுனை நாவில் தீட்டிட்டாற்கால் விஷதோஷசன்னிமாந்தம் வீரிட்டோடும், * கடத்தெழுந்தபித்தசுரம்வாங்கிதீரும் கடைமருந்தின்போக்கறியா கழுதைமான்பர், குடைத்தெழுந்தகிடநகிலமானேகேளாய்குருவருளால் கஸ்தூரிகுளிகையாமே. 801

*கடத்தெழுந்த-உடலிலெழுந்த-இந்நான்குமொருதொடர்.

ஆமசன்னியின்குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

முலைஉண்ணுதழுகும்பார்க்கும் முகமதுவேறதாகும்
பலபலவலிப்புண்டாகும் பாலகன்குரலுங்கம்மும்
மலமதுகட்டிமெய்யில் வந்திடுஞ்சுரமுமீந்த
அலமதுவல்லமின்னே ஆமத்தின்சன்னிதானே. 802

இதுவுமது.

தாகமேமிகஉண்டாகும் சரீரத்தில்சுரம்உண்டாகும்
வாகிலாமலமுந்தீய்ந்து *வண்ணமாம்கறுப்புண்டாகும்
நோகுமேவயிறுஊதும் *நோக்காமல்கழிக்கும்நெற்றி
ஆகுமே *பிரமைபோல ஆமத்தின்சன்னிதானே. 803

*வண்ணம்-நிறம் *நோக்காமல்-கண்விழித்துப்பாராமல் *பிரமை-மயக்கம்.

ஆமசன்னிக்கு கிழாயமும் உள்ளுக்கும் மேலுக்கும்பூச *அண்டைத்தலம்.

கடுக்காய்க்கடுகுரோகணியும் கடியசிவேதை *திரிகடுகு
முடுக்காய்இடித்துக்காய்ச்சியதை மூரிக்குழவிக்கீந்திடவே
துடுக்காய்கன்னிகோழிமுட்டைதுய்யத்தைலம்வேப்பெண்ணை
அடிக்கால்உள்ளும்மேல்இடவும் ஆமசன்னிஅகன்றிடுமே.

*அண்டம்-முட்டை *திரிகடுகு-சுக்கு-மிளகு-திப்பிலி.

ஆமசன்னிக்கு வேறு குடிநீர்-வெண்பா.

சாரணைக்காய்மூக்குரட்டைத் தன்காயப்பொடுதலையும்
பூரணமாந்திரிகடுகு பூந்துளசி-வாரணியுங்
*கொங்கையரேசீரகமும் கூட்டிக்குடிநீர்
*உண்கவேஆமசன்னி ஓடும். 805

*கொங்கை *உண்கவே - என்பது மெல்லினமறுதலைப்பட தொடுத்துவந்தது.

ஆமசன்னிக்கு வேறு துவாலை —எண்சீராசிரிய விருத்தம்.

§கொடிவேலிவேர்ப்பட்டைச்சங்கம்வேரு குருந்தொருக்கு வேர்ப்பட்டைமுடக்கற்றானும், வடிவாக §அஞ்செண்ணெய் விட்டுக்காய்ச்சி வந்தசன்னியான தற்குவாகாய்க்கேளு, துடியாக §அண்டம்வெள்ளுள்ளித்தைலம் துருசாகஇறக்கி எங்குந் துவாலைசெய்ய, தடிவான ஆமசன்னிஓடுமென்று சாற்றினர் பொதிகைமுனி சாற்றினரே. 806

§கொடிவேலி-சித்திரமூலம் §அஞ்செண்ணெ-எள்ளெண்ணெய்-ஆமணக்கெண்ணெ-இலுப்பையெண்ணெ-புங்கெண்ணெய்-வேப்பெண்ணெ §அண்டம்-முட்டை.

கோரோமசன்னியின் குணம்.

ஓடுமேவாயுமிகும் நாவிப்பற்றிஉலகெங்கும் கனகனத்து சூடுண்டாகும், நாடுமேசதைகளெல்லாங்குலிக்கிக்காட்டும்நல்ல விழிகால்கைபதைபதைக்கும், தேடுநீபார்ப்பதற்குமாந்தமென்றுசெப்பவே வாதநீர்க்கலந்துக்கொண்டு, பாடுதற்குவாயில்லை தாளைப்பற்றும்பருத்துடம்பு நெருப்பதுபோல் மிகவுங்காயும், கூடுமே அசைந்தசைந் துவலிக்கும்பாரு கோராமசன்னிமாந்த கொடுமைதானே. 807

இஃதைந்தடியான் வந்தச்செய்யுள்.

கோராமசன்னிக்கு எண்ணெ.

கொடுமையென்று சொல்லாதே வலிகட்கெல்லாம் கோதில்லா நாருண்டின் வேப்பம்பட்டை, தடுமையில்லா §கார்த்திகையின்கிழங்கும்முள்ளித் தருகருடன் §தவசிவேர்மூலிவேரு, படுமைபடா §சிற்றண்டம் §மூசுரண்டங்கட் பதமானநெய்கள் வகை பலமேதூக்கு, கடுமையுள்ள §முட்டிக்காய்ச்சாறுநாழி கனம்வேபின்கிழாயமது நாழிகூட்டே. 807

§கார்த்திகைக்கிழங்கு-வெந்தோன்றி §தவசிவேர்-தவசுமுருங்கைவேர் §சிற்றண்டம்-கோழிமுட்டை §மூசுரண்டம்-ஓர்வித எறும்பின்முட்டை §முட்டிக்காய்-துமட்டிக்காய்.

இதுவுமது.

கூட்டுவெள்ளைச்சாரணைவேர் கொத்தான்வேர்தான்கோதையேழுபகைபலம்இரண்டாய், ஈட்டுநறுவிளக்கெண்ணெநாழி சேர்ந்து எலம்சிரகம்இரண்டுரோணிகாயம், தீட்டுவகைபலம் இரண்டுபொடித்துப்போட்டுத் தீயெரித்துமெழுகாக்கி காசெடையேவாருமூட்டோடேயோடுமே வலியஞ்சுந்தான் மூன்று நாள் பத்தியமாய் முனைந்துபாரே. 809

§ரோணி-கடுகுரோகணி §காயம்-பெருங்காயம்.

தாந்திரீகசன்னியின் குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

வேகமாச்சுரம்உண்டாகும் மேனியும்பதைப்புண்டாகும்
§மோகமாய்மூலைஉண்ணாது மூர்ச்சையாய்க்கண்ணுறங்கும்
§ஆகமேபசலைக்காட்டி அரையினிற்குளிர்ந்துகாணும்
தாகமேமிகவுண்டாகும் தாந்திரீகசன்னிதானே. 810

§மோகமாய்-ஆசையாய் §அகம்-உடம்.

தாந்திரீகசன்னிக்கு புகை.

வாய்ந்தவேப்பெண்ணெய்வேளை வளரும்ஊமத்தைகஞ்சா
சேர்ந்திடுமுருங்கையோடு சித்திரமூலவேரும்
காந்து †வெள்ளுள்ளிவசம்பு †கம்பளம் †மஞ்ஞையீர்க்கு
பொந்துநீகேளாய் †அண்டம்புகைக்கதாந்திரீகம்போமே.

†வெள்ளுள்ளி-வெள்ளைப்பூண்டு †கம்பளம்-கம்பளி †மஞ்ஞையீர்க்கு-மயிலிறகு †அண்டம்-கோழிமுட்டை.

தீராதசன்னியின் குணம்.

கண்ணைநாக்கைப்புருவத்தைக் காலைகையைவலித்துமிக
†விண்ணைபார்க்கும்பெருமூச்சுவிட்டு பின்னும்வலிப்புண்டாம்
உண்ணமுலையும்ஒவ்வாது உறங்காஉடலு மஞ்சனிக்கும்
நண்ணுமிதுவேசன்னியென நவின்றார்முனிவோர்உலகிற்கே

†விண்ணைப்பார்க்கும்-ஆகாயத்தைப்பார்க்கும்.

இதுவுமது—எண்சீராசிரிய விருத்தம்.

மாந்தகணம் போராமம் ஒன்றாய்க்கூடிவயிறுவிடுந்தான் உப்பும்வாந்திப்பண்ணும், சேர்ந்தசுரம்கால்கையுங் குளிர்ந்திரத்தம்சிதமிகபற்றிநின்றுவாயு தள்ளும், போந்த கண்நாவெந்து புண்ணாய்த்தோஷமுற்றுப்போகாமல் சன்னியாய் வலித்துவேர்க்கும், சாந்தமுடன்இது தீரமாதம்ஒன்றுதப்பினல்நேரம்ஆறுதிங்கள்முற்றே. 813

இவ்விரண்டு செய்யுளிற்சொல்லியப்பிரகாரம் தீராதசன்னியின்நிதானம் அறிகஇங்ஙனம் நோயுறின்உடனே வடவாமுகாக்கினிபோன்ற மருந்திட்டுநீங்கச்செய்யின்தெய்வதாசித்தந்தான் அங்ஙனமவ்வியாதியைவிட்டால் ஒருமாதத்திற்கொல்லும் அதுதப்பினல்மூன்று மாதத்திற்கொல்லும் அதுவுந்தப்பினல்மூன்றுமாதத்திற்கொல்லும் அதுவுந்தப்பினல் ஆறுமாதம் அகத்தியங்கொல்லுமென்பர்அன்றியும்குழந்தைகட்கு (9) சன்னியும் பெரியவர்கட்கு (13) சன்னியுமாம்.

சன்னிவகுப்பு முற்றிற்று.

அகத்தியர் திருவடிகளே சரணம்.

# வலிப்பின் வகுப்பு

மாந்தவலிப்பு-வருவிதங் கூறுகின்றார் — தன்வந்திரி.

தன்னிமையால்தோய் உதிக்கும்வாறேதென்னில் தன்
வயதுபதினெட்டுஇந்நாட்குள்ளே உன்னிமைக்குள்தீனியினால்
கற்மத்தாலும்உடம்பினுள்ளசூட்டாலும்வினையினாலும், வென்
னிமையாய்நோய் உதித்தவாறிதாகும்விபரமென்ன காந்தா
திக்கியாழத்தேற்று, சொன்னமைக்குள் ஓடிவிடும்இக்குணந்
தான் சூதில்லாநூலிதுவாம் மூந்நூறென்றே. 814

மாந்தவலிப்பின் குணம் - அறுசீராசிரிய விருத்தம்.

வயிறுகழியும்விதவிதமாய் மார்பைவலிக்கும்பற்கிட்டும்
பயறுகடித்தாற்போல்*தந்தம்பற்றிக்கடிக்கும்இசிப்பெடுக்கும்
கயிறுமுறுக்கிவிட்டாற்போல் காலுங்கையுந்தான் இழுக்கும்
*எயிறுதிறக்கவொட்டாது இறங்காதன்னந்தண்ணீரே. 815

*தந்தம்-பல் *எயிறு-பல் இவ்விரண்டு மொருதொடர்.

மாந்தவலிப்புக்கு புகை.

சேட்டைப் *பரி *உகிர்மயிலிறகு தின்னுமிளகுவசம்புசுக்கு
கூட்டக்கடுகுப்போயத்திக்கூறும் அழிஞ்சில்வேப்பெண்ணெய்
போட்டங் *கம்பளமுஞ் சமனாய்ப்புகழ் *செம்மறியின் *கோட்
[டுடனே
வாட்டிப்புகைக்கவேபிணியும் மாறுதிசிவுமாறிடுமே. 816

*பரி-குதிரை *உகிர்-நகம் *கம்பளம்-கம்பளி *செம்மறி-
செம்மறிஆடு *கோடு-கொம்பு.

மாந்தவலிப்பு காக்கைவலிப்புக்கு மருந்து.
எண்சீராசிரிய விருத்தம்.

கொடிவேலிவேர்ப்பட்டை சங்கன்வேர்த்தோல்குன்றெரு
கன்வேர்ப்பட்டை இவைதான்மூன்றும், வடிவானவிராகனெ
டைதூக்கிக்கொண்டு வளமானவெந்நீரைவிட்டு நன்றாய், பொ
டியாகநறுக்கிவடிக்கட்டியந்த *புனல்தனில் விராகனெடை
குங்குமப்பூ, துடியாகஅரைத்துகொடு வலிப்புமாந்தத் தொடு
காக்கை வலிப்புமது துலைந்துபோமே. 817

*புனல்-சலம்.

காக்கை வலிப்புக்கு மருந்து.

காக்கைபிச்சியுங் கொழுப்பும் அதனின் மூட்டைக் கனவ
சம்புதிப்பிலியின் கட்டைதானும், நீக்கமறுங்கொஞ்சிதழுதா
ழைவேரும் நிலவேம்பின்வேருமிளகருணைவேரும், போகருட

னேபொடிசெய்தெண்ணெயிற்போட்டுப்புகழாகக் காயக்சேய
றுத்துஓமம், தாக்குவாய்பொடித்து வெண்காரம்உள்ளித்தா
ன றுக்கிப்போட்டிறக்கிவைத்துக்கொள்ளே 818

இதுவுமது-வெண்பா.

கொள்ளவேகாக்கைக் கொடுமைவலித்தபோது
கொள்ளஒருகாண்டி யேகொடுக்க மெள்ளவே
இப்படிக்காறுதரம் ஏந்திழையீர் நல்கின்
ஒப்பில்லாக்காக்கைவலி யோடும். 819

அள்ளுவலிப்புக்கு குளிகை—எண்சீராசிரிய விருத்தம்.

பார்க்கவே இன்னமொருகுளிகைகேளு பாங்கான சாதிக்காய் கிராம்புஓமம், காக்கவேகரியசீரகமுஞ்சுக்கு கனமான திப்பிலிகஸ்தூரிமஞ்சள், சார்க்கவேவசம்புடனேகாய மொக்க சரியெடையாய் ஒன்பதுக்குஞ்சமன் தான்கேளு, வேர்க்கவே வெள்ளைக்காக்கணன் வேர்ப்பட்டை விதமாகதான்கூட்டி வெந்நீராலே. 820

வெந்நீரால்தான் அரைத்துசுண்டக்காய்போல் விதமாக தான் உரித்திவைத்துக்கொண்டு, வெந்நீரில்குழைந்தைகட்கு ஏழுநாள்தான்விரைவாகவேகொடுக்க உப்பாகாது, வெந்நீரில் சாதமிட்டு உண்பீரானல்வேண்டியதோர்நோய்தீரும்விளம்பக் கேளு, வெந்நீரால்சளிஇருமல் கக்கல்காய்ச்சல்மீறிவருஞ்சளி குண விச்சுழியும்போமே. 821

போகுமேஅள்ளுடனே சன்னிதோஷம் பொல்லாதவலியுடனே விஷசுரங்கள்போகுமே மந்தமுடன் வயிற்றுநோயும் பொருமலுடன் இரைச்சலுமே போகுஞ்சொன்னேன், போகுமேவசம்புதனை சுட்டுக்கொள்ளு போக்கோடேபச்சையென்றல் பேதிரம்ப, போகுமேசுட்டதனல் மட்டாம்பாதிபோகுமே மற்றநோய்ப் புனிதமாமே. 822

புற இசிவுக்கு மருந்து—அறுசீராசிரிய விருத்தம்.

தும்பையிலையுந்துளசியிலை துய்யஇஞ்சியிலைமூன்றும்
சம்பைஇடையாய்வகைவகைக்கு சரியெடையாகவேநிறுத்தி
பம்பரம்போல்தனத்தாளே பகரும்பூண்டோர் ஆறெடையாய்
நம்பிநிகழ்தான் அரைத்து நல்லசிற்றுமணக்கிலையே. 823

இதுவுமது.

இலையில்வைத்துதான் சுருட்டி இளகவெதுப்பிச்சாறுபிழி
லிலயாய்மூன்றுவேளைக்கும் விரும்பிக்காசளவாய்கொடுக்க
துலையுஞ்சேயற்பிறஇசிவு சொல்லாதோடிப்போய்விடும்பின்
மலையுஞ்சிலையுங்கலையாதே மனதிற்பயமாய்ச்செய்வாயே. 824

## சகலவலிப்புகட்கும் சன்னிகட்கும் சோதிருஷிதைலம்.

### கலி வெண்பா.

ஆதிமறைவிளங்கும் ஆயுர்வேதத்துணர்ந்த
சோதிருஷிதைலம் சொல்லக்கேள் நீதியாய் 825
அவுர்வேர்முன்னைவேர் அழிஞ்சில்வேர் சாரணைவேர்
சிவனார்வேம்பின்வேர் சிறுபுளடி-துவரான 826
சங்கன்வேர்செங்கத் தாரிவேர்வாகைவேர்
புங்கன்வேர்நொச்சிவேர் பூவரசு துங்கமுள்ள 827
குட்டிக்களாவேரும் குட்டிக்குமிழ்வேரும்
குட்டிவிளாவேர்பெருங்கு தம்பைவேர்-திட்டமுடன் 828
முருங்கைமிளகருணைவேர் முட்கவேளைவேர்
அரியபாவட்டைவேர் ஆதொண்டை-விரும்புகிற 829
வெட்பாலைவேர்எருக்கன் வேர்க்கத்தரிவேர்
துப்புகொடிவேலிவேர் தூ ளைவேர்-தப்பில்லா 830
கூத்தன்குதம்பைவேர் கூறும் §வனமரைவேர்
காத்த §வேலிவிட்னுக் காத்திவேர் சீர்த்தியள 831
சத்திபின்சாரணைவேர் தளிர்த்தநன்னாரிவேர்
அத்தம்யோலாகும் எலியாவின்வேர் சுத்த 832
முகைக்கின்றவேர்வகைகள் முப்பத்துமூன்றும்
வகைக்குவிருகனெடை வாங்குபத்து-அகைக்கும் 833
நல்லப்பாகல்சாறும் நாய்ப்பாகல்சாறும
செல்அடாதோடைச்சாற் சின்னிச்சாற்-வல்ல 834
எருக்கிலைச்சாற்புங்கிலைச்சார் எலுமிச்சம்பழச்சார்
பெருக்கமுடக்கற்றான்சாற் பின்னும் திருக்குடைய 835
காட்டுக்குறிஞ்சான் கனமாவிலிங்கைச்சாற்
பாட்டில்வருஞ்சாற் வகைகள்பத்துங்கூட்டி 836
வகைவகைக்குகால்படியாய் வளமாகவேயளந்து
தொகையுடனேசேர்ந்து துடியாக பகையில்லா 837
வெளவால்இரண்டு §வாயசமும்தான்ஒன்று
ஒவ்வாபெரும்ஓணன் ஒன்று சவ்வா 838
முயல்ஒன்றுசிற்றோணன் மூன்றுடும்ஒன்று
கயல்வழியே §சர்ப்பக் §கண்டம்ஒன்றும் வயனப் 839
பச்சைமயிலிறகு பண்பாகஅந்து
கச்சமாய்நல்லவடம் தான்அந்து இச்சைப் 840
பசுவினுடநீரும் பகர் §மேதியின்நீரும்
விசயவெள்ளாட்டின்நீர் மேற் §சிறுநீர் றுரையா 841
வகைவகைக்குகால்படியாய் வண்மையுடன்அளந்து
தொகையாய்க்கடைசரக்கு சொல்லக்கேள்தகைமைக் 842

கருஞ்சீரகத்துடனே கஸ்தூரியின்மஞ்சள்
உரிமையுடன்பூதகரப்பானும் வரஞ்சிறந்த 843
மஞ்சள்மரமஞ்சள் வாய்விளங்கங்கடுக்காய்
தஞ்சைநகர் *கிட்டம்சதகுப்பி மிஞ்சும்நற் 844
சிற்றரத்தைப்பேரரத்தை செண்பகப்பூதிப்பிலியுஞ்
சற்றும்பெருங்காயம் சாதிக்காய்பற்றுடைய 845
செவ்வியங் *குக்கில்சிறு *தேக்கரைப்பொடியும்
வெவ்வகைக் *காறு விருகனெடைக்கவ்வும் 846
வசம்புவிருகனெடை வரிசையுடன்பத்த
இசைஉள்ளிவிருகன் எடைப்பத்தும்நிசம்பெறவே 847
வீசும்வலம்புரிக்காய் விருகனெடையீரெட்டு
வாசமுறக்கொண்டுவந்து வைத்துமே ஆசையுடன் 848
செய்யும்வகைவிபரம் தெளிவாகசொல்லக்கேள்
மைவிழிசேர்திவ்ய மடமயிலே-பையவே 849
காட்டுவேர்எல்லாம் கதிக்கக்கிழாயமிட்டு
மாட்டிக்கடைசரக்கில் வார்த்தரைத்து வூட்டியே 850
பச்சிலைகட்சாற்றைவிட்டுப் பரிவாகதானரைத்து
மிச்சமுள்ளக்கோமியங்கள் விட்டரைத்து கச்சுடையாம் 851
சாணிபதம்ஆனல் சரியெனவேபாண்டத்தில்
பேணிநீயிட்டப் பிற்பாடு வாணியே 852
வேப்பெண்ணெ ஓர்நாழி விளக்கெண்ணெ ஓர் நாழி
கோப்பாகமுன்மருந்திற் கூடவிட்டுப் பூப்பாக் 853
கலக்கிஅடுப்பேற்றும் போதில்காய்ஒணைன்
துலக்கமுள்ளவெளவாலும் சொல்முயலும் பிலக்க 854
உடும்போடுசிற்றேணைன் உக்ரநல்லப்பாம்பும்
இடும்பொன் றுஞ்செய்யா தெடுத்து-திடமாய் 855
*அறுத்துதிரம்பாண்டத் தம்மருந்திற்பிடித்து
மறுத்துத்தோல்இறகு குடல்வாங்கி-குறித்துதோர் 856
எண்ணெயிலேதான்விட் டெரிக்கிரண்டுசாமம்
வண்மையுடன் தான் இறக்கிவைத்து தன்மை 857
மறுநாள்அடுப்பேற்றி வளமாகத்தானெரித்து
வெறுவாமெழுகுபதமேபார்த்து அறிவாக 858
இரைச்சிகளையெல்லாம் எடுத்தெறிந்துபோட்டு
மறைத்துவடிகட்டிவைத்து மெள்ளவே 859
உள்ளுக்குகாசெடைதான் உண்டையுடன்கொடுத்து
தெள்ளுதலைமுழுதுந் தேய்ந்து-மெள்ளவே 860
சர்வாங்கமுந்துவளை தானிடவேயிதற்கு
விரைவாகதீரும்வியாதிகேள் பரவியெழும் 861

கோணவலிப்புடனே குமரக்கண்டவலிப்பும்
காணப்பிறவலிப்பம் காக்கைவலி பூணுகிற 862
சன்னிவலிப்பு தங்காதஉள்வலிப்பும்
பன்னிப் ரணவலிப்பும் பார்மீதுஇன்னம் 863
முகவாதத்தின்வலிப்பு முகசன்னியின்வலிப்பு
இகலும் *இமையிடிப்பு ஏளனஞ்செய் புகலுங் 864
குதிரைவலிப்புத கொள்ளீ நடுக்கின்வலிப்பு
சதிராய்முசல்வலிப்பு *சசவாதம் பதறியெழும் 865
பாரிசமாதம் படருஞ்சந்தின்வாதம்
மாரிசவாம்முடக்கு வாதம் வாரீக 866
உள்ளங்கால்வாதம் உச்சிவாதத்தோடு
கல்லமில்லாதக்கணுவாதம் மெள்ளவே 867
வாதமென்னப்பட்டவையும் வலிப்பென்னப்பட்டவையும்
பாதகசன்னியென்னப் பட்டவையும் ஆதரையில் 868
மெய்யாகத்தீரும் வினவும் இதற்குபத்யம்
பொய்யாய்ப்புகையிலையும் புளியும் வெய்யக் 866
கருவாடுமீன் இறைச்சிக் கரப்பான்பண்டந்தள்ளி
பரிவாயீந்தால் பலிக்குமே பெரியவர் 870
சிறியவர்க்கும்ஸைஸவர்க்கு சேய்கட்கும் ஆமென்று
நெறிசோதிருஷிசொன்னநேர் 871

*வனமரை-ஓரிதழ்த்தாமரை *வேலி-உத்தாமணி *வாயசம்-காசம் *சர்ப்பம்-பாம்பு *கண்டம்-துண்டம் *மேதி-எருமை சிறுநீர்மூத்திரம் *கிட்டம்-சிட்டம் *குக்கில்-மைசாட்சி சாறு-வகைக்குஆறு அறுந்திரம் அறுத்து உதிராம் *இமை-கண்ணிமை *சகவாதம்-முயல்வாதம் *ஸைஸவர்-பாலியர்.

வலிப்பின் வகுப்பு முற்றிற்று.

## கழிச்சல் வகுப்பு.

---

இஃது மாந்தகழிச்சலின் குணம்.

அறுசீராசிரிய விருத்தம்.

வாந்தி *பிராந்திமூர்ச்சையதாய் வாயுங்குரலுஞ்சீரணித்து
காய்ந்துமேனிவெதுவெதுப்பாய் கைகால்குளிர்ந்துவலியுண் [டாம்
சேர்ந்துகழியுமலந்தானும் சீர்க்கெட்டிருக்கும்பலவிதமாய்
போந்தமாந்தக்கழிச்சலிது பொல்லாதெனவேபுகன்றனரே
*பிராந்தி-மயக்கம்.

மாந்தக்கழிச்சலுக்கு பச்சிலைச்சாறு.

நல்லவேளைநாய்வேளை நாறும்வேலிப்பரித்தியுடன்
சொல்லுக்குப்பைமேனியிலைதுதிக்கும் அகத்திப்பழுப்புடனே
வெல்லும்வசம்பு §வெள்ளுள்ளிவேண்டும்படியேசாற்றிவாங்கி
உள்ளுங்கொடுத்துதுவாலையிட ஓடுங்கழிமாந்தந்தானே. 873

§வெள்ளுள்ளி-வெள்ளைப்பூண்டு.

கழிச்சல்தோஷத்திற்கு உப்பிலிநெய் தன்தந்திரி - வெண்பா

உப்பிலியின்பூண்டை உறநறுக்கி ஆவின்நெய்
நட்புடனேசேர்த்துநாள் நாற்சாமம் செப்பக்
குலரவியில்வைத்துக் கொடுக்ககழிச்சல்தோஷம்
அலறியோடுமென்றறி. 874

மாந்தகழிச்சல் மாந்தசன்னிக்கு கிழாயம் பிரமமுனி.

நல்வேளைஓர்பிடியும் நாட்டமாய்க்கொண்டுவந்து
செல்லவேமூன்றறுப்பாய்ச் செய்துவல்லக்
கனலதனிற்சட்டியைக் காயவைத்து §உப்பு
புனிதமாயொரு §சேரைபோடு. 875

§உப்பு-சோற்றுப்பு §சேரை-செரங்கை.

இதுவுமது—எண்சீராசிரிய விருத்தம்.

போட்டதொரு உப்பதுவுஞ்சாம்பலாகபுகட்டியேவறுத்து நீதுடைத்துக்கொட்டி, காட்டவேவசம்பதனைத் தட்டிப்போட்டுக்கருகியே தீப்பற்றி வேகும்போது, ஆடவேமுன்னறுத்த வேளைதன்னை அதிலிட்டு பொன்னிறமாய்வறுத்துக்கொள்ளு, தாட்டவேஅரைசெரங்கை நீர்தெளித்து தானதுவுஞ்சுண்டமட்டும் வறுத்துக்கேளே. 876

வறுத்துமருபடிகொஞ்சம் நீர்தெளித்து தானதுவுஞ்சுண்டமட்டும்வறுத்துக்கொள்ளு, வறுத்துமே இன்னமொருபடி தான் நீரைவார்க்குமுன்னே ஓமங்காசெடைதான்போடு, வறுத்துபொரியும்போது சலத்தைவார்த்து மகத்தானகணபதிக்குபூசைபண்ணு, வறுத்துநீ §எட்டொன்றுய்வற்றகாய்ச்சி வரயிறக்கி கிழாயமொரு சங்குபொடே. 877

§எட்டொன்றுய்-எட்டாழாக்குஜலத்தை ஒருஆழாக்காக

காய்ச்சல்—இதுவுமது—வெண்பா.

போடவேமாந்தத்தின் பொல்லாக்கழிச்சலுமே
ஏடலில்மாந்தசன்னி யெங்கேவே றோடிவிடும்
பேர்ச்சொன்னல்நில்லாது பேழ்விற்புருநீண்ட
காரயகப்பெண்ணரசேகாண். 878

§இநநான்கு மொருதொடர்.

கழிச்சலுச்கு வேறு மருந்து.

கீழ்க்காயின்நெல்லிவேர்க் *கேழ்மூலைப்பால்விட்டரைத்தே
வாழ்க் *காமர்ச்சங்களவு வார்க்கவே *காழ்க்கூறும்
பொல்லாக்கழிச்சற் பூவுலகைவிட்டிறங்கு
நில்லேனென்றேடிவிடும் நோய். 879

*கேழ்-ஒளி *காமர்-அழகு *காழ்க்கூறும்-வயிரமாகசொல்லுதல்.

கழிச்சலுக்கு வேறு மாத்திரை—எண்சீராசிரிய விருத்தம்.

அதிவிடையஞ்சாதிக்காய் சாதிபத்ரி அபினிகடுக்காய்த் தான்றி மிளகுசீரகம், மதியகருஞ்சீரகமும் வகைவகைக்கு வளமாகவிருகன் அரையாகக்கூட்டி, சதியில்லா ஏலமதுவிருகன் ஒன்று தழைத்மாதளந்துளிரும் அத்திப்பட்டை. கெதியான இவையிரண்டுங்கிழாயம்வைத்துக்கிருபையாய் வார்த்தரைத்து அடையாத்தட்டே. 880

இதுவுமது.

தட்டியேசட்டிதனைக்காயவைத்து தான் அரசம்இலையில் கட்டிப்புடத்தைப்போடு, அட்டியின்றிக்கிழாயமது வார்த்து அரசிலைகரந்தப்புடத்தைப்போட்டுப் போட்டு, இட்டியே இப்படிஐந்தேழுபத்து இயல்புடம் போட்டேயெடுத்து அரைத்து மைபோல், கொட்டியே குன்றியளவுண்டைசெய்து குணமாக நிழல்உலர்த்திக் கழிச்சலுக்கே, 881

கழிச்சலுக்கு எருமைதயிர்வடியிட்டேதான் கண்மணியே ஒருஉண்டைக்கொடுக்கத்திரும், பழிச்சலாஞ்சுரமாகில் வெந்நீர்தன்னில் பரித்துநீ இட்டாற்காலபறந்துபோகும், அழிச்சலாங்கழிச்சலுக்கு தகும்பிரகாரம் அநுபானம் அறிந்திட்டால் தீராதுண்டோ, தெழித்தலாம்பதுமாபாங்கும்போற்கண்ணுய்த் திருவளரும் பொதிகைமுனிசெயலாங்கானே. 882

கணக்கழிச்சலின் குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

சீதங்கழியுமலங்கழியும் திரும்பிக்கெட்டப்பால்போலே
போதக்கழியுங்கறித்தண்ணீர்ப்போலுங்கையுங்கால்குளிர்ந்து
காதைஅடைக்கும்வெதுப்புண்டாம் கையிற்பிள்ளைத்தங்காது
கோதாய்இந்தகுணங்கண்டால்குலவும்இதன்பேர்கழிகணமே.

கணக்கழிச்சலுக்கு கிழாயம்.

உண்ணும் *ஈருள்ளிப்பத்து ஒருபிடிகருவேல்ஈர்க்கு
எண்ணுஞ்சீரகம்ஓர்காசு *இருகூறுவெந்தயந்தான்
வண்ணமாயிவைநிறுத்தி வறுத்துநீர்விட்டுக்காய்ச்சி
*திண்ணமாய்க்கொடுக்கபேதி கழிகணந்திருமென்றே. 884

*மிடுங்காய்-பெலாக்காய்.

§ஈருள்ளி-வெண்காயம் §இருகூறு-இரண்டுபங்கு §திண்ணம்-பலம்.

கழிகணம் காய்ச்சல் தாகம் வரட்சிக்கு கிழாயம்—வெண்பா.

இலந்தைநாரத்தைபுளி இனியகனப்பூண்டும்
கலந்துநெல்லிஈர்க்குடனே காய்ச்சியுண்ண-நவமா
கழிகணம்உள்வரட்சிக் காய்ச்சலுடன் தாகம்
பழிவருமென்றேடும் பார். 885

கழிகணத்திற்கு வேறு எண்ணே—எழுசீராசிரிய விருத்தம்.

மூக்குரட்டைச்சாரணையும் மூடக்கற்றானும் *முத்தெருக்கன்செவியுடனேமுயலக்கே, பார்க்க §இதழ்த்தாமரைச்சாறுடனேகூடி பகர்செப்புநெருஞ்சிலோர்படிதானென்று, வார்க்கவிளக்கெண்ணே ஓர்படிதானுகும் மயிலிறகுபலம்ஒன்றுகலந்துகாய்ச்சி. ஆர்க்கும்இடமலவாதம்நீங்கியேதான் அந்தரக்கழிகணங்கள் நீங்கிப்போமே. 886

§முத்தெருக்கன்-நிலக்கடம்பு §இதழ்-ஓரிதழ்த்தாமரை.

கழிச்சல் இருமலுக்கு நெய்—அறுசீராசிரிய விருத்தம்.

§வட்டத்திருப்பிசிறுதேக்கு §மதுரம்வசம்புக்கோடே
இட்டமிளகு §திரிபலேயும்இசைந்த §விடையம்கோஷ்டமுத்தம்
திட்டக்கழஞ்சு §இம்பூரல் சேர்ந்தச்சாற்படி §ஆநெய்யும்
மட்டப்படியாய் எரித்தருந்த மாறுங்கழிச்சல் இருமலுமே.

§வட்டத்திருப்பி-பங்கம்பாலே §மதுரம்-அதிமதுரம் §திரிபலே-கடுக்காய்-நெல்லிக்காய்-தான்றிக்காய் §விடையம்-அதிவிடையம்§முத்தம்-கோரைக்கிழங்கு §இம்பூரல்-சாயவேர்§ஆ-பசு

வாந்திகழிச்சலுக்கு கிழாயம்.

நெல்லிப்பட்டைமாம்பட்டை நிகழும்அரசம்பட்டையுடன்
வெல்லும்பரித்தியின்கொட்டை மேவும்பரித்தியின்பிஞ்சும்
அல்லும்அத்திப்பட்டையொடு அதன்றன்துளிரும்வகைக்கு
சொல்லும்விருகன்எடையொன்று தூக்கிகுறுணிதண்ணீரே

இதுவுமது.

தண்ணீரதனிலேபோட்டுத் தழலிற்காய்ச்சித்தான்இறக்கி
வெண்ணீர்இரண்டுவேளையிலும் மேவியதனைப்பலர்க்கு
எண்ணீர்வாத்துகொடுத்திடவே ஏகும்வாந்திகழிச்சலுமே
பெண்ணீர்உலகில்தருமமுடன் பேணிச்செய்வீர்நவமாமே.

வாய்மூக்கால்பாலெடுத்தல் வாந்திகழிச்சல் இருமலுக்கு நெய்.

§வேலிப்பரித்திச்சாறுழக்கு §மேதிவெண்ணேதான்உழக்கு
ஆலித்தெழுந்தகருஞ்சீரகம் அதுவுங்கழஞ்சு அரைத்திட்டு

பாலித்திருந்து பொன்னிற பதத்தில்வடித்துநெய் *அருந்த
வாலப்பிள்ளைவாய் மூக்கால்வரும்பால் கழிச்சல்மாறிடுமே.
*வேலிபருத்தி-உத்தாமணி *மேதி-எருமை *அருந்த-சாப்பிட

சலக்கழிச்சலுக்கு மருந்து – வெண்பா.

வீதவெண்குன்றி விரைத்தோலின் உட்பருப்பு
ஆதபுள்விரைத்தோல் அத்திப்பால் *மேதியின்றங்
வெண்ணையின் ஓர்கழஞ்சு *வெள்ளமிடும்நீர்க்கழிச்சல்
நிண்ணுவிடுந்தேன்மொழியாய்நேர். 891

*மேதி-எருமை *வெள்ளம்-பிரளயம்.

வெப்புக்கழிச்சலுக்கு அதிமதுரமாத்திரை.

அதிமதுரம் அதிவிடையம் சாதிக்காயும் அழகானமாத
ளம்பூசீரகந்தான், புதியசமன்கூட்டிமாதளஞ்சாறுதல் புளிப்
பான புளியாரைச்சாற்றிலாதல், பதியாகஅரைத்துதூதளங்
காய்போலபக்குவமாய்கொடுத்திட வெப்புகழிச்சல்,நிதிபோல
தீரும் இச்சாபத்தியந்தான் நீலவிழிமாதரசே நீதந்தானே.

இரத்தக்கழிச்சலுக்கு மருந்து— வெண்பா.

தாழைவிழுதின்றன் சாறுஇளநீரும்
சூழெலிமிச்சஞ்சாறும் சுக்கும்-பேழ்மயிலே
சீரகமுந்தான்பொடியாய் திட்டமுட்னருந்த
போரிடும் *கறைமிச்சல்போம். 893

இரத்தகழிச்சலுக்கு வேறுமருந்து—அறுசீராசிரியவிருத்தம்

சீரகங்கொத்தமல்லித் திகழுமாதுளையின்பிஞ்சும்
மீரகங்கீழ்க்காய்நெல்லி வேரிவைசமனதாதக
ஆரமாவெந்நீர்விட்டு அரைத்துகாலையினிலீய
பாரரத்தங்கழிச்சல் *பாறிடுந் *தயிருஞ்சோறே. 894

*பாறிடும்-ஓடிவிடும் *தயிருஞ்சோறு மதற்குப் பத்தியம்.

ஆமக்கழிச்சலின் குணம் அதேசீதபேதி.

உண்டப்பால்எதிரெடுக்கும் உடல்பலமுழக்கங்காட்டும்
கண்டுமேரத்தஞ்சால சுரமிகுந்திருக்குமேனி
*கண்டுசேர்மொழியுந்தாழ்ந்து காலொடுகையுநீத்து
விண்டிடில்ஆமமென்று விளம்பினர்முனிவர்தானே.

*கண்டு-கரும்பின்கட்டி.

ஆமக்கழிச்சலுக்கு சாதிக்கா எண்ணை.

சிற்றாமணக்கின்எண்ணைபலம் *திரிகற்பூரம்விருகனென்று
சற்றேசோற்றிற்றுன்அவித்த சாதிக்காயும் ஒன்றாகும்
எற்றேயிவைஎல்லாந்தானே எண்ணைவிட்டுத்தான் அரைத்து
கொற்றேவேளைக்கொருகரண்டி கொடுசீதபேதிப்போமே.

*திரி-மூன்று.

பொருமல் கவிச்சலுக்கு குளிகை.

இதுவே §கூனன்முதுகோடுஇகழா §விடையம்§ அசமதாகம்
மிதமாய் §திருப்பிப்பாவட்டை மிளகுசுக்கோடரைத்ததனே
கொதிவெந்நீரில்மூலைப்பாலில் குன்றிபோலஇழைத்திடவே
துதிக்கும்பொருமல்கழிச்சலது தூரப்போகுங்குளிகையிதே.

§கூனன்முதுகு-ஆமைஓடு §விடையம் அதிவிடையம் அச
மதாகம் ஓமம் §திருப்பி-வட்டத்திருப்பி.

அதிசாரக்கழிச்சலுக்கு கிழாயம்.

கோரைக்கிழங்குசுங்கொத்தமல்லிக் கோட்டம்வில்வக்காய்ஒடு
ஏராய்த்திப்பிலி §லோத்திரமும்இனிதாய்§நாகேசரத்துடனே
சீராய்க்காய்ச்சிநறுந்தேனே சேர்த்துகொடுக்கச்செய்குடிக்கும்
வாராக்கழிச்சல்அதிசாரம் மயங்கிதியங்கியோடிடுமே, 898

§லோத்திரம்-விளாம்பட்டை §நாகேசரம் சிறுநாகப்பூ.

அதிசாரகழிச்சலுக்கு வேறு கிழாயம் வெண்பா.

காட்டாத்திப்பூவும்கருங்காலிவேர்த்தோலும்
கோட்டானைத்திப்பிலியும் §கூவிளமும்-கூட்டியே
காய்ச்சிதேன்விட்டருந்த காணுஞ்சிறுவோர்க்குப்
போச்சென்றதிசாரம்போம். (§கூவிளம்-வில்வம்.) 899

அதிசாரக்கழிச்சல் கபசுரத்திற்கு—வேறு மருந்து.

அறுசீராசிரிய விருத்தம்.

அத்திக்காயின்சாறேமம் அறியும்எருவிமத்தயிருடனே
பத்தியாகக்கலந்தருந்த பண்பாய்பிறந்தகுழந்தைகட்கு
தத்திக்ழியும்அதிசாரம் தானே அகலுங்கபசுரமும்
மெத்தபயந்துவிட்டும்மீன்போறகுவளைப்பெண்மயிலே. 900

மூவக்கடுப்புக்கழிச்சலுக்கு மாத்திரை—கட்டளைக்கலித்துறை.

மானே§விடையங்கோஷ்டமுங் கிராம்புமதுரமுடன்
தானே§இலவுவிளாம்பிசின் தன்னேடுசாதியங்காய்
தேனே§இதழ்ச்சிறுஇலங்க§மாஞ்சில்தெரிந்துநல்லக்
கோனெசிவந்தமாதளங்கா பினிற்கொண்டடைத்தே. 901

§விடையம்-அதிவிடையம் §மதுரம்-அதிமதுரம் §இலவு-
இலவம்பிசின் §இதழ்-சாதிபத்திரி §மாஞ்சில்-சடமாஞ்சில்.

அடைத்தாடைச்சுற்றிமே சரணம்பூசிஅடர்இரவி
புடத்தால்எரிந்துவிடும்போது அந்தப்புடம் §அணைத்து
சுடத்தான் அரைத்துகஞ்சா §ரசந்தனில்துடாிபழத்
தெடுத்தான் அணைத்து மாத்திரைதன்னே இயம்பிடுமே.

§அணைத்து ஆற்று §ரசம் சாறு.

இதுவுமது அதற்கனுபானம்.

இடுமே §மதுவிற்கஞ்சாவின் சாற்றில்ஏழில் §குரும்பை
கொடுமேதயிரில் §மலாத்தெங்கு §வாழைக்குணமறிந்து
விடுமேகழிகணமூலக்கடுப்பு மேடிரைச்சல்
கெடுமேவிஷமூலம்போகு கவிசாரக்கிலேசங்கனே. 903

§மது-தேன் §குரும்பை-தென்னம்பிஞ்சு §மலர்த்தெங்கு-தென்னம்பாளையின்பூ §வாழை - வாழைப்பூ மேடிச்சல்-வயிற்றுஇரைச்சல்.

கடுப்புகழிச்சலுக்கு மருந்து வெண்பா.

திகழ்புனலிவேரும் சீரகமும்தான்சமனுய்
புகழ்பெறவேகூட்டிப் பொடியாய்மகிழ்ச்செய்.
தேனிற்கொடுக்கவே சீதகடுப்புக்கழிச்சல்
வானிற்பறந்தோடும் பார். 904

பச்சிலைபோல்கழிச்சலுக்குமருந்து - அறுசீராசிரியவிருத்தம்

ஏலமுடன்சாத்திரபேதி எழிலாய் §மதுரம்வகைக்கு
பாலவிருகன்அரையாகப் §பழந்தண்ணீர்விட்டேஅரைத்து
கோலமுன்றுநாட்கொடுக்க குழைந்தைபச்சிலைபோல்கழிதல்
ஓலமிட்டேதான்திரும் ஒளிர்கலையிடையுடைமடமயிலே. 905

§மதுரம்-அதிமதுரம் §பழந்தண்ணீர்-நீராகாரம்.

முட்டையுடைத்தால்போலும் கெட்டப்பால்போலுங்
கழிதலுக்கு மருந்து.

உத்தாமணியிலைஓர்ஐந்து உயர்சிற்றவரையிலைஐந்து
ஒத்தாய்ப்பரும்பூண்டோர்உள்ளிஒது §மேதிநவநீதம்
கத்தாகரண்டிதனிலிட்டுக் காண்முன்மருந்தையும்போட்டு
எத்தாய்இலைமுறியக்காச்சி இறந்துமுலைப்பாலொடுகுலுக்கு

§மேதிநவநீதம்-எருமைவெண்ணை.

இதுவுமது—கலிவிருத்தம்.

குலுக்கிசேய்க்கு கொடுத்திடமூன்றுநாள்
கிலுக்கிடாகெட்டப்பால் போற்கழிதலும்
ஒலுக் §கண்டம்உடைத் தாற்போற்கழிதலும்
பலிக்கத்தீர்ந்திடும் பத்தியங்காத்திடே. 907

§கண்டம்-அண்டம் அதேமுட்டை.

விடாகழிச்சலுக்கு மருந்து—அறுசீராசிரிய விருத்தம்.

சாதிக்காயும்அதிவிடைய சாதிப்பத்திரியோடபிணி
மாதர்க்கரசேசரியாக வைத்துநல்லெண்ணெயில்தோய்த்து
சேதப்படாமலேஅரைத்துமொருபணவிடை §வெண்பாலில்
நீதப்படியேதான்கொடுக்க நிசமாய்க்கழிச்சல்அடைப்படுமே.

§வெண்பால்-பெண்ணின்முலைப்பால்.

கழிச்சல்கட்டெல்லாம் கட்டுவாதிமாத்திரை.

எண்சீராசிரிய விருத்தம்.

கொள்ளவேகட்டுவாதிகுளிகைகேளு குணமான சாதிக்காய் சாதிபத்ரி, அள்ளவேஇலவங்கம்ஏலத்தோடு அதிமதுரம் அதிவிடையஅபினிகஞ்சா, விள்ளவேகுராசாணிமுத்தக்காசு வெந்தயமும்சீரகமும் சிறுநாகப்பூ, வள்ளவேபுளியாரைக்காட்டாதிப்பூ மாதளம்பிஞ் §சாம்பைப்பூசமனாய் தூக்கே. 909

§அரம்பைப்பூ-வாழைப்பூ.

இதுவுமது.

தூக்கியேகூட்டியிடித் *தாவின்பாலில்துருசாகபிட்டவியலாகவேதான், ஆக்கியேவாழைப்பூசாற்றிலாதல் அழகுமாதளம்பழத்தின்சாற்றிலாதல், தாக்கியேவிட்டரைத்து மிளகுபோல தான்உண்டைசெய்து சர்க்கரையில்ஈந்தால், நோக்கியே கழிச்சலதை தடைப்படுத்தும் நோயெல்லாம் ஓடிவிடும் நுணுக்கம்பாரே. 910

*ஆவின்பால்-பசுவின்பால்.

கழிச்சல்கட்கெல்லாம் வேறு கட்டுவாதி மருந்து.

நாட்டமுடன்குழந்தைகட்கு பேதிகண்டால் நல்லபுளியாரையுடன்வாழைப்பூவும், தேட்டமுடன் இவையிரண்டும் பிட்டவித்து திறமாகபிழிந்ததிலே துளிதேன்விட்டு வாட்டமுடன் மருந்திதுதான் கொடுத்துப்பாருமகத்தான கழிச்சலெல்லாம் வாங்கிப்போகும், தாஷ்டிகமாய்சற்குருவை தியானம்பண்ணி தண்மையுடன்பருவமதில் சார்ந்துநில்லே. 911

அதிசாரபேதி *ஊழிபேதி-கழிச்சல் - இரத்தக்கழிச்சல் மாந்தம் மாந்தசன்னி-காய்ச்சல்-நாலாமுறைக்காய்ச்சல்.

உச்சித வேலாயுதனைப்போற்றி - நல்ல-உண்மைமனோமணியைபோற்றி, வச்சிரகண்டி லேகியத்தைசொல்ல-நல்ல-வாகாய்சரக்குவகை எத்தனைகேளு. கொச்சிதேசமதனகாமப்பூவும்—நல்லக்-கோட்டான்புசிக்கின்ற காட்டாத்திப்பூவும், அச்சிதேசவால்மிளகுசுக்கு-நல்ல-அதிவிடையங்கசகசாகிராம்புடனேஏலம், செஞ்சிதேசகஞ்சாஅபினி-நல்ல-சேலத்துபனைவெல்லஞ்சாதிக்காய் கூட்டி சட்டியை அடுப்புதனில்ஏற்றி-நல்ல-சரக்கை அதில்வாட்டி உரலதனிற்போட்டு, பூணிலா உலக்கைக்கொண்டிடித்து-நல்லப்-புகழானபனவெல்லப்பாகுதனைக்காய்ச்சி, இடித்ததொரு தூளதனைப்போட்டு-நல்ல-இதமாகவேகிளரிலேகியமாய் செய்து, அந்திசந்திரண்டுவேளைத்தின்றால்-நல்ல-அலறியே ஓடுமந்த மாந்தசன்னிக்காய்ச்சல், ஏந்தியகுழந்தைகளின் மாந்தம்-நல்ல-ஏங்குவலி அதிசாரபே

தியைக்கேட்கும், விந்தைபுடன் நாலாமுறைக்காய்ச்சல், நல்ல-வீரிட்டுஒடு மந்தக்ஷயங்களைகேட்கும், பந்தஞ்செய்யும் §மாதவனைப்போலே-நல்ல-பாங்கானபோகமது ஒருசாமஞ்செலுமே.

* மந்தஞ்செய்யும் - சுக்கிலத்தைக்கட்டும் * மாதவனைப்போலே-ஸ்ரீகிருஷ்ணனைப்போல்.

அன்றியுடம்-இவைசரக்கு-வகைபலம்(1) பனவெல்லம்பலம்(5)

கழிச்சல்வகுப்பு முற்றிற்று.

அகத்தியர் திருவடிகளே சரணம்.

இஃது

## அட்சர வகுப்பு.

அட்சரங்கள் ஏழுவிதமெனகூறுகின்றார்.

எண்சீராசிரிய விருத்தம்.

ஒன்றான அட்சரங்கள் ஏழுஞ்சொல்வோம் உயர்சூலி அக்ரமுடன் நீதிஅக்ரம், மன்றானசோதிஅக்ரம் வீமிஅக்ரம் மகத்தானசூண்டியக்ரம்கபாலியக்ரம், தன்றானகுமரி அக்ரஏழுஞ் செய்யும்சதியான விவரத்தைசாத்தக்கேளு குன்றானசூலி அக்ரத்தைச்சொல்வோம்கொடியதலை நோயாகி சுரம்உண்டாமே

சூலியட்சரத்தின் குணம். 913

சுரம்உண்டாம்இடைகடுக்கும் நாவேக்காடாம் துடிநாவும் வெளுப்பேறிமாபோலாகும்,திறமானவெள்ளாலிப்போல்வாய் வாய்நாறும்திரண்டு அடைவெளுத்திரசம்வாய்நீர்ஊறும்-உறமானவாந்தியும் வெள்ளோக்காளந்தான் ஒழியாமல்தண்ணீர் மேல் கவனங்கொள்ளும் *கரபாதம்உடலமெல்லாங்கருமை தோன்றும் கழல்நீதியாக்கரத்தைக் கருதிக்கேளே. 914

*கரபாதங்-கையுங்காலும்.

நீதி அட்சரத்தின் குணமும்-சோதி அட்சரத்தின் குணமும்.

கருவென்னகுளிர்ந்து தலைவலித்துக்காணும் கதித்துசுரம் மேல்வீசும்வாய்க் கசக்கும் உருவென்ன நாவதுஞ்சிவந்துமாபோல் உலர்ந்துநிற்கும் நெஞ்செரித்துவரளும் வாயும் - துருவென்னசோதி அட்சரத்தைச்சொல்வோம் துடிதுடிக்கும் இடியுமே தலைவலிக்கும்-பருவென்னகணுக்கால் *நோம்சுரமும்வீசும் பகர்நாக்குப் பல்லழுக்கு நிறமுண்டாமே. 915

*நோம்-நோகும்.

வீமிஅட்சரத்தின் குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

நிறமுந்தோன்றிவேக்காடாய் நின்றேகழியும்மிக *எடுக்கும் *புறமும்வபிறுதான்எரியும் புகல்வோம்வீமிஅட்சரத்தை

திறமதாகசொல்லக்கேள் தியக்கந்துளிர்ந்துதலைநோவாம்
*மறமுமிகுத்தநாக்கதுதான் மடலின் தாழைக்குருத்தெனவே
*எடுக்கும்-வாயால்கக்கும் *புறம்-முதுகு *மறம்-பலம்.

இதுவுமது.

தாழங்குருத்தைதின்றதுபோல்தானேதோன்றும்வாயதனில்
சூழமேனிகறுப்பேறும் துருத்துநெஞ்சில்இருப்புருத்தும்
ரீழல்மிகுத்ததாகமுமாம் நெருங்குமீரல்நொந்துவிடும்
ஈழமிகுத்தகுண்டியக்ரம் என்னும்இயல்புநாசிவப்பே. 917

குண்டி அட்சரத்தின் குணம்.

நாவுஞ்சிவந்துவாய்ககூசும் நலியாக்கடுக்கும்உடலமெல்லாம்
மேவும்வயிறுதான்கழியும் *மிடுக்காய்நெஞ்சுங்கரித்தெடுக்கும்
தாவும்இருமும்ஈரல்விலா தளர்வாய்நோகுந்தாகமிகும்
நீவுங்கபாலிஅட்சரத்தை நிகழ்த்துகேளுஉடல்சனவே. 918

கபாலி அட்சரத்தின் குணம்.

உடலுகனக்கும் வலிப்பெடுக்கும் ஓழியாசுரமுந்தோன்றிற்கும்
திடலும்நெஞ்சுதலைநோயாம் சிறந்தநாவும்வேக்காடாம்
குடலும்ஈரல்நொந்துவிடும் குமரிவயிறுபேதியுமாம்
*மிடறுங்காடிச்சோறதுபோல்வேகும்விதங்கள்பார்த்தறியே.
*மிடறு-தொண்டை.

(3,ம் அடிகுமரி அட்சரத்தின் குணம்.

அறியக்கேளுஐந்தாநாள் அழன்றேநாவும்வெடிப்புற்று
*செறியும்ரத்தமாய்வயிறுதெறித்தேபோகும்குமரிஅக்ரம்
நெறியாய்க்கேளுநாவதுதான் *நிறுவர்கூசும்தடிப்பேறும்
கறியும்நொந்துவிசனமுறும்கதித்த இருகண்நொந்திடுமே.
*செறியும்-நெருங்கும் *நிறுவல்-நிறுத்தல்.

இதுவுமது.

நொந்தேசுரமும்மேறிகாயும் நுவலும்வாயுங்கசப்பருத்தும்
தந்தேவாந்திமிகபெருகும் தாய்க்கிவளரும்உண்ணுக்கும்
தந்தே *எயிறு *பசுமைஉறும்தயங்குமூக்குமூக்குகபாலமதால்
வந்தேஇரத்தம் *கொப்பளிக்கும்மருவுமூனறுநாள் ஆறே.
*எயிறு-பல்பசுமை-பச்சைகொப்பளிக்கும் உமிழும்
இவை (9) செய்யுளும்-அந்தாதியாய்-வந்தமையால்
வர்க்கவரிசையின்-குணமறியும்படி-முன்னரிப்படியும்
சின்னர்சிலகுணமும்-ஒளழ்தமுஞ்-சேர்க்கலாயிற்று. 922

அட்சரத்தின்குணம் பொது.

*தலையில்வலியும்தான்உண்டாம் தாதுமிகவுந்துடித்துநிற்கும்
குலையும்வெந்துநாவெத்து குளிர்ந்துதானேவரும்பிள்ளை

*கலையும்பசிநாவெளுத்துக் கலங்கெண்டந்தான்வெந்து
மலையின்மிளகுகொள்ளவொண்ணு வருத்துசொன்னேம்
[அக்கரமே.

* கலையும்பசிய - வாயுமிழ்நீர்ப்பெருக்கால் சிலைநனையும் கண்டம்-கழுத்து

அட்சரத்துக்கு மருந்து.

கருஞ்சீரகம்ரோகணிகடுக்காம் காட்டுமல்லிகைவேர்வகைக்கு
ஒருவருகன் இண்டங்கொழுந்து ஒருபிடிஉள்ளிபலம்இரண்டு
முருவிளக்கெண்ணைபடி அரைக்கால்முலைப்பால்வீசம்படியாக
மருந்தைஇடித்துஎண்ணையினில் மயனபதங்கோரோசினையே
*மயனபதம்-மெழுகுபதம்.

சினையேஇரண்டுவிருகனெடைசேரபொடித்தெண்ணையிலிட்டு
தனையேவடித்துண்ணக்கேரு சதிராவயிற்றுவேக்காடும்
வினையாகவேநாக்கு வெந்துபுண்ணுயிருக்கிறதும்
பனியக்காய்ச்சலுந்தீரும் பத்தியமிதற்குநலமாமே. 925

குண்டிஅட்சரத்தின் குணம்.

அட்சரத்தின்குணங்கேளீர் அரைக்குமேலேசுரங்காணும்
மற்சம்போல்வெளுத்தேதேகம் மஞ்சள்நிறம்சிறுநீர்வீழும்
எச்சல்வாயில்சுருக்கென் னும் இளைத்தேஉடம்புகடுப்பாகும
கொச்சைக்குரலுங்கடுப்பெய்தும் குண்டியட்சரக்குணமாமே,
*மற்சம்போல்-மீன்போல் எச்சல்வாய்-அசனவாய்.

குண்டிஅட்சரத்துக்கு மருந்து—எண்சீராசிரிய விருத்தம்.

சண்டைவேர் நிம்பக்காய் அளவரைத்து துலங்காவின் வெண்ணெயுடன் அருந்ததீரும், கொண்டகரிப்பான் அரைப் பாக்களவுரைத்து குறுகவேசீரமுடன் அருந்ததீரும், வண்ட ணியுங்குழலாய்பச்சரிச்சோறும் வயங்காவின்யாலும்பத்திய மாய்க்கூட்ட, குண்டிரட்சமானவியாதிவிட்டுக் குடிபோகு மென்று சிவன்கூறினரே. (*ஆவின் -பசுவின் சீரம்-சீரகம்.)

உள்அட்சரத்தின் குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

மூக்குநீர்ப்பாச்சலாகும் முகமிகவெளுரிப்போகும்
நாக்குமேவெளுத்துப்பூக்கும் நாவிவாய்ஆவிதோன்றும்
தூக்கமும்சுரமுமெத்தத் துணுக்கெனதண்ணீர்வாங்கும்
தீர்க்கஇக்குணங்கள்கன்டால் சிறந்தஉள்ளட்சரமுமாமே.

உள்அட்சரத்திற்கு நெய்—எண்சீராசிரிய விருத்தம்.

அதிமதுரம் பூவந்திப்பழம்இரண்டும் அவைவகைக்குவிரு கன்ஒன்றறிந்துமேலும், நிதிமுப்பால்வார்த்தரைத்து முலைப் பால்தன்னில்நினைவாககரைத்துபசுநெய்உழக்கு, சதியாகவே

கலந்தொன்றுய்ஏளரித்துகடுகு மெழுகுப்பதத்தில் இறக்கிவைத்து, துதியாக விருகனெடைநெய்க்கொடுக்க சூர்அக்ரம்உட் காய்ச்சல் கணமும்போமே. 929

*பூவந்தி மணிபுக்கு கடுகு அதிமதுரமும் மணிபுக்கும் முலைப்பாலுஞ்சேர்ந்து திரண்டகடுகு சூர்-நோய் அக்ரம்-அட்சரம்.

நாமுள்தோஷ குணம்—தன்வந்திரி.

பாரே அரிவையர்தன்துயரத்தாலும் பாலனதுமுன்னுளிற்சனிக்கும்போது, ஆரேதான் அந்நாளில்தோஷத்தாலும் அன்னையுடபசியாலும் வருத்தத்தாலும், வாரேதான்குழவிக் கெட்டு நாமுள்தோஷம் வலுத்துதேஇந்தநோய் வலுமை மெத்த, மாரேதான் இருமிமிகமேல்மூச்சுண்டாம் மாசற்ற இருகண்ணீர்ச் சொரியும்பாரே. 930

†அரிவையர் - பெண்கள் சனிக்கும்போது-கர்ப்பத்திலுண்டாகும்போது அன்னை-தாய் குழவி-பிள்ளை சொரியும்-ஒழுகும்

இதுவுமது.

சொரியும்பார்தலைவலியும்சுரம்உண்டாகும் சொற்பநாமம் பொறிகலங்கிமுலையுண்ணுது, அரியும்பார்விலாவிரண்டும்அள்ளெடுக்கும் ஆஆஆவாயெல்லாம் நாமுள்ளாகும், வரியும்பார் தொண்டைபற்றிமிகமுள்ளாகிவலுத்துதேவிதியினுடவலுமை தன்னுல், மரியும்பார்தலைநடுக்கும் பேசொட்டாமல்மாதொண்டைச்சேஷ்மந்தான் மருவிப்பாரே. 931

பொறி - மெய்-வாய்-கண்-மூக்கு-செவி ஆஆஆ - இரக்கமானச்சொல்.

மருவிப்பார் இருகண்ணும்விழித்திருக்கும் மாபாவசண்டாளநாமுள்தோஷம், மருவிப்பார் இணக்குந்தை அறிந்துக் கொண்டு மகத்தான நோயிதென்றுமனதிலெண்ணி, மருவிப்பார் மனநடுங்கிப்பொறுமையாக வண்மையுடன்நோய்களை நீசோதித்தேறி, மருவிப்பார்நாமுள்ளித்தோஷங்கண்டு வருங் குணத்தில் இந்நோய்தான் தீராதென்றே. 932

இம்மூன்று மொருதொடர்.

இதுவும் நாமுள்தோஷக் குணம்—அறுசீராசிரிய விருத்தம்

திடமாமுலையும்உண்ணுது சிறிமிகவே சர்த்திக்கும்
அடவாய்கையில்நில்லாது அனல்போல்மிகவும்வெச்செசன்று
†விடமேயனையவிழியாளே வேப்பம்பூப்போல்வயிறேடும்
நடமேபுரிவார்உரைசெய்தார் நாவுன்முள்ளின்குணமிதுவே.

† சர்த்திக்கும் - வாந்திக்கும் விடமேயனைய - விஷம்போலொத்த.

நாமுள்ளுக்கு மருந்து.

கடுக்காய்ஒன்றுபொடிசெய்து கற்றாழஞ்சாறுசீரகமும்
இடுவோர்சங்கினளவாக இதுபோல்மூன்றுநாளதுதான்
கொடுமேஇனிதாய் நாமுள்ளுக்குலேந்தேயோடிவிடுங்கையால்
விடுவேல்விழியாய்செய்யென்றுவேதமுனிவர்உரைத்தனரே

நாமுள்ளுக்கு வேறு மருந்து—வெண்பா.

சங்கன்கொழுந்து தனிநெருஞ்சில்முள்ளுக் §காய்
கங்குமிளகுதக் காளியிலேப்-பொங்கும்
பழமஞ்சள்உள்ளிப் பரிவாய்நறுக்கி
பொழியம்ஓர்சங்கிடவே போம். 935

§காய்-மிளகு.

இவைமருந்தெல்லாம் நறுக்கிச்சாறெடுத் தொவ்வொருசங்
கிடத்திரும்-பாலனைக்காத்தவளென்ற-மணிதக்காளியிருக்க
பயமென்ன ஷை அத்திப்பாலும் ஆலம்பாலும் கொடுக்க
தீராதநோய்த் திணையிலுண்டோ-கெந்தாலுவின்குணம்.
இந்த கெந்தகதாளியென்பர்.

§தாலு-நாவு—அறுசீராசிரிய விருத்தம்.

வஞ்சிக்கொடியேநீகேளாய் வாயில்கெந்தகதாளிதனை
மிஞ்சி §மிடறுமூலேஉண்ணு மிகபுண்ணுக §கந்திக்கும்
§குஞ்சிதன் னுடல்வெதுப்புற்றுக் கோழைநீர்வெங்ராகும்
§துஞ்சிமலமுந்தீய்ந்துவிடும் தொகுத்தஇந்தகுணந்தானே.

§மிடறு-தொண்டை §கந்திக்கும்-நாறும் §குஞ்சி-குழந்தை
துஞ்சி-தூங்கி.

கெந்தகதாளிக்கு மருந்து.

கெந்தகதாளிதான்தீர கேளாய் §பாசிவல்லாரை
வந்தீருள்ளித்தன்னேடு வளமாய்இடித்துசுரசஞ்செய்
குந்தும்வெள்ளாட்டுப்பாலும் கூட்டிச்சீரகமும்வெதுப்பி
தொந்தமாகஅரைத்துகொடுசுணையும்பண்ணும்போமென்றே
§பாசி-பழம்பாசி.

அட்சரவகுப்பு முற்றிற்று.

அகத்தியர் திருவடிகளே சரணம்.

## சோகை வகுப்பு.

---

வாதசோகையின் குணம்.

ஆமெனும்வாதைசோகை அணுகிடுங்குணத்தைக்கேளு
பாமெனும் §பழயதுண்டு பைங்கிளியோடுதானும்

வாமெனும்புணர்ச்சிசெய்து மல்லுசெய்தனுபோகித்து
நாமெனும்ரவியில்ஏகி நடந்துதான்சென்றபின்பே. 938

பழந்துண்டு-பழயது சாப்பிட்டு பைங்கிளி-பச்சைக்கிளி போல்சொல்லேயுடையபெண்ணோடே மல்மல்ல-யுத்தம்போல் ரவியில்-வெயிலிய ஏகி-சென்று.

இதுவுமது.

பின்புமேராக்காலத்தில் பசித்துடன்புணர்ச்சிசெய்தால்
அன்புமேவைத்துபித்த ராசனும்எழும்பிமேலே
துன்பமாய்மூலம்புக்கித் தோன்றிடும்வன்னிதானும்
இன்பமாய்வாதங்கூடி இணைபிரியாதுபாரே. 939

மூலம்புக்கி-மூலத்திற்குபுகுந்து வன்னி-நெருப்பு.

இணைபிரியாதிரண்டும் இருந்ததால்குணத்தைக்கேளு
கனதனம்வற்றிப்போகும் கபாலமேசூடதாகும்
மூளைசடம்பொங்கிபோகும் மூலமேகருகிப்பின்னும்
துணைவிந்துமோகத்தாலே துன்பமேஅனுகுந்தாமே. 840

தனம்-கொங்கை சடம்-உடல்.

அணுகுமேவாதசூட்டாய் ஆத்துமம்அழிந்துபோகும்
இணுகுமேமாதரோடு இயம்பியேபுணர்ச்சிசெய்தால்
வணுகுவின்தூறிகர்ப்ப வயிற்றினிற்சனிக்கும்பாலன்
முணங்கெனபிறந்தபின்பு மூன்றுண்டிற் சோகையாமே.

மாதரோடு-ஸ்திரீகளோடு சனிக்கும்-உண்டாகும்.

சோகைதான்அணுகும்போது துடிக்கவேசரம்வந்தெய்தும்
தாகமேஅதிகமாகும் சலமதுசிரசிற்கோற்கும்
தோகையாள்தனக்குப்பாலு சுண்டியேசலமதாகும்
வேகமாய்மலத்தில்வாயு புக்கினல்வினைதான்பாரே. 942

தோகையாள்-பெண்.

வினையதுவருகும்நேர்மை விபரமாய்உரைக்கக்கேளு
அணையதுவாகதானும் அபானனும்வாயுகூடில்
புணையதுகீழ்மூலத்திற் புக்கினல்தடிக்குந்தேகம்
கனலதுமெற்றக்காணும் கண்ணதுவெளுக்குந்தானே. 943

அபானன்-குதத்திற்கீழ்நோக்குகிற தசவாயுவிலொன்று புக்கினல்-புகுந்தால் கனல்-சூடு.

இதுவுமது.

வெளுத்திடும்உதடுதானும் வெடிக்குமேதலைதாநோகும்
களைத்திடுஞ்சோபமாதி கைகால்கள்அசதிகாணும்
பழுத்திடுமுகம்வேறுகும் பாசமாய்பசியெடாது
உளுத்திடுஞ் *சிசுவுக்கேதான் *உட்டணம்அதிகமாமே. 944

*சிசு-குழந்தை *உட்டணம்-வெப்பம்.

உட்டணம்அதிகமானல் ஒடுங்கிடுந்தாதுநாடி
உட்டணம்அதிகந்தன்னல் உடலதுவற்றிக்காணும்
உட்டணம்அதிகத்தாலே மூலமேகடுப்புண்டாகும்
உட்டணக்குறியேகண்டால் மோசமேவருகுந்தானே. 945

வாதசோகைக்கு எண்ணே.

மோசமேவராமலுந்தான் *மூர்த்தத்தின்சோகைதீர
தோசமாம்வாதசோகை துலைந்திடஎண்ணெய்கேளு
நாசமாய்ப்போகுநோய்தான் ரத்தனதேகமாகும்
பேசவேயிந்தநூலின் பேதமேஅறிந்திடாயே. 946

*மூர்த்தம்-உடல்.

அறிந்திடுமுக்கத்தாரி அரசம்வேர்அத்திப்பட்டை
வறிந்திடுமுசுமுசுக்கை *வாடிவேர்க்கருந்துழாவும்
துறிந்திடுஅமுக்குறுவேர் தூதளைப்பொன்னங்கணி
வெறிந்திடுவில்வவேரு விளாவுடன் துத்திவேரே. 947

*வாடி-தொட்டால்வாடி *கருந்துழாய்-கருந்துளசி.

துத்தியுஞ் §சரக்கொன்றைத்தூர்நுடரியுந்தகரைவேரு
மித்துரு §மேனிசங்கு மிகுந்ததோர்முகிழும்தேரும்
பத்தியாய்வகையொன்றுக்கு பலமதுநிறுத்துவாங்கி
நத்தியேமூன்றுநாளும் ரவிதனில்உலர்த்திடாயே. 948

§சரக்கொன்றைத்தூர்-சரக்கொன்றைவேர் §மேனி-குப்பைமேனி.

உலர்த்தியேஉரலிலிட்டு ஒரடியாகச்செய்து
வலாத்தியேஇதனைதோண்டி வளம்பெறதூணிநீரில்
மலர்த்தியேஇதனைத்தாக்கு மறுபடிவனமூலிச்சாற்
குலர்த்தியேசொல்லக்கேளாய் கூறுவோம் அழிஞ்சில்சாறே

அழிஞ்சியும்நத்தைச்சூரி ஆதொண்டைக்கீழ்க்காய்நெல்லி
வழிஞ்சிஆமணக்குபுக்கு மாதுளைபரிததி §மேனி

விழிஞ்ஆரரை §நீலி விடத்தலைபொன்னுங்காணி
புழிஞ்சியேவகைவகைக்கும் புகழிதுபலஞ்சாறுமே. 950
§மேனி-குப்பைமேனி §நீலி-அவுரி.

இதுவுமது.

சாறதுவிதங்கொண்டு சாற்றுவாய்முன்புநீரில்
பாரதுகடைசரக்கு பலவிதஞ்சொல்லக்கேளு
நேரதுபரங்கிப்பட்டை §நிம்பத்தோல்சாதிக்காயும்
சீரதுதேவதாரம் செண்பகப்பூவுமாமே, 951
§நிம்பத்தோல்-வேப்பம்பட்டை.

பூவதுலவுங்கப்பூவும் புகழ்வலம்புரிக்காய்கோஷ்டம்
ஆவதுதான்றிக்காயும் அரிசிதிப்பிலியும் §மாஞ்சில்
தாவதிசெவ்வியந்தான் சந்தனத்தூளும்ஏலம்
பாவதுகடுக்காய்ப்பூவும் பரிவுடன்நிறுத்துவாங்கே. 652
§மாஞ்சில்-சடாமாஞ்சில்.

வாங்குசீரகம்அவ்வீதம் வகைவகைப்பலங்காலாகும்
வாங்குடன்இளம்வறுப்பாய் வறுத்துமேஇடித்துதூளாய்
தீங்கதுவராமல்தானும் செலமதிலிதனைச்சேர்த்து
தாங்கவேயின்னங்கேளு சரக்கதன்வகையைத்தானே 953

சரக்கதில்லிங்கம்பூரம் தாரமும்வீரங்கெந்தி
குரக்கவேவெள்ளைவாளம் கோரோசினைபுனுகுதானும்
நீரக்ககஸ்தூரிவீதம் நிலைபெறவகைஒன்றுக்கு
வரக்கால்கழஞ்சியாகும் வாங்கியேபொடியாய்ச்செய்யே. 954

செய்துமுன்நீரில்தாக்கி §சேர்இருகூடஎண்ணை
நெய்துடள்எடுத்துவிட்டு நிகழ்பெறஅடுப்பிலேற்றி
மூய்துசாமத்தின்மூன்று மூலமாம் §வன்னிமுட்டி
எய்துடன்எரிக்கும்போது §இச்சலம் கண்டிப்போமே. 955
§சேர்இரு-இரண்டுசேர்எண்ணை §வன்னி-நெருப்பு §இச்சலம்-இந்ததண்ணீர்.

சுண்டிடுங்கிழாயமெல்லாம் சூக்ஷமாய்அடிநீரானல்
கண்டிடுஇறக்கிநீதான் கனலதுவற்றினற்கால்
இண்டிடுங்கற்கந்தன்னில் இதனையேவடித்திட்டேதான்
அண்டிடுவாலைபூசை அம்பிகைபதத்தைப்போற்றே. 956

இதுவுமது.

பொற்றியேஉலகத்தோரில் புண்ணியர்க்கில்லைநோய்தான்
பார்த்திடும்பாவத்தாலே பழிவரும்வினைவந்தெய்தும்
காத்திடுந்தேந்ததன்னில் கர்மநோய்சூழும்பாரு
மாற்றிடாய்ப்பிணிகளெல்லாம்மரணமாங்குணத்தைச்காணே

காணவேவாதசோகை §காயத்தைவிட்டுப்போகும்
ஆணவேஅதிகாலத்தில் அருள்பெறஎண்ணெய்தன்னில்
பூணவேநோயானிக்குப் போடுநீகழஞ்சமூன்று
தோணவே §நவநாள்மட்டும் துதிபெறகொடுத்துப்பாரே.

§காயத்தை-யுடலை §நவநாள்-ஒன்பதுநாள்.

கொடுத்திடஇதற்குபத்தியம் கொள்ளுமேபுகையும்போகம்
கடுத்திடும்புளியும்பாகல் காயுடன்இறைச்சிமற்சம்
விசித்திடுபூசினிக்காய் வெந்தயங்கடுகோடுள்ள
மடுத்திடும்அகத்திகீரை மழைரவிகாற்ருகாதே. 959

காற்றுடன்நடைஓட்டந்தான் கடுங்குரல்காரமாகா
பார்த்துடன்வெந்நீர்ச்சாதம் பாங்குடன்வருத்தஉப்பாம்
போற்றுடனேகொறுக்காய்ப் புளிதனைக்கூட்டலாகும்
மாற்றுடன்எண்ணெய்வுண்டு மதுவநவநாளுந்தள்ளே 960

தள்ளியேநவநாளுந்தான் தலைக்குவார்ஓமந்தேய்த்து
வள்ளல்தான்எனக்குச்சொன்னர் அகத்தியன் தமிழால்செய்
[தோம்
கள்ளமேயில்லையிந்த கைவல்லியந்தாதிஉண்மை
உள்ளவேசுபஸ்தமாகும் உத்தமர்மொழிந்தநூலே. 961

பித்தசோகையின் குணம்.

நன்றெனஅந்தாதி கைவல்தியநாநூறுதன்னில்
இன்றெனபொருள்களெல்லாங் கூறுவோம்இன்னங்கேளு
தென்றெனகுழந்தைநோயைத் திருத்தமாய்யானுஞ்செப்ப
வன்றெனவாலைமாதே வந்தெனக்கருளுவாயே. 962

அருள்பெறும்பித்தவாயு ஆண்மையின்குற்றத்தாலே
வருமளர்சிசுவுக்கேதான் வல்பிணிதுடர்தல்கேளு
திருவருளாலேவந்த தீவினைக்கடுரமல்ல
குருவருள்சாபத்தாலே கொடியதீவினைதானென்றே. 963

இதுவுமது.

தீவினையாலேஎய்தும் குணங்குறிசிசுவுக்கேதான்
மாவனைபித்தத்தின் காமாலையில்சோகையாகில்
மேவினைபிறங்குநோய்தான் விளக்கமேஏதென்றுற்கால்
நாவினுல்உரைக்கக்கேளு நாயகனுலேநோயே. 964

நாயகன்குணத்தைக்கேளு நாம்உரைப்பிறிவிந்நாலில்
காய்க்கக்காரன்காம போகத்தால்விரகஞ்சூழ்ந்து
சேயகமாதினேடே சேர்ந்துதான்புணர்ச்சிசெய்து
காயமேவியர்வைத்தட்டக் களைக்கவேபோகித்தாலே. 965

களைக்கவேயிந்தவிதம் கன்னியோடனுசரித்து
விளைக்கவேதாதுநஷ்டம் மேவியேசெய்வோராகில்
துளைக்கவேஅன்னம்உண்ண துடிதுடித்துயிர்பசிக்கில்
இளைக்கவேபுணர்ச்சிசெய்வோர்க் கிவ்விதம்நடக்குந்தானே.

நடந்தநாயகனும்பெண்ணுள் நாடியேஅனுபோகத்தில்
படர்ந்துதான்கருவிலாகி பார்தனில்பிறக்கும்பாலன்
செடமதுபித்தநீரால் தெளித்ததால்தேகமெங்கும்
*கடமதுகனக்கஊதி கண்ணுமேவெளுக்குந்தானே. 967

*கடகம்-சரீரம்.

வெளுத்திடும்இரண்டாண்டானல் வினையதுசூழக்கேளு
களைத்திடுசடலந்தன்னில் கனலதாவ்வரட்சிகாணும்
பழுத்திடுந்தேகஊதி பாண்டுகாமாலைப்போலாம்
கொளுத்திடுகுடங்கள்போல குறிவயிறுபெருகுந்தானே. 968

வயிறதுபெருகிற்றேதான் வயிற்றிடுங்கால்கட்கையும்
தயிரறுபோலேபேதி தனித்தடிக்கடிக்குபாயும்
துயரமேயதிகமாகும் துவண்டிடுமசதிகாணும்
பயறதுபோலேபுண்கட் படருங்காமாலையாமே. 869

இதுவுமது—பித்தசோகைக்கு எண்ணை.

படருங்காமாலையிந்தப் பாரநோய்தனக்குகேளு
இடரதுவாராததேஇந்நால் இயம்பிம்எண்ணெய்கேளாய்
திடரும்மாம்பட்டைஅத்தி *நிம்பத்தோல்முக்கத்தாரி
திடமெனசித்திரமூலி சிற்றுமுட்டிஅமுருக்கவே 970

*நிம்பத்தோல்-வேப்பம்பட்டை.

இதுவுமது.

வேரேனுமூங்கில்வேரும் விடத்தலேஎருக்குதானும்
வாரெனும்பிம்பம்வேரும் மல்லிகைசிற்றுமல்லி
கோரெனும்அழிஞ்சில் முல்லேக் குரும்பனே ஆமணக்கு
தேரெனுஞ்செங்கதாரி திருமேனியழகியாமே. 971

மேனியும்பொன்னுவாரை மிளகதின்கருணேவாடி
ஞானியாம்நத்தைச்சூரி நன்னுறிமுசுட்டைப்புங்கு
வானிறமானசூரை வன்னியும்முதுயன்வேறும்
கானிறவகைவகைக்குக் கருதிடும்பலந்தான்வேரே. 972

வேருடன்வகைகள்வாங்கி மிகுந்ததோர்ரவியில்மூன்று
சீருடன்நாள்உலர்த்தி செப்பிடும்உரலில்தாக்கி
பாருடன்இடித்துதோண்டிப் பாங்குடன்தூணிநீரில்
காருடன் இட்டுபின்னும் கருதுவோம்மூலிச்சாறே. 973

மூலியிரம் §நிலத்துழாயும் முருங்கையும்புனல்முருங்கை
வேலியின்பரித்திவெள்ளேச் சாரணேக்கீழ்வாய்நெல்லி
காளிமாதளேயுநொச்சில் காக்கணன்பிரமதுத்தி
பாலிநெய்ச்சிட்டி §நீலி பரிவுடன்இவைகள்வாங்கே. 974

§நிலத்துழாய்-நிலத்துளசி §நீலி-அவுரி.

வாங்கிடும்வகைவகைக்கு வளமதாய்சொல்லக்கேளு
தேங்கிடவேண்டாம்இந்த சாறுமேபலம்இரண்டு
நாங்கவேமுன்புநீரில் நளினமாய்இதனேயிட்டுப்
பாங்குடன்இன்னங்கண்டு திப்பிலிமிளகுசுக்கே. 675

சுக்குடன்பரங்கிப்பட்டை சொல்லியதும்பராஷ்டம்
தக்கவேதான்றிக்காயும் தாளிசபத்திரியும்ஏலம்
புக்கவேலவங்கப்பூவும் புகலவேகடுக்காமாஞ்சில்
சிக்கவேசிற்றரத்தை செல்வியசிங்கியானே. 976

சிங்கியாங்கடகம்சாதிக் காயுடன் §சிவந்தபத்ரி
அங்கியாஅக்ரகாரம் அதிகமாம்செண்பகப்பூ
கங்கிசிரகமுங்கோஷ்டம் கருதிடும்வகைவகைக்கு
பொங்கவேபலங்கால்வாங்கி புகலவேஇன்னங்கேளே. 977

§சிவந்தபத்திரி-சாதிபத்திரி.

இதுவுமது.

இன்னங்கஸ்தூரிதானும் இயம்பிடும்புனுகுங்கூட்டி
அன்னரோசினையும்வீதம் அவ்வகைவிருகன்வாங்கி
முன்னயசரக்கதெல்லாம் முறைவறுப்பாகச்செய்து
உன்னிதமாகக்கல்லு உரலினில்தாக்கிடாயே. 978

தாக்கியேஇடித்துமாப்போல் தடையிலாவடியேகட்டி
ஆக்கியேமுன்புநீரில் அடவுடன்இதனையிட்டு
நோக்கியேசொல்லக்கேளாய் நுசிதஅப்பிரகம்காந்தம்
தூக்கிடுங்கெவுரிநாவி துத்தமும்தாரமாமே. 979

துத்தமும்துருசுவெள்ளை துதிபெரும்வீரம்பூரம்
வித்தகலிங்கம்வாளம் மேவிடும்சூதம்கெந்தி
சித்தமேஇவைவகைக்கு செப்பிடுமுக்கழஞ்சு
உத்தமர்மொழிந்தநூலின் உறைதனைஅறிந்திடாயே. 980

அறிந்திடும்இதனைவாங்கி அருள்பெறதூளதாக்கி
தெரிந்ததோர்முன்புநீரில் திருத்தமாய்இதனையிட்டு
பிறிந்திடவேண்டாம்பின்பு பேராமணக்கின்எண்ணெய்
பறிந்துநீபடிரெண்டிட்டுப் பாரதோர்அடுப்பிலேற்றே 981

ஏற்றியேமுச்சாமந்தான் எரியதாய்எரிக்கும்போது
பார்த்தியேயாமாகிற்றன் பசுமையாய்வருதல்காணும்
போற்றியேநீரெல்லாந்தான் புகலக்கேள்சுண்டும்பாரு
ஆற்றிடுஇறக்கிப்பின்னும் அடவுடன்வடித்திடாயே. 982

வடித்துமேகசலத்திட்டு வாலையின்பதமேவைத்து
மடித்துமேபித்தத்தின்கா மாலையின்சோகைதீர
துடித்ததோர்வினையும்ஏகும் துன்பமேஅணுகிடாது
குடித்திடகுழந்தைகட்கு குணங்குறிசெப்புவோமே. 983

குணமதைசொல்லக்கேளாய் கொடுத்திடுநவநாள்தானும்
கணம்இருகழஞ்சுஎண்ணெய் கருதிடுசிசுவுக்கேதான்
தினம்ஒருநாள்தப்பாமல் திருத்தமாய்கொடுக்கும்போது
இனமென்னதேகந்தானும் எழுகுபோல்வலுக்குந்தானே.

வலுக்கவேகுழந்தைப்பெற்ற மாதாவுக்கென்னபத்தியம்
தெலுக்கவேமிவகுகாரம் செய்திடாவெந்நீர்சாதம்
குலுக்கவேவறுத்தஉப்பு §தின்றியும்இரண்டுவேளை
பலுக்கவேஅதன்மேல்ஒன்றும் பாலிப்பதாகாதென்றே. 985

§தின்றி-சாப்பாடு.

இதுவுமது.

என்றெனஈவநாள்தானும் இப்படிஇருந்தாராகில்
குன்றெனும்வினையும்போகும் கூறுவோம்பின்னங்கேளீர்
நன்றெனதேசவச்ச நலமதாம்சுபஸ்தம்நன்றும்
அன்றெனக்கைவல்லிய அந்தாதியின்பெருமைதானே. 98?

பித்தசோகைக்கு வேறு கிழாயம்.

கையாந்தகரைநீர்முள்ளிக் கமள்நாயுரிவிவேர்க்கிட்டம்
செய்யாச்சுக்குமிளகுடனே சீரகம்இவைகட்சமனுக
மெய்யாக்கிழாயமாய்ச்செய்து மீறும்அந்திசந்திகொடு
பொய்யாம்பித்தச்சோகையது போகும்போகும்கண்டாயே.

பாண்டு காமாலை சோகைக்கு அடைக்கிழாயம்.
எண்சீராசிரிய விருத்தம்.

சுத்திசெய்த §மண்டூரம்பலம்ஓர்எட்டு §சூதஇலைநீர்முள்ளிக்கீழ்வாய்நெல்லி, சித்திரமாங்கரிசலாங்கண்ணியோடுசிறப்பாகவகைக்கஞ்சுபலமேகூட்டி, புத்தியுடன்சீரகமும்பலம்ஒன்றுக 1 புனல்படிஓர் எட்டுவிட்டுவற்றக்காய்ச்சி, பத்தியுடன் அடைக்கிழாய மாகத்தானே பண்பாகஅந்திசந்தி கொடுத்திடாயே. 988

§மண்டூரம்-செங்கற்சிட்டம் §சூதஇலை-மாஇலை §புனக்-சலம்.

இதுவுமது—கலி விருத்தம்.

கொடுத்திடவாண்டு கொடியசோகைகளும்
அடுத்தகாமாலை அணைத்துமேதீரும்
படித்திடும்பிச்சா பத்தியங்காத்திட
தொடுத்தவியாதிகள் எல்லாந்துலையுமே. 989

பாண்டுகாமாலை சோகை நீர்க்கோவை உடம்பு வீக்கத்திற்கு
மருந்து பிரமமுனி—எண்சீராசிரிய விருத்தம்.

§மேதியிளந்தயிர்படிகால் §அச்சாணிப்பால்விதமாக மூன்றுத்துளிவிட்டுக்கலக்கி, ஓதியேமிளகேழு பொடித்துப்போட்டு உண்டுவர இப்படியேநாள்மூன்றுக்கு, நீதியாய்க்கடும்பத்தியமூன்றுநாளும் நினைவாகமறுபத்தியமூன்றுநாளாம், ஏதியேஏழாநாள் தலைநீர்வார்த்தே எட்டாநாள்புளிவுப்பு வறுத்துக்கூட்டே. 990

§மேதி-எருமை §அச்சாணிப்பால்-அந்த எருமை சாணிப்பால்

இதுவுமது—வெண்பா.

கூட்டவேபாண்டுக் கொடுங்காமாலைச்சோகை
நீட்டுடம்புவீக்கம் நீர்க்கோவை ஓட்டமிடும்

§அன்னவஞ்சூழ்புவியில் அழகொழுகும்பெண்மயிலே
பன்னிப்பரவசத்தைப்பார். (§அன்னவம்-சமுத்திரம்)

ஊதுகாமாலையின் குணம் - அறுசீராசிரிய விருத்தம்.

ஊதுகாமாலைக்குணங்கேளு ஊதிமுகமுங்கால்அசைக்கும்
பாதிசாமம்பசியெடுக்கும் பசித்தவுடனேமைந்திக்கும்
சீதஞ்சிறுத்துவயிறுவிடும் சிந்தைமயக்கம்உண்டாகும்
காதும்அடைக்கும்இளைப்புண்டாகும் காமாலையூதுக்குணமிதே

இதுவுமது.

காதுடன்உடம்புங்கண்ணும் கனக்கவேவீங்கும்வற்றும்
போதவேநாவும்புண்ணுய் பொருந்தியசரம்உண்டாகும்
வேதனைகைகாலுஞ்சோர்ந்து வெறுத்திடும்அன்னந்தன்னை
ஊதுகாமாலையென்று உரைத்தனர்முனிவர்தானே. 993

ஊதுகாமாலை மஞ்சட்காமாலை வரட்காமாலைக்கு மருந்து.
எழுசீராசிரிய விருத்தம்.

திட்டமுடன்அரப்பொடியும் வெள்வெங்காயம்கிளர்முருங்கையிலையுங் §கோகனத்தன்னேடே, திட்டமுடன்முற்றியதோர் தேங்காய்கூட்டிச்சிறந்த இளநீர்வார்த்து அரைத்துக்கொண்டு, வட்டமுறுமுலையாளே இரண்டுதேகம்வாகாகஅரைகழஞ்சுகுழவிக்கீய, சட்டமதாய் ஊதுகாமாலைமஞ்சள் தனத்தவரட்காமாலைகழியுந்தானே. 994

மஞ்சட்காமாலையின் குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

குண்டிஅக்கரடிகுத்தால் குளுப்பையாய்முகங்கால்வீங்கும்
விண்டிடரத்தம்வற்றும் வெதுப்புமேவிலாவில்தோன்றும்
§பண்டியிள்மலமுஞ்சிக்கிப் பதமஞ்சட்சிறுநீர்ஆகும்
கண்டியங்கண்வெளுக்கும் மஞ்சட்காமாலையாமே. 995

§பண்டி-வயிறு.

மஞ்சட்காமாலைக்கு மருந்து—எண்சீராசிரிய விருத்தம்.

சாற்றினுர்அதிமதுரம்சங்கன்வேறும் தனித்தநிம்பம்பழத்தரைத்துதானே ஆவின், சாற்றினுர்பால்தனிலேஉண்ணவேதான் தணியுமஞ்சட்காமாலைதரணிதன்னில், சாற்றினுர்கண்டரோ கீழ்வாய்நெல்லி புழைத்தமணித்தக்காளித் தயிரில்தானே, சாற்றினுர் அரைத்துகொடுகுழவிகட்கு தணியுமஞ்சட்காமாலை சபலந்தானே. 996

வரட்காமாலையின் குணம்—வெண்பா.

கண்பச்செருக்கும் காலோய்ந்துடம்புவரும்
தண்ணீர்க்குமெற்றத் தவிக்குமே-பெண்ணே
இருட்பிழம்பைபோலும் §இளவலுக்குதான்சூழ
வரட்காமாலைக்குணத்தின்வாறு. (§இளவல்-குழந்தை.)

வரட்காமாலைக்கு மருந்து.

மணித்தக்காளிகிழ்க்காய் நெல்லிமகிமீது
கணித்துசமூலம்நிம்பக் காயளவு தணித்ததா
எருமைத்தயிரில் இனிதாகஉண்டு
எருமைத்தயிர்பால் நெய்யிடு. 998

சோகைகாமாலைவகுப்பு முற்றிற்று.

அகத்தியர் திருவடிகளே சரணம்.

# பற்பல வியாதிகளின் வகுப்பு.

பால்உண்ணுத குழந்தைகளுக்கு மருந்து வேறு எண்ணெய்.
எண்சீராசிரிய விருத்தம்.

அவுரிவேர்ச் சத்திச்சாரணையின்வேரும் அமுக்கராவேர் நிலப்பனைக்கிழங்கு, விவரகருங்காலியிலைகஞ்சாங்கோரை மிள கருணைப்பட்டைமூக்குரட்டைவேறும், துவருடைய §திரிகடுகு பரங்கிப்பட்டை தும்பராஷ்டங்கடுகுசீரகந்தான், பவுரியிவை வகைவகைக்கு விருகன் ஒன்று பசும்பாலில்அரைத்துவடி யிட்டுக்கொள்ளே. 999

*திரிகடுகு-சுக்கு மிளகு திப்பிலி.

இதுவுமது.

இட்டுக்கொள்ளொருசங்கு வார்த்திட்டாக்கால் இளங்குழ ந்தைப்பால்குடிக்கும் இதுவல்லாமல், மட்டுமிந்தமருந்தெல் லாம் கூட்டித்தானே மகிழ்ச்சிற்றுமணக்கெண்ணே தன்னிற் போட்டு, சட்டமுடனேஎரித்துபதத்திறக்கி தயவாகஅளவறி ந்து புகட்டிவிட்டால், நட்டமுடன் பால்குடியாதிருந்தபிள்ளை நலமாகப்பால்உண்ணும்நாட்டிப்பாரே. 1000

இண்டிலையும்தூதுவளைக்கண்டங்கத்திரி உயல்பாகவகை க்குஒருபிடியேகொண்டு, மண்டியேதிப்பிலியும் வெள்ளைப்பூண் டும் வகைக்குஒருதுட்டெடைதான் வாங்கிவந்துபண்டியொரு படிநீரைவிட்டுக் காய்ச்சிப்பரிவாக அந்திசந்திபத்துநாளும், கொண்டிடவேஇருமலதுதீருந்தீருங் குணமானஇச்சாபத்திய மாய்க்கொள்ளே. 1001

உண்ணுக்கு மருந்து—வெண்பா.

எவச்சாரங்கற்சுண்ணம் இரண்டும்பழச்சாற்றால்
அவச்சாரமாக அரைத்துசுவைச்சேர்
உண்ணுக்கிலேதடவ உண்ணுவுதான்வளர்தல்
கண்ணுரஒடுமதுக் காண். 1002

கக்குவான் குணம் கொச்சகம்.

கெக்கரித்துத்தும்பிக் கிளர்திருமல்உண்டாகும்
கொக்கரித்துபற்கடித்துக் கோழைகபபேஇறங்கி
வக்கரித்துஆண்பெண்ணும் மற்கட்டியிட்டாமற்போல்
நக்கரித்துநாணும் நவிலகக்குவானதுவே. 1003

கக்குவானுக்கு நெய் வெண்பா.

தூதுவேளைத்தான் துவைத்துமேசாறுகொண்டு
கோதில்படிநெய்யுங் கோட்டம்-மாதேநீ
கூட்டியெரித்தருந்த கோரகக்குவானதுவும்
தாட்டியின்றியோடிவிடுந் தான். 1004

நாவரட்சிக் குடிநீர் – எண்சீராசிரிய விருத்தம்.

கோஷ்டமுடன்சிரகமும்ஏலம்சுக்கு §கூவிளவேர் அதிமதுரம் §கூர்மத்தோடு, வாட்டபடன்சந்தனமும் கலைமான் கொம்புவரப்பூலரவேரும் நெற்பொரியும்நேராய்த், சுதட்டமுடன்குடிநீரைகுடிக்கவேதான் தேசத்துசிறுவோர்க்குதேனே கேளாய், நாட்டமுடனே மயக்கசோபதாபம் நாவரட்சியுந்தீரும்நாட்டுள்ளோரே. 1005

§கூவிளவேர்-வில்வவேர் கூர்மத்தோடு-ஆமையோடு.

தாகத்திற்கு கிழாயம்—அறுசீராசிரிய விருத்தம்.

ஏலம்மதுரம்பற்படகம் யேற்றசீந்தில் §அறுகு §சந்தம்
சாவவில்வப்பழத்துடனே சவிலாமிச்சம்வேப்பீர்க்கு
கோலிருநாழிநீர்விட்டுக் கொதிக்கக்காய்ச்சிஉழக்காக்கி
வாலர்ப்பெரியமாந்தருக்கு வருந்திக்கொடுதாகம்போமே

§அறுகு-அறுகம்வேர் §சந்தம்-சந்தனம்.

தாகத்திற்கு வேறு கிழாயம்.

புளியம்பட்டைமிளகுடனே புங்குவேலிநாயுருவி
அளியஇலைகட்சமன்சாம்பல் ஆக்கிஓமம்விரகனெடை
நளியப்பொரித்துநீர்விட்டு நலமாய்க்காய்ச்சியிறுத்திகொடு
தளிய §மூளைக்குத்தணியாக தாகம்போகுங்காண்பாயே. 1008

§மூளை-குழந்தை.

வீக்கத்திற்கு குடிநீர்—வெண்பா.

தினந்தாளிங்குகரை சிறுநெருஞ்சிக்குறிஞ்சான்
மனந்தார்நீர்முள்ளிஉள்ளி மாமலையின்-கனத்துவரின்
வெண்காரமேபொடியாய் மேவுகுடிநீரருந்த
கண்காணவீக்கம்போங் காண். 1008

பொருமல்வீக்கம் வயிற்றுக்கட்டி உப்பலுக்குக் குடிநீர்.
எழுசீராசிரிய விருத்தம்.

சங்குநெருஞ்சில்சாரணைகொவ்வைத் தன்னுடன்னீரமுள்ளி
தான்றிகடுக்காய்புளியிலைநெல்லித் தாரெனும்வேப்பந்தோல்
மங்கியகிட்டம்இரும்பின் அரைப்பொடிமஞ்சளும்நன்னறி
வழுதலைகொன்றைவிழுதிக்குமரி மணலிகரைக்கொடியும்

இதுவுமது.

பங்கம்பாளைச்செங்கத்தாரி பாதிறிகுறிஞ்சானும்
பழகியகாடி *கோசலம்விட்டேபாகமும்எட்டொன்றாய்
பொங்கியகுடிநீரானதைப்பருகப் பொருமலும்வீக்கமுடன்
போதவயிறிற்கட்டியும்உப்பலும் பொடியாகுந்தானே. 1010

*கோசலம்-கோமயம் இதுபெரியவர்கட்குஞ்சிறியவர்க்குமாகும்

அஜீரணத்திற்கு கிழாயம்—அறுசீராசிரிய விருத்தம்.

வெற்றிலைப்பதக்கெடுத்து வேண்டுஞ்சுண்ணும்புப்பூசி
வைத்திடுஅடுப்பில்சட்டி மடிக்கும்வெற்றிலையைப்போட்டு
ஒத்துடன்வறுத்துநன்றாய் ஒருபடிநீரைவார்த்து
பற்றறஎட்டொன்றாக்கிப் பாங்குடன்இறுத்துக்கொள்ளே.

இப்படிக்கொள்ளவேதான் இதமுடன்அஜீரணங்கள்
தப்பியதாதுசன்னி சயித்தியம்வாந்தி *பிராந்தி
செப்பியவயிற்றின்நோவு சீதமுங்கடுப்புதாகம்
அப்பொழுதோடுமெஅறு அகத்தியர்உரைசெய்தாரே. 1012

*பிராந்தி-மயக்கம் இதுபேரியவர்க்குமாகும்.

நடுக்கல்வாந்தி அஜீரணத்திற்கு கிழாயம்.

சோறுடன்அசமதாகம் துப்பதோர்வசம்புதானும்
பாரியநுணுதமாலம் பருமிளகுடனேகூட்டி
வேறுவேறாய்நறுக்கி விதங்கொட்டாங்காய்ச்சிலுடும்
நாரியேகாய்ச்சிக்கொள்ள நடுக்கல்வாந்தியுந்தான்போமே.

*தமாலம்-இலை.

விக்கலுக்கு மருந்து.

தேற்றாங்கோட்டைச்சந்தனமும் திகழ்கலைமான்கொம்புடனே
கூற்றும்முலைப்பாலில் கொட்டை *பாக்குஅளவரைத்து
ஆற்றுவெல்லங்கூட்டியிட அகலும்வெண்காரம்பொரித்து
போற்றுஇளநீரிற்கொடுக்கப் போகும்விக்கல்ஆமென்றே.

*பாகு-பாக்கு.

எட்டுத்திப்பிலி யீரைந்துசீரகம்
கட்டுத்தேனில் கலந்துண்ணவிக்கலும்
விட்டுப்போகும் விடாவிடிற் *பொத்தகம்
சுட்டுப்போடுநான் தேறனுமல்லவே. (*பொத்தகம்-மயிலிறகு.

விக்கலுக்கு வேறு மருந்து—வெண்பா.
திப்பிலியும்ரோகணியும் சேரவறுத்துப்பொடித்தோர்
துப்பாமயிலிறகுஞ் சுட்டுத்தான் தப்பாமல்
செந்தேன்கலந்திழைத்துச் செய்நாவிற்றடவ
பைந்தொடியேவிக்கல் அறும்பார். 1016

சர்த்திவிக்கலுக்கு கிழாயம்—கலி விருத்தம்.
நீடுமாதனே நெற்பொரிசர்க்கரை
தொடுத்திடுதிப்பிலி தேனிற்குழைத்திட
பீடுசெய்யும் பெருத்ததோர் சர்த்தியும்
ஓடவோடஒருத்துவ துண்மையே. 1017

வாந்திக்கு மருந்து—எண்சீராசிரிய விருத்தம்.
தினமானகுழந்தைகட்கு வாந்திகண்டால் சிங்கியென்ற
கலங்கொம்புந்திப்பிலிகூட்டி, இனமாக அதிவிடையங்கூடச்
சேர்த்து இன்பமுடன்பொடிசெய்து தேனிலிட்டால், கன
மானதறிவாயெல்லாம் விட்டுப்போகும் கைகண்டமருந்திது
தான் கருதிப்பாரு, மனமானமனதறிவா யிருந்துகொண்டு
மகத்தான சுருதியிலேமனத்தைநாட்டே. 1018

வாந்தி ஒக்காளத்திற்கு மருந்து—அறுசீராசிரிய விருத்தம்.
காடிச்சோறுவசம்புடனே கனத்தமிளகுபற்பமதாய்
ஆடிச்செய்துகிழாயமிட்டு அன்றிவாந்தியானுக்கால்
கேவில்நன்றுறிப்பட்டைக் கிழாயத்தரைத்துநல்கிடவே
ஓடிப்போகும்வாந்தியுடன் ஒக்காளந்தான்போமென்றே.

வாந்தி விக்கலுக்கு மருந்து—வெண்பா.
பேசுங்கிராம்புடனே பேர்சீரகம்பேலம்
வீசுமயிலிறகு மேற்சாம்பல் தேசுபெற
நாலையுந்தூளாக்கி நன்றாகத்தேனிலிட
வாலர்தன்வாந்திவிக்கல் மாறும். 1020

வேள்ளோக்காளம் பித்தம்விக்கல் சர்த்திக்கு மருந்து.
பரித்திவிரைப்பருப்பும்பகர் ஏலந்திப்பிலியும்
தரித்ததொருநெற்பொறியுஞ் சர்க்கரையும் திருத்தமுடன்
கொண்டாள்வெள்வாந்திக் கூறுபித்தம்விக்கல்சர்த்தி
கண்டால்விரைந்தோடுங்காண். 1021

மார்புச்சளிகோழைகட்டுக்கு மருந்து—தேறையர்
கலி விருத்தம்.
நாட்டிடுபிரண்டை நறுக்கொன்றுதான்
வாட்டிடுப்பிழி வாங்குரசந்தனைப்
போட்டிடுயிருபோதும் ஓரைந்துநாள்
கூட்டிடுஞ்சளிக்கோழைகட்டோடுமே. 1022

அமரத்திற்கு மருந்து—வெண்பா.

ஆமணக்கின் எண்ணெயிலே அம் *கடுதூளைக்குழப்பி
தேமணக்குஞ்சீலை வினிற்தோய்த்துப்-பூமணக்கும்
கண்ணிற்பிழியக் கருதும்அமரந்தான்
விண்ணிற்பறந்ோடு மேல். (*கடு-கடுக்காய்.) 1023

கண்ணோய்க்கு மருந்து.

புளிமாதளையைப் புகழும்ரசமெடுத்து
சுளுவாய்நற்கண்டைத் தூள்செய்து-வளமிரண்டுங்
கண்ணிற்பிழியக் காதலர்க்கண்ணோய்தீரும்
மண்ணிற்பெரியவர்க்கு மாம். 1024

மாலைக்கண்ணுக்கு மை—தேறையர் கலிவிருத்தம்.

நீர்வெசிறுதும்பை யிலையின் சாற்
சேரவேபிழைந்திரு கரத்தாலிழை
பாறவேமைப் பறித்திடுங்கண்ணினுள்
மாறவே அந்தி மாலைவிட்டோடுமே. 1025

இதுவுமது.

ஓடுமேபத்திய முன்னறிந்துக்கொள்
போடவேஎழு போதிருநேரமும்
சாடுமேஉப்பு கைப்புள்ளிதயிர்
நாடவேவெந்நீர் அன்னம்உண்ணோடுமே. 1026

புளித்த கண்ணுக்கு மை.

ஓடுமேவெண்கலம் ஒன்றுகீழாகவை
சாடுசங்கிலைச் சாற்பிழிந்திட்டுமேல்
ஆடுஞ்செம்பினல் அந்தமையானபின்
பொடுநாளெழு புளிச்சக்கண் ஆறுமே. 1027

இதுவுமது.

ஆறும்பாசிப் பயற்பருப்பாவின்பால்
சேருநற்புழுங் கலரிசியின்மா
நேருஞ்சர்க்கரை நெய்ச்சுக்குசீரகம்
கீறுநற்களிக் கிண்டியுண் இல்லையே. 1028

சகலநோயின் குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

கண்களும்பீளைச்சேறும் கையொடுதலையுந்தேய்த்து
பண்களுக்குரலுந்தாழ்ந்து பாலகன் மெலிந்துவாடி
புண்கடுமேனிபோலே புரண்டுதானழுமேயாகில்
பண்படுசெவிநோயென்று பகருவார் அறிவுள்ளோரே. 1029

காதுநோய்க்கு மருந்து.
சீதேவியாயுன்செங்கழுநீர்ச்செவியக் கிழங்கும்உள்ளியுடன்
மாதேவசம்புவேப்பெண்ணை வார்த்துகொதிப்பித்தேயிறக்கி
காதில்விடவேநோயெல்லாங் காணுதோடும்இவ்வுலகில்
பேதைமயிலேவைத்தியர்க்குப் பேசும்ஆயுர்வேதமதே. 1030

காதுநோய்க்கு வேறு மருந்து—கலி விருத்தம்.
ஆறுமேசதுரக் கள்ளியைஅனல்
நேருமேவதைக்கி இருநேரமும்
சாறுமேபிழிந் தடைசெவினோவுதான்
தீருமேபத்தியம் புளிதள்ளிடே. 1031

காதுசீழ்க்கு மருந்து—அறுசீராசிரிய விருத்தம்.
சுக்குத்திப்பிலியங்கோஷ்டம் சுகந்தசயிந்தலவணமுடன்
வக்கமுந்தக்கா சுள்ளி வசம்புவகைக்கு மாடஎடை
தக்கக்கசூர்க்காய்எருக்கிலைச்சார் தானேகலந்துஎண்ணெயிட்டு
சிக்கக்காய்ச்சிச்செவியிலிட சீழுமாறுங்கண்டாயே. 1032

மாடஎடை-உழுந்தெடை.

காதில் நாயீப்புகுந்தால் மருந்து—வெண்பா.
குப்பைமேனிச்சாறும் கோலச்சிறுநீரும்
ஒப்பிக்காதிற்பிழிய ஒண்டொடிகேள்-செப்பினதோர்
காதிற்புகுந்த கடியநாய்ச்சாகும்
தீதில்லாதிம்மருந்தைச் சேர். 1033

காதில் நாயீப்புக்குந்தால் மருந்து—தேறையர் கலி விருத்தம்.
ஓடுங் கோழிச் சாறுந்திருமேனிச்சாற்
தேடுங்கூட்டிக் செவிதுளைவிட்டிடில்
வேடுநாயீ வெளிப்படும்ஓலமிட்
டாடுமில்லாவிடில் அருந்துநீறுமே. 1034

கோழிச்சாறு-கோழியவரைச்சாறு.

பல்ஈறில் இரத்தம்வந்தால்மருந்து—அறுசீராசிரியவிருத்தம்
பச்சைநன்னரிவேரைப் பரிவுடன்கொண்டுவந்து
மிச்சையில்வெந்நீர்விட்டு விசிதமாய்அரைத்துப்பின்னர்
கொச்சைபுள்நரம்பைப்போக்கி கொட்டைபாக்களவுவெந்நீர்
இச்சையாய்க்கொடுக்கப்பல்லு ஈறினில்ரத்தம்போமே. 1035

முடிசாய்ந்துபோனதற்குக் குளிசமும் மருந்து.
உற்றசெவ்வலரிதன்னில் உத்தரவேர்ப்பிடுங்கி
அற்றவேகுளிசமாடி ஆணெனிலலதுகையில்
எற்றப்பெண்பிள்ளையாகில் இடதுகைதனிற்கட்டி
நற்றவகாணிச்சாறும் நல்லெண்ணெய்ச்சமனுய்க்கூட்டே.

உத்தரவேர்-வடக்கேபோகிறவேர்

இதுவுமது.

கூட்டிச்சங்கெடையேவார்க்கக் குழைந்தையுந்தெளிவதாகும்
தாட்டிக *சிகரந்தானும் சாய்ந்ததுநிமிர்ந்துநன்மைக்
காட்டிடுங்களிப்புமாகும் *கமலவன்விதித்ததென்றால்
பாட்டையும்பாடியென்னப் *பயந்தாளின்பாக்கியந்தானே.

*சிகரம்-தலை *கமலவன்-பிரமதேவன் *பயந்தாள்-தாய்,

இதுவும் முடிசாய்ந்துபோனதற்கு வேறு மருந்து.
எண்சீராசிரிய விருத்தம்.

சிறுதுரத்திவேர்வரப்பூலாக்கொழுந்து திகழ்விடத்தேரிலைவேப்பந்துளிரும்நல்ல, முறுதுஒருதலைப்பூண்டுஞ் சமனய்ச்சேர்த்து முலைப்பாலில்அரைத்து உள்ளுக்குவார்க்க, குறுகுறுத்தமுடிசாய்ப்புந்தீருந்தீரும் கொடிமினிடைக்குவளைவிழிக்குமுதச்செவ்வாய்,நறுவிகங்கநடைக்கமலவதனமாதேமவையில்குழைந்தைப்பரிதாபத்தைப்பாரே. 1038

ஆண்குழந்தைகளின் விரைவாதத்திற்கு நால்நாற்கிறக்கதிரால் சூடுபோடலும் மருந்து—எண்சீராசிரிய விருத்தம்.

பார்க்கவேகுழைந்தைகட்குவிரையைப்பற்றிப் பக்கத்தில் உப்பிசமாய்க்கண்டுதானல், நோக்கவே அடித்தொடையைக் கையினலே நிமுட்டிப்பார் நரம்பதுவுந்தடிப்புபார்த்து, வேர்க்கவேகதிரதனைவெதுப்பிக்கொண்டு விரைக்கிளட்டுவிரற்கடைகீழ்ச் சுட்டுப்போடு, சூர்க்கவேஅனலடுப்பிற் *காயமிட்டுச் சுட்டெடுத்துமூன்றுநாளடவாய்த்தின்னே. 1039

*காயம்-பெருங்காயம்.

இதுவுமது.

தின்னயிலேபத்தியமோ ஒன்றுமில்லாச் சிறுமஞ்சட்பொடியில்விளக்கெண்ணெய்விட்டு,புண்ணென்னுந்தொடைதனிலேதொட்டுப்போட பொங்கியேபுண்ணகி ஆறும்போது, மண்ணெனவேவிரைதனிலேகண்டவீக்கம்*வாயுமுதல்*வாதமுதல்வாங்கிப்போகும், கண்ணுரகண்டதிதுசொல்லிப்போட்டோம் காசினியிற்காட்டாதே இந்தநூலே. 1040

*வாயு-அவ்வாயு 10 *வாதம்-அவ்வாதம் 80 வாதவாயு-மீமிசை.

மயரைப்புழுநோயின் குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

சோருஞ்சீதமலத்தண்ணீர்த் துலங்கவிடாமலேகழித்து
சேறும்மலம்போல்அபானத்தைச்செய்ய *உயிராலேசார்ந்து
*காரிநிறம்போல்கத்தரிகாய் கசங்கிபோன்றுகழிந்ததெனில்
வாரும்வடமுந்திகழ்முலையாம்மயரைப் புழுவின்குணமாமே.

*உயிராலே-மூச்சாலே *காரினிறம்-கறுத்தநிறம்.

இதுவுமது.

மான்விழிமாதேகேளாய் மயரைநோய்வருத்தத்தாலும்
ஊன்வயிறுளேந்துபின்னர் உடன்மலங்கருகிநின்று
கூன்குதவாயிற்குத்திக் குழறியே *குருதிவீழ்ந்து
தீன்மலத்துடனேசீதஞ் சிதறியேஉதப்பைத்தள்ளும் 1042
*குருதி-இரத்தம்.

இதுவுமது.

தள்ளினல்குருதிசீதம் கருகியேகுதவாய்நின்று
கிள்ளியேஎடுக்குஞ்சீதம் கீழ்வயிருளேந்துநோகும்
மெள்ளவேதீர்க்கும்வண்ணம் விளங்கவேமுனிவர்தானும்
உள்ளனன் *மேதிநெய்யில் உறுமதைஉரைக்கலுற்றார்
*மேதி-எருமை.

மசரைநோய்க்கு மேதிநெய்.

மசரைநோய்தீரக்கேளு வருமேதிநெய்யுழக்கு
திசையாம சளும்ஈருள்ளித் திரிகடுவசம்போடேலம்
தசைநரும்பூளேவேறும் தரும்அதன் இலையின்சாறும்
அசையுரும்மசரைமீனின் அதன்தலைதானுங்கூட்டே. 1044

இதுவுமது.

கூட்டிமுன் சாறுவிட்டுக் கூர்மையாய்அரைத்துநெய்யில்
நாட்டமாய்க்கலந்துக்காய்ச்சி நற்பதமெழுகதானல்
தோட்டமாய்வடித்தோர்காசு திகழுநெய்கொள்ளத்தீரும்
வீட்டமேஇன்னமொன்று மென்பசுநெய்யிற்சொல்வாம்

மசரைநோய்க்கு வேறு ஆவின்நெய்.

மசரைநோய்க்குக்கேள்மானே மரும்ஆவின்நெய்உழக்கில்
குசையில்நாயுருவிமேனிக் கொழிஞ்சிதூதுளேயோர்நாலும்
வசம்புடன்சுக்குமஞ்சள் வகையோர்ப்பாக்களவுகூட்டிப்
பசைபதமெழுகாய்காய்ச்சிபரிந்துண்ணமயரைநோய்போமே

கிரிநோயின் குணம்.

*மஞ்சடைமதலேதானும் மருவிடும்பால்பாலாக
மிஞ்சியேவயிற்றிற்பூச்சி மேனியும்மலேத்துக்காட்டும்
நெஞ்சொடுவிரைவிற்றட்டி நெறிக்கெட்டுப்பேசுமாகில்
அஞ்சவேகிரிநோயென் றறித்துக்கொள்ளமுகுமாதே. 1047
*பஞ்சுடை-அழகுடைய *மதலே-பிள்ளே.

கிரிநோய்க்கு மருந்து.

கேளுங்கிரிநோய்தனக்கு கிளர்ந்தபசுவின்நெய்வுழக்கு
கேளிஅரைச்சாரெப்பாய்க் கிராம்புசாதிக்காய்மதுரம்

தோழிலும்மஞ்சுக்கேலம் தூகோஷ்டம் அறுகால்ஒன்று
மாளஅரைத்துநெய்க்காச்சிவரு நெய்கரண்டிக்கொளத்தீரும்.
தூ-பரிசுத்தம் அறுகால்ஒன்று-வகைக்கு கற-விருகனெடை

கிரிப்பூச்சிவிழ மருந்து—வெண்பா.

நிதமும்எலிச்செவியும் நீள்முருங்கைநல்வேரும்
அத்தத் திரிபலையோ டாங்குடிநீர் ரத்தகணய்
வாய்விளங்கமேல்தூவி மைந்தர்வயிற்றின்உள்ள
தாய்விழுங்கப்பூச்சிவிழுந் தான். 1049

திரிபலை-கடுக்காய் தான்றிக்காய்-நெல்லிக்காய் ரத்தக்க
ணய்-சிவந்தக்கண்களையுடையாய்.

கிரிப்பூச்சிவிழ வேறு மருந்து—அறுசீராசிரிய விருத்தம்.

கிரிப்பாம்புவிழமருந்து கேளீர்முருங்கைஇலையதனை
நேர்ப்பாய்அவிழ்த்துநால்வழி நீரேவார்த்துநாலிலொன்ருய்
ஏர்ப்பாய்காலமேகொடுத்து இலையைவயிற்றிலேவைத்துக்
கோர்ப்பாய்கட்டச்செத்துவிழுங் கொடியக்கிரிப்பாம்பதுவே.

நாகப்பூச்சியின் குணம்—வெண்பா.

பேச்சைஇனிகேளு பெருவயிறு கொப்பூழும்
சாச்சலுடன் ஒக்காளம் சுக்குமே-மேய்ச்சலது
பூச்சியதுநாகம் பூவையேநீஅறிந்து
நீச்சறவேவைமருந்தை நேர். 1051

கொப்பூழ்-இதைதொப்புளென்பர்.

நாகப்பூச்சிக்கு எண்ணெய்—கட்டளைக் கலிப்பா.

இந்நிலந்தன்னில்பாகல்கழற்கிசாறேந்து கொங்கையரே
விளக்கெண்ணெயும், கன்னியீதகணக்கு உழக்கதாய் காய்ந்த
சுக்குக்கரந்தைநற்-பூரமும், சென்னிஉள்ளிவசம்பு விருகனய்
சென்றுளர்எடையாய் அவைசேர்த்தடு, வன்னிமீதினில்வைப்
பேளரித்திதை வாய்த்தசங்குக்குழவிக் கிடுவீரே. 1052

பூரம்-கர்ப்பூரம் சென்னிஉள்ளி-ஒருதலை வெள்ளைபூண்டு
வன்னி-நெருப்பு.

நாகப்பூச்சிக்கு கிழாயம்—தேறையர் கலி விருத்தம்.

சாடுஓமம் தனிபுரசம்விரை
போடுவேப்பீர்க்கு உத்தப்பிரண்டையும்
போடுநால்வகைப் போட்டுச்சமனெடை
யாடுநீரும் அரைப்படிகண்டிடே. 1053

இதுவுமது.

கண்டிடேளரி காய்ச்சி நாலொன்றுதான்
சுண்டிடஇறுத் துக்குடிமூன்றுநாள்

உண்டிடப்பூச்சி உள்ளதுகட்டுடன்
பண்டுபந்தாய் விழுமிதறிந்திடே. 1054

தாலிலொன்றுநால்ஆழாக்குசலத்தை ஒருஆழாக்காய்க் காய்ச்சிக்கொள்ளல்.

அறிந்திடும்பேதி ஆங்கடுத்துக்கொடு
சரிந்திடும்பூச்சி தங்காதினத்துடன்
பறிந்திடும்பின்னிப் பந்துபந்தாய்விழும்
தறிந்திடும்பத்திய மில்லைத்தோற்றிடே. 1055

*ஆங்கடுத்து-ஆங்கு-அறிந்து.

மலவாதகுணம் அதேமலட்டுக்கட்டு—தன் மந்திரி.
அறுசீராசிரிய விருத்தம்.

உரைப்போங்கேளுமலவாதம் ஓஒகண்ணின்புருவத்தைக்
கரைப்போம்நாக்குகைகாலும் கண்ணைகுவித்துவிண்பார்க்கும்
விரைப்போம்உச்சியடிதங்கி மேல்கீழ்வயிற்றைவலிப்புக்கும்
மரைப்போங்தூங்காமஞ்சனிக்கும் வண்டார்முலைவிரும்பாதே.

மலசலக்கட்டுக்கு அடைமருந்து—வெண்பா.

இலைக்கள்ளிவேர்ப்பட்டைப் பலம்ஐந்திதனோடு
கலக்கமிளகுள்ளிச்சுக்குக்கடுக்காய்-பிலக்கஅரைத்
தடைச்சுட்டுத்தான்குழவி அருந்தமலசலமும்
தடைவிட்டுஓடிவிடுந்தான். 1057

முட்டைப்பான்குணம்—அறுசீராசிரிய விருத்தம்.

பஞ்சபூதியமும்நெஞ்சும் பரிவுடன்வெதும்புமாகில்
மிஞ்சியேசுவாசம்ாளை மிக்கணகோபங்கொள்ளும்
பஞ்சினிவிலாஇரண்டும் பண்பொடுதூக்கினற்கால்
மிஞ்சியேநுரையமுக்கில் மிகுந்தமுட்டைப்பானுமே. 1058

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *பஞ்ச பூதியம் அவை | கரிவிதி மண் கால் | அப்பு சலம் வயிறு | தேயு தீ மார்பு | வாயு காற்று கழுத்து | ஆகாயம் வெளி தலை |

முலைப்பாலின் பெருமைகூறுகின்றார்.

வயதுபதினறளவினுக்கு மருந்தால்முலைப்பால்உரியதுமேல்
இயலும்வயதைம்பதுநாளும் இசைத்தார்நாழியதாம்தாய்பால்
முயலும் *விருத்தர்நறுநாழி முழுநாளினுக்குக்கொண்டிடவே
உயலகொளுந்திரிதோஷம் உயருங்கலைகொம்பனையுயர்ந்தே

*விருத்தர்-கிழவர் *திரிதோஷம்-வாதபித்தசேஷ்முறுக் கேறும் *கலை-ஆயுள்பெருகும்.

பற்பலவியாதிகளின் வகுப்பு முற்றிற்று.
அகத்தியர் திருவடிகளே சரணம்.

# விரோசன வருப்பு.

## பேதி பூபதி மாத்திரை.

வேதிபூபதிவாலர்க்கு விளங்கிடும்வகையைக்கேளு
சோதிசேர் *இரதம்சுக்கு சேர்ந்தவெண்காரங் *கெந்தி
நீதிசேர்நாலும் *நேராய்நிரையின் நேர்வாளங்கூட்டி
ஆதியாஞ்சுத்திச்செய்து அறிந்துதண்ணீரைக்கூட்டே. 1059

*இரதம்-ரசம் *கெந்தி-நெல்லிக்காய்க்கந்தகம் நேராய்-சரியெடையாய் நிரையின்நேர்வாளம்-முன்சொல்லியசாக்குகள்நாலெடைக்கும் நான்கெடைசுத்திசெய்தவாளங்கூட்டவும்.

### இதுவுமது.

கூட்டிடும்ஐந்துஞ்சுத்திக் குளிர்ந்தநீர்விட்டரைத்து
பாட்டிடும்பணியின்பாசிப் பயற்றளவாக்கிக்கொண்டு
தீட்டிடும்உரைத்துநீரில் சிரியவர்தமக்கோஈய
போட்டிடும்ஊதுமாந்தம் பொருமல்வாதமும்போமே. 1060

### முன்சொன்ன சரக்குகளின் சுத்தி.

போமேசுத்திரசம்வெந்நீர் பொரியுங்காரம்சாணிதனில்
தாமேசுக்குமேற்புறணி தணியுங்கெந்தகம்எண்ணெய்தனில்
ஆமேஉருக்கிப்பால்தன்னில் அதிலேஆற்றநேர்வாளம்
சாமேபிளந்துநஞ்செடுத்து சாற்றுஞ்சாணிஒருதாமே. 1061

### இதுவுமது வெண்பா.

சாணிமிற்கற்றுமுஞ் சாறுசிறுகீரை
வேணியின் *ஆப்பால்விளக்கெண்ணே-ஆணிக்கு
வெற்றிப்பெற்றநேர்வாளம் வேணுமென்றால்ஐந்துதரம்
சுத்திபண்ணல்வேண்டுமெனச் சொல். 1062

*ஆப்பால்-பசும்பால்.

## பேதிக்கு வேறு அமிர்தசஞ்சீவிலிங்கக் குழம்பு.

### எண்சீராசிரிய விருத்தம்.

சாதிலிங்கம் வெண்காரம் இரண்டுபங்கு தக *காமணக்குவித்துநாலுபங்கு, ஓதியதோர்மேர்வாளம் எட்டுப்பங்குஉடன்கலந்தரைத்துக்குன்றிப்பிரமாணந்தான், போதியாங்குளிர்ந்ததண்ணீர்பேதியாகும் பொதுவெந்நீர்த்தனைக்கொடுக்கபேதிகட்டும், ஓதியதோர்வாதம்எண் பத்துநாலும்ஓடிவிடுங்குன்மமொடுகரப்பான்போமே. (*ஆமணக்கு.) 1063

### இதற்கு சுத்தி.

சஞ்சீவிலிங்கமதில் முலைப்பால்விட்டுத்தான் கழுவச்சுத்தியாந் தணிவெண்கரரம், பஞ்சில்பசுவின்சாணந்தன்னிலே தான்பரிந்துமிகவே கழுவப்பகருஞ்சுத்தி, நஞ்சதுவே சுக்கதன்மேற்புறணிசீவி நலம்பெறவேமுன்பு சொன்னபடியே

கூட்டி, அஞ்சுவகைமருந்ததனல் அநுபானந்தான் அமிர்த
சஞ்சீவியென்றே அருள்செய்தாரே. 1064

வேறு விரோசனமருந்து—அறுசீராசிரிய விருத்தம்.

வெள்ளைக்காக்கணன்வேர்தான் விருகனெடை *ஏகமதாக
தெள்ளுந்திப்பிலிஒன்ருக திகழும் *மரீசிஇரண்டாக
அள்ளுந்தண்ணீரிட்டேதான் அரைத்துவிருகனெடைமருந்து
கொள்ளக்குளிர்ந்தசலமதிலே குழைந்தவயிறுவிடுமென்றே

*ஏகம்-ஒன்று *மரீசி-மிளகு.

வேறு விரோசன சண்பகப்பூ மாத்திரை.

ஏய்ந்தசண்பகத்தோடேலம் இலவங்கங்கோஷ்டம்ரோணி
தோய்ந்திவையெல்லாம்பாதி சுத்திநேர்வாளம்பாதி
காய்ந்தநீர்விட்டரைத்துக் கால்கழஞ்சுண்டைசெய்து
சேய்களுங்கழியவேண்டில் தேன்சுக்குநீரிலீயே. 1066

தித்திப்பு சுகபேதிக்குழம்பு—கலி வெண்பா.

தெண்குரைசூழ் இந்த திகழும்பூமண்டலத்தில்
எண்டிசையும்மெய்ச்ச இயம்புகிறேன்-கண்ட 1067
மருந்தென்ருல்தின்னவே மாட்டேனெனச்சொல்லும்
பரிந்த *விபவமுள்ளப் பாலருக்கும்-பொருந்துமற்றப்
பிள்ளைகட்கும் *ஆடவர்க்கும் பெண்களுக்கும் ஆகுமிந்த
தெள்ளுசுகபேதி திவட்டாது-ஒள்ளியமாய் 1068
பத்துபலம்ரஸ்தாளி வாழைப்பழந்திராக்ஷம்
உத்தபலம்ஐந்து உகப்பான-தித்திப்பாம் 1069
கற்கண்டோர்ஐந்துபலம் கமழ்ஓமம்சுக்கும்
பொற்கொடியேமிளகும் புகல்மூன்று-சொறிபெரிய 1070
வகைக்குவிருகனெடை வன்கடுகுரோகணியும்
நகைக்கும்பலம்மூன்று நாட்டியே-தொகைத்தான 1071
சுத்திசெய்தநேர்வாளம் தொகையாம்பலம்ஐந்து
பத்திகடுகின்நெய்ப் பலம்ஒன்று-கித்திதரும் 1072
ஆவின்நெய்த்தானும் அழகாயிரண்டுபலம்
பாவுகிற *புத்தேன் பலம்ஐந்து-தாவியே 1073
கூட்டிக்குழிக்கல்லிற் குமுறஅரைநாற்சாமம
வாட்டியேநன்ருய் வழித்தெடுத்து ஆட்டியே 1074
கற்சாடிதன்னிற் காற்றுப்போகாதடைத்து
பொற்காசளவு புனைந்தெடுத்து-அற்புதஞ்சேர். 1075
அப்பத்தினிற்றடவி *அழுகிறசேய்க்கீய
தப்பின்றித்தின்னுமது தையலே இப்பால் 1076
கசக்காபுளிக்கா காராகுமட்டா
பிசக்காமல்நல்லசுக பேதியாம்-அசைக்காத 1077

பேகியதுமீறினல் பேர்வசம்பைச்சுட்டருந்த
ஓதிய விரோசனம்ஒழுயுமே-நீதியுடன் 1078

பத்தியமேயில்லேப் பாலகர்க்குநல்ல
சித்தியாய்ச்சொன்னதிது-சீர் 1079

*விபவம்-செல்வம் - ஆடவர்க்கும்-புருஷர்களுக்கும் - புத்தேள்-புதியதேள்-விரோசனம்-பேதி

இவ்விரோசனம்-அதிகமானல் - முறிவு-கஞ்சி - அல்லது சுட்டவசம்பு அல்லது-சாணிப்பால் மோர்-அல்லது-நீலி.

விரேரசனவகுப்புமுடிவு-அகத்தியர் திருவடிகளே சரணம்.

பாலவாகடத்திரட்டு-சாத்தியகுணம்.

பொருந்தியேசோர்ந்திடாதே புகழ்விருசிவப்பேறுதே
வருந்திடும்உடல்நாறுதே வரிவிழிநீர்ப்பாயாதே
கரந்துநாவரண்டிடாதே கபமுறையாதேயாகில்
வருந்திபரிகாரஞ்செய்ய-மாதுடன் பகரலுற்றூர். 1080

*மாதுடன் -உமையவளுடன்

அன்றி-நீர்முந்தி-மலம்பிந்தின் நன்மை-அசாத்தியகுணம்.

கண்ணேயுமூடிக்கொண்டுக் கழிந்துகைகால்குளிர்ந்து
மண்மீதில்மனிதர்க்காண மயக்கமாய்ச்சோர்ந்துவீழ்ந்து
தண்பீதுபெற்றத்தாயார் சாலவும்அழுவேபிள்ளே
விண்மீதில்ஏகுமென்று விரைந்துமேமுனியுரைத்தார்

விழிகள்தான்நெருப்புபோலே மிக்கவேசிவப்புண்டாகி
எழிலுளஉச்சிதானும் இனிகுழிகுழிந்தமேலும்
*உழலேஅடுக்கழிந்நு உடல்குளிர்ந்திருக்கும்ஆகில்
மழைவிழிஜம்பத்தொன்றின் மரணமென்றறிந்துகொள்ளே

*உழலே-தாகம்-அகடு-வயிறு-அன்றியும்

மலசலம்-சரியாய்வருகின் மரணமென்பர்-மருந்திற்குமுறிவு.

கொள்ளுக்காடிக்கொம்மட்டிக்காய் கோழிபன்றிக்கோடு
பள்ளச்சேம்புவாளவரைப் பாலேசுரக்காய்பூசனிக்காய்
முள்ளிற்பெரியபாகற்காய் முத்திரைவிளேந்தபயற்றங்காய்
எள்ளும்இவைகள்தின்பீரேல் எல்லாமருந்தும்இழந்தீரே. 1082

*முத்திரை-அவரை-காராமணி-கொள்-துவரை முதலியன.

கடலேஅவரைப்பெரும்பயறு கானற்காட்டுப்பாகற்காய்
படரும்பசளைநெல்லிக்காய் பழுபாகற்காய்சுண்டக்காய்
அடரஇவைகட்கொண்டோருக் கனங்கன்மகுடமுலேயாளே
உடனேமுறியும்மருந்தெல்லாம்உடலில்வியாதிபீலத்திடுமே.

*கானல்காங்கைப்பொருந்திய.

மாங்காய்இளநீர்வழுதுணங்காய் மாவின்பண்டம்புளிகடுகு
தேங்காய்நெய்பால்கிழங்குபழம்தின் னுங்காயம்மீன் இறைச்சி
நீங்காதிருக்குஞ்சாராயம் நேரேகள்ளுப்பனங்கள்ளு
ஆங்கேஇவகளனைத்தையுமே அருந்தாதிருந்தால்மருந்தாமே.

*கள்ளு-தென்னங்கள் ஈச்சங்கள் முதலியன அருந்தாதிருந்தால் சாப்பிடாதிருந்தால்.

மயரைக்குரவைவரால்தேளி மற்றுங்கெளிறுநாய்க்கெளிறு
அயரைச்சென்னைசுறுவாகும் ஆகாதென்றல்வகைகேளு
உயரும்உளுவைவிலாங்காரல் உசிதவாளைஎருக்கூனி
கயல்மீன்கெண்டையாகாதுக் கண்டுசொன்னார்முனிவோரே.

§சென்னை பிறசென்னைமீன் ஆரல் கெண்டை சிறுகெண்டை மீன் முதலியன.

இஞ்சிதயிரும்எண்ணெயொடு இசைந்தகஞ்சிஇலைக்கறியும்
வஞ்சிக்கைப்போடிவையெல்லாம் உண்பீரேல்
அஞ்சிமாவின்தேவியவள் அகன்றுபோவாள்வினைமூளும்
செஞ்சொல்மொழியாய்முன்னுரைத்ததிறத்தையறிவீரே.

§மாவின்தேவி மஹாவிட்ணுவின் பிராணநாயகியாகிய இலட்சுமியச்சமுற்று அகன்றுபோவாள்நீங்கிப்போவாள்.

மருந்திற்கான பதார்த்தங்கள்.

கிள்ளுங்கீரை § இளஅத்திக்கிளருமுருங்கையிலைச்சாரம்
வுள்ளிப்பறட்டைஇளஅவரைப்பொன்னுங்காணிசிறுகீரை
சுள்ளிகொழுந்தும் இவையெலாம்சுகமாய்புடலம்பிஞ்சுடனே
வள்ளைதுளிரைச்சுண்டலுமாம் வகையாயறியும்உண்பவர்க்கே

§இளஅத்தி அத்திப்பிஞ்சு கள்ளி மாந்துளிர்.

முருங்கையிலையும்அதன்காயும் முள்ளிப்பிஞ்சுதூதுவளை
அரும்பும்இலையும் காயும் ஆவின்பாலும்சுரைக்கொழுந்தும்
நெருங்குஞ்சிறியவழுதுளையும் நிறைந்தகண்டங்கத்தரியும்
விரும்பிஉண்ணும்இலைக்கறியாய் விட்டேயோடும்வியாதிகளே

§அரும்பு மொக்குபூமுதலாயின.

அகத்தியமுனிவுரைத்தஆயுருவேதந்தன்னால்
செகத்தினில்வாழ்வோர்க்கெல்லாம் தீதுறுவியாதிதீர்க்க
பகத்தினிற்கருத்தைவைத்துப் பகர்முனிஅருளைஉன்னி
நிகழ்த்தியேஔடதம்செய்யும்நெறிதனைஉணர்ந்துகொள்ளே

§உன்னி நினைத்து

பாலவாகடத்திரட்டு முற்றிற்று முற்றும்.

அகத்தியர் திருவடிகளே சரணம்.

பாலக்கிரகம் கட்டளைக்கலித்துறை.

ஒன்றில்வெதும்புங்கழியும் அழுதிடும்ஓரிரண்டில்
வென்றிநடுக்கம்எங்கும் வெதுப்புவிழியாதுகண்ணும்
அன்றிபலபலகாரியஞ்செய்யும் ஆரிமூன்றில்வந்தால்
தின்றிஉண்ணுதுகழியும் வெதும்பித்திடுக்கிடுமே. 1090
§தின்றி-புசிப்பு.

இடுமூன்றில்விக்கல்அதி சுரமாய்அழும்ஈரிரண்டில்
சுடுமேஇருமல்துணுக்கிட் டெதிர்க்குமசுவைஅருந்தா
படுங்குழியுச்சிவயர்வட்ட மாகிப்பரந்திடுமே
கொடுமேஅழும்ஐந்தில்கொட் டியைக்கூறக்குறித்திடுமே. 1091

குறுகியஐந்தில்மெதுப்பும் புறங்கையிளைற்குடையும்
மறுகியழுகும்நடுக்கும் பிராந்திவாந்தியுண்டாம்
தறுகியுடலந்தளர்ந்துஉண்ணு தன்குரல்நெரியும்
உறுகிளரியும்ஆர்க்கும உரைக்கஉணர்த்துவமே 1092
§பிராந்தி-மயக்கம்.

உணர்த்தாறில்காய்ச்சல்வயி ரேடும்வாந்தியுகந்துஉண்ணு
குணத்தோடுவிக்கல்விழி புரண்டேகுங்குமட்டியழும்
சிணத்தேபுறங்கைமுகந்தேய்க்கும் வேர்வைசெனித்திடுமேழ்
கணத்தாரில்சொல்லுங்கனமுள்ளதாங் கண்ணுநொந்திடுமே.

நொந்தேஉடலும்வெதும்பி யிளைத்திடும்நோயுருவாய்
வந்தேகழித்திடும் §ஊண்மறந்தே தான்வரும்எட்டிலே
சந்தாகும்ஒன்பதில் வாய்நீர்வடியும்தலைப்புரட்டும்
சிந்தாகழிந்துகண்நொந்தே விகாரமுஞ்செய்விக்குமே. 1094
§ஊண்-பால் அன்னமுதலியன.

செய்விக்கும்பக்தில்வெதும்பிடுஞ் சீறும்உழலைசெய்யும்
மெய்நடுக்கம்மெதிரெடுத்துக் கழியும்விசாரமிடும்
ஐயோபதினொன்றில்கோட் டாவிமீறிஅசைத்துதலை
கையோகழுத்துநிலையில்நில்லா கன்னம்வீங்கிடுமே. 1095

வீங்கிடும்பின்னும்அது மாறிமாறிவெதும்பிவிக்கும்
சோங்கிவிகாரய்தலைகுனிவாய் அன்னம் §துய்க்கரிதாய்
தேங்கிக்கழியும்பனிரண்டில் செய்தியைச்செப்பிடக்கேள்
வேங்கிவசூரியிட §நைக்கடியும்விழியும்நொந்தே. 1096
§துய்க்கரிதாய்-சாப்பிட அரிதாய் §நாக்கடி-நாவைகடிக்கும்

நொந்தேகுளிரும்பலசாலும் நீர்விடும்நோய்க்கழியும்
சந்தேபனிரண்டில்மூவகைக் காளிக்குஞ்சாற்றிடக்கேள்
தந்தேபவியும்துணமொடு வைக்குந்தலத்துடனே
வந்தேகும்வாலக்கிரக நிலையைவழுத்துவமே. 1097

பாலக்கிரகசாந்தி—கூறுகின்றார்.

ஓவாண்டுஒன் றினில்மூ வகைக்காளிக்குரைத்துபலி
மாவாலிருவமை §சந்தந்தெளித்துமலர்ந்தநற்செம்
பூவால்நிறைந்துபுகழ்ந்திடுபேரையும் புலியடைக்காய்
வாகாவைத்திடத்தீருங் கிரகத்தின்வல்வினையே. 1098

§சந்தம்-சந்தனம் §அடைக்காய்-வெற்றிலைப்பாக்கு.

வல்லாண்டிரண்டினில்மூவகைக் கிரகவடுகியென்னும்
பொல்லாக்கிரகபலி §பஞ்சவண்ணப்பொரி அடையும்
சொல்லாஉழுந்தினைமா பாவைசெய்துதுளிதுளிப்ப
நல்லாஎருக்கன்மலர்சூடி §மாலைசெல்நாற்சந்தியே. 1099

§பஞ்சவண்ணம்-அஞ்சுவிதவண்ணம் §மாலை-இரவு.

மூவாண்டில்நீலியெனு மூவகைக்குமுறைமுறையே
போவாண்டினிற்பலிபாலன்ன மோட்டைப்பொரியுடனே
நீவாரமானஉழுந்துடன்சேர்எள்ளு நேரவைத்து
நீவாந்தியந்திற்கொட்டி யெல்லாவிடுநீர்க்கரையே. 1100

நாலில்வராகிக்குழுந்துடன் சோறுநெய்நற்பருப்பும்
சாலப்பலகறியோடப்ப மாமதுதான்சரியாய்
கோலப்புதுஅகல்மீதே யமைத்துக்குலாவுபலி
மாலையில்நீர்க்கரைவைத்தால் கிரகமகன்றிடுமே 1101

அஞ்சில்உருத்திரகாளி தனக்குஅரும்பலிகேள்
ஒஞ்சியரிசிஉழக்கஞ்சியே உழுந்தோருழக்காய்
பொஞ்சப் §பசுங்கறிகூட்டிடு பொங்கிப்பொரியுடனே
உஞ்சப்பன்னுடையிலிட்டே யுலர்த்திவையூர்வடக்கே. 1102

§பசுங்கறி-இலைக்கறி-காய்கறிமுதலியன.

ஆறினில்மூவகைக்காளிக்கு நேர்பலியாகவைக்கில்
சாறிடும்பாலன்னமோடே பருப்பன்னம்ஒக்கவைத்து
சாறிடும்மாவினில்நெய்சரி வார்த்துக்குழைத்தகலில்
தேறிடவென்றுமயானத்திற் சென்றுசெலுத்திடுமே. 1103

ஏழாண்டுமூவகைக்கு மயேஸ்வரியென்பவட்கு
வீழாமலேபலி §தண்டுலம் பொங்கிநெய்விட்டெரித்து
கேளாய்பொரித்தபலகறி வாழைக்கிளரிலைமேல்
வாளாலெருமைக்கடாவுடக் கோட்டத்தில்வைத்திடுமே. 1104

§தண்டுலம்-அரிசி.

மூட்டிட ஆண்டெட்டில் மூவகைக்கேமுனிவன்பலிக்கு
நாட்டில்வெண்சோறுடன்வண்ணமுங் கூட்டிநல்லெள்பொரி
[யும்
சூட்டப்பமோடுபொடியும் புண்ணுக்குத்துலங்ககலில்
காட்டிடக்காளியின்கொட்டகத்தி லேறுங்கழிபலியே. 1105

பலிநவபத்திரகாளியென்பாட்குப் பெரும்பலிதான்
பொலியஞ்சுழக்குஅரிசியும் பொங்கிவெண்பூவுமிட்டு
கெலியஞ்சுவண்ணவிதச்சோறு மிட்டுக்கீழ்ச்சந்தியில்
மலிகின்றமாலையில்வைக்கத் தெளியும்வரும்பிணியே. 1106

பத்தாண்டுதன்னில்வருமூ வகைக்குபகவதிக்கே
சித்தானசேவலும்வெண்சோரு மாகத்தெருவினிலே
உத்தாகவெள்ளைநற்சிலையில் நெய்யதையூட்டித்திரி
நித்தங்கொளுத்தவரும்பிணியானது நீங்கிடுமே. 1107

பதினொன்றில்மூவகைஅந்தரிக் கேபலிபார்தனிலே
துதிபஞ்சவண்ணச்சோறுடன் பாலும்சுவையுடனே
அதிகொண்டரியும்மாப்பாவைக் கோலி §புத்தகலிவிட்டு
மதிகொண்டமாலையிற்சுற்றிவைத் தேகுமசானத்திலே. 1108

§புத்தகல்-புதியஅகல்.

ஆறிரண்டாமதில்மூவகைகாம்பலி அம்மனுக்குக்
கூறும்உழுந்தன்னமோடே தயிருங்குறையறவே
வேறுஞ்சுழக்குஅரிசியும்பொங் கஞ்சவெஞ்சனமும்
தேறும்புண்ணுக்கல்சேர்த்திடு மாலையிற்சேர்பலியே. 1109

ஈரஞ்சுமூன்றில்விகாரியென்பாளுக் கிடுபலிதான்
நேரும்புண்ணுக்குப்பொடித்தேனும்நெய்யும் நிரைக்குழைத்து
கார்கொண்டமாலையில்காற்சந்தில்வைத்துக் களங்கமறப்
போர்கொண்டஆட்டின்மயிர்த்தூபம் காட்டிடபோம்பிணியே.

.பாலக்கிரகம் முற்றிற்று.

---

உ

# பாலவாகடத் திரட்டிலுள்ள
# வகுப்புகளின் அகராதி.


| வியாதிகள். | பக்கம். |
|---|---|
| அகத்தியர் வணக்கம் | |
| அவையடக்கம் | |
| கடவுள் வணக்கம் | |
| கர்ப்பக்கோளிலக்கணம் | |
| பண்டிதானி லக்சணம் | |
| பாலவாகடத் திரட்டு | |
| ஆண்கட்டுதடை | 1 |
| மலட்டு சின்னகற்பங் | 1 |
| கற்பத்துக்கு ஔஷதம் | 2 |
| கற்பக்கோள் | 3 |
| கருங்குழியின் ஆறு வியாதி | 3 |
| கருங்குழி விளக்கமற்று | 3 |
| கருங்குழி வாயிவினுலாய | 3 |
| கருங்குழியில் சதைவளர்ந்த | 4 |
| குருங்குழியில் புழுசேர்ந்த | 4 |
| கருங்குழியில் ரத்தமூடிய | 4 |
| யோனியிற் பூச மருநது | 4 |
| சாந்தி கூறுகின்றூர் | 5 |
| மருந்து எடை பாகம் | 5 |
| சேஷார்த்த வீட்சியம் | 6 |
| கற்ப ஸ்திரீகட்கு பத்துமாதத் | 7 |
| உருதரிக்கும் லக்கணம் | 8 |
| குழந்தைகளை நோய்கள் வாதிக் | 9 |
| பிள்ளை பிறந்தவுடன் | 9 |
| பிள்ளை வயிறு வீங்கினுல | 10 |
| பிள்ளை வயிறு நொந்தால் | 10 |
| பிள்ளைசிறுநீர் இறங்காவிட் | 10 |
| எட்டுவித தோஷ | 10 |
| எண்வகை மாந்தம் | 11 |
| கட்டு மாந்தம் | 11 |
| கழி மாந்தம் | 11 |
| எண்வகை கணங் | 11 |

| வியாதிகள். | பக்கம் |
|---|---|
| செங்கிரந்தி குணங்கள் | 12 |
| ருங்கிரந்தியின் குணம் | 12 |
| பன்னிரண்டு கிரந்திக்கு | 3 |
| தோஷ வகுப்புகள் | 14 |
| எட்டுவகைப் புள்ளின் குணம் | 16 |
| வீங்குப்புள் | 17 |
| தூங்குப்புள் | 17 |
| விளக்கொளிக்கண்புள் | 17 |
| வெங்கண்புள் | 18 |
| கருடக்கண்புள் | 18 |
| செங்கண்புள் | 18 |
| வரப்புள்ளின் | 19 |
| அந்திப்புள் | 19 |
| நீர்ப்புள் | 20 |
| புருஷ தோஷம் | 21 |
| பெண்ணின் தோஷம் | 21 |
| முட்டுத் தோஷம் | 22 |
| குளித்தோஷம் | 22 |
| குளிதோஷ நிவர்த்தி | 23 |
| குளித்த பெண் தோஷம் | 24 |
| மாந்த கண தோஷம் | 25 |
| கர்ப்பம் அழிந்த தோஷம் | 25 |
| தேரை தோஷம் | 75 |
| சகல தோஷம் | 26 |
| தீரா தோஷம் | 27 |
| மாந்தம் 21 வகை | 27 |
| வாத மாந்தம் | 28 |
| பித்த மாந்தம் | 28 |
| சேஷ்ம மாந்தம் | 28 |
| மாந்தத்துக்கு பச்சிலை | 29 |
| மாநதத்துக்கு மருந்து | 30-31 |
| கடுக்காயில் ஏழுவகை | 32 |

| வியாதிகள் | பக்கம். |
|---|---|
| மாந்தத்திற்கு குளிகை | 33 |
| மாந்தத்திற்கு எண்ணெய் | 34 |
| மாந்தத்திற்கு தைலம் | 34 |
| மாந்தத்திற்கு சாறு | 35 |
| வலிப்புலேக்கட்டு | 35 |
| மாந்த உப்பிசத்துக்கு | 36 |
| கருங்கிராந்தி--மேக வெட்டை | 38 |
| ஊது மாந்தம் | 38 |
| மாந்தம் ஐந்துக்கும் | 38 |
| மாந்தம் ஏழுக்கும் | 39 |
| பித்தகண பாண்டு | 39 |
| கர்ப்ப மாந்த குணம் | 40 |
| கர்ப்ப மாந்த எண்ணெய் | 41-42 |
| நீர் மாந்த குணம் | 43-44 |
| விஷ மாந்தம் | 45 |
| போர் மாந்தம் | 46 |
| பால் மாந்தம் | 47-48 |
| சொரிய மாந்தம் | 48 |
| கட்டு மாந்தம் | 48-49 |
| தலை மாந்த குணம் | 50 |
| துலை மாந்த குணம் | 50 |
| சுழி மாந்த குணம் | 51 |
| வீக்க மாந்த குணம் | 52 |
| முக்கு மாந்த குணம் | 52 |
| வரள் மாந்த குணம் | 53 |
| உப்பல் மாந்த குணம் | 53 |
| துட்டு மாந்த குணம் | 53 |
| உளை மாந்த குணம் | 54 |
| அட்சர மாந்தம் | 55 |
| பேய் மாந்தம் | 56 |
| 18 மாந்தத்திற்கு | 57 |
| சகல மாந்தத்திற்கு | 58 |
| கண வகுப்பு | 59-64 |
| கணச்சூடு | 65 |
| மாந்த கணம் | 67-73 |
| கண மாந்தம் | 74-75 |
| அமூர்தாதி குளிகை | 76 |
| சிங்கி மாந்தம் | 77-78 |

| வியாதிகள். | பக்கம். |
|---|---|
| சுழி கணத்தின் | 79-82 |
| மசா கணத்துக்கு | 82 |
| பிரளி கணத்திற்கு | 83 |
| பிறக் கணத்திற்கு | 83 |
| வரட்கணம் | 84-85 |
| ஊது கணம் | 85 |
| கொதிப்பு கணம் | 85 |
| வீக்க கணம் | 86 |
| மந்தார கணம் | 87 |
| எரி கணம் | 87 |
| ஆம கணம் | 88 |
| நீராமகணம் | 89 |
| மூல கணம் | 90-91 |
| முக்கு கணம் | 92 |
| மூலம் 9 க்கும் | 92 |
| போராம கணம் | 93 |
| முக்கு கணத்திற்கு | 93-94 |
| மூல ரத்த கணம் | 95 |
| கவைக் கடுப்பு | 95 |
| மூலக் கடுப்பு | 95 |
| இரத்தக் கடுப்பு | 96 |
| சீதக் கடுப்பு, நீர் சுருக்கு | 96 |
| கிராணி கடுப்பு | 97 |
| ஆமக் கடுப்பு | 97 |
| சீழ் மூலம் | 97 |
| இரத்த கணத்தின் | 97 |
| அடி தள்ளினதற்கு | 100 |
| அஷ்ட கணத்திற்கு | 101-108 |
| கரப்பான் வகுப்பு | 108-112 |
| சூலை கரப்பான் | 113 |
| ஊது கரப்பான் | 113 |
| வாசு கரப்பான் | 114 |
| செவ்வாப்பு கரப்பான் | 114 |
| கால் கடுவன் | 115 |
| கரப்பான்கள் | 115-119 |
| சிறு சிரங்கு | 119 |
| பேய் சொரி | 120 |
| வாத பித்த சுரம் | 121-125 |

| வியாதிகள். | பக்கம். | வியாதிகள். | பக்கம். |
|---|---|---|---|
| ரத்த சுரம் | 126-128 | நாமுள் தோஷம் | 154-155 |
| பழஞ் சுரத்திற்கு | 129-132 | சோகை வகுப்பு | 155-163 |
| ஜன்னி வகுப்பு | 132-138 | ஊது காமாலை | 164 |
| வலிப்பின் வகுப்பு | 139-143 | பற்பல வியாதியின் வகுப்பு | 165—181 |
| கழிச்சல் வகுப்பு | 143-151 | | |
| அட்சர வகுப்பு | 151—154 | | |


அட்டவணை முற்றிற்று.


# அற்புத பூலோக ரம்பை.

**ஆச்சரியம், உண்மை நிறைந்தது.**

காம்போஜநாட்டு இளவரசன் புவனேந்திரனும், பூலோக ரம்பையும் சதுரங்கமாடிக் கொண்டிருக்கும்போது, விஜய நகரத்தரசன், விஜயதரன், வேட்டைக்கு வந்தான். அவள் அழகைப்பார்த்து, அவளை அபகரித்துப்போக முயற்சிக்கையில், அவர்கள் மறைந்து விட்டார்கள். பூலோக ரம்பையை தன்னிடம் சேர்ப்பவருக்கு பாதி நாடளிப்பதாக பறையறிவிக்க, ஒரு பிராமணத்தி புவனேந்திரனிடம் சமையல்காரியாக, அமர்ந்து பாஷான வகைகளினால் புவனேந்திரனைக் கொன்றுவிட்டு பூலோக ரம்பையை விஜயதரனிடம் சேர்ப்பிக்கிறாள், மந்திரி குமாரன் புத்திர சிகாமணி பிராமணத்தி மகன்போல நடித்து, உளவுகள் அறிந்து, பூலோக ரம்பையைக்கண்டுபேசி, புவனேந்திரனை உயிர் பெற்றெழும்படி செய்தான். பிராமணத்தி சுண்ணும்பு கால்வாயில் போடப்பட்டாள். அண்டரண்டப்பக்ஷிகள் பேசியதைக்கேட்டு புத்தி சிகாமணி, புவனேந்திரனைக் கடிக்கவந்த கார்க்கோடகனைக் கொன்றான். அரசன் மந்திரி குமாரனை வெட்டிவிடும்படி ஆக்கினை கொடுத்தான். உண்மையை சொல்லி கல்லுருவாகினன். புவனேந்திரன் தன் குமாரனை பலிகொடுத்து தன் சுய உருவம் பெறச் செய்தான். அரசன் மந்திரி குமாரன் மீது சந்தோஷமடைந்து அவனுக்கு மந்திரி பட்டமும் தன் குமாரனுக்கு இராஜபட்டமும் கட்டி, சந்தோஷ சாகரத்தில் மூழ்கிறன். விரிவும் விபரமும் அனுபவ நூலை வாசித்து உணருங்கள். டபுள் கிரௌன் 1X16 அளவில் 272 பக்கங்கள் கொண்டது.

விலை ரூ. **2—0—0**

கிடைக்குமிடம்:- இட்டா - பார்த்தசாரதி நாயுடு சன்ஸ், 189, தங்கசாலைத் தெரு, சென்னை.

# புத்தக விளம்பரம்.

| | ரூ. | ந.பை. |
|---|---|---|
| விநாயக புராண வசனம் | 10 | 00 |
| அற்புத பூலோக ரம்பை கதை | 2 | 00 |
| நவரச கதம்ப ஒப்பாரி | 0 | 62 |
| விநோத கதைகள் | 0 | 50 |
| மரகத சுந்தரம் | 1 | 50 |
| நாகபூஷணம் | 1 | 20 |
| மஸ்தான் சாகிபு பாடல் | 3 | 00 |
| சார்தார்வேஸ் 4 பக்கீர்கிஸ்ஸா | 4 | 25 |
| **வைத்தியம், ஜோதிடம் புத்தகங்கள்.** | | |
| போகர் 7000 | 12 | 00 |
| சாதக அலங்காரம் மூலமும் - விரிவுரையுடன் | 5 | 00 |
| மணிமந்திர வைத்திய சேகரம் | 2 | 50 |
| பாலவாகடத் திரட்டு 1200 | 2 | 00 |
| தன்வந்திரி கருக்கிடை நிகண்டு 300 | 0 | 75 |
| புலஸ்தியர் மகரிஷி வாத சூத்திரம் 300 | 1 | 25 |
| ஊர்வசி வைத்திய சிட்கா 2-பாகம் சேர்ந்தது | 2 | [illegible] |
| அகஸ்திய முனிவர் பூரண சூஸ்த்திரம் 216 | 0 | [illegible] |
| திருமூல நயினர் வைத்திய காவியம் 1000பாடல் | 1 | 25 |
| ஆயுள்வேத சுருக்கம் | 2 | 00 |
| நவக்கிரக தோத்திரம் | 0 | 62 |
| பெரிய சுந்தர சேகரம் | 2 | 00 |
| கணித முருகசேகரம் | 2 | 00 |
| ஹோரா சாஸ்த்திரம் | 2 | 50 |
| சர்வ கனவின் பலன் | 0 | 50 |
| களவு காணும் சாஸ்திரம் | 0 | 50 |
| சோதிட நூலாதாரம் | 0 | 50 |
| சுகர் நாடி சோதிடம் | 2 | 00 |
| சோதிட நூலாதார அரிச்சுவடி 2-பாகம் | 1 | 00 |
| மலையாள மாந்திரீக அரிச்சுவடி | 0 | 37 |
| வீமகவி மூலமும் உரை | 1 | 50 |
| சந்தனநூல் சாஸ்த்திரம் | 0 | 37 |


இட்டா-பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,

நெ. 29, வாலாஜா ரோடு, சென்னை-2.